# எழுநா

## இதழ் 2



Image source: realagnikulakshathriyarvanniyar.wordpress.com

சி. கிருபானந்தகுமரன்

பாலசுப்ரமணியம் துவாரகன்

சி. அ. யோதிலிங்கம்

கமலநாதன் பத்திநாதன்



பாக்கியநாதன் அகிலன்

அமரசிங்கம் கேதீஸ்வரன்

முத்துவடிவு சின்னத்தம்பி

பரமு புஷ்பரட்ணம்

இரா. சடகோபன்

கந்தையா சண்முகலிங்கம்

பால. சிவகடாட்சம்

# பொருளடக்கம்

## உள்ளே...


சுயபுலம் பெயரிகள்: இலங்கைக்கு தாமே வந்த தோட்டத்தொழிலாளர்கள் **04**
இரா. சடகோபன்

மதுவுக்குள் சிக்குண்ட மலையகம் : அடிமைப்படுத்தலின் நவீன உத்தி **07**
இரா. சடகோபன்

டொனமூர்க் குழுவினரின் சிபார்சுகளும் தமிழ் தலைவர்களின் நிலைப்பாடும் **10**
சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம்

18ம் நூற்றாண்டில் வட இலங்கையில் வேளாளர்கள் **17**
கந்தையா சண்முகலிங்கம்

ஆபிரகாம் லிங்கனது மறைவும் நேத்தன் உவோட்டின் நினைவுகளும் **31**
பாலசுப்ரமணியம் துவாரகன்

யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம் திரிகடுகம் **34**
பால.சிவகடாட்சம்

இரசவர்க்கம் திரிபலை **38**
பால.சிவகடாட்சம்

இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக் காட்டும் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வுகள் **40**
பரமு புஷ்பரட்ணம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் கோழிப் பண்ணைத் துறையும் **51**
சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

வடக்கு கிழக்கு மாகாணத்தினுடைய வளங்களும் உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியும் **55**
அமரசிங்கம் கேதீஸ்வரன்

தமிழ் மக்களின் அரசியல் இலக்கும் வழிவரைபடமும் **58**
சி. அ. யோதிலிங்கம்

பெருந்தோட்டத் தமிழ்மக்களின் சமூக அபிவிருத்திக்கு உந்துதல் அளிக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்குதல் **63**
முத்துவடிவு சின்னத்தம்பி

யாழ்ப்பாண நகரத்தின் அடையாளங்களை அழித்தல் **70**
பாக்கியநாதன் அகிலன்

தமிழ் அடையாளத்தினூடாக யாழ். உயர்வர்க்க நலன் பேணல் **75**
சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம்

பசியும், பிணியும் போக்கும் அரிசி **83**
தியாகராஜா சுதர்மன்

சிங்கோனா திடீர் எழுகையும் வீழ்கையும் **90**
இரா. சடகோபன்

கடலோர வேட்டுவ சமூகங்களுள் காணப்படும் குடிவழமைகள் **94**
கமலநாதன் பத்திநாதன்

# எழுநா

இதழ் 2

**பதிப்பாசிரியர்**

கணேசானந்தன் சசீவன்

**ஆசிரியர் குழு**

மாயழகு பவித்ரா

பரமசிவம் பவதாரணி

**குரல் வடிவம்**

பாலரூபன் கிருஷிகா

இராதாகிருஷ்ணன் தர்ஷினி

**ஆலோசகர் குழு**

கந்தையா ரமணிதரன்

கதிர் சயந்தன்

சிவகுமார்

**பங்களிப்பாளர்கள்**

கணேசலிங்கம் குகரூபன்

கருணானந்தன் சஞ்யே

கனகலிங்கம் சுகுமார்



**மின்னஞ்சல்:**

contact@ezhunaonline.com

ezhunamedia@gmail.com

**தொடர்பு முகவரி :**

எழுநா

63, சேர். பொன். இராமநாதன் வீதி

கலட்டி சந்தி, திருநெல்வேலி.



FOLLOW எழுநா

https://ezhunaonline.com/

https://youtube.com/user/Ezhuna

https://www.facebook.com/Ezhunax/

https://twitter.com/Ezhuna

https://www.instagram.com/ezhunaa/

https://www.tiktok.com/@ezhuna

https://open.spotify.com/show/4Xn72jqWYRFnR2cfRBKqXU

https://tinyurl.com/ykj8ru3f

https://tinyurl.com/3zfkzxme

https://tinyurl.com/2p83m8zj

https://pca.st/swr6zomk

https://radiopublic.com/6rX3L4

https://tinyurl.com/bdeky92h

https://anchor.fm/ezhuna


## எழுநா, நீண்ட இடைவெளிக்கு பின்னரான சந்திப்பு

எழுநாவின் செயற்பாடு கடந்த காலத்தில் பதிப்பு முயற்சியாகவும் அதை யொட்டிய சஞ்சிகையாகவும் அமைந்தது. பதிப்பு முயற்சிகள் பெரும்பாலும் அபுனைவுகளை மையப்படுத்தியதாகவே இருந்தன. அண்ணளவாக 120 புத்தக மன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த எழுநா, 12 நூல்களை வெளியிட்டிருந்தது. புத்தக மன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுக்கான நூல்களுடன் எழுத்தாளர்களுக்கு கணிசமான அளவு உரிமைத்தொகையும் செலுத்தப்பட்ட நிலையில் அம்முயற்சியை தொடர முடியாமல், முடிவுக்கு கொண்டு வரவேண்டியதாயிற்று.

தற்போது, உள்ளடக்கம் சார்ந்து, இலங்கை தமிழ் மக்களுடன் தொடர்புடைய சமூகம் அரசியல் பண்பாடு பொருளாதாரம் அபிவிருத்தி ஆகிய தளங்களில் ஆய்வுகளை ஊக்குவிப்பதாகவும் எழுத்துக்களை உருவாக்குவதாகவும் வரையறுத்துள்ளோம். இத்துடன், தமிழ் மக்களுடன் தொடர்புபட்ட அரச நிர்வாகம் சார்ந்த விடயங்களும் கவனத்திற்குரிய பகுதிகளாக உள்ளன.

இயங்கும் வடிவம் சார்ந்து, ஈழத்தில் இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் கல்வித்துறை சார்ந்தும் கல்வித்துறைக்கு வெளியேயும் ஆய்வாளர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் இயங்குபவர்களுடைய எழுத்துக்களை தொடர்களாக பிரசுரித்து வருகின்றோம். கல்வித்துறை சார்ந்த ஆய்வுக்கட்டுரை வடிவமாக மாத்திரமல்லாமல், ஆய்வுகள் பலருக்கும் சென்றடைய கூடியதாக வெகுஜன வடிவத்தில் பெரும்பாலான தொடர்கள் அமைந்திருக்கின்றன. இத்தொடர்கள் உலகளாவிய ரீதியில் பரந்திருக்கும் ஈழத்தமிழர்களை சென்றடையக் கூடியவாறான வகையில் சமூகஊடக வலையமைப்புக்களை பயன்படுத்தி வருகின்றோம். அதேநேரம், எழுத்து வடிவில் மாத்திரமல்லாது, ஒலி வடிவிலும் வாசகர்களை சென்றடைய கூடியவாறான ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம். இத்தொடர்கள் முதிர்ச்சியடையும் போது அவற்றை நூலுருவாக்கி வாசகர்களை நோக்கி கொண்டு செல்வதையும் புதிய வாசகர்களை உருவாக்குவதையும் பிரதான நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டுள்ளோம்.

இதேவேளை, காணொலி ஊடாக சமூகம் சார்ந்த பிரச்சனைகளை தொடர்களாக வெளியிடுவதையும், குறிப்பிட்ட விடயங்கள் சார்ந்த பல்வேறுபட்டவர்களுடைய கருத்து வெளிப்பாடுகளை எளிமையான மொழியில் கொண்டு வருவதையும் செயற்படுத்தி வருகின்றோம். இத்துடன், சமூக / அரசியல் பிரச்சனைகள் சார்ந்து அரசியல்வாதிகள் / செயற்பாட்டாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் நிகழ்வுகளையும் ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்.

'எழுநா'சஞ்சிகை மாதமொருமுறை மின்னிதழாக வெளிவரும். குறிப்பிட்ட மாதத்தில் வெளிவரும் தொடர்களில் உள்ள கட்டுரைகளின் தொகுப்பாகவே சஞ்சிகை அமைந்திருக்கும். தொடர்கள் மட்டுமல்லாது, தனித்து அமைந்த கட்டுரைகளும் எதிர்காலத்தில் எமது இணையத்தளத்திலும், 'எழுநா'சஞ்சிகையிலும் வெளிவரும்.

தற்போது 23 தொடர் கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இ. மயூரநாதன் எழுதிய 'யாழ்ப்பாண நகரம் 400' என்ற தொடர் வெளிவந்து முற்று பெற்றுள்ளது. அத்தொடர் நூலுருவில் வருவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் நடைபெறுகின்றன. வெகுவிரைவில் நூல் வடிவில் வாசகர்களை சென்றடையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர் குழு**




## இரா. சடகோபன்

இரா.சடகோபன் என்று எழுத்து உலகில் அறியப்பட்ட ராமையா சடகோபன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு பட்டதாரி ஆவார். அதன்பின் ஒரு சட்டத்தரணியாக தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் மூன்றுக்கு தேசிய சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் சிறந்த ஊடகவியலாளருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்.
விஜய் சிறுவர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான இவர், சுகர் வாழ்வு சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஆவார். இதனைத் தவிர மலையக மக்கள் மேம்பாடு தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதி உள்ளார்.


# சுயபுலம்பெயரிகள்:

## இலங்கைக்கு தாமே வந்த தோட்டத்தொழிலாளர்கள்




இந்தியாவில் இருந்து வந்த மலையாள தொழிலாளர்கள்

Image source - www.pinterest.com

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய வம்சாவளித் தமிழரின் சனத்தொகையில் கணிசமான அளவுக்கு அதிகரிப்பு காணப்பட்டது. 1871 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 444 ஆக இருந்த இவர்களின் சனத்தொகை 1906 ஆம் ஆண்டு 4 லட்சத்து 36 ஆயிரத்து 622 ஆக அதிகரித்தது. பின்னர் 1936ஆம் ஆண்டு 6 லட்சத்து 92 ஆயிரத்து 540 ஆக அதிகரித்தது. இவர்களில் சுமார் 88 சதவீதத்தினர் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இருந்தனர். ஏனைய 12 சதவீதத்தினரிலேயே வர்த்தகர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள் போன்றோர் உள்ளடங்கினர். வர்த்தகர்கள் என்ற பிரிவுக்குள் நாட்டுக்கோட்டை செட்டியார்கள், தூத்துக்குடியில் இருந்து வந்த முதலாளிகள், மேற்கு இந்தியாவில் இருந்துவந்த சிந்தி, மேமன், போரா, குஜராத்தி, பார்சி போன்ற இனத்தவர்கள் உள்ளடங்கியிருந்தனர் என "இலங்கையில் இந்தியர்கள்" (Indians In Ceylon - An Historical Survey, Harapprasath Chattobathyaya) என்ற நூலில் ஹரபிரசாத் சட்டோபாத்தியாயா குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில் கொழும்பு நகரத்தில் இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து வந்து குடியிருந்த கணிசமான தொகையினர் துறைமுக தொழிலாளர்களாகவும், வீட்டுப் பணியாளர்களாகவும், ரிக்‌ஷா இழுப்பவர்களாகவும், நாட்டாமைகளாகவும் இருந்துள்ளனர்.

இவ்விதம் வந்தவர்கள் தங்களை "ஆள் பிடித்து" கூட்டி வரப் படாமல் சுயவிருப்பத்தின் பேரில் வந்த வர்களாவர். இவர்களுக்கு அப்போது ஏற்படுத்தப் பட்டிருந்த குடியகல்வு நிதியிலிருந்து (Immigration Fund) இலங்கைக்கு வருவதற்காக உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்கென வராமல் தென்னிந்தியாவின் கொச்சின், மலபார், மற்றும் திருவாங்கூர் ஆகிய பிரதேசங்களில் இருந்து வந்த மலையாளி இனத்தவர்கள், தேர்ச்சி பெற்ற வீட்டுப் பணியாளர்களாகவும், சமையல்காரர்களாகவும் இருந்துள்ளனர். இவர்கள் கொச்சின் பகுதியில் இருந்து வந்ததால் இவர்களை "கொச்சியர்கள் " என கொச்சைப்படுத்தி அழைக்கப்பட்டனர். இவர்கள் வீட்டுப் பணியாளர்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக காரியாலய உதவியாளர்கள் (Peon), போர்ட்டர் (Porter) தொழில், கள் விற்பனை, வீட்டுத் தோட்ட பணியாளர்கள் போன்ற பணிகளிலும் ஈடுபட்டனர். எனினும் இவர்கள் மிக அரிதாகவே தம் மனைவி பிள்ளைகளுடன் வந்தனர் என ஆய்வாளர் கே.பி .மேனன் குறிப்பிடுகின்றார். 1931ஆம் ஆண்டு இலங்கையில் மொத்தம் 17 ,127 மலையாளிகள் வசித்த போதும் இவர்களில் 628 பேர் மட்டுமே பெண்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மத்திய மலைநாட்டில் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக தொழில்புரிய வந்தவர்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதி வரை இந்த நாட்டில் நிரந்தரமாக குடியிருக்க வேண்டும் என எதிர்பார்க்கவில்லை. இவர்கள் வேலை இல்லாத காலப்பகுதிகளில் தமிழ்நாட்டின் தமது சொந்த கிராமங்களுக்கு சென்று சிறிது காலம் தம் உறவினருடன் இருந்துவிட்டு மீண்டும் இங்கே வந்தனர். இவ்விதம் மீண்டும் வருபவர்கள் "பழையல்கள்" (பழையவர்கள்) என அழைக்கப்பட்டனர். பழையவர்கள் மீண்டும் தமது தோட்டங்களுக்கு வந்தபோது மேலும் பல உறவினர்களையும் ஊரவர்களையும் தம்முடன் கூட்டிக்கொண்டு வந்தனர். இவர்கள் ஒரு கங்காணியின் கீழ் வந்தவர்களாக கருதப்படாமல் சுயமாக புலம்பெயர்ந்தவர்கள் எனக் கருதப்பட்டனர். புதிதாகவருபவர்கள்தமிழ்நாட்டின்திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த இலங்கைக்கு புலம்பெயர்பவர்களுக்கான ஆணையாளர் அலுவலகத்தில் தம்மை பதிவு செய்து கொண்டபோது அவர்களுக்கு பயணச் செலவுக்கும் வேறு செலவுகளுக்கும் என முற்பணம் ஒன்றும் கொடுக்கப்பட்டது.

நிரந்தரமாகத் தங்கும் தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டபோதெல்லாம் பருவ காலத்தில் வரும் தொழிலாளர்களே குறை நிரப்பும் தொழிலாளர்களாக இருந்தனர். சிலவேளை மேலும் பற்றாக்குறை ஏற்பட்டபோது தோட்ட துரைமார்கள் ஆள் காட்டும் அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் (License For Recruitment) ஒரு கங்காணியை அணுகி, அவரை தமிழ்நாட்டுக்கு அனுப்பி தமக்குத் தேவையான கூலியாட்களை பெற்றுக் கொண்டனர். இவர்களால் 20 கூலியாட்களை மட்டுமே ஒரு தடவை கூட்டிவர இக்காலத்தில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு இத்தகைய லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருந்தன.



மலையக தொழிற்சங்கவாதியாக பிரபலமடைந்த கோதண்டராமையர் நடேசய்யர்

Image source - www.vaaramanjari.lk

இவ்விதம் வேலைதேடி இலங்கை நாட்டுக்குள் நுழைபவர்களுக்கு, இலங்கைத் தேயிலை தோட்டங்களில் உடனடியாக வேலை வழங்கப்படும் என்று உறுதிமொழி இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் இருந்து இலங்கையின் தேயிலைத் தோட்டங்களுக்கு எப்போதும் விரும்பியபடி வந்து போகலாம் என்ற விதத்தில் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தன. அதேபோல் வந்து போனவர்கள் அதற்கேற்ற விதத்தில் அடையாள ஆவணங்களை வைத்திருந்தனர். அவர்கள் வருவதற்கும் மீண்டும் செல்வதற்கும் அந்த ஆவணங்கள் உதவியாக இருந்தன . ஆரம்பத்தில் முற்றிலும் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களையும் வெள்ளைக்கார துரைமார்களையும் மாத்திரமே உள்ளடக்கி செயற்பட்ட பெருந்தோட்டங்கள் பின்னர் படிப்படியாக கரையோரச் சிங்களவர்கள், கண்டிய சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், இலங்கைச் சோனகர்கள், இந்திய சோனகர்கள், பறங்கியர்கள், ஐரோப்பிய ஆசியர்கள் (Euro Asians)

மற்றும் இன்ன பிற இனத்தினரையும் உள்வாங்கிக் கொண்டன. இதன் அடிப்படையில் 1921 ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி மேற்படி எல்லா இனங்களையும் சேர்ந்த மொத்தம் 569,118 பேரை பெருந்தோட்டத்துறை உள்ளடக்கியிருந்தது . இதில் இந்திய வம்சாவழி தமிழர்களின் தொகை நான்கு லட்சத்து 93 ஆயிரத்து 944 ஆக இருந்தது. இது முறையே 1931 ஆம் ஆண்டு 789 ,934 ஆக அதிகரித்தது .

இதே காலப்பகுதியில் பெருந்தோட்டத் துறையை மையமாகக் கொண்டு செயற்பட்ட இந்திய வம்சாவழி சோனகர்களின் தொகை 1921ஆம் ஆண்டு 4,214 ஆகவும் நாட்டில் இவர்களின் மொத்த சனத்தொகை 330 26 ஆகவும் இருந்தது. இது முறையே 1946ஆம் ஆண்டு 4,258 ஆகவும் 35,624 ஆகவும் இருந்தது. இவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு கடன் கொடுத்து வட்டி வசூலிப்பவர்களாகவும் இருந்தனர். இவர்களை தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பத்தில் "ஈட்டுக்காரன்" என்று அழைத்த போதும் பின்னர் இவர்களை, இவர்கள் வட்டி வசூலிப்பதில் காட்டிய கொடூரம் கருதி "ஈட்டிக்காரன்" வருகிறான் என்று கூறி இவர்களை கண்டதும் ஓடி ஒளிந்தனர். பின்னர் இவர்கள் "சுல்தான் பாய்" என்ற பெயர் கொண்டும் பிரபலம் வாய்ந்தவர்களாக காணப்பட்டனர்.

இத்தகை ஒரு நிலைமையில்தான் இலங்கையில் வாழ்ந்த இந்தியர்களின் நலனில் அக்கறை எடுத்துக் கொள்வதற்காக இரண்டு சட்ட சபை அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது. அதன் பிரகாரம் 1923 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர் இந்தியர் சார்பாக குரல் கொடுக்க இரண்டு அங்கத்தவர்கள் சட்டசபைக்கு நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர்தான் பிற்காலத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் முதல் தொழிற்சங்கவாதியாக பிரபலமடைந்த கோதண்டராமையர்நடேசய்யர்ஆவார்.

இவர் ஆரம்பத்தில் கொழும்பை மையமாகக் கொண்ட நகர்ப்புற தொழிலாளர்களின் தொழிலாளர் தலைவரான குணசிங்கவுடன் இணைந்து கொழும்பில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர்களின் உரிமை தொடர்பில் குரல் கொடுப்பவராகவும் பல தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுத்தார். எனினும் பிற்காலத்தில் குணசிங்க இந்திய தொழிலாளர்கள் தொடர்பில் குறிப்பாக மலையாள தொழிலாளர்களுக்கு எதிராக கடைபிடித்த இனவாதக் கொள்கை காரணமாக 1928ஆம் ஆண்டு குணசிங்கவின் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து விலகிக்கொண்டார்.

**வேலைதேடி இலங்கை நாட்டுக்குள் நுழைபவர்களுக்கு, இலங்கைத் தேயிலை தோட்டங்களில் உடனடியாக வேலை வழங்கப்படும் என்று உறுதிமொழி இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் இருந்து இலங்கையின் தேயிலைத் தோட்டங்களுக்கு எப்போதும் விரும்பியபடி வந்து போகலாம் என்ற விதத்தில் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தன.**


சட்டசபைக்கு நியமிக்கப்பட்ட 2 இந்திய வம்சாவழி சட்டசபை அங்கத்தவர்களும் கொழும்பில் வாழ்ந்த இந்திய வர்த்தகர்களின் நலனின் அக்கறை செலுத்துவதற்காகவே நியமிக்கப்பட்ட போதும் நடேசய்யர் முற்றிலும் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினைகள் பற்றி குரல் கொடுப்பதற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்.

இவர் பின்னர் இடம்பெற்ற மட்டுப்படுத்தப்பட்ட தேர்தலின்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டசபை அங்கத்தவராக தெரிவுச்செய்யப்பட்டார். இவர் காலப்பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களில் அடிமை நிலையில் வைக்கப்பட்டிருந்தமை, அவர்கள் மீது கங்காணிகளால் சுமத்தப்பட்டிருந்த கடன் சுமை, அவர்களது சுகாதார நிலைமை, கல்வி போன்ற விடயங்களை கடுமையாக விமர்சித்தார். இவரது சட்டசபை உரைகள் அன்றைய நாளிதழ்களில் பிரசுரம் ஆகி சர்ச்சைகளை உண்டுபண்ணின.

இதே காலப்பகுதியில் இந்தியாவில் அசாம் மாநிலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் என இந்திய அசோசியேஷன் (Indian Association ) என்ற அமைப்பின் தலைவர் எஸ். கே. கோகலே அவர்களும், தென்னாப்பிரிக்காவில் தொழிலாளர்கள் கொடூரமாக நடத்தப்படுவது தொடர்பில் அப்போது சட்டக் கல்வி கற்று இளம் சட்டத்தரணியாக பணிபுரிந்துகொண்டிருந்த மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியும் கடுமையாக குரல் எழுப்பினார் .

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு இந்திய அரசாங்கம் தமது நாட்டின் பிரஜைகள் வெளிநாடுகளில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்று தேடிப்பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டது. இதன் விளைவாக இந்திய குடியுரிமை சட்டம் திருத்தப்பட்டது. குடியகல்வு தொடர்பான சகல விவரங்களையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தொழிலாளர் மீதான கடன் செலுத்தும் முறை நீக்கப்பட்டது. செலவுகளை ஆள் கட்டும் முகவர்களே பொறுப்பேற்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

(தொடரும்)



**சாராய உற்பத்தி**

Image source - www.namathumalayagam.com

# மதுவுக்குள் சிக்குண்ட மலையகம்: அடிமைப்படுத்தலின் நவீன உத்தி

> **தொழிலாளர் என்ற மந்தைக் கூட்டத்தில் எந்தவிதமான எழுச்சிகரமான சிந்தனையும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நோக்கத்தில் நீண்டகாலமாக மதுபோதை அடிமைத்தனத் தினை ஆக்கிரமிப்பு ஆட்சியா ளர்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.**

அதிகார வெறியும் ஆடம்பர ஆர்ப்பாட்டங்களும் ஆர்ப்ப ரித்து இருந்த ஒரு காலகட்டத்தில் மாபெரும் மனிதக் கூட் டங்கள் மந்தைகள் என மண்ணில் வீசப்பட்டிருந்தன. 17 ஆம் ,18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் அந்நிய ஆக்கிரமிப்பு வெறி யர்கள் ஏகாதிபத்தியங்களாக எழுச்சி பெற்று உலகம் முழுவ தையும் தம் காலடியில் போட்டு மிதித்து விடவேண்டும் என்று வேட்கை கொண்டிருந்தனர். பிரிட்டிஷ்காரன் என்ற மகா பாத கன் ஆப்பிரிக்கக் கண்டத்தை சின்னா பின்னப்படுத்திய பின்னர் ஆசியாவை நோக்கி படை திரட்டிக்கொண்டு வந்தான். அதற் கென கிழக்கிந்திய வர்த்தக கம்பெனி என்று ஒரு பாரிய நிறுவ னத்தை பெரும் செலவில் தோற்றுவித்தான். அதனால் ஏற்பட்ட பெரும் பணச்செலவை அவர்கள் ஆக்கிரமித்த அந்தந்த நாட்டு

மக்களையே அடித்து உதைத்து துவம்சம் செய்து வசூலித்து கொண்டான்.




கிழக்கிந்திய வர்த்தக கம்பெனி

Image source - www.bbc.com

பிரிட்டிஷார் தாம் அடிமைப்படுத்திய மக்களிடையே அறிமுகப்படுத்திய மதுப் பழக்கத்திலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களும் ஏன் ஏனைய மக்களும் கூட இன்றுவரை மீளமுடியாதுள்ளனர். மதுவின் மூலக்கூறுகள் தொழிலாளர்களின் மரபணுக்களில் (DNA) இரண்டறக் கலந்து விட்டதாலோ என்னவோ மது மீதான தாகம் மிகப் பரவலாக மக்கள் மத்தியில் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அது தொடர்ந்தும் இம் மக்களை வறியவர்களாக வைத்திருப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. அதுவே இந்த மக்கள் எழுச்சி பெற முடியாமைக்கு பிரதான தடையாகவும் காணப்படுகின்றது.

17 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் அடிமைகளைப் பயன்படுத்தி பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டபோது தென்னாபிரிக்காவின் மேற்கு கேப் (Western cap) பிரதேசத்தில் அடிமைகளை கட்டுப்படுத்தி வைப்பதற்கு மாலையானதும் மதுவை பங்கீட்டு முறையில் இலவசமாக வழங்கினார்கள். அப்போது அது நெதர்லாந்தின் டச்சு காலனித்துவ நாடாக இருந்தது. இந்த முறைமையால் தொழிலாளர்களை போதைக்கு அடிமையாக்கி குறித்த பண்ணையில் இருந்து வெளியேறிச் செல்லாமல் சங்கிலி இல்லாமலே அவர்களை வெற்றிகரமாகக் கட்டிப்போட்டு வைத்திருந்தனர். இவ்விதம் அவர்களைக் கட்டுப்படுத்தும் அடிமைமுறை பயிற்செய்கை காலம் முழுவதும் தொடர்ந்ததுடன், அதன் பின்னரும் கடைப்பிடிக்கப் பட்டு வந்தது. அவர்கள் பின்னர் திராட்சை ரச வைன் தயாரித்து முடிந்ததும் வீசப்படும் சக்கையிலிருந்து மிக மட்டரகமான மதுவை உற்பத்தி செய்து குறைந்த விலையில் இவர்களுக்கு வழங்கினார்கள்.

இது தொடர்பில் தனது நூலான நவீன அடிமை முறைமை (1974) (New System of slavery by Hugh Tinker) என்ற நூலில் ஹியூ டிங்கர்பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார். “உலகெங்கும் அழைத்துச் செல்லப்பட்ட இந்திய வம்சாவழி தமிழர்களுக்கு இந்த மதுவை போதுமான அளவு வழங்கி அவர்களை எல்லாத் துன்பங்களையும் மறக்க வைக்கும் ஒரு மங்கியதான மாலைப்பொழுதுக்கு இட்டுச் சென்றுவிடும் நிலையை ஏற்படுத்தினர்” என்று குறிப்பிடுகின்றார். இவர்களுக்கு வழங்கியது “இந்திய மது” (Indian Drink) என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டு உள்ளது . அவர்கள் கூடுமானவரை சாராயத் தவறணைகளையும் கோவில்களையும் அமைக்க உற்சாகப்படுத்தினார்கள். தொழிலாளர்கள் இந்த மது, மதம் இரண்டு விதமான போதைகளிலும் மூழ்கி இருக்கும்போது நம்மை ஏறி மிதிக்கும் எஜமானருக்கு எதிராக அவர்கள் அணிதிரள மாட்டார்கள் என்பதனை முதலாளி வர்க்கம் நன்கு தெரிந்து வைத்திருந்தது.




எனினும் தோட்டத்துரைமார்கள் , தொழிலாளர்கள் மது அருந்தும் போது தனியாக சந்தித்து தமது அன்றாட பிரச்சினைகள், தொழில் பிரச்சினைகள், தம்மீதான சுரண்டல்கள் போன்றவை பற்றி பேசி கலந்துரையாடி தமக்கு எதிராக செல்வதை அனுமதிக்காமல் அவர்கள் பொது இடங்களில் வைத்து மது அருந்துவதையே விரும்பினார்கள். இதன் காரணமாக தொழிலாளர்கள் நன்கு குடித்து விட்டு தனிப்பட்ட காரணங்களுக்காக ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு அடித்துக் கொள்வதும் அடுத்த நாள் வேலைக்கு செல்லாமல் இருக்கும் சம்பவங்கள் அதிகரித்தமையையும் கூட அவர்கள் பொறுத்துக் கொண்டனர். இலங்கைப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் ஆரம்ப காலகட்டமான 1830 களில் இருந்து தொழிலாளர்களின் வதிவிட எல்லைப்புறங்களில் சாராயம் மற்றும் கள்ளுத்தவறணைகள் ஆரம்பிக்கப் பட்டு இருந்தன. 1873 ஆம் ஆண்டு கவர்னர் வில்லியம் ஹென்ரி கிரகரி (William Henry Gregory) அவர்களுக்கு தோட்டத்துரைமார் சங்கம் எழுதிய கடிதத்தில் இப்போது இருக்கும் சாராயத் தவறணைகளின் எண்ணிக்கை போதாது என்றும் அதனை மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்ததை அறிய முடிகின்றது. அதன்மூலம் சாராய தவறணைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் (Tavern Permit) அதிகரிக்கப்பட்டதுடன் உள்ளூர் சிங்களவர்களும் கள்ளுத் தவறணைகளை ஆரம்பிக்க உற்சாகப்படுத்தப்பட்டனர்.

அரசாங்கம் சாராயத் தவறணைகளை

ஆரம்பித்தவுடனேயே கள்ளச்சாராய விற்பனையும், எரிசாராய உற்பத்தியும் பெருந்தோட்ட பகுதிகளில் பல்கிப் பெருகின. அரசாங்க அனுமதி பெற்ற சாராயக் கடைகளில் கிடைத்த சாராயத்தை விட மலிவு விலையில் கிடைத்தமையே இவற்றின் பெருக்கத்துக்கு காரணமாக இருந்தது. 1897ஆம் ஆண்டளவில் தோட்டங்களை அண்டிய பிரதான பாதைகளின் இரு மருங்குகளிலும் சாராயத் தவறணைகள் அமைக்கப்பட்டிருந்தன என்றும் மேலும் பல தோட்டங்களில் , லயங்களிலும் கூட ஒரு காம்ரா ஒதுக்கப்பட்டு மது களஞ்சியமாக பயன்படுத்தப்பட்டது என்று குடியேற்ற செயலாளருக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மிகப் பாதகமான மற்றுமொரு விளைவு என்னவென்றால் தோட்டத்து கூலிகள் ஒவ்வொரு கிளாஸ் அல்லது சிரட்டையில் ஊற்றி சிறிது சிறிதாக மது குடித்த போது அவர்கள் அந்த மதுக்கோப்பை ஒவ்வொன்றுக்கும் கொடுத்த பணமானது பணக்காரர்கள் ஒரு போத்தல் குடித்ததிலும் பாருக்கு பார்க்க மூன்று மடங்கு அதிகமானதென 1896ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கு எழுதிய அறிக்கையில் அப்போது மேற்கு மாகாண அரச அதிபராக கடமையாற்றிய எல்லீஸ் (T.Ellies) அவர்கள் குறிப்பிட்டுள்ளார் . இவரது கூற்றுப் படி ஒரு தனவந்தர் ஒரு கலன் சாராயத்தை ரூபா 4.48 சதத்துக்கு வாங்கிக் குடித்த போது அதே அளவு சாராயத்தை கூலித்தொழிலாளி சிறுகச் சிறுக குடித்தபோது ரூபா 7.48 செலுத்துகிறான் என்று தெரிவித்துள்ளார்.



சாராய தவறணைகள்

Image source - www.si.rata.lk

தெரிந்தோ தெரியாமலோ மது அருந்துதல் என்பது மக்களின் வாழ்வில் அங்கமாகி போய்விட்டது. ஆனால் அண்மைக்காலம் வரை மது அருந்துதல் ஒரு பெரும் செலவு மிக்க காரியமாக இருக்கவில்லை. ஆனால் இன்று அது மிக செலவு மிகுந்த ஆடம்பரமானதொன்றாகப் போய்விட்டது. ஆதலால் கள்ளச் சாராயத்தையும் அல்லது எரிசாராயத்தை களவாகக் குடிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது. 1980ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தேயிலை சிறு உரிமையாளர்களின் தொகை அதிகரித்தபோது சிங்கள நாட்டுப்புறத்திலிருந்து இத்தகைய சாராயம் காய்ச்சப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. காலி மத்துகம பிரதேசத்தில் சில காலத்திற்கு முன்பு வரை “கரிஞ்ஞா” என்ற பெயரில் கள்ளசாராயத்தினை தேயிலை சிறு உடமையாளர்கள், மாலையானதும் தொழிலாளர்களுக்கு கூலி வழங்கும் போது கால் போத்தல், அரை போத்தல் சாராயத்தையும் சேர்த்து வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்று தெரியவந்துள்ளது. இதற்கான விலையை அவர்கள் சம்பளத்திலிருந்து கழித்துக் கொண்டனர் என்றும் இந்த பழக்கம் இப்போதும் சில இடங்களில் வழக்கத்தில் உள்ளதாகத் தெரிகிறது.

தொழிலாளர் என்ற மந்தைக் கூட்டத்தில் எந்த விதமான எழுச்சிகரமான சிந்தனையும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற நோக்கத்தில் நீண்டகாலமாக மதுபோதை அடிமைத்தனத்தினை ஆக்கிரமிப்பு ஆட்சியாளர்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். அதற்கு ஏனைய காரணிகளான ஆணாதிக்க சமூக அமைப்பு, சாதி அமைப்பில் மேல் சாதி கீழ் சாதி என பிரிந்து முரண்பட்டு காணப்படுகின்றமை, பிற்போக்கான மடத்தனமான மதக் கட்டுப்பாடுகள் போன்றன இவர்களை அதிகாரத்தால் அமுத்தி மிதித்து வைத்திருக்க பேருதவி புரிந்துள்ளன. இன்றைய விஞ்ஞான யுகத்திலும் கூட ஆசிய மக்களிடையே புரட்சிகரமான விஞ்ஞான சிந்தனைகள் தோன்றாமல் இருப்பதற்கு அவர்கள் தொன்றுதொட்டு கடைப்பிடித்து வரும் மூட நம்பிக்கைகள் மிகுந்த மத சிந்தனைகள் ஒரு காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இப்படியாக இரண்டு நூற்றாண்டு காலமாக நீடித்து வரும் இந்த மது அடிமை பழக்கமும் முன்சொன்ன ஏனைய காரணிகளும் சேர்ந்து இன்றும்கூட இந்தச் சமூகத்தை ஒரு எழுச்சி பெறமுடியாத சமூகமாக முடக்கி வைத்திருக்கின்றனவோ என்று சந்தேகம் கொள்ள வைக்கின்றது. எனினும் இன்று இந்த பெருந்தோட்டக் கைத்தொழில் துறை என்ற வறுமையின் கிடுக்கிப் பிடியில் இருந்து இவர்கள் வெளியேறி பல்வேறு தொழில் துறைகளிலும் தம்மை இணைத்துக்கொண்டு மலையகத் தமிழர் அல்லது இந்திய வம்சாவளித் தமிழர் என்ற வரையறைக்குள் தம்மை இணைத்துக் கொண்டு விட்டனர் . இன்று வெறுமனே ஒரு லட்சத்து 30 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்கள் அல்லது சுமார் 4 லட்சம் பேர் மட்டுமே கூலித் தொழிலாளர்களாக உள்ளனர் என ஒரு கணக்கீடு தெரிவிக்கின்றது. இனிமேலும் இவர்களை தேயிலைத் தோட்டங்களுக்குள் கட்டிப்போடும் சக்தியை தேயிலை பெருந்தோட்டப் பொருளாதாரம் படிப்படியாக இழந்து வருகின்றது.

(தொடரும்)



**சு. சிவரெத்தினம்**

கலாநிதி சு.சிவரெத்தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலையில் இளமாணிப் பட்டத்தையும் முதுதத்தவமாணிப் பட்டத்தையும் பெற்றவர். மதுரை காமராஜர் பல்கலைக் கழத்தில் கலைவரலாற்றில் கலாநிதிப் பட்டம் பெற்று, தற்போது சுவாமி விபுலாநந்தா அழகி யற் கற்கைகள் நிறுவகத்தில் கட்புல தொழில்நுட்பக் கலைகள் துறையின் தலைவராகப் பணி புரிகின்றார். கலைவரலாற்றில் மட்டுமன்றி நாடகம், இலக்கியம், அரசியல், சமூகவியல் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

# டொனமூர்க் குழுவினரின் சிபார்சுகளும்

# தமிழ்த் தலைவர்களின் நிலைப்பாடும்

மானிங் அரசியல் அமைப்பில் இருந்த குறைபாடுகளை நீக்கி இலங்கைக்குப் பொருத்தமான ஓர் அரசியல் அமைப்பினை உரு வாக்கும் பொருட்டு 1927ம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த டொனமூர் குழுவினர் இரண்டு முக்கிய சிபார்சுகளை முன்வைத்தனர்.

1. கல்வித் தகமை, வருமானம் என்பவற்றின் அடிப்படையில் வழங்கப் பட்ட வாக்குரிமையினை நீக்கி 21 வயதுக்கு மேற்பட்ட அனைவ ருக்கும் வாக்குரிமை.

2. சட்ட நிருபண சபையில் இருந்து வந்த இனவாரி பிரதிநிதித்து வத் தினை நீக்கி அதற்குப் பதிலாக பிரதேச வாரிப் பிரதிநிதித்துவம்.

இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்த வகையிலே சிபார்சு செய்யப்பட்டன. அதாவது சிங்களத் தலைவர்களும் தமிழ் தலைவர்க ளும் பொறுப்பு வாய்ந்த ஆட்சியைக் கோரினார்கள். இந்தப் பொறுப்பில் மக்களும் பங்குபற்ற வேண்டுமாக இருந்தால் சர்வசன வாக்குரிமையும் பிரதேச வாரிப் பிரதிநிதித்துவமும் இன்றியமையாததாக இருக்க வேண் டும் என டொனமூர் குழுவினர் கருதினார்கள். ஆனால் தமிழ்த் தலை வர்களோ இதனை தமது நலன் சார்ந்து அணுகினர். என்பதை ஏற்க னவே குறிப்பிட்டிருந்தேன் அதாவது "இராமநாதனும் மற்றும் பல பழமைபேண்வாதிகளும் (செல்லத்துரை, சிறிபத்மநாதன், ஆர்.தம்பி முத்து இதற்கு புறநடையானவர்கள்) வெள்ளாளரல்லாத சாதியின ருக் கும் பெண்களுக்கும் வாக்குரிமை அளிப்பது கும்பலாட்சிக்கு இடம்



ஏ.ஈ குணசிங்க

Image source - www.dinamina.lk



சேர்.பொன்.இராமநாதன்

Image source - www.wikipedia.org

கொடுக்கும் ஒரு பாரிய பிழையென்று நம்பினர். வாதிட்டனர். இராமநாதனோ, அவ்வாறு வாக்குரிமை வழங்குவது இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்று கருதினார்" (மேற்கோள் கா.சிவத்தம்பி) ஏ.ஈ.குணசிங்காவினைத் தவிர வேறெந்தத் தலைவர்களும் சர்வசன வாக்குரிமை வேண்டுமென்று வாதிடவில்லை.

இலங்கையின் இந்த நிலை டொனமூர் குழுவினரை அச்சமடைய வைத்திருக்கின்றது. இதனை பின்வருமாறு அவர்கள் அறிக்கை செய்தனர். "பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரத்தைக் கொடுத்தல், அதிகாரத்தில் உள்ளவர் மற்றைய மக்களுடைய நலன்களைத் தாம் பாதுகாப்பர் என்னும் வாக்குறுதியின்றி சிலோராட்சி கையில் முழுவதிகாரத்தையும் விடுவதற் கொப்பாகும். மேன்மை தங்கிய அரசரின் அரசாங்கம் இலங்கையிலுள்ள செல்வர், கற்றறிவுள்ளோர் ஆகியோர்க்கு மட்டும் அரசாங்கமன்றி, மக்கள் தொகையில் பெரும்பாலோராய் அமைந்த நாட்டவர், கூலிகள், எளியவர், யாவருக்கும் பாதுகாப்பு உள்ளதென்பதை நாங்கள் இங்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை. பிற்கூறிய ஏழை மக்களின் நலன் யாவற்றையும் முன்கூறிய வகுப்பினரின் கட்டில்லாத அதிகாரத்தில் விட்டுவிடுவது நம்பிக்கைப் பொறுப்பற்ற முறையாகும். ஆயினும் வாக்குரிமையை விரிவடைய ஒத்துக்கொள்ளாது, முழுப் பொறுப்புவாய்ந்த அரசாங்கத்திற்கு உரிமை கொண்டாடியவர்கள், மேற்கூறிய விடயத்தின் இயல்பினை நன்கறியாதவர்களாகத் தோன்றவில்லை"

"பிரதானமாக, வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் காணப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை எமக்கு மிகுந்த கவலையையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர்கட்கென எவ்வகையான ஒரு பிரதிநிதித்துவத்தையேனும் ஏற்படுத்துதல் வேண்டும் என்பது பற்றியே நாம் இங்கு ஆராய்தல் வேண்டும். நாம் காட்டிய பொதுக்காரணங்களைத் தவிர்த்தாலும், அம்மக்கட்கு வாக்குரிமை அளிக்கப்படுதலும், அவர்கட்குச் சமமான போதிய கல்வி வாய்ப்புக்கள் அளிக்கப்படுதலுமே அவர்களின் நிலையைச் சீர்த்திருத்துவதற்கான வழிகள் என்று நாம் கருதுகிறோம்." (டொனமூர் அறிக்கை)

எனவே இங்கு எமது சுதந்திரப் போராட்ட தலைவர்களை விட எம்மை பொருளாதார ரீதியாகச் சுரண்டி ஆட்சி செய்த காலனித்துவவாதிகள் மக்களின் அரசியல் சுதந்திரத்தையும் சமூக விடுதலையையும் கூடுதலாக நேசித்துள்ளார்கள் எனலாம். இது போன்றதொரு நேசிப்பை யாழ்ப்பாண மாணவ காங்கிரசிடமும் காணக்கூடியதாக இருக்கின்றது. 1924ம் ஆண்டு இடம்பெற்ற அவர்களின் முதலாவது மகாநாட்டில் எடுக்கப்

**எமது சுதந்திரப் போராட்ட தலைவர்களை விட எம்மை பொருளாதார ரீதியாகச் சுரண்டி ஆட்சி செய்த காலனித்துவ வாதிகள் மக்களின் அரசியல் சுதந்திரத்தையும் சமூகவிடு தலையை யும் கூடுதலாக நேசித்துள் ளார்கள் எனலாம். இது போன்ற தொரு நேசிப்பை யாழ்ப்பாண மாணவ காங்கிரசிடமும் காணக் கூடியதாக இருக்கின்றது.**

பட்ட தீர்மானங்கள் சைவமும் தமிழும் என்ற கருத்துநிலைக்கு நேர்மாறான மக்கள் நிலைப்பட்டவையாக இருந்தன. குறிப்பாக "தற்போது நாட்டில் நிலவிவரும் சாதி வேறுபாடுகள் தேசத்தின் முன்னேற்றத்திற்குத் தடையென இக்காங்கிரஸ் கருதுகிறதென்றும், நம்மிடையே இருந்து தீண்டாமை என்னும் காயத்தை இயன்றளவு அகற்றுவதற்கு காங்கிரஸ் அங்கத்தவர் முயல்வாரென்றும் தென்னிலங்கையில் தமிழும் வட இலங்கையில் சிங்களமும் படிப்பிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவாக காங்கிரஸ் எடுக்க வேண்டும்" என்பன போன்ற தீர்மானங்கள் மக்கள் நிலைப்பட்டவையாகவும் தூர நோக்குடையவையாகவும் இருந்தன. துரதிர்ஷ்டவசமாக இவ்வாறான சிந்தனைத்தளங்களைக் கொண்டவர்களை மேலாதிக்க சமூகமும் அரசும் கவனத்தில் கொள்ளவில்லை.

1920ம் ஆண்டில் மானிங்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை, பிரித்தானியரின் பிரித்தாளும் நடவடிக்கை இது என பல அரசியல் அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். குறிப்பாக பேராசிரியர் கே.எம்.டி சில்வா பின்வருமாறு கூறுகின்றார். "இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக முளைத்த சகிக்க முடியாத ஒரு சவால் என இலங்கைத் தேசிய காங்கிரஸைக் கருதிய மனிங், பயங்கரமான ஒரு எதிரியை முறியடிக்கும் பாணியில், ஈவிரக்கமற்ற முறையில் அதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். இலங்கையின் பல்இனச் சமூகத்தில் காணப்பட்ட இன வேறுபாடுகளையும் பதட்டநிலைமைகளையும் மிகச் சாதுரியமாக வேண்டுமென்றே பயன்படுத்தி இம்முயற்சியில் அவர் வெற்றி பெற்றார் எனக் கூறலாம். உண்மையாகவே இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை அவர் கையாண்ட விதம் பிரித்தாளும் கொள்கையை நடைமுறைப்படுத்த வழிகாட்

டும் பாடநெறி நூலாகக் கொள்ளத்தக்கது" (மேற்கோள் சுசில் சிறவர்த்தனா)

இவ்வாறு பிரித்தாளும் தந்திரங்கள் பற்றி சிலாகித்துப் பேசுவோர் இவ்வாறு பிரித்தாள்வதற்கு அடிப்படையாக அமையும் அந்த அடையாளங்கள் பற்றி மௌனம் காக்கின்றனர். அல்லது அவற்றை மூடி மறைக்க முற்படுகின்றனர். உயர் வர்க்கத்தினரின் வர்க்க குணாம்சத்தினை நிரந்தரமான இன ஒற்றுமைகளாக கற்பிதம் செய்து கொள்கின்றனர். உதாரணத்திற்கு 1915ம் ஆண்டு இடம் பெற்ற கலவரத்தினை அடக்குவதற்கு பிரித்தானியர் கையாண்ட கொடுமையான அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கவும் சிறையிடப்பட்டிருந்த சிங்களத் தலைவர்களை மீட்பதற்காக சேர்.பொன்.இராமநாதன் உலக யுத்த அச்சத்துக்கும் மத்தியில் பிரித்தானியா சென்று அரசிடம் தமது பக்க நியாயங்களை எடுத்துக் கூறி விடுதலை பெற்றுக் கொடுத்ததும், அந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அவரை பல்லக்கில் தூக்கியதும், இதற்குப் பிரதியுபகாரமாக சேர்.பொன் அருணாசலம் அவர்களை தேசிய காங்கிரஸின் தலைவராக்கியமையும்நிரந்தரஒற்றுமையின்வெளிப்பாடாகக் காண்கின்றனர். இந்த ஒற்றுமையினை மனிங் சீர்குலைத்துவிட்டதாக முடிவுசெய்கின்றனர். இவ்வாறான பார்வையும் முடிவும் சமூக வரலாற்று நிலைக்கண்ணோட்டத்தில் தவறானதாகும். இலங்கையில் காலா காலமாக வர்க்க ஒற்றுமையினை விட இன அடையாளமும் சாதி அடையாளமுமே வன்மமாகத் தொழிற்பட்டு வந்துள்ளதைக் காணலாம். பொதுவான விடயங்களில் சிலவேளைகளில் வர்க்க ஒற்றுமையை வெளிப்படுத்தினாலும் அடிப்படையாக இருப்பது இன, சாதி அடையாளங்களேயாகும். தொழிற்சங்கத் தலைவர் ஏ.ஈ.குணசிங்கா கூட இறுதியில் வர்க்க ஒற்றுமையினைப் புறந்தள்ளி இன அடையாளத்துக்குள்ளே சரணாகதி அடைந்தமை பற்றி கடந்த பகுதிகளில் குறிப்பிட்டிருந்தேன். எனவே மனிங் இல்லாத ஒன்றைக் கண்டுபிடித்து எம்மை பிரித்தாண்டார் என்பன போன்ற வாதங்கள் எமது சமூக நிலைமையினைப் புரிந்து கொள்ளாமல் வைக்கப்படுவது எனலாம்.

மனிங்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட இன வாரிப் பிரதிநிதித்துவத்தினையே டொனமூர் மாற்றி பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தினை அறிமுகப்படுத்தினார். டொனமூர் இதனைப் பிரேரித்த போது சிறுபான்மையினத்தினரும் கண்டிச் சிங்களவர்களும் தமக்கு இனவாரிப் பிரதிநிதித்துவமே தேவையென வாதாடினர். கண்டிச் சிங்களவர்கள், கண்டி மாகாணங்களுக்கு சுயாட்சியே தேவையென்ற கோரிக்கையினை முன்வைத்தனர்.



டொனமூர்
Image source - www.namathumalayagam.com

டொனமூர் குழுவினர் இவ்விரு கோரிக்கைகளையும் நிராக ரித்தனர். இனவாரிப் பிரதிநிதித்துவம் இனங்களைப் பிரித்தாளும் இயல்புடையது என்றும், எல்லோர் பொது நலனையும் பேணாது குறிப்பிட்டவர்களின் நலனை மாத்திரம் இது பேணுவதால் ஜனநாயகத் தன்மையற்றது என்றும் இதுவரை பிரதிநிதித்துவத்தினைப் பெற்றிராத சாதி, சமயப் பிரிவினர் மற்றும் தனிப்பட்ட இயல்புகளைப்பாதுகாக்க விரும்புவோர் என்போரும் தங்களுக்கான பிரதிநிதித்துவத்தினைக் கோரும் போது சட்டசபை அங்கத்தவர்கள் அதிகரிப்பர். அத்துடன் இவ்வாறு பிரதிநிதித்துவம் வழங்கினால் வேறுபாடுகள் அழியாது வளர்வதற்கான சூழலே உருவாகும். எனவே வேறுபாடுகளை அழிப்பதற்கான வழி இனவாரிப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதேயாகும் எனக் கூறி நிராகரித்தனர்.

### கண்டிய தேசிய அசெம்பிளியின் கோரிக்கை

கண்டிய தேசிய அசெம்பிளித் தலைவர்கள் பின்வரும் காரணங்களுக்காக கண்டியை உள்ளடக்கிய சமஷ்டிக் கோரிக்கையினை முன்வைத்தனர்.

1. கண்டியல்லாதோரை பெரும்பான்மையாகக் கொண்ட சட்டசபையில் கண்டி மக்களுக்கான சட்டத்தை வகுப்பதும் வருமானத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்டியரும் பிரித்தானியரும் இல்லாத மூன்றாவது நபரிடம் சென்று விட்டது.

2. கண்டிச் சட்டங்களுக்குள் பெரும்பான்மையாக டச்சுச் சட்டங்கள் இடம்பெற்றுள்ளன, கண்டிய நிலையங்கள் பிறநாட்டு நிலையங்களுக்கு ஒதுக்கப்படுகின்றது, கண்டியரின் வழிபாட்டுத் தலங்களில் எவ்வினத்தைச் சேர்ந்த பௌத்தரும் தலையிடுவது.

**மனிங்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத்தினையே டொனமூர் மாற்றி பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தினை அறிமுகப்படுத்தினார். டொனமூர் இதனைப் பிரேரித்த போது சிறுபான்மையினத்தினரும் கண்டிச் சிங்களவர்களும் தமக்கு இனவாரிப் பிரதிநிதித்துவமே தேவையென வாதாடினர்.**

3. அரச உத்தியோகங்கள் கண்டியரல்லாது வேறு பிரதேசத்தவர்களுக்கு வழங்கப்படுதல்.

4. கண்டி மக்களின் தற்போதைய நிலை 1815 க்கு முன்னுள்ள நிலைமையை விட தாழ்ந்ததாயிருக்கின்றது. குறிப்பாக கல்விக்கான வசதிகள் மிகக் குறைவு என்பதுடன் முன்பு இருந்த பன்சாலைப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டு விட்டன அவற்றுக்குப் பதிலாக வேறு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

மேற்படி காரணங்களில் 3வது மட்டும் யாழ்ப்பாணத்துக்கு பொருந்தக் கூடியது அல்ல ஏனெனில் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த கல்வி வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தி அனைத்து வேலைவாய்ப்புகளையும் பெற்று இலங்கையின் சகல பிரதேசங்களிலும் கடமையாற்றுபவர்களாக இருந்தனர். மற்றும்படி அனைத்துக் காரணங்களும் வடகிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தக் கூடியதாகும்.

இவற்றைத் தீர்ப்பதற்காகவே நாட்டை மூன்று சுயாட்சிப் பகுதிகளாகப் பிரித்து ஒரு சமஷ்டி அரசை அமைப்பதற்கான கோரிக்கையினை முன்வைத்தனர். மூன்று சுயாட்சிப் பகுதிகளாவன,

1. தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்கள்.

2. 2. கண்டி மாகாணங்கள்
3. 
4. கரைநாட்டுச் சிங்களவர்களைக் கொண்ட மேற்கு, தெற்கு மாகாணங்கள்.

இம்மூன்று பிரதேசங்களையும் அவர்கள் எழுந்தமானமாக பிரேரிக்கவில்லை. வரலாற்று ரீதியாக யாழ்ப்பாண இராச்சியம், கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம் எனும் மூன்று 'இராச்சியங்கள் இருந்துவந்தன. இவற்றுக்குப் புறம்பாக கிழக்கு பல சிற்றரசர்களின் கீழ் ஆளப்பட்டும் இருந்தது. இவ்வரசாட்சிகள் தனியே பிரதேசத்தையோ அல்லது இனத்தையோ மட்டும் குறிப்பதாக அன்றி இவை தத்தமக்கென சட்டதிட்டங்களையும் மரபுகளையும் வழக்காறுகளையும் கொண்டிருந்தவையாகும். இதனால்த்தான் காலனித்துவ ஆட்சியாளர்கள் வடக்கில் அங்கு வழமையிலிருந்த தேசவழமையினை சட்டமாக்கினார்கள், இது போன்று கிழக்கில் வழமையில் இருந்த முக்குவ வழக்காறுகளை சட்டமாக்கினார்கள், கண்டியிலும் கண்டிய சட்டத்தை ஆக்கினார்கள். இவ்வாறு பண்பாட்டையும் தனித்துவங்களையும் கொண்ட அவரவர்களிடம் அவர்களுடைய ஆட்சியை ஒப்படைப்பதன் ஊடாக எந்த ஒரு பகுதியினரும் ஏனையோரை அடக்கியாளும் நிலை ஏற்படாது என்பது இக் கோரிக்கையினை முன் வைத்தவர்களது நம்பிக்கையாக இருந்திருக்கின்றது. இருந்தபோதிலும், டொனமூர் ஆணைக்குழவினர் பின் வரும் காரணங்களின் அடிப்படையில் இதனை நிராகரித்தனர்.

1. பிரித்தானிய அனுபவத்தில் அங்கு பல்வேறு இன மக்கள் பிரித்தானியா என்கின்ற உணர்வையும் பற்றையும் கொண்டு பிரித்தானியாவைக் கட்டியெழுப்பியிருக்கிறார்களே தவிர பிரிந்து நின்றல்ல. இது தங்களுடைய அனுபவத்தினை மறுத்து அதற்கு மாறாக தங்களுடைய ஆட்சிப்புலத்தில் பிரிவினையை உருவாக்கும் என அவர்கள் எண்ணிய ஓர் ஆட்சியமைப்பை உருவாக்குவதை விரும்பவில்லை. பிரித்தானியாவைப் போல் இலங்கையிலும் எல்லா இன மக்களும் சேர்ந்து இலங்கைத் தேசியம் என்ற ஒன்றை உருவாக்குவார்கள் என நம்பினார்கள்.

2. வாக்குரிமை விஸ்தரிப்பு, கல்வி வாய்ப்புக்கள், உள்ளூர் சுயாட்சி முறைகளை ஊக்கப்படுத்தல் ஊடாக கண்டியர் கூடுதலான நன்மைகளைப் பெறுவார்கள் என நம்பினார்கள்

3. கரையோரச் சிங்களவர்கள் மற்றையோரை அடக்கியாளாது ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு தேசப்பற்றை வளர்ப்பதற்கு உதவுவார்கள் என நம்பினார்கள்.

இவ்வாறு அவர்களுடைய காரணங்கள் பிரித்தானிய அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த நம்பிக்கையாகவே இருந்தது தவிர தென்னாசிய சமூகங்களின் அடிப்படை இயல்பாக அமையும் அடையாளங்கள் தொடர்பாக அறிவும் கவனமும் கொண்டதாக இருக்கவில்லை.
கண்டியர்களுடன் இணைந்து இலங்கைச் சமூக நிலைமைக்கு உகந்த மாகாண சுயாட்சியினை எந்தந்த தமிழ் தலைவர்களும் கோரவில்லை என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தேன்.



The State Council Secretariat which later housed Sri Lanka's first parliament: The Donoughmore Commission laid the foundation for a solid democratic tradition in Sri Lanka, the first Asian country to enjoy universal adult franchise

**Image source - www.sundaytimes.lk**

## லெனாட் வூல்ஃப் அவர்களின் அறிக்கை

இலங்கையிலிருந்த எந்தத் தலைவர்களையும் விட இலங்கையின் சமூக நிலைமைக்குப் பொருத்தமான ஓர் ஆட்சிமுறையினை டொனமூர் சீர்த்திருத்தத்துக்குச் சற்றுப் பின்பு லெனாட் வூல்ஃப் என்பவர் முன்வைத்தார். இவர் காலனித்துவ இலங்கையில் பிரித்தானிய சிவில் அதிகாரியாக அம்பாந்தோட்டையில் கடமையாற்றியவர். 1911ம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்று பிரித்தானிய தொழிற் கட்சியில் இணைந்து அக்கட்சியின் காலனிய விவகாரங்களுக்கான ஆலோசகராக இருந்து முதலாம் உலகப் போரை அடுத்து இலங்கைக்கு சுதந்திரத்தைப் பரிந்துரைத்ததோடு சுதந்திர இலங்கையில் சிறுபான்மையினரது பாதுகாப்புக்கு முற்காப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என வாதாடினார்.

“இது தொடர்பாக 1938 இல் தனது பொது நிலை அறிக்கையில் அவர் எழுதியதாவது, ‘சிறுபான்மையினரது பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதே ஆலோசனைக் குழுவின் எண்ணமாகும். அரசியல் யாப்பில் மாற்றத்தை எதிர்க்கும் தமிழருக்கு இது குறிப்பாகப் பொருந்தும். சிங்களவர் தமது பெரும்பான்மையைத் தமிழருக்கு மாறாகப் பயன்படுத்தியுள்ளதோடு இனியும் பயன்படுத்துவர் என்ற அடிப்படையில் சுய ஆட்சிக்கான மேலதிக ஏற்பாடுகட்கும் இது பொருந்தும் சம்மதத்தை மறுக்க ஆளுநருக்கு உள்ள உரிமையின் பேரிலும் தொகுதிகளை மீள வலியுறுத்து ஆசனங்களை மீள ஒதுக்கீடு செய்வதற்கான பிரேரணை மூலம் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

‘எனினும், மற்றொரு முறையும் கருத்தில் கொள்ளப்படலாம். அதாவது, பெருமளவிலான அதிகாரப் பரவலாக்கம் ஒன்றை அல்லது ஒரு சமஷ்டி முறையைக் கூட அறிமுகப்படுத்தும் சாத்தியப்பாடு. தமிழ் சிறுபான்மைப் பூர்வகுடிகள் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழுகின்றனர். கரையோரச் சிங்களவரினின்று பல வகைகளிலும் வேறுபட்ட கண்டியச் சிங்களவர் தீவின் நடுப்பகுதியில் ஒருமைத் தன்மையான ஒரு சிங்களச் சனத்திரளாக உள்ளனர்.

குறைந்தளவில் சுவிற்சர்லாந்தின் வகைமாதிரியான கன்ரன்கள் நான்கேனும் உருவாக்கப்படலாம். அதாவது, கரையோரச் சிங்கள மாகாணங்கள், கண்டியச் சிங்கள மாகாணங்கள், தமிழ் வடமாகாணம், தமிழ் கிழக்கு மாகாணம், அதைவிட வந்தேறு குடிகளான இந்தியத் தமிழர் சனத்தொகையிற் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளைக் கொண்ட ஒரு ஐந்தாவது கன்ரனும் தேயிலைத் தோட்டங்களில் உருவாக்க இயலுமாயிருக்கும்.

இவ்வாறான ஒரு அமைப்பிற்கு இலங்கையும் அதன் உட்பிரிவுகளும் அளவிற் சிறியன என்ற வாதம் செல்லாது. இலங்கையின் பரப்பு சுவிற்சர்லாந்தினதும் பரப்பைவிட 10,000 சதுரமைல்கள் (25,000 சதுர கிலோமீற்றர்) அதிகம். இலங்கையின் மக்கள் தொகை ஏறத்தாள 5,300,000. சுவிற்சர்லாந்தினது 4,000,000. சுவிற்சர்லாந்தின் சமஷ்டி முறை இலங்கையில் பாவிக்கப்பட்டால் அதன் ஆகச் சிறிய கன்ரோன் 200,000க்கும் மேலான மக்கள் தொகையுடைய அதன் கிழக்கு மாகாணமாகும். சுவிற்சர்லாந்தின் மிகச் சிறிய கன்ரோனின் மக்கள் தொகை 14,000 அளவிலானது. மிகப்பெரிய மக்கள் தொகை 700,000 அளவிலானது.

சுவிற்சர்லாந்தின் கன்ரோன் சமஷ்டி முறை, இலங்கையிலுள்ளது போன்றதை மிகவும் ஒத்த நிலைமைகளின் கீழ், அதாவது இனத்தாலும் மதத்தாலும் மொழியாலும் ஒன்றிடமிருந்து இன்னொன்று மிகவும் வேறுபட்டுள்ள, வெவ்வேறு அளவிலான சமூகங்கள் ஒரே சனநாயக அரசின் கீழ் சேர்ந்து வாழும் நிலைமைகளின் கீழ், வழமைமீறியளவு வெற்றிகரமானதாகக் காணப்பட்டுள்ளது. 2,750,000 மக்கள் தொகை கொண்ட ஜேர்மன் மொழி பேசும் சுவிற்சர்லாந்தினர் எண்ணிக்கையிற் சிங்களவரின் இடத்தையும் 824,000 பேரைக் கொண்ட பிரெஞ்சு மொழி பேசும் சுவிற்சர்லாந்தினர் தமிழரின் இடத்தையும் 284,000 பேரைக் கொண்ட இத்தாலியர் சோனகரின் இடத்தையும் பிடிக்கின்றனர். சனநாயகக் கன்ரனும் சமஷ்டி முறையும் சிறுபான்மையினரின் நீதி, நியாயமான நலன்களைப் பாதுகாத்துள்ளது.” (மேற்கோள் என். சண்முகதாசன்) இது தொடர்பாக சண்முகதாசன் அவர்கள் குறிப்பிடும் போது “தேயிலைத் தோட்டத்து இந்தியத் தமிழருடைய குறிப்பான தேசிய நலன்களைப் பேணுமாறு அவர்கட்காகத் தனியொரு கன்ரனையும் பரிந்து

ரைத்த ஒரே ஒருவரும் நாமறிய அவர் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் நிச்சயமாகத் தனது காலத்தைத் தாண்டிச் சிந்தித்துள்ளார்." என்பார்.

## தமிழ்த் தலைவர்களின் நிலை

கண்டி அசெம்பிளியினது சமஷ்டி கோரிக்கை, லெனாட் வூல்ஃப் அவர்களினதும்; சமஷ்டி சிந்தனை போன்றவற்றின் பின்னணியில் தமிழ்த் தலைவர்கள் பின்வரும் இரு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தார்கள்.

1. இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை அதிகரித்தல்

2. இலங்கையின் பூரணமான சுதந்திரத்தை அடைதல்

1. இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை அதிகரித்தல்

இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை அதிகரித்தல் எனும் கோரிக்கையானது முழுக்க முழுக்க யாழ் மேட்டுக்குடியினரின் நலன் சார்ந்த கோரிக்கையாக இருந்ததே தவிர வடகிழக்கு தமிழ் மக்களின் நலன்சார்ந்த கோரிக்கையாக இருந்தது என்பது சந்தேகமே. இதன் பிரதிநிதிகளாகக் சேர். பொன். இராமநாதன், சேர்.பொன் அருணாசலம், ஜி.ஜி.பொன்னம்பலம் போன்றவர்களைக் குறிப்பிட முடியும். ஏனெனில் சர்வசன வாக்குரிமை வழங்கப்படக் கூடாது என எதிர்த்தவர்களில் இராமநாதன் முக்கியமானவர் என்பதை கடந்த பகுதியில் சுட்டிக்காட்டப்பட்டது. இது போன்றே இராமநாதனுடைய முன்னோடியான ஆ.குமாரசுவாமி என்பவர் 1810ம் ஆண்டே தேசாதிபதியின் தமிழ் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார். பின் இவரே 1833ம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட சட்ட நிருபண சபைக்கு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவருடைய காலத்திலேயே வடகிழக்கு மாகாணங்கள் தனித் தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மத்திய நிர்வாக அமைப்பினுள் உள்வாங்கப்பட்டன.

அரசாங்கத்திலும் மக்களிடத்திலும் மதிப்புமிக்க தலைவராக இருந்த குமாரசுவாமி அவர்கள் தமிழர் நலன் தொடர்பாக சிந்தித்திருக்கக்கூடிய தலைவராக இருந்திருந்திருந்தால் இவ்வாறான ஒரு நிர்வாக ஒழுங்குக்கு எதிராக மாற்று நடவடிக்கைகளை எடுத்திருப்பார். அவர் ஒரு தேசிய வாதியாகவும் அரசாங்கத்துக்கு நம்பிக்கைக்குரியவராகவுமே இருந்திருக்கின்றார். இதனால் அவர் தமிழர் நலன் அவர்களுடைய நிர்வாக அலகு என்பவை பற்றி சிந்திக்கவும் இல்லை நடவடிக்கைகள் எடுக்கவுமில்லை.

குமாரசுவாமியின் மறைவுக்குப் பின் சைமன் காசிச் செட்டி அவர்கள் சட்ட நிருபணசபையில் உறுப்பினராக இருந்தாலும் இவரும் வடகிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தேவைப்பாடுகள் பற்றி எதுவும் செய்தவராக அறியப்படவில்லை. சைமன் காசிச் செட்டிக்குப் பின் இராமநாதனுடைய மாமாவாகிய முத்துக்குமாரசுவாமி அவர்கள் 1862ம் ஆண்டு தொடக்கம் 1879ம் ஆண்டு வரையான 17 வருடங்கள் சட்ட நிருபணசபையின் உறுப்பினராக இருந்தார். இவர் சமூக அரசியல் அறிவும் சட்ட வல்லுனராகவும் திறமையான பேச்சாளராகவும் இருந்து அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெற்றவராக விளங்கியபோதும், வடகிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எதுவுமே செய்தவர் எனக் கூறமுடியாது. இவரும் இலங்கை தேசியத்தை பாதுகாப்பவராகவும் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குரியவராகவுமே இருந்திருக்கின்றார்.

முத்தக்குமாரசுவாமியின் பின்பு அவருடைய மருமகனான பொன். இராமநாதன் சட்ட நிருபணசபையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடைய தேர்வுக்கு ஆறுமுகநாவலர் கணிசமான பங்களிப்பினை ஆற்றியிருந்தார். 1879 தொடக்கம் 1892ம் ஆண்டு வரையான 13 வருடங்கள் அவர் இப்பதவியினை வகுத்திருந்தார். (மாமனும் மருமகனும் தொடர்ச்சியாக 30 வருடங்கள் சட்ட நிருபணசபையின் உறுப்பினர்களாக இருந்துள்ளார்கள்) பொன்.இராமநாதன் அவர்களுடைய பதவிக்காலங்களில் தான் சிங்கள பௌத்தம் சிறுபான்மையினருக்கு எதிரானதாக வளர்ச்சி பெற ஆரம்பித்தது. 1883ம் ஆண்டு கொட்டாஞ்சேனையில் கத்தோலிக்கர்களுக்கு எதிராக நடந்த வன்முறை இதற்கு உதாரணமாகும். இக்காலத்தில் பல பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் காலனித்துவ அரசால் மேற்கொள்ளப்பட்டன. வளர்ந்து வந்த சிங்கள பௌத்தம் சிறுபான்மையோருக்கு ஏற்படுத்தும் விளைவு பற்றியோ அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வாழும் வடக்குக் கிழக்கிலும் மேற்கொள்வதற்கு எந்தவித நடவடிக்கையினையும் இவர் எடுத்தவராகவும் இல்லை. உதாரணமாக 1890ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு புகையிரத சேவையை வழங்குவதற்கு அமைக்கப்பட்ட சாத்திய வள ஆணைக்குழுவின் ஒரு அங்கத்தவராக பொன். இராமநாதன் இருந்தார். இவ்வாணைக்குழுவின் அறிக்கை சட்ட நிருபண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர்கள் அதற்கு எதிர்த்து வாக்களித்தமையினால் அத்திட்டப்பிரேரணை நிராகரிக்கப்பட்டது. அதற்கெதிராக திரு.பொன்.இராமநாதன் எதுவுமே செய்யவில்லை. ஆனால் அதன் பிறகு 1915ம் ஆண்டு கண்டிக்கலவரத்தில் ஈடுபட்டு தண்டனை பெற்ற தனது வர்க்கத்தினரை விடுவிப்பதற்கு கிளர்ந்தெழுந்தார். இது முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக அவர் செய்த துரோகத்தனமாகும். இது போன்றே 1931ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமைக்கும் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்துக்கும் எதிராக டொனமூர் ஆணைக் குழுவினருக்கு சாட்சியமளிப்பதற்கும்

**தமிழ்மக்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகவன்றி குறிப்பிட்ட சில பேர் சட்டநிருபணசபையில் உறுப்பினர் ஆதல் வேண்டும் என்பதற்காக பூசப்பட்ட சாயமே தமிழ் தேசியவாதமாகும்.**

அறிக்கைகள் விடுவதற்கும் தயங்கவில்லை. இது ஜனநாயகத்திற்கு அவர் செய்ததுரோகத்தனமாகும். இதற்கு அடிப்படைக் காரணம் இராமநாதனின் வர்க்க இயல்பேயாகும். அவர் வடகிழக்கு சாதாரண தமிழ் மக்களின் அபிலாசைகளை விட தனது எதிர்கால நலன்கள் தொடர்பாக சிந்தித்து காலனித்துவ அரசுக்கு விசுவாசமானவராக செயற்பட்டிருக்கின்றார். இதன் காரணத்தினால்த்தான் பிரித்தானிய அரசால் 1889ல் சேர் பட்டம் வழங்கி கௌரவிக்கபட்டார். 1892ல் அவருடைய சட்ட நிருபண உறுப்புரிமை முடிவுபெற இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு 1902ல் கிங்ஸ் கவுன்சிலராக பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்டு 1903ல் ஓய்வு பெற்றார்.

முக்கியமான காலகட்டத்தில் பதவியில் இருந்தபோது காலனித்துவ அரசின் விசுவாசியாக இருந்து சிறுபான்மையினருக்கு எதுவுமே செய்யாதவர் டொனமூர் திட்டத்தில் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற அவருடைய கோரிக்கை மாத்திரம் எந்தளவுக்கு சாதாரண தமிழர் நலன் சார்ந்ததாக இருக்கமுடியும். 30 வருடங்களாக மாமனும் மருமகனும் ஏகப் பிரதிநிதிகளாக இருந்து கொண்டு தமிழர்களுக்குச் செய்யாததை பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதினால் மாத்திரம் செய்ய முடியும் என நினைப்பது அல்லது செயலாற்றுவது மக்களை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையேயாகும். நிச்சயமாக இது உயர்வர்க்க நலனுக்கு தமிழ் இன உணர்வை தக்கபடி கையாளும் வர்க்க நல அரசியலேயாகும். அந்தவகையில் தமிழ் இன உணர்வையும் தமிழ் இனத்தையும் உயர்வர்க்கம் தமக்கு ஏற்றபடி பயன்படுத்தும் அவ்வாறு முதன்முதல் பயன்படுத்திய உதாரணபுருஷராக சேர்.பொன்.இராமநாதன் அவர்களைக் கருதமுடியும்.

அடுத்து சேர்.பொன். அருணாசலம் அவர்கள் மேல் மாகாணத்திற்கான பிரதிநிதித்துவ ஒதுக்கீடு தொடர்பில் ஏற்பட்ட முரண்பாட்டினால் இலங்கை தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறி தமிழர் மகாஜன சபையை உருவாக்கியிருந்தார். அருணாசலம் அவர்களின் இச் செயற்பாட்டினூடாக தமிழ்த் தேசியவாதம் ஆரம்பித்ததான கருத்தும் உண்டு. தமிழ்த் தேசிய வாதத்தின் மிகப் பெரிய பலவீனமே அது எதற்காக யாருடைய தேவைக்காக தோற்றம் பெற்றது என்பதுதான். ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தின் நலன்களையும் உரிமைகளையும் சுரண்டி வாழாது தனக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய உரிமைகளையும் நலன்களையும் பெற்று வாழ முயற்சிக்க வேண்டும். அந்த நியாயத்தக்கான போராட்டமே தேசிய வாதப் போராட்டம் ஆகும். ஆனால் இங்கு தமிழ் தேசியவாதம் என்பது சட்டசபையில் முறையற்ற பிரதிநிதித்துவக் கோரிக்கையின் அடிப்படையில் எழுகின்றது. அந்தச் சட்டசபைக்கு தெரிவாகப் போகிறவர்கள் கல்விகற்ற வசதிபடைத்த உயர்வர்க்கமேயாகும். எனவே தமிழ்மக்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகவன்றி குறிப்பிட்ட சில பேர் சட்டநிருபணசபையில் உறுப்பினர் ஆதல் வேண்டும் என்பதற்காக பூசப்பட்ட சாயமே தமிழ் தேசியவாதமாகும். இதனை சேர்.பொன்.அருணாசலம் அவர்களும் அவருக்குப் பின்வந்த தலைவர்களும் மிக கட்சிதமாக முன்னெடுத்தனர்.

அடுத்து ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுடைய அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக நோக்குதல் வேண்டும். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் டொனமூர் அரசியல் திட்டம் பூரண சுதந்திரத்திரத்திற்க்குத் தடையாக உள்ளதால் அவ்வரசியல் திட்டம்மூலம் கொண்டுவரப்பட்ட தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்து பகிஷ்கரிப்பை மேற்கொண்ட போது அப்பகிஷ்கரிப்பை கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் சட்டசபையில் அந்தப் பகிஷ்கரிப்பின் நோக்கத்தையே இருட்டிப்புச் செய்து உரையாற்றியிருந்தார். அதாவது “முப்பத்தேழு அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் எமது ஒன்பது அங்கத்தவர்கள் இருந்தனர். இன்று ஐம்பது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ள சபையில் நாங்கள் நாலு அல்லது ஐந்து பேர் என்ற நிலைக்கு பின்தள்ளப்பட்டுள்ளோம். இந்தச் சபைக்கு நாம் செல்வதில் என்ன பயன்? என்பதே. இந்தப் பகிஷ்கரிப்பு முடுக்கி விடப்பட்டதற்கான காரணத்தை கௌரவ அங்கத்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். தமிழ் சமூகத்திலிருந்து ஒரு சில அங்கத்தவர்கள் மட்டும் தெரிவு செய்யப்படுதல் தாக்கமற்றதாகிவிடும். அதனால் கடந்த காலத்தில் இருந்த அளவுக்கு அரசாங்கத்தில் தாம் குரலெழுப்ப வாய்ப்பு இருக்க முடியாது என திடமாக மக்கள் நம்பினர்.” எனத் தனக்குச் சார்பாக பகிஷ்கரிப்பை பயன்படுத்திக்கொண்டார். இது போன்றே ஆளுநரின் அதிகாரங்கள் அதிகரிக்க வேண்டும் எனும் மசோதா சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதனை திரு. பொன்னம்பலம் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பானதும் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் நலனுக்கு உகந்தது என்று பாராட்டி வரவேற்று ஒரு மகஜரை அனுப்பியிருந்தார். ஆயினும் 30 தடவைகளுக்கு மேல் இச்சட்டத்தினை ஆளுநர் பயன்படுத்தியிருந்தாலும் ஒரு போதும் சிறுபான்மையினர் நலன்கருதி பயன்படுத்தவில்லை. சிறுபான்மையினர் நலன்பற்றி அக்கறைப்பட்ட பொன்னம்பலம் தானும் அது பற்றி கேட்காததில் இருந்து அவர்களுடைய மேட்டுக்குடி நலன் எப்படிப் பட்டது என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

தொடரும்.



## கந்தையா சண்முகலிங்கம்

பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றி ஓய்வுப்பெற்றவர். கல்வி அமைச்சின் செயலாளராகவும் விளங்கினார். இவர் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம் என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசினை பெற்றது.

’நவீன அரசியல் சிந்தனை’, ’கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ’இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


பகுதி 1

# 18ம் நூற்றாண்டில் வட இலங்கையில் வேளாளர்கள்: மேலாதிக்கச் சாதிக்குழுமத்தின் சமூக வரலாறு



**விவசாயத்தோடு தொடர்புடைய சாதியினர் (மாதிரிப்படம்)**

Image source realagnikulakshathriyarvanniyar.wordpress.com

> 20ஆம் நூற்றாண்டு வட இலங்கைத் தமிழ்ச் சமூகம், மேலாதிக்கச் சாதிச் சமூகம் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அந்நூற்றாண்டில் வேளாளர் சாதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேலாதிக்கச் சாதியாக உருவாக்கம் பெற்றிருந்தது.

மேலாதிக்கச் சாதி’ என்னும் கருத்தை விளக்கும் மானிடவியல் ஆய்வுகள் பல உள்ளன. கிராமம், மாவட்டம், பிராந்தியம் என்ற மூன்று நிலைகளில் ஒரு சாதியின் மேலாதிக்கம் இருக்க முடியும். இந்த மேலாதிக்கத்தின் பண்புக் கூறுகள் சில உள்ளன என்றும் மானிடவியலாளர்கள் கூறுவர். ஒரு குறிப்பிட்ட சாதி சனத்தொகையின் பெரும்பான்மை யாக இருக்கும்போது அந்தச்சாதிக்குப் பிறசாதிகளை விடப் பல சாதகமான நிலைமைகள் இருக்கும். சனத்தொகையில் பெரும்பான்மையாக இருத்தல் மூலம் மேலாதிக்கத்தை பெறுதல் நவீனத்துக்கு முந்திய சமூகங்களிலும் (*premodern societies*)இருந்துள்ளது. சர்வசன வாக்குரிமையும், தேர்தல் அரசியலும் நிலவும் இன்றைய காலத்திற்கும் இவ்வகை மேலாதிக்கம் பொதுவானது. மேலாதிக்கம் பெறுவதற்கு யாவற்றிலும் அடிப்படையான விடயம் பொருளாதார அதிகாரத்தைப் பெறும் வழிகள் பலவற்றையும் குறிப்பிட்ட சாதி தனது கட்டுப்பாட் டில் வைத்திருப்பதாகும். விவசாய சமூகங்களில் (*Agrarian societies* ) நில உடைமையும், விவசாய வளங்களை கையகப்படுத்திக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் முக்கியமானதாகும். பொருளாதாரக் கட்டுப்பாட்டின் ஏனைய கூறுகள் பல உள்ளன. விவசாய சமூகங்களில் மிக அருந்தலாக உள்ள மட்டுப்படுத்தப்பட்ட நிதிவளத்தை


(பணம்)கட்டுப்பாட்டில் வைத்திருப்பது முக்கிய மானது. அத்தோடு வர்த்தகம், பொருட்களின் பரி வர்த்தனை சேவைத் தொழில்கள் ஆகியவற்றி னைக் கட்டுப்படுத்தலும் அவற்றில் ஆதிக்கம் செலுத்துதல் என்பன முக்கியமானவை. உழைப் பையும், உழைப்புக்கு கொடுக்கும் ஊதியத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். மேற் சொன்ன காரணிகளை ஒரு சாதி தனது கட்டுப் பாட்டில் கொண்டு வருவதன் மூலம் நிர்வாகப் பதவிகள் ,உத்தியோகப் பதவிகள் என்பனவற்றை யும் தனது உடைமையாக்கிவிடும். இந்நிர்வாக அதிகாரம் கிராமம் மாவட்டம், பிராந்தியம் என்ற மூன்று நிலைகளில் எவ்வாறு உடைமை கொள் ளப்படுகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். இவ் வதிகாரங்கள் யாவற்றுக்கும் சிகரம் வைப்பது போன்று அமைவது குறித்த மேலாதிக்கச் சாதிக் குக் கிடைக்கும் சடங்கியல் மேலாண்மையும் (ritu al superiority) சமய நிறுவனங்களைக் கட்டுப்படுத் தும் அதிகாரமுமாகும். இவ்வதிகாரம் அதன் சாதிய மேலாண்மைக்கு நியாயத்தையும் வலிதுட மையையும் வழங்குகிறது.

**மேலாதிக்கச் சாதி ஒன்றன் மேலாதிக்கம்**

- அரசவம்சம் ஒன்றின் சர்வாதிகார ஆட்சி
- காலனிய சர்வாதிகார ஆட்சி
- நவீனகாலத்து வெகுஜன சனநாயகம்

என்ற வெவ்வேறு அரசியல் முறைகளின் கீழும் சாத்தியமானது.

20ஆம் நூற்றாண்டு வட இலங்கைத் தமிழ்ச் சமூகம், மேலாதிக்கச் சாதிச் சமூகம் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அந்நூற்றாண்டில் வேளா ளர் சாதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேலாதிக் கச் சாதியாக உருவாக்கம் பெற்றிருந்தது. சனத்தொ கையில் எண்ணிக்கை அடிப்படையில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பதினேழு வரையான சாதி கள் யாழ்ப்பாணத்தில் இருந்தன. இவற்றுள் எச்சா தியும் சனத்தொகை என்ற அளவுகோலின்படி யான வேளாளர் சாதி மேலாதிக்கத்துடன் போட்டி யிடும் நிலையில் இருக்கவில்லை. வேளாளர் நிலச் சொத்துக்களின் பெரும்பகுதியை உடைமை கொண் டும் இருந்தனர். ஏனைய பொருளாதார நடவடிக் கைகளிலும் அச்சாதியினரின் ஆதிக்கம் அதிகரித்து இருந்தது. பிரித்தானிய ஆட்சியின்போது அவர் கள் ஆங்கிலக் கல்வியை ஊக்கத்தோடு கற்று எழு துவினைஞர் தொழிலிலும், உயர் தொழிற் பதவிக ளிலும், நிர்வாகத்துறைப் பதவிகளிலும் இடம் பிடித்தனர். சுதந்திரத்தின் பின்னர் தேர்தல் அரசி யல் ஊடாக அரசியல் அதிகாரப் பதவிகளையும் பெற்றனர்.



**கைவினைத் தொழில்களுடன் தொடர்புடைய சாதியினர் (மாதிரிப்படம்)**
Image source
realagnikulakshathriyarvanniyar.wordpress.com

வேளாளர்கள் 20 ஆம் நூற்றாண்டில் பெற்றுக் கொண்ட மேலாதிக்கத்தை ஆதாரமாகக் கொண்டு வடஇலங்கையில் தமிழர் குடியேற்றத்தின் ஆரம்ப காலம் தொட்டே வேளாளர் என்ற சாதியினர் மேலாதிக்கச் சாதியாக இருந்தனர் எனக் கொள்வது தவறு. பண்டைய நாளில் வேளாளர் பிற சாதிக ளைவிட முன்னணி வகித்தனர் என்று கொள்ள லாம், ஆயினும் முற்காலக் குடியேற்றம் பற்றிய தகவல்கள் புனைவு கள், நாட்டார் வழக்காற்று மர புகள் என்பனவற்றின் கலவையாகத் தெளிவற்று உள்ளன. யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றினை எடுத்துநோக்கும் போது, அதன்b பொருளாதாரத் தின் மூன்று துறைகளோடு சம்பந்தப்பட்ட மூன்று சாதிகள் இருந்தன என்பது தெரிகிறது.

- விவசாயத்தோடு தொடர்புடைய சாதிகள்.
- கைவினைத் தொழில்களுடன் தொடர்பு டைய சாதிகள்.
- கரையோரத் தொழில்களுடன் தொடர்பு டைய சாதிகள்.

மேற்குறித்து மூன்று உற்பத்தித் துறைகள் சார்ந்த மூவகைச் சாதிகளிடையே ஒரு அதிகாரச் சமநிலை (Balance of power) இருந்தது. ஆயினும் ஆரம்பம் முதலே வேளாளர் சாதி அதன் அதிகாரத்தையும், செல்வாக்கையும் பலப்படுத்திக் கொள்ளும் நடவ டிக்கைகளில் ஈடுபட்டு பிறசாதிகளைப் பின்னிலைக்குத் தள்ளியது என்பதற்கு ஆதாரம்

உள்ளது. வேளாளரின் உயர்ச்சிக்கு அரசியல் மாற்றங்களும் அதன் பயனாக பொருளாதார அதிகாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் துணையாக அமைந்தன எனலாம்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் பற்றிய மரபுவழி வரலாற்று நூல்களை வேளாளர் குலத்தினரான கற்றறிந்த புலவர்களே எழுதினார்கள். ஆகையால் அந்நூல்களில் வேளாளத் தலையாரிகளின் (chieftains) நடவடிக்கைகளும் தலைமைத்துவமும் முதன்மைப்ப டுத்தப்பட்டு சித்திரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாய மாலை என்னும் நூல் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற் றம் பற்றிய ஆதாரபூர்வமான செய்திகளைக் கொண்ட பனுவல் என நம்பப்படுகிறது. இப்பனுவலில் யாழ்ப்பாண இராச்சியத்தின் பல்வேறு பகுதிகளிற்கும் நியமனம் செய்யப்பட்ட வேளாளர்களான நிர்வாக அதிகாரிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் முதலாவது அரசனான சிங்கையாரியன் (கி.பி.1280) காலத்தில் செய்யப்பட்டன என்றும் இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களை 'போர் வீரர்களான தலையாரிகள், 'நிலமானிய தலையாரிகள்' என்ற தொடர்களாக அண்மைக் காலத்தில் ஆய்வு நூல் எழுதிய ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இத்தலைவர்கள் பாண்டிய நாட்டில் இருந்து வந்தவர்கள், விவசாயிகளான வீரர் குலங்களைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படுகிறது. இவ்வீர குலங்கள் மழவர், காங்கேயர் ஆகிய பெயர்களைப் பெற்றிருந்தன. இவ்வீர குலத்துக் குடும்பங்கள் குடியேறியதாக குடா நாட்டில் விவசாயக் குடியிருப்புகள் பல இடங்களில் ஏற்பட்டன. இக்குடியிருப்புகள் ஏற்பட்ட காலத்தில் நல்லூரைத் தலைநகராகக்கொண்டு உருவாக்கம் பெற்ற இராச்சியம், மத்தியப்படுத்தப்பட்ட அரச அதிகாரத்தின் கீழ் சமூக உறவுகள் வளர்ச்சியடைய உதவியது. இவ்வீரகுலக் குடும்பங்களின் குடியிருப்புக்கள் ஏற்பட்ட காலத்தில் இக்குடும்பங்கள் தமக்குச் சேவைகளை வழங்குவதற்காக 'குடிமைகள்' அல்லது கட்டுப்பட்டவர்கள் ஆகிய சமூகப்பிரிவினரையும் இங்கு கொண்டு வந்து குடியேற்றினர் எனக் கருதப்படுகிறது
தென்னிந்தியாவின் வேளாளர்கள் பல உபகுழுக்களாகப் பிரிபட்டு இருந்தனர். இவ் உபபிரிவுகள்



**கரையோரத் தொழில்களுடன் தொடர்புடைய சாதியினர்**

Image source - www.imagesofceylon.com

புவியியல், குடி (Clan) ஆகிய அடிப்படைகளில் பிரிபட்டிருந்தன. வேளாளர்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறிய போது அவர்களிற்கிடையிலான இப்பி ரிவினைகள் இங்கும் தொடர்ந்தன எனக் கருதமுடி கிறது. இன்றுவரை தொடரும் இப்பிரிவினைகளை அவதானிக்கமுடிவதோடு, இங்குகுடியேறியவர்களி டம் பொருளாதார வேறுபாடுகளும் தோன்றி வளர்ந்தன. தலையாரிக் குடும்பங்கள் (chieftain fami lies) என அழைக்கப்பட்டவர்களுக்கு அரசனால் அமைச்சுப் பதவிகளும் மாவட்டங்களின் வரிவரு மான அதிகாரி பதவிகளும் வழங்கப்பட்டன. இவ் வாறான பதவி நியமனங்களைப் பெற்றோர் பேர ளவு நிலங்களையும் மானியமாகப் பெற்றனர். அத்தோடு வரியை அறவிட்டு அரசுக்குக்கு அனுப் பும் அதிகாரத்தையும் அவர்கள் பெற்றனர். இவ்வ திகாரிகள் அக்காலத்தில் முதலியார்கள் என அழைக் கப்பட்டனர். முதலியார் என்ற பெயர் அக்காலத் தில் இவர்களின் சமூகத்தகுதியை அடையாளப்ப டுத்தும் சின்னமாக அமைந்தது. இம்முதலியார்க ளின் கீழ் படித்தர முறையில் அமைந்த பல பதவி நிலையினரும் இருந்தனர்.

மணியகாரர், தலைவர், விதானை முதலிய பெயர்களால் இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர் கள் கிராம மட்டத்தில் அதிகாரம் உடையவர்க ளாய் விளங்கினர். இவர்களிற்கும் நிலங்கள் மானி யமாக வழங்கப்பட்டன. இவ்வாறு நிலங்களைப் பெற்றோர் பழைய குடியேறிகளின் தலைவர்களாக இருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். ஒரு கிராமம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகு தியையோ தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த குடும்பங்களிடையே இருந்த அதிகாரக் கட்ட மைப்பை இது பிரதிபலிப்பதாக இருந்தது. இந்த அதிகாரக் கட்டமைப்பின் அடித்தளத்தில் நிலத் தைப் பயிரிடும் குடியான்கள் இருந்தனர். இவர்கள் சிறு நிலத்துண்டுகளின் உடை மையாளர்களான குடி யான்கள் ஆவர். இதே காலத்தில் குடா நாட்டின் பிறபகுதிகளில் விவசாயம் அல்லாத வேறு தொழில் களைச் சார்ந்த குடியிருப்பு களும் இருந்தனர். அக் குடியிருப்புக்களின் சாதியினரின் பொருளாதார நிலைக்கு ஏறக்குறைய சமமான நிலையிலேயே வேளாண்குடிகளின் வாழ்நிலையும் இருந்தது. இவ் வாறு வெவ்வேறு தொழில்களை செய்தோரான மக்கள் யாவரையும் ஒன்றிணைத்த சமூகக் குழு வாக, வேளாளர் மேலாதிக்கத்தின் கீழ்கட்ட மைக் கும் செயல்முறை யாழ்ப்பாண இராச்சியக் காலத் தில் ஏற்பட்டு, யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின்னரும் தொடர்ந்தது. ஆகையால் இது 400 ஆண்டுகளாகத் தொடரும் செயல்முறை ஆகும்.

யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னுள்ள நான்கு நூற்றாண்டு காலத்தில், பல் வேறு காரணிகள் வேளாளர் மேலாதிக்கம் ஓங்குவ தற்குத் துணை செய்தன. அரசியல் மாற்றங்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டன. பொருளாதார மாற் றங்களும் ஏற்பட்டன. இவை யாவற்றினதும் விளைவாக பல சாதிக் குழுக்கள் வேளாளர் சாதியு டன் இணைந்து கொண்டன. இவ்வாறான ஒன்றி ணைதலில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் வளர்ச் சியை இங்கு குறிப்பிடுவோம். வேளாளர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு குடாநாட்டில் அதி காரச் சமநிலையைப் பேணிய சமூகப் பிரிவி னர் இருந்துவந்தனர். அச்சமூகப் பிரிவினர் தமக் கெனத் தனித்துவமான மரபுகளைக் கொண்டிருந்த னர். தமக்குரிய பொருளாதார முயற்சித்துறை களில் அவர்கள் தமது சுயத்துவத்தையும் பேணி வந்தனர். தம் துறைகளில் அவர்கள் அதிகாரம் உடையவர்க ளாயும் விளங்கினர். ஆயினும் மரபுவழி வரலாற்று நூல்களில் வேளாளர் அல்லாத இச்சமூகப் பிரிவி னர்களின் வரலாறுகள் குறிப்பிடப்படுவதில்லை. இவ்வரலாற்று நூல்கள் வேளாளர் மரபைப் போற் றும்நோக்குடன் எழுதப்பட்டமை இதற்கான கார ணமாகும். இருந்தபோதும் யாழ்ப்பாணத்தின் சில சாதிகளின் மரபுகள் இருந்துள்ளன. குறிப்பாக கட லும் கடல்சார்ந்த வாழ்க்கையை உடைய மீன்பி டித்தொழில் செய்யும் சாதிகளின் மரபுவழி வர லாற்றுக் கதைகள் உள்ளன.

கரையார் சாதியின் குடியேற்றம், முக்குவர் சாதியின் குடியேற்றம் பற்றிய மரபுவழி வரலாறு கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். இவ்விரு சாதியினருள் முக்குவர் சாதியின் வரலாறு முக்கி யம் பெறுகிறது. முக்குவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே மட்டக்களப்பிலும் புத்தளத்திலும் குடி யேறிப் பரவி மேலாதிக்கச் சாதியாக இருந்தனர். இதனால் இவர்களது வரலாற்று மரபுகள் வாய் மொழியாகவும், ஏட்டிலும், எழுத்திலுமாகப் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. முக்குவர் சாதி அரசி யல் அதிகாரமும், சடங்கியல் அதிகாரமும் உடை யதாய் இருந்தது. கரையார் சாதியிடமும் அரசியல், இராணுவ அதிகாரத்தையும் சைத்திரிய அந்தஸ் தையும் கோரும் மரபுகள் பல இருந்துள்ளன. இவற் றுள்பலமரபுகள்தென்னிலங்கையின்சிங்களவர்களாக உள்ள 'கராவ'சாதிக்கும் தமக்கும் பொதுவானவை என இவர்களால் கருதப்படுகிறது. கராவ சாதிக் கும் தமக்கும் பொதுவான மூலம் உள்ளது என இவர்கள் கருதுவர்.

கரையார், முக்குவர் ஆகிய இரு சாதியினர தும் குடியேற்றம் பற்றிய எழுத்தாவணங்கள் சில உள்ளன. இது ஒரு நற்பேறு எனவே கொள்ளலாம். ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலம் யாழ்ப்பா ணத்தை ஆட்சி செய்த டச்சு கிழக்கிந்தியக் கம்பனி



A southern Karava wedding

Image source - www.alamy.com

(1658 - 1795) இத்தகைய எழுத்தாவணங்கள் சில வற்றை விட்டுச் சென்றுள்ளது. யோன் சைமன் (Joan Simon) என்ற டச்சுத் தேசாதிபதி 1704 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தான், அப்போது யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரதிநிதிகள் பலருடனான சந்திப்பு ஒன்று நிகழ்ந்தது. இச்சந் திப்பு வழமைப் படியானது, அப்போது பலரும் தமது மனக்குறைகளைத் தெரிவிப்பதுண்டு. யோன் சைமன் உடனான இச்சந்திப்பின் போது வடம ராட்சியின் கற்கோவளம், நாகர்கோவில் ஆகிய இரு கரையோரக் கிராமங்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அப்போது அப்பிரதிநிதிகள் தம் மீது ஆள்வரி (Personal tax) விதிக்கப்படுவதை ஆட்சேபித்து முறையிட்டனர். தமது கிராமங்க ளில் தம் மூதாதையர் வந்து குடியேறிய வரலாறு பற்றியும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தமது மூதாதையர் தென் இந்தியாவின் சோழ மண்டலக் கடற்கரையில் (Coromandal Coast)) இருந்து இடம்பெயர்ந்து வந்து கற்கோவளத்தி லும், நாகர் கோவிலிலும் குடியேறியதாக அவர் கள் குறிப் பிட்டனர். தமது மூலத் தாயகத்தில் தமக்குச் செய்யப்பட்ட, பாரபட்சம், புறக்க ணிப்பு காரணமாக தமது பெண்களையும், குழந் தைகளையும் அழைத்துக் கொண்டு தம் மூதாதை யர் இங்கு வந்து குடியேறியதாகவும் கூறினர். இக் குடியேற்றம் செகராஜசேகரன் என்ற மன்னனின் காலத்தில் நிகழ்ந்தது. அம்மன்னன் அக்குடியேறி களை துறைமுகப் பகுதிகளில் குடியேற அனும தித்தான். இம்மக்களின் தலை வனான வர்ணகுலாதித்தன் பின்னர் யாழ்ப்பா ணத்திற்கு வந்து தன் மக்களை திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்கும்படி மன்னனை கேட்டான். அதற்கு மன்னன் மறுப்புத் தெரிவித் தபோது, கடற்கரைப் பகுதி யில் அம்மக்களுக்கு நிலத் தைக் கொடையாக வழங்கும் படி கேட்டான். அவ்வாறு நிலம் கொடையாக வழங்கப் பட்டதன் பய னாக கற்கோ வளம் நாகர்கோயில் என்ற இருகிராமங்கள் உருவாகின. அக்கிராமத்தவர்கள் கடற் தொழிலில் ஈடு பட்டனர். அச்ச மூகப்பிரிவினர் ஆண்டு தோறும் 300 சக்கரம் வரியாகச்செலுத் தவேண்டும் என விதிக்கப்பட் டது ('சக்கரம்' என்பது யாழ்ப் பாண அரசர்காலத்து நாண யம்). இவ்விரு கிராமங்கள் பற்றிய உடன்படிக்கை பின்னர் வந்த அரசர்களாலும் உறுதி செய்யப்பட் டது.

யாழ்ப்பாண இராச்சிய காலத்திற்கு பின் னர் போத்துக்கீசரும் இந்த உடன்படிக்கையை உறுதிசெய்து வந்தனர். யாழ்ப்பாணஅரசர்கள் பலர் செகராஜசேகரன் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டதால், யோன் சைமனுக்கு விபரித்துக் கூறப்பட்ட இவ்வரலாற்றில் குறிப்பிடப்படும் செகராஜசேகரன் என்ற மன்னன் யார் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை.

கற்கோவளம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் நடைபெற்ற குடியேற்றங்கள் பற்றிய தகவல்கள் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்துகின் றன. யாழ்ப்பாண அரசர் காலத்தில் பல்வேறு காரணங்களால் தென்னிந்தியாவில் இருந்து பல சமூகப்பிரிவினர் இடம்பெயர்ந்து வந்து வட இலங்கையில் குடியேறினர். அவ்வாறு குடியேறி யவர்கள் தம்குழுவின் அதிகாரக் கட்டமைப்பை இலங்கையில் குடியேறிய இடத்திலும் பின்பற்றி னர். இந்த அதிகாரக் கட்டமைப்பு அதிகளவு தலையீடு இல்லாது தொடர்வதற்கும் யாழ்ப்பா ணத்து அரசர்கள் இடமளித்தனர். கற்கோவளம், நாகர்கோவில் ஆகிய இரு கிராமங்களிலும் குடி யேறியோர் மீதான வரி வித்தியாசமானது, அரச னின் சார்பில் வரி அறவிடுவோர் இச்சமூகக் குழு வின் மீது தலையீட்டைச் செய்வது குறைவாகவே இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடரும்.

# 18ம் நூற்றாண்டில் வட இலங்கையில் வேளாளர்கள்: யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சிக்கு முன்பும் பின்பும்

பகுதி 2

**விவசாய உற்பத்தி நடவடிக்கைகளோடு தொடர்பற்றதான, சுதந்திரமான சாதிக்குழுக்கள் பலவும் இருந்தன. கைவினைச் சாதிகள் சுதந்திரமானவையாக இருந்தன. இன்று வரை இருந்து வரு கின்றன.**



கைவினைப் பொருள்கள் செய்வோர்

Image source - www.devendrantoday.com

டச்சு அரசாங்கத்தின் இலங்கை ஆளுநரான யோன் சைமன்ஸ் 1704 ஆம் ஆண்டில், கரையார் சமூகப் பிரிவினரின் குறைகளைக் கேட்டறிந்தமை பற்றிக் குறிப்பிட்டோம். யோன் சைமனுக்கு அப்போது சாணார் என்ற இன்னொரு சமூகப் பிரிவினரும் தம் குறைகளை முறை யீடு செய்திருந்தமை எமது கருத்தை வலுப்படுத்தும் இன் னொரு சான்றாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் பழைய குடியேறிகளான வேளாளர்களுக்கு அடுத்த படிநிலையில் தாம் இருப்பதாக சாணார் கூறியிருப்பதானது சுவாரசியமான ஒரு தகவலாகும். இவர்கள் தென்னிந்தியாவின் மலபார் கரை யில் இருந்து யாழ்ப்பாணத்தில் அதினாவரசன் என்ற தலைவ னின் தலைமையில் வந்து குடியேறிய முன்னோர் வழிவந்தவர் கள் எனத் தம்மைக் கூறிக்கொண்டனர்.

அதினாவரசன் யாழ்ப்பாண அரசர்களுக்கு முன்பே யாழ்ப்பாணத்திற்கு வந்தவனென்பதும் அவர்களின் கருத்தா கும். மலபாரின் சாணார்கள் தென்னை மரத்தில் கள்ளிறக்கும் தொழிலைச்செய்தனர். இலங்கை வந்த பின்னர் அவர்கள் பனைமரத்திலிருந்து கருப்பணியை (பதனீர்) பெற்று கருப் பட்டி உற்பத்தி செய்தல், பனம்பழத்தில் இருந்து பனாட்டு உற்பத்தி செய்தல் ஆகிய தொழில்களைச் செய்வதும், பனைவ ளத்தை ஆதாரமாகக் கொண்ட பல உணவுப்பொருட்களை உற்பத்தி செய்வது ஆகிய வழிகளில் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்தினர். யாழ்ப்பாணத்தின் பழமையான குடும் பங்களின் நிர்வாக அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவர்களாய் வாழ்ந்த இவர்கள் நீண்ட காலம் எவ்வித வரிசெலுத்தும் கடப் பாடுகளும் அற்றவர்களாக வாழ்ந்து வந்தனர்.

காலப்போக்கில் வேளாளர்கள் தமக்கு ஒரு அரசனை அனுப்பிவைக்கும்படி பாண்டிய அரசனை வேண்டியதற்க மைய, ஒரு கையை இழந்த பிராமணன் ஒருவனை பாண்டி யன் அரசனாக அனுப்பி வைத்தான். அப்பிராமணன் பணமோ, பொருளோ இல்லாதவனாக வெறுங்கையோடு வந்தானாம். இதனால் அவ்வரசனைப் பராமரிப்பதற்காக சாணார் சாதியி னர் மீது வரி விதிக்கப்படலாயிற்று. அவர்களின் உற்பத்திக ளான பனாட்டு, கருப்பட்டி, பனங்கிழங்கு ஆகியன மீதும் வரி விதிக்கப்பட்டது. இப்பிராமணனுக்குப் பின்னர் ஆட்சி

**வர்த்தகம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இந்து சமுத்திர வர்த்தகத்தின் பகுதியாக இணைந்து வளர்ச்சிபெற்றது. 17 ஆம் நூற்றாண்டின் முக்கிய வளர்ச்சி களில் ஒன்றான இந்து சமுத்திர வர்த்தகம், வடஇலங்கையிலும் பொருளாதார நடவடிக்கைகள் சிலவற்றுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது**



**சீவல் தொழில்**

Image source - www.flickr.com

யாளர்களாக இருந்த யாழ்ப்பாண அரசர்கள் சாணார்கள் மீது மேலும் பல வரிகளை விதித்தார்களாம். இதனைவிட சாணார்களை அவர்கள் செய்துவந்த தொழில்களின் அடிப்படையில் நான்கு உப பிரிவுகளாகப் பிரித்தார்கள் என்றும் முறையீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. பிராமணனுக்கு அடுத்து அரசனாக ஆட்சி செய்தவர், பொருட்களை ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்துக்குக் கொண்டு செல்லும் தொழிலில் ஈடுபட்டவர்களை 'வேலைப்பாட்டு சாணார்' எனப்பெயரிட்டு தனிப்பிரிவாக்கியதோடு அவர்களிடம் மேலதிக வரியையும் அறவிடத் தொடங்கினான். அவன் சாணார்களில் இன்னொரு பிரிவினரை யானைகளைப் பராமரிக்கும் தொழிலைச் செய்யும்படி கட்டளையிட்டானாம். இப்பிரிவினர் 'ஆனைப்பாகர் சாணார்' எனப்பட்டனர். இன்னொரு பிரிவினரை இவ் அரசன் யானைகளைக் கட்டுவதற்கான கயிறுகளை உற்பத்தி செய்யும் வேலையைச் செய்யும்படி பணித்தான். இப்பிரிவினர் 'கயிற்றுச்சாணார்' எனப்பட்டனர். எஞ்சியிருந்த எல்லாச் சாணார்களும் கருப்பட்டி, பனாட்டு, பனங்கிழங்கு என்பனவற்றை வழங்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டனர். இப்பிரிவினர் 'பனையேறிச் சாணார்' என அழைக்கப்படலாயினர். இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள பனையேறிச் சாணார்களுக்கு அரசன் பொதுக்கட்டுமானப் பணிகளில் பலவித வேலைகளைச் செய்யும்படியும் கட்டளையிட்டானம். இவ்வாறான பலவித வரிகளின் சுமையால் அழுந்தியவர்களே யோன் சைமனிடம் முறையீடு செய்தவர்கள் என்பது தெளிவாகிறது.

இவ்விடத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் சாணார்கள் (பிற்காலத்தில் நளவர் என்று அழைக்கப்பட்டோர்) தமக்கு தனித்துவமானதும் சுதந்திரமானதுமான குடியேற்ற வரலாறு உண்டு என்பதை எடுத்துரைத்திருப்பதாகும். அவர்களின் வரிக் கடப்பாடு அரசுக்கும், ஆட்சியாளனான அரசனுக்கும் உரியதே அன்றி வேறு மேலாளர்கள் எவருக்கும் உரியதான கடப்பாடு அன்று. சாணார்களிடம் இம்முறையீட்டைச் செய்த காலத்தில் வெளிப்பட்ட தன்மானமும் சுய நம்பிக்கையும் பிற்காலத்தில் அவர்களிடம் இல்லாமல் போயிற்று. பொதுக் கட்டுமானப் பணிகள் சார்ந்த ஊழியத்தை செய்யும்படி அரசு இவர்களை நிர்ப்பந்தித்ததால் சுதந்திரமானவர்களாக, பனையேறும் தொழில் செய்து வந்த இச்சாதிப் பிரிவினர் பொதுப்பட்ட உடல் உழைப்பு வேலைகளைச் செய்யும் பிரிவினராக மாற்றம் பெற்றனர். இதனால் இவர்கள் விவசாயத் தொழில் அடிமை உழைப்பாளர்களாக இருந்த பள்ளர் சாதியின் நிலைக்கு ஒப்பானவர்கள் ஆயினர். பள்ளர்கள் வேளார்களோடு சேர்ந்து அடிமைகள் என்ற நிலையில் தென்னிந்தியாவில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்களாவர்.

யானை பிடிக்கும் வேலையில் சாணார் ஈடுபடுத்தப்பட்டமைக்கு அக்கால யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத் தேவைகள் காரணமாக இருந்தது. யானை வர்த்தகம் இலாபம் தருவதாக இருந்ததால் யாழ்ப்பாண அரசர்கள் அதனைப் பிடிப்பித்து ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டனர். அவர்களுக்குப் பின்னர் ஆட்சியாளர்களாக வந்த போர்த்துக்கேயரும், டச்சுக்காரரும் யானை வர்த்தகத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தின் சமூகக்கட்டமைப்பில் மடப்பள்ளிகள் முக்கியமான ஒரு சாதியாவர். மடப்பள்ளிகளின் தோற்றம் அவர்களின் குணஇயல்புகள் என்பன குறித்து தெளிவாக அறியமுடியவில்லை. நவீன யாழ்ப்பாணத்தில் மடப்பள்ளிகள் அடையாளம் தெரியாமல் மறைத்து விட்டனர் எனலாம். அவர்கள் வேளாளர்களுடன் ஒன்றிக்கலந்து, வேளாளர் சாதியின் எண்ணிக்கையையும், பலத்தையும் அதிகரிக்க உதவினர். 1827 இல் நடத்தப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி 12,995 மடப்பள்ளிகள் இருந்துள்ளனர். அப்போது மடப்பள்ளிகள் யாழ்ப்பாணத்தின் சனத்தொகையின் 10 வீதம் ஆக இருந்தனர். மடப்பள்ளி என்ற சொல்லின் பொருள் உணர்த்து வதுயாதெனில் மடப்பள்ளிகள், யாழ்ப்பாண அரசர் காலத்தில் அரண்மனைச் சேவகர்களாகவும் சமையல்காரர்களாகவும் பணியாற்றினர் என்பதாகும். யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் சிதறி நில உடைமையாளர்களாக மாறினர். அவர்களது பராமரிப்புக்காக அரசனால் முன்னர் ஒதுக்கப்பட்ட நிலங்களைப் பயிரிடும் விவசாயிகளாயினர். 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் மடப்பள்ளிகள் செல்வாக்கு மிக்க சாதியாக விளங்கினர். மடப்பள்ளிகளுக்கும் வேளாளர்களுக்கும் இக்காலத்தில் நிர்வாகப் பதவிகளுக்கான நியமனங்களில் போட்டி ஏற்பட்டது. மடப்பள்ளிகளை விட வேறு இரு சாதிப்பிரிவினரும் அரண்மனையினதும், கோவில்களினதும் நிர்வாகப் பதவிகளையும், சேவைக்கடமைகளையும் செய்து வந்தோராக இருந்து, யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின் கிராமங்களில் நிலவுடைமைச்

**யாழ்ப்பாணத்தின் சமூகக்கட்டமைப்பில் மடப்பள்ளிகள் முக்கியமான ஒரு சாதியாவர். மடப்பள்ளிகளின் தோற்றம் அவர்களின் குணஇயல்புகள் என்பன குறித்து தெளிவாக அறியமுடியவில்லை. நவீன யாழ்ப்பாணத்தில் மடப்பள்ளிகள் அடையாளம் தெரியாமல் மறைத்து விட்டனர்**

**யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியும், அதற்குப் பிந்திய காலத்தின் காலனிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளும் யாழ்ப்பாணத்தின் சாதிகளிடையிலான உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தின. வேளாளர்கள் சாதிப்படி நிலையின் உயர்நிலையில் இருந்தனர். ஆட்சியாளர்களும் வேளாளர்கள் சமூகப்படி நிலையில் உயர் இடத்தில் இருந்தமையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.**

சாதிகளாகச் சிதறிப் பரவினர். அவ்விரு சாதிகளுள் தனக்காரர் என்ற சாதியினர் அரசர்களால் தானமாக வழங்கப்பட்ட கோவில் நிலங்களின் பாதுகாவலர்களாகவும் நிர்வாகிகளா கவும் இருந்து வந்தனர். யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின்னர் கோவில்களின் புரவலர்களாக அரசன் இருந்த நிலைமாறியது. கோவில் சொத்துக்களான நிலங்களைக் கொண்டிருந்த கிராமங்களில், அந்நிலங்களைப் பயிரிடும் நிலவுடைமையாளர்களாக தனக்காரர் மாறினர். கோவில்களுக்குத் தானமாக அரசனால் கொடுக்கப்பட்ட காணிகள் வன்னிப் பகுதியிலும் இருந்தன. யாழ்ப்பாணத்திற்கு தெற்கே இருந்த இக்காணிகளை தனக்காரர் தமதாக்கிக் கொண்டு அதற்கு வரியாக வன்னிக்காட்டில் யானைகளைப் பிடித்து அரசனுக்குக் கொடுத்தனர்.

அகம்படியார் என்ற சமூகப் பிரிவினர் அரண்மனைச் சேவகர்களாகவும், அரசனின் மெய்ப்பாதுகாவலர்களாகவும் இருந்தனர். அவர்களின் சேவைக்காக காணிகள் வழங்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின்னர் அகம்படியாரும் முழுநேர விவசாயிகளாக தம் நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின்னர், யாழ்ப்பாணக் கிராமங்களில் பல்வேறு சாதிகள் காணிகளின் உடைமையாளர்களாகவும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களாகவும் சிதறிப் பரவி வாழ்ந்தனர். பல விவசாயச் சாதிகள் பரவலாக இருந்தமையால் வேளாளர் அதிகாரம் சமநிலையைப் பெற்றது.

விவசாய உற்பத்தி நடவடிக்கைகளோடு தொடர்பற்றதான, சுதந்திரமான சாதிக்குழுக்கள் பலவும் இருந்தன. கைவினைச் சாதிகள் சுதந்திரமானவையாக இருந்தன. இன்றுவரை இருந்து வருகின்றன. வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டோரின் சுதந்திரப்போக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தது. செட்டி வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திலும், தென் னிந்தியாவிலும் வாழ்விடத்தை உடையவர்களாக இருந்தனர். அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளும் அவ்வாறே இரு இடங்களிலும் தொடர்ந்தன. தெளிவான அடையாளங்கள் இல்லாத 'பரதேசிகள்' என்ற சமூகப் பிரிவினர் இருந்தனர். வெளியில் இருந்து வந்தவர்களும் பிறசாதிகள் எவற்றுடனும் தம்மை இணைத்து அடையாளப்படுத்த முடியாதவர்களும் பரதேசிகள் எனப்பட்டனர். போத்துக்கீச ஆவணம் ஒன்றின்படி, யாழ்ப்பாண அரசர்கள் மதுரையில் இருந்து படகர் (வடுகர்) என்ற பிரிவினரைக் கொண்டு வந்து, அவர்களுக்கு காணிகளைக் கொடுத்ததோடு, பரதேசி என்ற பெயரோடு, வேளாளர்களுடன் இணைத்துவிட்டதாக தெரிகிறது. ஆகையால் பரதேசிகள் வேளா ளர்களுக்கு சமமான அந்தஸ்து உடையவர்களாகக் கருதப்பட்டனர். அதன் பின்னர் செல்வமும், செல்வாக்கும் மிக்க குடியேறிகள் பலரும் பரதேசிகளுடன் இணைந்து கொண்டனர்.

யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியும், அதற்குப் பிந்திய காலத்தின் காலனிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளும் யாழ்ப்பாணத்தின் சாதிகளிடையிலான உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தின. வேளாளர்கள் சாதிப்படி நிலையின் உயர்நிலையில் இருந்தனர். ஆட்சியாளர்களும் வேளாளர்கள் சமூகப்படி நிலையில் உயர் இடத்தில் இருந்தமையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆயினும் ஒரு சாதிப் பிரிவினரை மேலாதிக்கமுடையவர்களாய் ஏற்பதன் ஆபத்தும் ஆட்சியாளர்களால் உணரப்பட்டது. போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் பொருளாதாரம், சமூகம் என்ற நிலைகளில் புதிய கூறுகள் சிலவற்றைப் புகுத்தினர். இவை சமூகக் குழுக்கள் சில மேல்நிலைக்கு உயரவும், வேறு சில குழுக்கள் உயர் நிலையில் இருந்து குறைந்த நிலைக்கு தாழ்வதற்கும் காரணமாயின. வர்த்தகம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இந்து சமுத்திர வர்த்தகத்தின் பகுதியாக இணைந்து வளர்ச்சிபெற்றது. 17 ஆம் நூற்றாண்டின் முக்கிய வளர்ச்சிகளில் ஒன்றான இந்து சமுத்திர வர்த்தகம், வட இலங்கையிலும் பொருளாதார நடவடிக்கைகள் சிலவற்றுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது.

இப்புதிய பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்திச் சில சமூகக் குழுக்கள் உயர்வடைந்தன. வேறு சில ஒப்பீட்டளவில் தாழ்வுற்றதை சமூகத் தளத்தில் கிறிஸ்தவம் பரவியமையும், மதமாற்றநடவடிக்கைகளும் முக்கியமான மாற்றமாகும். இவ்வாறு வெவ்வேறு காரணிகள், சிக்கலானதும், பல்திசை நோக்கியதுமான மாற்றங்களுக்கு வழிவகுத்தன. சமூகத்தில் சாதிக்குழுக்களுக்கான உறவுகளில் மாற்றம் ஏற்பட்டது. குறிப்பாக வேளாளர்கள் அல்லாத சாதிப்பிரிவினருக்கு காலனிய ஆட்சியாளர்கள் நிர்வாகப்பதவி நியமனங்களை வழங்கியதால் சாதி உறவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை ஒப்பீட்டளவில் குறுகிய காலமே (1619 - 1658) ஆட்சி செய்தனர். ஆயினும் இக்குறுகிய காலத்தில் (சுமார் 40 ஆண்டுகள்) அவர்கள் கிறிஸ்தவத்தை புகுத்தியமை முக்கிய சமூக மாற்றங்களுக்கான ஒரு காரணியாக அமைந்தது. கிறிஸ்த

வத்தை ஏற்றுக்கொண்ட சமூகப் பிரிவுகளுக்குச் சில சலுகைகள் கிடைத்தன. கரையார் சாதியினரில் பெருந்தொகையானோர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர் இவ்வாறு மதம் மாறியவர்கள் போர்த்துக்கேய அரசு அதிகாரத்திற்கு நெருக்கம் உடையவர்களாயினர்.

மடப்பள்ளி என்ற சாதியினரும் ஓரளவிற்கு கிறிஸ்தவத்தை ஏற்பவர்களாயினர். ஆனால் வேளாளர்கள் நிர்வாகப் பதவிகளில் தொடர்ந்து இருப்பதற்காக பெயரளவில் கிறிஸ்தவத்தை ஏற்றார்களே அல்லாமல் முழுமனதுடன் கிறிஸ்தவத்தை ஏற்காதவர்களாய், கிறிஸ்தவ மதபோதகர்களில் இருந்து தூர விலகியவர்களாய் வாழ்ந்தனர். இதன் விளைவாக கரையார், மடப்பள்ளி என்ற இரு சாதிப் பிரிவினரும் போர்த்துக்கேயரின் ஆதரவைப் பெற்றுக்கொண்ட சமூகப் பிரிவினர்களாய், கடலோடிகளாகவும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாயும் மாறிச் செல்வந்தர்கள் ஆயினர். போத்துக்கேயர் அச்சாதிகளைச் சேர்ந்தோருக்கு பிராந்திய நிர்வாகப் பதவிகளையும் கூட வழங்கினர், இருந்தபோதும் வேளாளர்களின் ஆதிக்கம் கிராமங்களில் வலுவுடையதாக இருந்து வந்தது.




**ஒல்லாந்து கால தேவாலயம்**

Image source - www.alamy.com

அவர்கள் பிராந்திய நிர்வாகப் பதவிகளையும் வகித்து வந்தனர், வரிவருமானத்தை அறவிடுபவர்களாகவும் வேளாளர்கள் இருந்தனர். இக்காரணத்தால் காலனிய அரசாங்கத்தால் வேளாளர்களை இலகுவில் புறக்கணிக்க முடியவில்லை. 1658ம் ஆண்டில் டச்சுக்காரரிடம் ஆட்சி அதிகாரம் கைமாறி யது. அது வேளாளருக்குச் சாதகமான தாயிற்று. கரையார், மடப்பள்ளி என்னும் இரு சமூகப் பிரிவினரும் போர்த்துக்கேயருக்கு நெருக்கமுடையவர்களாக இருந்தமையால் டச்சு ஆட்சியில் அவர்கள் விரோதிகளாகப் பார்க்கப்படும் நிலை எழுந்தது.

1658 செப்டம்பரில் டச்சுக்காரருக்கு எதிராகக் கலகம் செய்தவர்களான கரையார், மடப்பள்ளி சமூகப் பிரிவுகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு பகிரங்கமாகக் கொலை செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் கரையார், மடப்பள்ளி ஆகிய இரு சமூகப் பிரிவினரும் தாம் போத்துக்சேயருக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படுத்தியமை, வேளாளர்களுக்குச் சாதகமாக அமைந்தது. நிர்வாகப் பதவிகளில் ஏற்பட்டிருந்த போட்டி வேளார்களுக்கு சாதமாகத் திரும்பியது. டச்சுக்காரர் ஆட்சியைக் கைப்பற்றியதும், வருமானவரி ஆகியனவற்றை அறவிடும் நிர்வாக அமைப்பை விரைந்துபலப்படுத்தினர். நிர்வாகப் பதவிகளை ஏற்கனவே வகித்து வந்த வேளாளர் குடும்பங்களுக்கு டச்சுக்காரர் தொடர்ந்து நிர்வாகப் பதவிகளைக் கொடுத்தனர். பெயரளவில் கத்தோலிக்கர்களாக இருந்துவந்த வேளாளர்களின் தலைமைக்காரர்களில் பலர், புரட்ட ஸ்தாந்திய கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டு புதிய ஆட்சியாளர்களின் விசுவாசம் மிக்க சேவகர்களாயினர், போர்த்துக்கேயரிடமிருந்து டச்சுக்காரர்களுக்கு அதிகாரம் கைமாறியதால், பிற சமூகக்குழுக்களைவிட வேளார்கள் உயர்நிலை யைப் பெற்றனர்.

டச்சு ஆட்சியின் போது வேளாள அதிகாரிகளுக்கும், டச்சுகாரர்களுக்கும் இடையே விரிசல்கள் விரைவிலேயே தோன்றின. நிர்வாகப் பதவிகளில் இருந்து வந்த வேளாளர் குடும்பங்களின் செல்வாக்கு அதிகரிப்பதையும், அவர்கள் யாழ்ப்பாணப் பகுதியின் பலம்மிக்க ஒரு சமூகப் பிரிவாக மாறுவதையும் டச்சுக்காரர் விரும்பவில்லை. நிர்வாகப் பதவிகள் ஊடாக வேளாளர்கள், தம்பொருளாதார பலத்தை வலுப்படுத்திச் செல்வந்தர்களாயினர். சட்டப்படியான வழியிலும், சட்டமுறையற்ற வழியிலும் வேளாளர்கள் காணிகளின் உடைமையாளர்களாக, தமது காணிச் சொத்துக்களின் அளவைப் பெருக்கிக் கொண்ட னர். காணிகளின் உடைமையாளர்கள் சேவைத் தொழில் களைச் செய்தோரை அடிமைவேலை செய்வோராக ஆக்கிக் கொண்டனர். இதற்கு சட்ட முறையற்ற வழிகளையும் கையாண்டனர். அரசின் ஊழியர்களாக இருந்த அவர்கள் தமது காணிகளில் பயிரிடும் உழைப்பாளர்களாக மாற்றினர். இதனால் அரசின் அடிமைகளாக இருந்தோர், நில உடைமையாளர்களான தனிநபர்களின் அடிமைகள் ஆக்கப்பட்டனர்.

இதனை டச்சுக்காரர் அறிந்து கொண்டபோதும், பழைய நிலையை மீளக்கொண்டு வருவதற்குத் தேவையான தரவுகளை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்குரிய நிர்வாகப் பொறிமுறையும் அவர்களிடம் இருக்கவில்லை. ஒவ்வொரு கிராமத்தினதும் காணி உடைமைகள் பற்றிய விபரங்களைப் பதிவு செய்தல், காணிகளுக்குரிய வரிகள், காணியோடு இணைந்த சேவைக் கடப்பாடுகள் என்பன பற்றிய பதிவுகளை செய்தல் வேளாளர்களின் சட்டமுறையற்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் ஒரு வழிமுறையாக இருந்தது. 1674 ஆம் ஆண்டில் டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தின் நான்கு பிரிவுகளிலும் காணிப் பதிவு வேலைகளை ஆரம்பித்தனர்.

தொடரும்.



Image source -https://realagnikulakshathriyarvanniyar.wordpress.com/

வேளாளரின் செல்வச் செழிப்பின் அடையாளமாக விளங்கிய இன்னொரு உற்பத்திப் பண்டமாக புகையிலை அமைந்தது. புகையிலைச் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களின் அளவு அதிகரித்தது. யாழ்ப்பாண அரசர் காலத்தில் இருந்து புகையிலை ஒரு காசுப்பயிராக யாழ்ப்பாணத்தில் பயிரிடப்பட்டு வந்தது.



புகையிலை உற்பத்தி

Image source - www.virakesari.lk

# 18ம் நூற்றாண்டில் வட இலங்கையில் வேளாளர்கள்: நிலமும் உழைப்பும் சமூக உறவுகளும்

**1674** ஆம் ஆண்டு டச்சுக்காரர் யாழ்ப்பாண மாவட்டத்தின் நான்கு பிரிவுகளினதும் காணிகளின் உடைமையாளர்கள் பற்றிய பதிவினை மேற் கொண்டனர் என்பதை முன்னர் குறிப்பிட்டோம். இக்காணிப் பதிவு நடவடிக்கையின் பயனாக 12,000 குத்தகைக்காரர்களின் (Tenants) கணக்கை வேளாளத் தலைமைக்காரர்களால் காண்பிக்க முடியவில்லை. குத்தகைக் காரர்களின் பெயரில் தலைமைக்காரர் காணிகளைத் தமக்கு சொந்தமாக்கி பயனை அனுபவித்தனர் என்பது தெரியவந்தது. காணிப் பதிவு நடவடிக்கையினால் ஏற்பட்ட கசப்புணர்வைப் பயன்படுத்தி வேளாளத் தலைமைக்காரர்கள் விவசாயக் குடிமக்களை டச்சுக்காரருக்கு எதிராகக் கலகம் செய்யும் படி தூண்டி விட்டனர். அவர்கள் இவ்விதம் விவசாயக் குடியான்கள் மீது தமக்கிருந்த செல்வாக்கை வெளிப்படுத்தினர். இதற்குப் பின்னர் டச்சுக்காரர் வேளாளத் தலைவர்களுடன் முரண்படாமல் கவனமாக நடந்து கொண்டார். வேளாளர்களின் அதிகாரத்தைத் தட்டிக் கேட்க டச்சுக்காரர் துணிய வில்லை. ஆயினும் டச்சுக்காரர் ஒரு சமூகப் பிரிவினரை இன்னொரு சமூகப் பிரிவினருக்கு எதிராக பலப்படுத்தும், பலவீனப்படுத்தும் சமன் செய்யும் (Balancing) தந்திரோபாயத்தை கைவிடாது தொடர்ந்தனர். போர்த்துக்கேயருக்கு ஆதரவாக இருந்தனர் என்ற காரணத்தால் டச்சுக்காரரின் சந்தேகத்திற்கு ஆளாகியிருந்த சமூகப் பிரிவினருக்கு டச்சுக்காரர் சலுகைகளை வழங்கும் நிலை உருவானது. வேளாளர்களின் பலத்தை குறைத்துச் சமன் செய்வதற்காக டச்சுக்காரர் 1690களில் சுதேசத் தலைமைக்காரர் பதவி நியமனங்களை வேளாளருக்குப் போட்டியான சமூகப் பிரிவினருக்கு வழங்கினர். ஒரு உத்தியோகப் பதவியில் இரண்டு நியமனங்கள் செய்யப்பட்டால் அவற்றுள் ஒரு பதவியை

# பகுதி 3

வேளாளர் ஒருவருக்கும், இன்னொரு நியமனத்தை மடப்பள்ளி சமூகப் பிரிவினருக்கும் வழங்கினர். இவ்வாறாக கணக்கப்பிள்ளை, முதலியார் போன்ற அதிகாரம் மிக்க பதவிகள் சமூகப் பிரிவினர்களிடையே பகிரப்பட்டன. இக்கொள்கையை யாழ்ப்பாணம் முழுவதற்குமாக டச்சுக்காரர் செயற்படுத்தியபோது, வேளாளர் எதிர்ப்பைத் தூண்டிவிட்டு கலகத்தை விளைவித்தனர். மடப்பள்ளி சாதியினருக்கு பதவிகளை வழங்கியதால் வேளாளர்களால் ஏற்படுத்தப்பட்ட மோதல்களைத் தவிர்ப்பதன் பொருட்டு மடப்பள்ளியினருக்கான பதவி வழங்கல்களை டச்சுக்காரர் தற்காலிகமாகப் பிற்போட்டனர். மடப்பள்ளிகள் மட்டுமன்றி, பரதேசிகள், அகம்படியர், தனக்காரர், செட்டிகள் என்போரும் டச்சுக்காரர் காலத்தில் தலைமைக்காரர் பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களில் உள்ளடங்குவர். மேற்குறித்தவாறான தந்திரோபாயங்களை டச்சுக்காரர் கையாண்ட போதும், வேளாளர்கள் உயர் பதவிகளிலும், இரண்டாம் நிலைப் பதவிகளிலும் பெரும் பங்கைத் தமக்குரியதாக வைத்திருந்தனர். இவ்வுண்மையை ஆவணச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

முதலியார் என்ற பதவியை வகித்தவர்கள் பற்றிய புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது இது தெளிவாகத் தெரிகிறது. தமிழரசர் ஆட்சிக் காலத்தில் முதலியார் பதவி மிகவும் உயர்ந்த மதிப்புடைய பதவியாகக் காணப்பட்டது. காலனிய ஆட்சியாளர்கள் பலசமூகப் பிரிவினர்களுக்கும் முதலியார் என்ற நியமனத்தை வழங்கியதால் அந்தப் பதவிக்கான பெருமை குறைந்ததாக ஆதிக்கசாதியினர் கருதினர். தலைமைக்காரர் பதவிகளில் எவ்வெச் சமூகப்பிரிவினர் இருந்தனர் என்பதைப் புள்ளி விபரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. 1760 ம் ஆண்டு டச்சுக்காரர் ஒருகுடிசனக் கணக்கெடுப்பை நடத்தினர். அப்போது முதலியார் பதவிகளில் இருந்தோர் தமது நியமனக் கடிதங்களை காண்பித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்கப்பட்டனர். இவ்வாறு நியமனக் கடிதங்களைப் பார்வையிட்டு நியமனங்கள் உறுதி செய்யப்பட்டபோது, யாழ்ப்பாண மாவட்டத்தின் நான்கு பிரிவுகளிலும் மொத்தம் 516 முதலியார்கள் இருப்பது தெரியவந்தது. சமூகப் பிரிவுகளின் படி இந்நியமனங்களின் தொகை பின்வருமாறு அமைந்தது. வேளாளர் (317), மடப்பள்ளி (127), செட்டி (37), பரதேசி (14), மலையாளி (10), கரையார் (6), சிவியார் (3), தனக்காரர் (2). இப்புள்ளிவிபரங்களின்படி வேளாளர்களே கூடிய எண்ணிக்கையான பதவிகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் பிற சமூகப் பிரிவினரைவிட அதிகாரம் மிக்கவர்களாக இருந்தனர் என்பதும் தெளிவாகிறது. அடுத்த நிலையில் மடப்பள்ளி என்ற சமூகப் பிரிவினர் விளங்கினர். இவர்களால் மட்டுமே வேளாளர் அதிகாரத்திற்கு அறைகூவல் விடுப்பதற்கு ஓரளவு இயல்வதாக இருந்தது. போர்த்துக்கேயர் காலத்தில் செல்வாக்கு உடையவர்களாய் விளங்கிய கரையார் சமூகப் பிரிவினரின் செல்வாக்கு பிரித்தானியர் காலத்தில் ஒப்பீட்டளவில் குறைந்ததையும் காணமுடிகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் இச்சமூகப் பிரிவினர் அதிகாரம் மிக்க பல பதவிகளில் இருந்தனர் என்பதை அறியமுடிகிறது. தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியில் கராவ சமூகப் பிரிவினர் ஒப்பீட்டளவில் தமிழ்ப் பகுதிகளின் கரையார் சமூகப் பிரிவினரைவிட பொருளாதார நிலையிலும், சமூக அந்தஸ்திலும் உயர்ந்து சென்றதையும் காண முடிகிறது.

வேளாளர் சாதியின் மேலாதிக்கம் அதிகரித்துச் சென்றதற்குரிய காரணத்தை விளங்கிக் கொள்வதற்கு நாம் அதன் உருவாக்கத்தின் இயல்பை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். வேளாளர் தம்மோடு பல சமூகப் பிரிவினரையும் சேர்த்துக் கொண்டு எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் ஆயினர். வேளார்கள் நிலத்தை உழுது பயிர்செய்பவர்களாகவும், நில உடைமையாளர்களாகவும் இருந்தனர். வருவயைத் திரட்டு தலை அடிப்படையாகக கொண்ட பதவிகளை வகிப்போராகவும் வேளாளர்கள் இருந்தனர். வேளாண் தொழிலோடு தொடர்புடைய ஏனைய சமூகப் பிரிவினரையும் இணைத்துக் கொண்டு வேளாளர் சாதி விரிவாக்கம் பெற்றது.

**பழைய மரபின்படி வேளாளரை வெளியே இருந்து வந்தோர் என்ற கருத்தில் 'பரதேசிகள்' என்று கூறும் வழமை இருந்தது. மடப் பள்ளி, அகம்படியர், தனக்காரர், செட்டி, மலையாளி என்னும் சமூகப்பிரிவுகளும் காலப்போக்கில் வேளாளர்களுடன் ஒன்றிணைந்தன.**

தென்னிந்தியா போன்ற விரிந்த புவியியல் பிரதேசத்தில் இவ்வாறான ஒன்றிணைவு சாத்தியமாயிற்று. வேளாளரிடையே பல உபபிரிவுகள் இருப்பது இத்தகைய ஒன்றிணைவு ஏற்பட்டதை எடுத்துக் காட்டுகிறது. வெவ்வேறு சாதிகள் என அடையாளம் காணப்பட்ட சமூகப்பிரிவுகள் பல உழுதுபயிரிட என்ற தொழில் அடிப்படையில் வேளாளர் என்ற பொது அடையாளத்தில் ஒன்றிணைந்தன. அத்தோடு யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியால் ஏற்பட்ட குழப்பநிலையின் போது கலப்பு சாத்தியமானது. புதிதாக வந்து குடியேறிய தனிநபர்களும், சமூகக் குழுக்களும் யாழ்ப்பாணத்தில் குடியிருப்புகளை ஏற்படுத்தியபோது முயற்சியடையவர்களாகவும்,உழைப்புத் திறன் மிக்கவர்களாகவும் விளங்கிப் பொருளாதார நிலையிலும், சமூக அந்தஸ்தி

லும் உயர்நிலையைப் பெற்றனர்.காலப்போக்கில் பழமை யான வேளாளர் குடும்பங்களுடன் திருமண உறவால் இவர்கள் கலப்புற்றனர். வேளாளர் என்ற புதிய அடையா ளமும் கிடைத்தது. வேளாளரிடை 'தூய இரத்தம்' என்ற 'தூய்மையும் துடக்கும்' கருத்தியல் அக்காலத்தில் இருக்க வில்லை. இதனால் ஏனைய சமூகக் குழுக்களை இணைத் துக் கொள்வதில் தடையிருக்கவில்லை. இக்கலப்பு இயல் பான ஒன்றாக இருந்தது.

பழைய மரபின்படி வேளாளரை வெளியே இருந்து வந்தோர் என்ற கருத்தில் 'பரதேசிகள்' என்று கூறும் வழமை இருந்தது. மடப் பள்ளி, அகம்படியர், தனக்காரர், செட்டி, மலையாளி என்னும் சமூகப்பிரிவுகளும் காலப் போக்கில் வேளாளர்களுடன் ஒன்றிணைந்தன. நவீனகால யாழ்ப்பாணத்தில் மேற்குறித்த சமூகப் பிரிவுகள் அடை யாளம் தெரியாது மறைந்துவிட்டன.

## யாழ்ப்பாணத்தில் பிராமணர்:



பிராமணர் Image source - www.tamilhindu.com

பிராமண வைதிகக் கருத்தான தூய்மையும் துடக்கும் யாழ்ப் பாணத்தில் வேரூன்றி இருந்திராதது மேற்குறித்தவாறு சமூ கக் குழுக்கள் ஒன்று கலப்பதை சாத்தியமாக்கியது. யாழ்ப் பாணத்தில் பிராமணர் குடும்பங்கள் மிக அரிதாகவே காணப்பட்டன. இங்கு குடியேறிய பிராமணர்களும் கோவில் பூசகர்களாக, நில உடைமையாளர்களான உழுகு டிகளின் தலைவர்களின் கோவில்களில் பணி செய்வோரா கவே இருந்தனர். பெரும்பான்மையான கோவில்களின் முகாமையாளர்களாக வேளாளர் விளங்கினர். போர்த்துக் கேயர், ஒல்லாந்தர் ஆகிய இரு அந்நியர் ஆட்சியின்போது கோவில்களுக்கு அரச ஆதரவு கிடைக்கவில்லை. கோயில் வழிபாடும் சடங்குகளும் இரகசியமாக நடத்தப்பெற்றன. ஆகையால் சாதி அந்தஸ்து, சடங்கியல் தூய்மை ஆகியன கோவில் வழிபாட்டிலும் சடங்குகளிலும் முக்கியம் பெற வில்லை. பொருளாதாரக் காரணிகளே சாதி உறவுகளில் முக்கியம் பெற்றன.

## நெல் உற்பத்தி:

குறிப்பிட்ட சில பொருளாதாரத் துறைகள் சார்ந்த உற் பத்தி நடவடிக்கைகள் 18 ஆம் நூற்றாண்டில் வேளாளர் ஆதிக்கம் மேலோங்கக் காரணமாயிற்று. சில விவசாயப் பயிர்களின் உற்பத்தி இலாபம் தருவதாக இருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் அரிசியின் விலை தொடர்ச்சியாக உயர்ந்து சென்றது. குறிப்பாக ஆந்திரா, தமிழகத்தின் கிழக்குக் கரையை அண்டிய பகுதியான கர் நாடகம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக போர்கள் இடம் பெற்ற காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு அரிசி இறக் குமதி செய்வது தடைப்பட்டது. போர்ச் சூழலால் ஏற் பட்ட குழப்பநிலை இதற்குக் காரணமாயிற்று. ஏறக்கு றைய 50 ஆண்டு காலத்திற்குள் யாழ்ப்பாணத்தில் அரசி யின் விலை இரண்டு மடங்காக உயர்ந்தது. இதனால் தமது நுகர்வுத் தேவைக்கு மேலதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய யாழ்ப்பாண விவசாயிகள் திறந்த சந்தையில் நெல்லை விற்பனை செய்து இலாபம் ஈட்ட முடிந்தது. யாழ்ப்பா ணத்திற்குத தெற்கே வன்னியில் வேளாளர்களுக்கு நிலங் கள் உடைமையாக இருந்தன. இவ்வயல்களின் உற்பத் தியை யாழ்ப்பாணத்திற்குக்கொண்டு சென்று அங்கு விற்பனை செய்யமுடிந்தது. அரிசி தமிழர்களின் பிரதான உணவாகும். அரிசியின் விலை உயர்வு விவசாயத்தோடு தொடர்பற்ற சாதிகளின் வாழ்க்கையைப் பாதித்தது, இத னால் அச்சாதியினர்களில் பலர் விவசாயத்தை துணைத் தொழிலாக மேற்கொள்ளத் தொடங்கினர். இக்காரணத் தால்காணிகளின்விலைஉயர்ந்தது. நிலஉடைமையாளராக இருந்த வேளாளர்கள் காணிகளின் விலை உயர்வால் நன்மை பெற்றனர்.

## புகையிலை உற்பத்தி:

வேளாளரின் செல்வச் செழிப்பின் அடையாளமாக விளங் கிய இன்னொரு உற்பத்திப் பண்டமாக புகையிலை அமைந்தது. புகையிலைச் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட நிலங் களின் அளவு அதிகரித்தது. யாழ்ப்பாண அரசர் காலத்தில் இருந்து புகையிலை ஒரு காசுப்பயிராக யாழ்ப்பாணத்தில் பயிரிடப்பட்டு வந்தது. புகையிலை யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. உற் பத்தி செய்யப்பட்ட புகையிலையின் பெரும்பங்கு மலை யாளக் கரைப் பகுதிக்கு ஏற்றுமதியாயிற்று. 1740 களில் திருவிதாங்கூர் அரசு வலிமைமிக்க அரசாகவும், வர்த்தக நட வடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்ட அரசாகவும் எழுச்சி பெற்றது. திருவிதாங்கூர் அரசு யாழ்ப்பாணப் புகையிலை வர்த்தகத்திற்கு பெரும் ஊக்குவிப்பாகச் செயற்பட்டது. மலையாளத்தில் புகையிலைக்கான கேள்வி அதிகரித்தது. யாழ்ப்பாணப் புகையிலையின் விலை உயர்ந்து சென்றது, தரகர்கள் புகையிலை உற்பத்தியாளர்களுக்கு முற்பணம் கொடுத்து, அறுவடை செய்யப்பட்ட புகையிலைக்கு உடன் சந்தை வாய்ப்பை வழங்கினர். யாழ்ப்பாணத்தில் அது வரை காலமும் வேறு பயிர்கள் விளைவிக்கப்பட்ட காணி களில், விவசாயிகள் புகையிலையைப் பயிரிட ஆரம்பித்த னர். புகையிலைப் பயிரினால் கூடிய பயனை அவர்களால் பெற முடிந்தது. புகையிலை உற்பத்தியின் முன்னேற்றம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக் கிய விடயங்கள் சில உள்ளன.

புகையிலை சிற்றுடமையாளர்களின் பயிராக இருந்தது. இதனைப் பயிரிட்டோர் குடியான் விவசாயிகள் (Peasant Farmers) ஆவர்.

அதுவரை காலமும் பிழைப்பூதிய நிலையில் (Subsistent Level)வாழ்ந்தவிவசாயிகளுக்குகாசுப்பயிரானபுகையிலையின்

உற்பத்தி காரணமாக குறிப்பிடத்தக்க அளவு பணம் கிடைத்தது. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து மலையாளத்திற்கு 2 மில்லியன் இறாத்தல் புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆண்டுதோறும் யாழ்ப்பாண விவசாயிகள் ஒரு லட்சம் ரூபா வரை முற்பணமாகப் பெற்றனர் எனவும், மொத்தமாக 2 லட்சம் ரூபா வரை ஆண்டு வருமானமாகக் கிடைத்தது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவோர் முக்கியமான மாற்றமாகும்.

## பனம்பொருள் உற்பத்தி:




Image source -https://realagnikulakshathriyarvanniyar.wordpress.com/


பணவருவாயைப் பெற்றுக் கொள்வதற்கான இன்னொரு வழியாக பனம்பொருள் உற்பத்தியும் அதன் வர்த்தகமும் அமைந்தது. இவ்விடயத்திலும் பிற சாதிகளைவிட வேளாளர் கூடிய நன்மையைப் பெற்றனர். யாழ்ப்பாணத்தின் பனந்தோப்புகள் வேளாளரின் உடைமையாக இருந்தன. அத்தோடு கிராமத் தலைமைக்காரர் போன்ற உத்தியோகப் பதவிகளை வகித்தவர்களான வேளாளர்கள், குடியிருப்புகள் இல்லாத வெற்றுநிலங்களை தமது உடைமையாக ஆக்கிக் கொண்டனர். யாழ்ப்பாணத்திலும், தென்இலங்கையிலும் அக்காலத்தில் இடம்பெற்ற கட்டுமான வேலைகளுக்கு பனைமரம் தேவைப்பட்டது. பனைகளைத் தறித்து ஏற்றுமதி செய்யும் வர்த்தகம் வளர்ச்சியுற்றது. தென்னிந்தியாவிற்குப் பனைமரம் ஏற்றுமதி செய்யப்பட்டது. அத்தோடு பனையில் இருந்து பெறப்பட்ட உணவுப் பொருட்களின் வர்த்தகமும் வளர்ச்சி பெற்றது. இதனால் சிற்றுடைமை விவசாயிகளின் பணவருவாய் அதிகரித்தது. சிறுதுண்டு நிலங்களை உடைமையாக வைத்திருந்த குடியான்கள் நன்மைபெற்றனர். பல ஏக்கர் காணிகளுக்குச் சொந்தக்காரர்களான நில உடைமையாளர்களின் காணிகளில் பனைமரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அக்காணிக்காரர்கள் அவற்றில் இருந்து பணவருவாய் பெற்றனர்.

## உழைப்பு:

விவசாய உற்பத்திக்கு வேண்டிய உழைப்பை வழங்கக்கூடிய உழைப்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் உழைப்பாளர் தொகை யாது, அவ்வுழைப்பாளர்களில் அடிமைகளாக இருந்தோர் எவ்வளவு தொகையினர் என்பது முக்கியமான தரவுகளாகும். யாழ்ப்பாணத்தின் வழமைச்சட்டமான தேசவழமைச்சட்டம் அடிமைச் சாதிகளின் அந்தஸ்துப் பற்றிய தகவல்களைத் தருகிறது. 17 ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் செல்வந்தர்களான யாழ்ப்பாணத்து நில உடைமையாளர்கள் தென்னிந்தியாவில் இருந்து அடிமைகளைக் கொண்டுவந்தமை பற்றியும், அடிமைகளை விலை கொடுத்துக் கொள்வனவு செய்தமை பற்றியும் ஆவணங்களில் குறிப்புகள் உள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு அடிமைக்கும் ரூபா 2.00 வரியாகச் செலுத்தப்பட்டது. உதாரணமாக 1694 - 96 ஆண்டுக் காலத்தில் சோழமண்டலப் பகுதியில் இருந்து 3,589 அடிமைகள் தனிநபர்களால் கொள்வனவு செய்யப்பட்டமை பற்றிய பதிவுகள் உள்ளன. 'குடிமை' என்ற சொல் வழக்கை தென்னிந்தியாவில் இருந்த நிலமானிய அடிமைநிலை (Feudal Bondage) என்ற வகையில் பொருள் கொள்ள முடியாதுள்ளது. யாழ்ப்பாணத்தில் 'குடிமை' எனப்பட்டோர் அடிமைகளாக இருந்தனரா என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியாது. நாம் முன்னரே குறிப்பிட்டது போல் மரமேறிகள் என்ற சமூகப் பிரிவினர் யாழ்ப்பாணத்தில் அடிமைகள் என்ற நிலையில் குடியேறவில்லை. பறைமேளமடிக்கும் தொழிலைச்செய்த சமூகமும் சுதந்திரமான நெசவுத்தொழிலைச் செய்தது எனத் தெரிகிறது. ஆகையால் தேசவழமை குறிப்பிடும் 'குடிமை' என்ற வகைமையில் அடங்குவோர் எவ்வெச்சமூக பிரிவினர் என்பதை திட்டவட்டமாகக் கூறமுடி யாது. உழுது பயிரிட, தோட்ட வேலை என்பவற்றுடன் தொடர்புடைய இரு சமூகப் பிரிவினர் 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் பிற்பட்ட நிலையில் இருந்தமையையும், விவசாயக் கூலிகளாக அச்சமூகப் பிரிவினர் வேலை செய்தமையையும் காணமுடிகிறது.

வேளாளர் மேற்குறித்த 'குடிமை'களிடமிருந்து இலவச உழைப்பை (சேவைக் கடமையை) பெற்றனர் என்றால், அது சட்டமுறையற்ற வழிகளாலேயே பெறப்பட்டது எனலாம். கிராமிய சமுதாயத்தில் வேளாளர்களான தலைமைக்காரர்கள் பெற்றிருந்த அதிகாரமும் செவாக்கும் சட்டமுறையற்ற வழிகளில் இலவச உழைப்பைப் பெற்றுக்கொள்ள உதவியது. அரசுக்குச் செய்ய வேண்டிய இலவச வேலைகளை (கட்டுமானப் பணிகள்) வேளாளர்களான தலைமைக்காரர்கள் தமக்குரிய இலவச சேவையாக மாற்றிக் கொண்டனர்.

வருமானவரி அறவிடும் அதிகாரம் தலைமைக்காரர்களிடம் இருந்தமை இதனைச் சாத்தியமாக்கியது. தலைமைக்காரர்கள் இலவச உழைப்பை வழங்க வேண்டியவர்களின் ஆவணப் பதிவுகளைப் பேணிவந்தனர்.



கைவினைஞர் Image source - www.hindutamil.in

களை விட கைவினைஞர்களின் வருவாய் அதிகமாக இருந்தது. மரவேலை செய்வோர், கட்டட சிற்ப வேலை செய்வோர், இரும்பு வேலை செய்வோர், வெள்ளிபொன் ஆபரணங்களைச் செய்வோர், பிற கைவினைத் தொழில்களை செய்தோர் ஆகிய கைவினைத் தொழிகளில் ஈடுபட்டோர் மாதாந்தக் கூலியாக ரூபா 8 வரை பெற்றுக்கொண்டனர். இது கிராமத்து உத்தியோகத்தர்கள் பதவிகளில் இருந்தோரது கூலிக்குச் சமமாக இருந்தது. ஆயினும் கிராமத்து உத்தியோகத்தர்கள், கைவினைஞர்கள் போல் அல்லாது, தம் பதவிகளுடன் இணைந்த சலுகைகள் பலவற்றைப் பெற்றனர். ஆகையால் கைவினை ஞர்களுக்கு இல்லாத சமூக அதிகாரம் கிராம உத்தியோகத்தர்களுக்கு இருந்தது.

இவ்வாவணங்களில் முழுமையாகப் பெயர்களைப் பதிவு செய்யாது மறைத்து, தம் சொந்த அடிமைகள் போல் இலவச உழைப்பை வேளாளர்கள் பலரிடமிருந்தும் பெற்றனர். தொடக்கத்தில் சுதந்திர உழைப்பாளர்களாக (Free Labour) இருந்தோர் காலப்போக்கில் அடிமை உழைப்பாளர்களாக மாற்றப்பட்டதற்குப் பொருளாதாரக் காரணங்களும் உதவின.

**கைவினைத் தொழில் சமூகப் பிரிவினர் சனத் தொகை அடிப்படையில் சிறிய தொகையினராகவே இருந்தனர். இக்காரணத்தால் யாழ்ப்பாணத்தின் சமூக உறவுகளில் கைவினைச் சமூகப் பிரிவினர் செல்வாக்குச் செலுத்தும் நிலை இருக்கவில்லை.**

காணிகளுக்கான கேள்வி அதிகரித்தமை பற்றியும் காணிகளின் விலை உயர்வு பற்றியும் முன்னர் குறிப்பிட்டோம். 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காணிகளின் உடைமை மாற்றம் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டிருந்தது. சமூகத்தின் வறிய பிரிவினர் நிலமற்றவர்களாக மாறிக்கொண்டிருந்தனர். காணிகளின் உடைமை மாற்றம் முறைகேடான வழிகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுகிறது. இதைத் தடுப்பதற்காக அரசாங்கம் காணிகளைப் பதிவு செய்யும் நடைமுறையைச் செயற்படுத்தியது. 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளின் நிலை முன்னர் இருந்த நிலையிலும் வேறுபட்டதாக இருந்தது. காணியற்றவர்களான சமூகப்பிரிவினர் வேளாளர்களின் காணிகளில் குடியிருப்போராக இருந்தனர்.

இவ்வாறு குடியிருப்பதற்குப் பதிலீடாக வேளாளர்களின் வீடுகளிலும் தோட்டங்களிலும் இலவச உழைப்பை அல்லது குறைந்த கூலிக்கு உழைப்பை வழங்குபவர்களாகவும் இருந்தனர். இலவச உழைப்பு அல்லது குறைந்தளவு கூலிக்கு உழைப்பை இச்சமூகப்பிரிவினர் வழங்கினர்.

## கைவினைஞர்களின் உழைப்பு:

கைவினைத்தொழில்களை செய்தோர் (Artisans) சுதந்திரமானவர்களாக இருந்தனர். இவர்களின் உழைப்பு, சாதாரண உடல் உழைப்பை விட உயர்ந்த பெறுமதி உடையதாக இருந்தது. கைவினைஞர்களின் உழைப்புக்கு உயர்ந்த கூலி கிடைத்ததால், 18 ஆம் நூற்றாண்டின் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிட்டு நோக்கும் போது பிற உழைப்பாளர்

கைவினைஞர் சமூகப் பிரிவினரின் குடியிருப்புகள் வேளாளர் குடியிருப்புகளில் இருந்து தொலை வில், தொடர்பற்றனவாக இருந்தன. கைவினைஞர் சமூகங்களின் வரிகள், அவ்வச் சமூகங்களின் தலைவர்களால் அறவிடப்பட்டன. இவ்வாறாக கைவினைத்தொழில் செய்தோர் சுதந்திர உணர்வு உடையவர்களாகவும், சுயத்துவம் உடையவர்களாகவும் இருந்தனர். கைவினைத் தொழில் சமூகப் பிரிவினர் சனத்தொகை அடிப்படையில் சிறிய தொகையினராகவே இருந்தனர். இக்காரணத்தால் யாழ்ப்பாணத்தின் சமூக உறவுகளில் கைவினைச் சமூகப் பிரிவினர் செல்வாக்குச் செலுத்தும் நிலை இருக்கவில்லை. இக்காரணத்தால் யாழ்ப்பாணத்தின் சமூக பொருளாதார உறவுகளில் கைவினைஞர்களின் நிலை பின்வரும் பண்புக் கூறுகள் கொண்டதாக இருந்தது.

கைவினைஞர்கள் நில உடைமையாளர்களாக உருவாக்கம் பெறவில்லை. இச்சமூக பிரிவினர்களின் பொருளாதார நடவடிக்கைகளில் பன்முகத்தன்மை (Diversity) காணப்படவில்லை. பிறபொருளாதார நடவடிக்கைகளில் இப்பிரிவினர் நாட்டம் கொள்ளவில்லை. கிராம மட்ட உத்தியோகப் பதவிகளைப் பெறுவதிலும் இச்சமூகப் பிரிவினர் வேளாளர்களுக்கு போட்டியாக இருக்கல்விலை.

அடுத்து, 18 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண சமூகத்தில் வர்த்தகமும் முயற்சியாண்மையும் (Entrepreneurial Activity) சமூகத்தில் மேல்நோக்கிய உயர்ச்சிக்கு (Social Mobility) உதவியதா ? என்ற விடயத்தைப் பார்ப்போம்.


தொடரும்.



**பாலசுப்ரமணியம் துவாரகன்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். வரலாற்று ஆவணங்கள், அரிதான புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள் சேகரித்தலில் ஈடுபாடு மிக்கவர். கலாநிதி. சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலரின் பதிப்பாசிரியர். யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த 14 வருடங்களாக அபிவிருத்தி உத்தியோகத் தராகப் பணியாற்றுகிறார். யாழ்.போதனா மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகத்தில் மருத்துவ வரலாற்று ஆவணப்படுத்தலில் முக்கிய பங்காற்றி யுள்ளார். யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி அவர்களுடன் இணைந்து மருத்துவ வரலாற்றை ஆவணப்படுத்தி யாழ்ப்பாணத்தில் தனித்துவமான மருத்துவ அருங்காட்சியகம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.


# ஆபிரகாம் லிங்கனது மறைவும் நேத்தன் உவோட்டின் நினைவுகளும்



www.legendsofamerica.com

*மருத்துவர் நேத்தன் உவோட்டுக்கு 4 பிள்ளைகள் மூவர் ஆண்கள், ஒருவர் பெண். இவர்கள் அனைவரும் 1834 - 1842 காலப்பகுதியில் வட்டுக்கோட்டையிலே பிறந்தார்கள். பெண்பிள்ளை ஒரு வயதாகும் போது இயற்கை எய்தியது. 1842 இல் பிறந்த இளையமகன் சாமுவேல் ரெட் உவோட் வாஷிங்டனில் உள்ள ஜோஜ்ரவுண் பல்கலைக்கழகத்தில் பயின்று 1868 இல் மருத்துவரானார்(Physician).*

*1865 ஆம் ஆண்டு ஏப்பிரல் 14 ஆம் திகதி அமெரிக்க வரலாற்றில் துயர்மிக்க ஒருநாள். அமெரிக்காவில் உள்நாட்டுப் போரின் போது அமெரிக்காவை வழிநடத்தி, அமெரிக்காவில் நிலவிய அடிமை முறைக்கெதிராகக் குரல்கொடுத்த, அமெரிக்காவின் 16 ஆவது சனாதிபதி ஆபிரகாம் லிங்கன், வோசிங்டன் டி.சி. யிலுள்ள போட்சினது நாடக அரங்கிலே 'Our American Cousin' என்ற நகைச்சுவை நாடகத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது ஜோன் உவில்க்ஸ் பூத் என்ற நடிகரால் தலையில் பின்புறம் சுடப்பட்டார். மறுநாள் லிங்கனது உயிர் பிரிந்தது. ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்ட அன்று யாழ்ப்பாணத்தில் பிறந்தவரும் மருத்துவர் நேத்தன் உவோட்டின் இளையமகனுமாகிய மருத்துவர் சாமுவேல் ரெட் உவோட்டும் இந்த நாடகத்தைப் பார்வையிட, போட்சினது நாடக அரங்கில் பார்வையாளர் வரிசையில் இருந்தார்.*

## 1846 இல் யாழ்ப்பாணத்தைத் தாக்கிய கொலரா நோய்

தற்போது வடமாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா முதலான மாவட்டங்களும் ஏனைய மாகாணங்களின் சில பகுதிகளும் 1846 இல் யாழ்ப்பாண நிருவாக அலகின் கீழேயே இருந்தன.

1846 இல் யாழ்ப்பாணத்தை கொலரா நோய் மிகக் கடுமையாகத் தாக்கியது. 10,000 பேர் வரையில் கொலரா நோயினால் உயிரிழந்தார்கள். கொலரா நோய் தொடுகையின் மூலம் பரவும் என்ற அச்சம் மக்களிடையே காணப்பட்டதால் நோயாளிக்கு அருகே செல்லவும் அவர்களைப் பராமரிக்கவும் பொதுமக்கள் தயங்கினர். இதனால் அதிகமான இறப்புக்கள் ஏற்பட்டன.

மருத்துவர் நேத்தன் உவோட் யாழ்ப்பாணத்திலே கொலராவினது தாக்கத்தைப் பற்றி தனது குறிப்பேட்டிலே பின்வருமாறு எழுதியுள்ளார்:

"கொலராவை மருத்துவத்தின் மூலம் வெற்றி கொள்ளுதல் என்பது பாதிக்கப்பட்டவர்கள் மருந்தைப் பெற்றுக்கொள்ள ஆரம்பிக்கும் காலத்தைப் பொறுத்தது. பல சந்தர்ப்பங்களில் நோயாளர் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட ஓரிரு மணிநேரங்களில் இறப்புக்கள் சம்பவித்தன. இறப்புக்கள் நிகழ்ந்த சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு உரிய தேவைகள் எவையுமே கவனிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்டேன். நோயின் ஆரம்பநிலையில் மருந்து கொடுக்கப்பட்டவர்களும், அதனை உரியமுறையில் பின்பற்றிய வர்களும் இறக்கின்ற வீதம் குறைவடைந்தது. இதனால் பெருமளவானோர் காப்பாற்றப்பட்டனர். அநேகமானோர் உயிரிழக்கும் கடைசி நேரத்திலேயே மருத்துவ உதவியை நாடினர்; மருந்தை அருந்துவதற்குச் சம்மதித்தனர். ஒரு கிராமத்தில் 28 பேர் கொலராவினால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 14 பேர் மருந்தைப் பெற்றுக் கொள்ள சம்மதித்தனர்; இவர்களில் 12 பேர் காப்பாற்றப் பட்டனர்.

அதேவேளை 14 பேர் மருத்துவ உதவியைப் பெற்றுக் கொள்ள மறுத்தனர்; இவர்களில் 12 உயிரிழந்தனர். எனது வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் பணியாற்றிய உதவியாளர்கள், 900 பேர் வரையில் கொலராவினால் பாதிக்கப்பட்டமையை அறிவித்தனர்; இவர்களில் மருந்து பெற்றுக்கொண்ட 600 பேர் காப்பாற்றப்பட்டனர்; 300 பேர் உயிரிழந்தனர்."



ABRAHAM LINCOLN.

Image source - www.toptenz.net

மருத்துவர் நேத்தன் உவோட் 13 வருடங்கள் யாழ்ப்பாணத்திலே சேவையாற்றினார். 1846 இல் நேத்தன் உவோட்டும் அவரது மனைவியும் நோய்வாய்ப்பட்டனர். இதனால் அமெரிக்காவுக்குத் திரும்பினர்.
இன்று போல் விமானசேவைகள் இல்லாத அன்றைய நாளில் நோய்வாய்ப்பட்டவிடத்து மருத்துவ வசதியைப் பெற்றுக்கொள்ள பாய்மரக் கப்பலிலே அமெரிக்க செல்வதற்குக் குறைந்தது 4 மாதங்களாவது தேவை.


அமெரிக்கா திரும்பிய நேத்தன் உவோட் "வெர்மான்ட்" இலிலுள்ள பெர்லிங்டனில் மருத்துவராகக் கடமையாற்றி வந்தார்.
இந்தக்காலப்பகுதியில் அவர் கிறிஸ்துவின் செய்தியைப் பிரசங்கிக்கும் அனுமதிச்சான்றிதழையும் இறைதூதர் என்ற நியமனத்தையும் பெற்றுக் கொண்டார். 1859 இல் உவோட் நோயிலிருந்து முற்றாக விடுபட்டார். இதனால் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று கடமையாற்ற விரும்பி பிரதேசங்களுக்கு தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க மிசன் சங்கத்துக்கு (ABCFMAmerican Board of Commissioners for Foreign Missions) விண்ணப்பித்தார்.

### கடலிலே கரைந்த மருத்துவர்
### நேத்தன் உவோட்டின் 2 ஆவது பயணம்

மருத்துவர் நேத்தன் உவோட் அமெரிக்கா திரும்பியதும் மருத்துவர் கிறீன் 1847 இல் யாழ்ப்பா ணத்துக்கு வருகைதந்து தனது மருத்துவப் பணியை பண்டத்தரிப்பிலே ஆரம்பித்தார். கிறீன் 1848 இல் மானிப்பாயில் மருத்துவமனையையும் மருத்துவக் கல்லூரியையும் ஆரம்பித்து மாணவர்களுக்கு மருத் துவப் பயிற்சியை வழங்கி வந்தார். 1857 இல் மருத்து வர் கிறீன் அவர்களுக்கு காசநோய் அறிகுறிகள் காணப்பட்டதால் அமெரிக்கா திரும்பினார். உடல் நலம் தேறியதைத் தொடர்ந்து கிறீனும் மீண்டும் யாழ்ப்பாணம் புறப்படத் தயாரானார்.

**ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி போஸ்ரன் துறைமுகத்தி லிருந்து கடலரசன் (Sea- King) என்ற பாய்மரக் கப்பலில் யாழ்ப்பாணம் நோக்கிய தனது 2 ஆவது பயணத்தை ஆரம்பித்தார். கடற்பயணம் ஆரம்பமாகி 3 வாரங்கள் கழிந்த நிலையில் உவோட்டுக்கு மாரடைப்பு ஏற்பட்டது.**

இம்முறை அமெரிக்க மிசன் (ABCFM) கிறீனை தென் னிந்தியாவிலுள்ள மதுரைக் கும், உவோட்டை யாழ்ப் பாணத்துக்கும் அனுப்பத் தீர்மானித்தது. இவ்விட யம் கிறீனுக்கு மகிழ்ச்சி யைக் கொடுக்கவில்லை. உவோட் ஒரு பிரசங்கி யாக தகுதிபெற்றிருந்தார். உவோட் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்து வின் செய்தியை பிரசங்கிக்க விரும்பினார். ஆனால் கிறீ னைப் போன்ற தமிழ்ப்பு லமை அவரிடம் இல்லை. கிறீன் மதுரையில் தனக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்ப டும் என்று கருதி வெப்ப மான காலப்பகுதியில் பழனி மலையில் தங்குவதற்கு அனுமதிக்கும் பட்சத்தில் மதுரையில் பணியாற்றுவதற் குச் சம்மதித்தார்.




மருத்துவர் உவோட் மனைவியுடன் 1860 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி போஸ்ரன் துறைமுகத்தி லிருந்து 'கடலரசன்' (SeaKing) என்ற பாய்மரக் கப்பலில் யாழ்ப்பாணம் நோக்கிய தனது 2 ஆவது பயணத்தை ஆரம் பித்தார். கடற்பயணம் ஆரம்பமாகி 3 வாரங்கள் கழிந்த நிலையில் உவோட்டுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. கட லிலே மருத்துவர் உவோட்டின் உயிர் பிரிந்தது. 1860.11.24 அன்று மருத்துவர் உவோட்டின் உடல் கடலிலே நல்ல டக்கம் செய்யப்பட்டது.எனினும் மருத்துவர் உவோட் டின் மனைவி ஹனா, யாழ்ப்பாணத்துக்கான பயணத்தைத் தொடர்ந்தார். ஹனா 5 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் பணி யாற்றியபின் அமெரிக்கா திரும்பினார். 1884 ஆம் ஆண்டு ஹனா இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஹனா வூட்வோட், கடற் பயணத்தின் போது மறைந்த தனது கணவர் மருத்துவர் உவோட்டின் இறுதிநாள்களைப் பற்றி விவரித்த பகுதிகள் பின்வருமாறு:

"எனது கணவரது மறைவு எதிர்பாராத ஒன்று; திடீ ரென நிகழ்ந்தது; ஆனால் சிலநாள்களாக சகுனங் கள் தென்பட்டன. அவரது மறைவுக்கு ஒருவாரத் துக்கு முன்னர் வரை அவர் நலமுடன் இருந்தார்; மிகுந்த மனோவலிமையுடன் காணப்பட்டார். இறப்பதற்குச் சில நாள்கள் முன்புதான் அவர் துன்பப் பட்டார். இது சமிபாட்டுக் குறைவினால் ஏற்பட்டது என்று கருதினோம். மருந்துகள் உள் ளெடுத்ததும் சுகமடைந்தார். கப்பலின் மேற் தளத்துக்கு அவரால் செல்லக் கூடியதாக இருந் தது. மிசனரி ஒருவருடன் கப்பலின் மேற்றளத் தில் நின்றவாறு உரையாடினார். அப்போது உடல் குளிர்வதை அவரது மிசனரி நண்பருக்குத் தெரிவித்தார்; தொடர்ந்து இருதயத்தில் கடுமை யான வலி ஏற்பட்டதை முறையிட்டார். வழமை யான மருந்துகளை எடுத்துத் தேறினார். இறப்ப தற்கு முதல்நாள் அவர் மிக மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். அவர் மிக நலமுடன் இருப்பதாக நான் ஊகித்தேன். ஆனால் இருதயத்தில் ஏற் பட்ட வலி முற்றாக நீங்கவில்லை என்பதைச் சனிக்கிழமை காலையில் தெரிவித்தார்.

கடல்மீது நிலவொளி படர்ந்திருந்த ஒரு மாலைப் பொழுது; கப்பலின் மேற் தளத்தில் அவர் என் அருகில் இருந்தார். பரந்த கடலில் வீசிய பசுந் தென்றற் காற்று மனதுக்கு இதமா னதாகவும் இலங்கையில் வீசும் தென்றலை நினைவூட்டுவ தாகவும் அவர் தெரிவித்தார். சிறிது நேரத்துக்குப் பின்னர் எமக்கு உதவிய மருத்துவர் நான் கீழே இறங்கி கப்பலின் அறைக்கு செல்வதுக்கு உதவினார். நான் சற்று ஓய்வெடுத் தேன். அன்றைய இரவு அவர் வழமையைவிடவும் நன்றாக உறங்குவார் என்று எண்ணினேன். காலையில் அவரது "இருமல் சத்தத்தைக் கேட்டேன். நான் நேரத்துடனேயே எழுந்து விட்டேன். அவரைப் பார்க்கையில் நன்றாக உறங்கு வதாக உணர்ந்தேன். அவரது நித்திரையைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று நினைத்தேன். சிறிது நேரத்தில் அவ ரது முனகல் சத்தத்தைக் கேட்டேன். நான் உடனே அவருடன் உரையாட முற்பட்டேன். அவரிடமிருந்து எந்த ஒரு பதி லும் வரவில்லை. அவர் ஏற்கனவே மீட்பரின் திருக்கரங்களைச் சென்றடைந்து விட்டார்.

தொடரும்.



**பால. சிவகடாட்சம்**

இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியலை பிரதான பாடமாகக் கொண்டு விஞ்ஞான கல்வியியலில் (B.Sc. Hons) சிறப்பு பட்டம் பெற்ற இவர் இங்கிலாந்தின் London Imperial College இல் டிப்ளோமாவும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டமும் பெற்றவர். ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் B. Ed–பட்டம் பெற்றவர். யாழ்ப்பா ணப் பல்கலைகழகத்தின் விவசாய உயிரியல் பீடத்தில் மூத்த விரிவுரையாளராகவும் அதன் தலைவராகவும் பதவி வகித்தவர் . பின்னர் கனடாவில் ரொறொன்ரோ கல்விச்சபையின் கீழான மார்க் கார்னோ கல்லூரியில் விஞ்ஞான மற்றும் உயிரியல் பாட ஆசிரியராகப் பணி யாற்றினார்.

1971 – 1973 வரை இலங்கையிலிருந்து வெளிவந்த ஊற்று விஞ்ஞான மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், 1970– 1971 வரை வெளிவந்த தமிழமுது இலக்கிய மாத இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். தொடர்ந்து ஆய்வுக்கட்டுரைகளையும் இலக்கிய கட்டுரைகளையும் எழுதி வருகின்றார்.


ஈழத்தில் தோன்றிய வைத்தியம் தொடர்பான நூல்களில் ஒன்று செகராசசேகரம். மிகத் தொன்மையான இந்த நூலின் பல பகுதிகள் அழிவடைந்த நிலையில், அதன் எஞ்சிய பகுதிகளே இப்போது நமக்கு நூலுருவில் கிடைக்கின்றது. செகராசசேகரத்தின் இந்த எஞ்சிய பகுதிகளில் 'இரசவர்க்கம்' என்பதை அடிப்படையாகக் கொண்டு அதில் சொல்லப்பட்ட நோய்களையும், அவற்றுக்கான சிகிச்சை முறைமைகளையும், மருந்து வகை களையும் இக்காலத்துக்கேற்ற வகையில் தருவதே இந்தக் கட்டுரைத்தொடர்.

# யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம் – திரிகடுகம்

## அறிமுகம்

*சிங்கைச் செகராஜசேகரன் என்ற பெயரு டன் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன் னன் ஒருவன் தனது குடிமக்களுள் பெரும் பாலான தமிழ்மக்களின் நலன் கருதி வைத்தி யம் மற்றும் சோதிடம் தொடர்பான நூல்களைத் தமிழ்மொழியில் ஆக்கும்படி இந்தியாவில் இருந்து தான் வரவழைத்த பண்டிதர்களைக் கேட்டுக் கொண்டான். இப்பொழுது எமக்குக் கிடைக்கும் செகராசசேகரமாலை என்னும் சோதிடநூலும் செக ராசசேகரம் என்னும் வைத்தியநூலும் இம்மன்னன் காலத்தில் ஆக்கப்பெற்றனவே. கி.பி.15ஆம் நூற் றாண்டின் இறுதியில் அல்லது 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செகராஜசேகரன் என்னும் பெயரு டன் நல்லூரில் இருந்து ஆட்சிசெய்த மன்னன் ஒரு வனே மேற்படி நூல்கள் தோன்றக் காரணமாயிருந் தான் என்பதற்கான வரலாற்றுச்சான்றுகள் உள்ளன.*

*செகராசசேகரம் என்னும் மருத்துவ நூலின் ஒரு சில பாகங்களே அச்சில் வெளிவந்துள்ளன. செக ராசசேகர வைத்தியத் திறவுகோல் என்னும் பெய ரில் இலங்கை ஆயுள்வேதத்திணைக்களத்தின் வெளி யீடாக மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ள இந்நூலுக்கு உரை எழுதியுள்ள வைத்தியகலாநிதி நாகரத்தினம் கணேசலிங்கநாதன் தனது முகவுரையில் பின்வரு மாறு குறிப்பிடுகிறார்.*

*"செகராசசேகரத்தின் சிலபகுதிகள் நூல் உருப்பெற வில்லை. இரசவர்க்கம், பாலர்நோய் மருத்துவம், மனநிலை பிறழ்வு மருத்துவம் போன்றவை இதில் அடங்கும். இவை ஏட்டுப்பிரதிகளில் பாரம்பரிய*

மருத்துவர்களிடம் இருக்கலாம் அல்லது சிதைந்து இருக்க லாம்."

'அதிர்ஷ்டவசமாக கணேசலிங்கநாதன் குறிப்பிட்டுள்ள 'செகராசசேகரத்துக்குரிய இரசவர்க்கம்' என்னும் பகுதியைக் கொண்ட ஏட்டுப்பிரதி பாரம்பரிய மருத்துவர்களான எமது மூதாதையரிடம் இருந்து எமக்கு வந்துசேர்ந்துள்ளது. இதனை முதன்முதலாக அச்சில் வெளிக்கொண்டு வரும் வாய்ப்பு எமக்குக் கிடைத்திருப்பதையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகிறோம் .

உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கும் மருந்துப்பொருள்களின் குணங்களை எடுத்துரைக்கும் இந்தப்பகுதி வெண்பாக்களால் ஆனது. இப்பாடல்கள் ஒவ்வொன்றினதும் விளக்கத்தையும் மருந்துப்பொருள் பற்றிய மேலதிக விபரங்களையும் தந்துள்ளோம்.

நூற்றி எட்டுப்பாடல்கள் மாத்திரமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் காணப்படுகின்றன. இந்தப்பாடல்களில் ஒருசில இந்தியாவில் 1932 இல் அச்சிட்டுவெளியிடப்பட்ட 'பதார்த்தகுண சிந்தாமணி' என்னும் நூலில் சிற்சில மாறுதல்களுடன் இடம்பெற்றுள்ளன. அவற்றையும் பாடபேதமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

## திரிகடுகம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றின் பெயர் திரிகடுகம். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மூலிகைகளை உள்ளடக்கியது திரிகடுகம் என்னும் ஆயுள்வேத மருந்து. திரிகடுகம் என்னும் நூலின் ஒவ்வொரு பாடலிலும் மூன்று விடயங்கள் பேசப்படுவதால் நூலாசிரியர் தமது நூலுக்குத் திரிகடுகம் என்னும் பெயரைத் தந்துள்ளார் எனக்கருதலாம்.

**"அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய**
**தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் – சொல்லின்**
**அரில் அகற்றும் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்**
**திரிகடுகம் போலும் மருந்து"**

சிறந்த ஒழுக்கமுடைய மனைவி, மிகநீண்ட பரம்பரையின் வாரிசாக இருத்தல், தவறு செய்ய முற்படும் வேளைகளில் தக்க அறிவுரை கூறித் திருத்துவோரின் நட்பு இம்மூன்றும் திரிகடுகம் என்னும் மருந்து உடல் நலத்துக்கு உதவுவது போல் வாழ்க்கைக்கு உதவுவன என்று கூறுகின்றது இப்பாடல்.

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே திரிகடுகம் என்னும் மருந்து தமிழர்களுக்கு நன்கு அறிமுகமான ஒன்றாக இருந்துள்ளது என்பதை ஊகிக்கமுடிகின்றது.

**"திரிகடுகுநல்ல திரிபலையும் கொண்டால்**
**பிறகிடுமேநோய்களெல்லாம் பின்னும்கிறுகிடுமே**
**திரிதோஷமெல்லாம்சிதறிடுமே நின்று**
**அறிவால் இதையறிந்து ஓது."**




திரிகடுகம்
Image source - www.whatcaughtmyeyesite.wordpress.com

இதன்பொருள்: சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சேர்ந்த திரிகடுகமும் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்னும் மூன்றும் சேர்ந்த திரிபலையும் எடுத்துக் கொள்பவர்களை நோய்கள் அண்டாது. வாதம், பித்தம், கபம் என்று சொல்லப்படுகிற முத்தோஷங்களும் விலகிப்போம்.

மேலதிகவிபரம்: சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்றினது தூளையும் சம அளவில் கலந்து பெறப்படுவதே திரிகடுகம் ஆகும். கிறைன்டரில் அரைப்பதன்மூலம் நல்ல தூளைப் பெறலாம். இதனைத் தயாரித்து காற்றுப் போக முடியாத ஒரு போத்தலில் அடைத்து வைத்துப் பயன்படுத்தலாம்.

பெரியவர்களுக்கு இத்தூளில் 3 கிராம் வெந்நீருடன் அல்லது தேனுடன் ஒருநாளைக்கு மூன்றுதடவைகள் கொடுக்கலாம். சிறார்களுக்கு வயதுக்குத் தகுந்தபடி 125 மில்லிகிராம் முதல் 500 மில்லிகிராம் வரை கொடுக்கலாம். குறிப்பிட்ட அளவு திரிகடுகத்தூளை ஒரு கோப்பை பாலில் கலந்து சிலநிமிடங்கள் கொதிக்க வைத்து ஆறியவுடன் இளஞ்சூட்டோடு குடிக்கவும் கொடுக்கலாம்.

தேனுடன்சேர்த்து எடுக்கும்போது திரிகடுகம் தடுமல், இருமல், முட்டு, ஆஸ்த்மா உடற்பருமன் போன்ற பலவியாதிகளுக்கு மருந்தாக உள்ளதுடன் சமிபாட்டுச் சக்தியையும் ஊக்குவிக்கின்றது. திரிகடுகம் உள்ளடக்கிய சுக்கு மிளகு திற்பலி என்பவற்றுக்கும் தனித்தனியே விசேட குணங்கள் உண்டு. அவற்றை அடுத்து நோக்குவோம்.

## சுக்கு (வேர்க்கொம்பு)

**"சுக்குக்குநெஞ்செரிப்புத் தொண்டுவழலையறும்**
**கக்குஇருமல் தனைச்சாடுமேமொக்குமென்**
**மூக்குநீர்ப்பாய்ச்சல்போம் மூலக்கிராணியறும்**
**போக்குமே கண்குளிரும் போது"**

இதன் பொருள்: சுக்கு நெஞ்செரிவு, தொண்டை நோவு

**'சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை சுப்பிரமணியனை மிஞ்சிய கடவுளும் இல்லை' என்பது ஒரு பழமொழி.**



சுக்கு (வேர்க்கொம்பு)

Image source - www.kudratkart.com

என்பவற்றைச் சுகப்படுத்தும். இருமல், மூக்கால் நீர்வடிதல், மூலக்கிறாணி என்பவற்றுக்கும் சுக்கு மருந்தாகும்.

இந்தியமருத்துவத்தில் சுக்குக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 'சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை சுப்பிரமணியனை மிஞ்சிய கடவுளும் இல்லை' என்பது ஒரு பழமொழி.

சுக்கும் கற்கண்டும் சம அளவில் எடுத்துத் தூளாக்கவும். இந்தக்கலவையில் ஒரு மேசைக்கரண்டி தூளை இளநீரில் கரைத்துக்குடிக்க நெஞ்செரிவு குறையும். இதையே பசையாக்கித் தொண்டையில் பூச தொண்டை நோவு குணமாகும். சுக்குத்தூளைக் கருப்பஞ்சாற்றில் கலந்து தினமும் காலையில் குடிப்பதன்மூலம் வயிற்றில் எரிவு போன்றவை ஏற்படாமல் தவிர்க்கலாம். சுக்கைத்தேனீ ருடன் சேர்த்தும் பருகலாம்.

இருமல், காய்ச்சல் என்பவற்றுக்கும் சுக்குக்குடிநீர் நிவாரணம் தரும். வியர்வையை உண்டாக்குவதன்மூலம் இது உடல் வெப்பத்தைக் குறைக்கிறது. செமியாக்குணம், வாய்வு என்பற்றுக்கும் சுக்கு மருந்தாகும். சுக்கில் உள்ள ஜிஞ்ஜெறோல் (gingerols) என்னும் பொருள் பெருங்குடலில் ஏற்படும் புற்றுநோயைத் தவிர்க்கவும் மேலும் பரவாமல் தடுக்கவும் உதவுகிறது.

மூட்டுக்கள், தசைநார்கள் என்பவற்றில் நோவு, வீக்கம், இறுக்கம் என்பவற்றுக்குக் சுக்கு கைகண்ட மருந்தாகும். சுக்கில் உள்ள ஜிஞ்ஜெறோல் என்னும் இரசாயன உள்ளடக்கம் வலியை ஏற்படுத்தும் ஹோர்மோன்கள் உருவாவதைத் தடுத்துவிடுகின்றது. நாள்தோறும் உணவில்குறைந்தது ஒரு தேக்கரண்டி சுக்குத்தூள் சேர்த்துக்கொள்ள வேண்டும். வீக்கம் காணப்படும் மூட்டுக்களில் அல்லது முழங்காளில் சுக்குப்பசையைப் பூசுவதன் மூலம் வீக்கத்தைக் குறைக்கலாம்.

சுக்குத்தூளைக் காற்றுப் புகமுடியாத குப்பிகளில் அடைத்து வைத்துப் பயன்படுத்த வேண்டும். குளிர்சாதனப் பெட்டியில் வைத்து நீண்ட நாட்கள் பயன்படுத்தலாம். பித்தக்கல் (gall stones) பாதிப்பு உடையவர்கள் சுக்கைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். Dried Ginger என்பது இதன் ஆங்கிலப்பெயர். *Zingiber officinale ROSC* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயராகும்.

## மிளகு

**"சோகை கபதோஷம்போம் சூலைசுரங்களறும்**
**தாகமறும் மந்தமதைப்போக்கும்மேகம்**
**சிரங்குகிருமியுடன் சில்விஷங்கள் நாசம்**
**பொருந்து மிளகருந்தும் போது"**

இதன் பொருள்: காமாலை (anaemia) மற்றும் இருமல், தடுமல், மூக்குநீர்ப்பாய்ச்சல் போன்ற கபம் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும். வயிற்றுவலி, சுரம், தாகம், மந்தம் என்பவற்றைப் போக்கும். மிளகு அருந்துவதனால் தோல் வியாதிகள்,சிரங்கு கிருமித் தொல்லை, சிறுவிஷங்கள் என்பனவும் தீரும்.

'பத்துமிளகு கையில் இருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம்' என்பது மருத்துவப்பழமொழி. உணவுடன் வயிற்றுள்சென்று சேரக்கூடிய பல்வேறு வகையான நச்சுக்கிருமிகளை அழிப்பதுடன் சமிபாட்டையும் ஊக்குவிக்கும் மிளகு மேற்குலக மக்களின் உணவில் தவிர்க்கமுடியாத கறிச்சுவையூட்டியாக (spice) இடம் பெற்றுவிட்டது. போர்த்துக்கேயர் மிளகாயை இலங்கை, இந்திய மக்களுக்கு அறிமுகப்படுத்தி விட்டுத் தாம் மிளகைத் தங்குதடையின்றிப் பெற்றுக்கொள்ள வழிவகுத்துக் கொண்டார்கள். வயிற்றில் புரதச் சமிபாட்டுக்குத் தேவையான ஹைட்றோக் குளோறிக் அமிலத்தின் (hydrochloric acid) சுரப்பை ஊக்குவித்து இறைச்சி, மீன், முட்டை போன்ற புரத உணவுகள் துரிதமாகச் சமிபாடு அடைய மிளகு உதவுகிறது.



மிளகு

Image source - www.onmanorama.com



திப்பிலி

Image source - www.tamilxp.com

## திப்பிலி

**"அய்யமுடன்வாத மணுகாது அம்புவியில்**
**நய்யாமல் திற்பலியை நன்னுவார்வெய்யச்**
**சுரமும்திரிதோஷமும் துரத்தும்தலைவலியும்**
**பொருமும்வாய்வு பலவும் போம்"**

இதன் பொருள்: இருமல் ஆஸ்த்மா நெஞ்சுச்சளி போன்ற சுவாசக்குழாய் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்குத் திப்பிலி மருந்தாகப்பயன்படும். முத்தோஷங்களையும் போக்கும். தலைவலி, வாய்வு என்பவற்றையும் குணமாக்கும்.

நெஞ்சுச்சளியுடன் கூடிய இருமலுக்கு திப்பிலித்தூள் 125 மில்லிகிராம் முதல் 250 மில்லிகிராம் வரை தேனுடன் அல்லது இளஞ்சூடான நீருடன் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை சிறுவர்களுக்குக் கொடுக்கலாம். பெரியவர்களுக்கு இத்தூளின் அளவு 1 கிராம் தொடக்கம் 3 கிராம் வரை இருக்கலாம்.

சளி இல்லாத வரட்டு இருமலாயின் தேனுக்குப்பதில் வெல்லம் அல்லது அதிமதுரம் சேர்க்கலாம். இம்மருந்தைச் சாப்பிட்டவுடன் சிறிதளவு சூடான வெந்நீர் அருந்தவேண்டும். திப்பிலித்தூளைத் தேன் அல்லது வெந்நீர் சேர்க்காமல் அருந்தக்கூடாது.

திப்பிலிவேர் தலைவலிக்குச் சிறந்த மருந்து என்பது ஆயுர்வேத மருத்துவர்களின் ஒருமித்த கருத்தாகும். கூடவே இருமல், தடுமல், சளிக்கட்டு என்பவற்றுக்கும் இது மருந்தாகப் பயன்படுகிறது.

திப்பிலிவேர்த்தூள் சிறுவர்களுக்கு 250 மில்லிகிராம் தொடக்கம் 500 மில்லிகிராம் என்ற அளவிலும் பெரியவர்களுக்கு 2 தொடக்கம் 3 கிராம் என்ற அளவிலும் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் கொடுக்க வேண்டும். திப்பிலித்தூளை 3 தொடக்கம் 5 கிராம் அளவிலான நெய், பட்டர் அல்லது தேனுடன் சேர்த்துஅருந்திவிட்டு உடனே வெந்நீர் அல்லது பாலைக் குடிக்கவேண்டும். இம்மருந்தை வெறும்வயிற்றில் எடுப்பது நல்லது. கர்ப்பிணிப்பெண்கள் இம்மருந்தை எடுத்தல்கூடாது.

தொடரும்.

- அதிர்ஷ்டவசமாக கணேசலிங்கநாதன் குறிப்பிட்டுள்ள 'செகராசசேகரத்துக்குரிய இரசவர்க்கம்' என்னும் பகுதியைக் கொண்ட ஏட்டுப்பிரதி பாரம்பரிய மருத்துவர்களான எமது மூதாதையரிடம் இருந்து எமக்கு வந்துசேர்ந்துள்ளது.

- இதனை முதன்முதலாக அச்சில் வெளிக்கொண்டு வரும் வாய்ப்பு எமக்குக் கிடைத்திருப்பதையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகிறோம் .

- உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கும் மருந்துப்பொருள்களின் குணங்களை எடுத்துரைக்கும் இந்தப்பகுதி வெண்பாக்களால் ஆனது.

# இரசவர்க்கம் – திரிபலை

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்னும் மூன்று மூலிகைகளையும் கூட்டாக 'திரிபலை' என்று ஆயுள்வேத மருத்து வர்கள் குறிப்பிடு வார்கள். இம் மூலிகைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே விசேடகுணங்கள் உண்டு.

## திரிபலை சூரணம்

கடுக்காய்த்தூள், தான்றிக்காய்த்தூள், நெல்லிக்காய்த் தூள் மூன்றையும் சம அளவில் கலந்து தயாரிக்கப்படும் திரிபலை சூரணம் (Triphala churna) ஆயுள்வேத மருத்துவர்களின் கைகண்டமருந்தாகும். உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க இம்மருந்து பயன்படுத்தப்படுகின்றது. திரிபலைச் சூரணத்தைத் தொடர்ந்து எடுத்து வந்தால் இரத்தத்தில் உள்ள கொலெஸ்றோலைக் குறைக்க முடியும். திரிபலை சூரணம் இருதயம் ஈரல் சமிபாட்டுத்தொகுதி கண்கள் போன்ற உடல் உறுப்புக்கள் பலவற்றுக்கும் நன்மை பயப்பதுடன் உடல் நிறையைக் குறைக்கவும் உதவுகிறது.
நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 கிராம் வரை சுடுநீருடன் படுக்கைக்குப் போகுமுன்னர் அருந்தலாம். அல்லது உணவு இடைவேளைகளில் ஒவ்வொரு கிராமாக மூன்று தடவைகள் எடுக்கலாம். இதன் கைப்புச்சுவை பிடிக்காவிடின் வில்லைகளாக (capsule) எடுக்கலாம். வயதையும் தேவையையும் பொறுத்து ஒன்று தொடக்கம் மூன்று வில்லைகளை எடுக்கலாம். கால் தேக்கரண்டியுடன் ஆரம்பித்துப் பின்னர் தேவையைப்பொறுத்து அளவைக் கூட்டலாம். அளவுக்கு அதிகமானால் வயிற்றோட்டம் ஏற்படும்.
கண்ணில் ஏற்படக்கூடிய வியாதிகளைத் தடுத்து கண்களுக்கு வலுவூட்டும் மருந்தாக திரிபலைச் சூரணம் கருதப்படுகிறது. 10 கிராம் தொடக்கம் 50 கிராம் வரையிலான தூள் ஒருநேரம் கண்களைக்கழுவத் தேவைப்பட லாம். தூளின் அளவிலும் பதினாறு மடங்கு நீரில், அதனை ஒரு மணி நேரம் ஊறவைக்கவேண்டும். பின்னர் நீரில் அரைவாசி ஆவியாகும் வரை கொதிக்க வைக்கவேண்டும். இந்தக் கஷாயத்தை ஒரு மெல்லிய சுத்தமான பருத்தித்துணி கொண்டு வடித்து எடுத்து இளஞ்சூட்டுடன் கண்களைக் கழுவ வேண்டும். திரிபலை சூரணத்தை அனைத்து ஆயுள்வேதக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளமுடியும். எனினும் நம்பகத்தன்மையுடய கடைகளில் இம்மருந்தை வாங்கவும் அல்லது நீங்களாகவே இதனைத் தயாரித்துக்கொள்ளலாம்.

## கடுக்காய்

**மிடுக்காக்கும் காயத்தை விந்து விளைவிக்கும்**
**சடக்கெனவே உந்திதனைத்தள்ளும் – கடுக்காய்க்கு**



**திரிபலை சூரணம்**
Image source - www.doctor.ndtv.com

**வாதபித்தசேட்டுமம்போம் வன்னிமிகுவாலிபமாம்**
**சாதிசிறு காலையிலே தான்**

**பாடபேதம்:**
**மிடுக்காக்குந்தேகத்தை விந்துவையுண்டாக்குஞ்**
**சடக்கெனவே யுண்டியை யுட்சாடுந் – துடுக்கான**
**வாதபித்தவையகற்றும் வன்னியொடு தவ்விதருஞ்**
**சாதிவரிக்கடுக்காய்தான்**

*(பதார்த்தகுண சிந்தாமணி)*

இதன் பொருள் கடுக்காய் உடலுக்குப் புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும் தரும். விந்து உற்பத்தியைக்கூட்டும். இலகுவில் மலம் கழியச்செய்யும். வாலிபத்தை மீளக் கொண்டுவரும்.
இழையங்களுக்கு வலுவும் ஊட்டமும் கொடுப்பதன்மூலம் கடுக்காய் பெருங்குடல், ஈரல், நுரையீரல் என்பவற்றுக்கு வலு ஊட்டுகிறது. இது ஒரு பயன் தரக்கூடிய அதே சமயம் பாதுகாப்பான மலமிளக்கி (laxative) யாகும். சமிபாட்டுக்குடலில் சேரக்கூடிய இயற்கையான நச்சுப்பொருட்களை அகற்றிக் குடலைச்சுத்தம் செய்கிறது. எந்தவிதமான பக்கவிளைவும் இன்றி இதனைத் தொடர்ந்து பயன்படுத்தி வரலாம். வயிற்றில் வாய்வு கூடுதலாக உள்ளவர்கள் இதனைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் பெரும்பலன் அடைவர்.

**காலை விளாங்கனி கடும்பகல் சுக்கு**
**மாலை கடுக்காய் மண்டலம் தின்பரேல்**
**கோலை ஊன்றிக் குறுகிநடந்தவர்**
**கோலை வீசிக் குலாவி நடப்பரே**

என்று ஒரு பழைய பாடல் உள்ளது. காலையில் விளாம்பழம் மத்தியானத்தில் சுக்கு படுக்கைக்குப் போகும் முன்னர் கடுக்காய் என்று தொடர்ந்து 40 நாட்கள் ஒருவர் சாப்பிட்டு வருவாராயின் வயது முதிர்ந்தவருக்கும் வாலிபம் திரும்பும் என்பது இப்பாடலின் கருத்து.
மூலிகைக் கடைகளில் கடுக்காய் அல்லது ஹரிதகி (haritaki) என்னும் பெயர்களில் தூளாகவோ வில்லை (capsule)



கடுக்காய்



நெல்லிக்காய்



தான்றிக்காய்

Image source - www.boldsky.com

யாகவோ பெற்றுக் கொள்ளமுடியும் அல்லது நீங்களே கடுக்காய்த்தூளைத் தயாரித்துக் கொள்ளலாம்.
உலர்ந்த கடுக்காயின் விதைகளை அகற்றிய பின்னர் அதனை நிழலில் காயவைக்கவேண்டும். பின்னர் அதனை இடித்து அல்லது கிறைன்டரில் அரைத்துத் தூளாக்க வேண்டும். பிறவுண் நிறத்தில் கிடைக்கும் இந்தக் கடுக் காய்த்தூளை காற்றுப் புகமுடியாத ஒரு குப்பியில் மூடி வைத்திருந்து ஆறுமாதத்துக்குள் பயன்படுத்தவேண்டும்.
பெரியவர்களுக்கு 3 முதல் 6 கிராம் வரையிலும் இலே சான சூடுள்ள நீருடன் குடிக்கக்கொடுக்கலாம். ஒரு நாளைக்கு ஒரு தடவை அதிகாலையில் அல்லது இரவுச்சாப்பாடு உண்டதன் பின்னர் மூன்று மணித்தியாலங்கள் சென்ற பின் இம்மருந்தை எடுக்கவேண்டும். மலச்சிக்கல் உடைய சிறுவர்களுக்கு 500 மில்லி கிராம் முதல் 1 கிராம் வரையும் கொடுக்கலாம். உடல் பலவீனமானவர்களும் கர்ப்பிணிப் பெண்களும் கடுக்காய் எடுப்பதைத் தவிர்க்கவேண்டும். நீரிழிவு மற்றும் குறைந்த இரத்த அழுத்தம் (low blood pres sure) உள்ளவர்களும் இம்மருந்தைத் தவிர்ப்பது நல்லது.

## நெல்லிக்காய்

**நல்லநெல்லிமுள்ளி நாவுக்குரிசைதரும்**
**அல்லல்தரும் பித்தம்அகலுமேமெல்லத்**
**தலைமுழுகக்கண்குளிரும் தவிர்த்திடும்பித்தவாந்தி**
**கலைபடுமே மேகமெல்லாம் காண்.**

### பாடபேதம்:

**நல்லநெல்லிமுள்ளி நாவுக்குரிசைதரு**
**மல்லல்தருபித்தமகற்றுமதைமெல்லத்**
**தலைமுழுகக்கண்குளிருந் தாவுபித்தவாந்தி**
**இலையிழிமேகங்களும்போமெண்**

(பதார்த்தகுண சிந்தாமணி)

இதன் பொருள்: நெல்லிக்காய் நாவுக்குச் சுவை தரும். பித் தத்தைப் போக்கும். நெல்லிக்காய் சேர்த்துத் தயாரிக்கப்ப டும் எண்ணெய் கண்ணுக்குக் குளிர்ச்சி தரக்கூடியது பித் தத்தினால் ஏற்படும் வாந்தியை நிறுத்த உதவும்.
விட்டமின் சீ (vitamin C) நிரம்பப்பெற்றது பெருநெல்லிக் காய். நூறு கிராம் (100g) நெல்லிக்காயில் 700 மில்லி கிராம் (700mg) அளவிலான விட்டமின் சீ உள்ளது. உலர்ந்த காயி லும் இந்த விட்டமின் பேணப்படுகிறது. உலர்ந்த நெல் லிக்காய்த் தூளைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் ஒருவருடத்துக்கு அதன் பலன் கெடாமல் வைத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.
நெல்லிக்காய்த்தூளைத் தயிருடன் சேர்த்து உண்டால் சீத பேதி (dysentery) எனப்படும் வயிற்றோட்டம் குணமாகும். இந்தக்குடிநீரைச் சர்க்கரை சேர்த்துக்குடித்தால் தலைச் சுற்று குணமாகும்.
வயிற்றில் மேலதிக அமிலச்சுரப்பினால் ஏற்படும் நெஞ்செ ரிவு மற்றும் குடற்புண் என்பவற்றுக்கு நெல்லி பயன் தரக் கூடிய மருந்து என்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. நெல்லிக்காய்த் தூளில் குடிநீர் காய்ச்சிக் குடித்தால் வயிற்றில் உள்ள அமிலத்தினால் ஏற்படும் நெஞ்செரிவு மற்றும் அல்சர் வராமல் தடுக்கலாம்.
நெல்லிக்காய்த்தூள் சிறுவர்களுக்கு 500 மில்லி கிராம் முதல் ஒருகிராம் வரையிலும் பெரியவர்களுக்கு 3 தொடக் கம் 6 கிராம் வரையிலும் ஒரு நாளைக்கு இரண்டு தடவை வெறும் வயிற்றில் விழுங்கக் கொடுக்கலாம் அல்லது சாப் பட்டுக்குமுன் தண்ணீருடன் கொடுக்கலாம். (30 times vita min C than in Oranges) கர்ப்பிணிப்பெண்களும் நோயாளருக் கும் தேவையான விட்டமின் C யை நெல்லிக்காயில் பெற்றுக்கொள்ளலாம்.

## தான்றிக்காய்

**மாணிக்காமாம் மேனி மந்தம் போம் வாதம் போம்**
**பேணிக்குணம் பேணுவார்பிணி போக்கும் – தாணிக்காய்**
**தரணியிலுள்ளோர்க்குத் தாதுபெலனுண்டாக்கும்**
**சீரணியு மாதே சிறந்து**

இதன் பொருள்: உடலுக்கு அழகையும் ஒளியையும் கொடுக் கும். மந்தம், வாதம் என்பவற்றை போக்கும். விந்து நட் டத்தைப்போக்கி வீரியத்தைக் கொடுக்கும்.
Belleric myrobalan என்பது தான்றிக்காயின் ஆங்கிலப்பெய ராகும். Bahera என்பது இதன் வர்த்தகப் பெயர் (trade name). Terminalia bellerica ROXB. என்பது இதன் இலத்தீன் விஞ்ஞா னப் பெயராகும்.
தான்றிக்காயும் அதன் பருப்பும் பல்வேறு ஆயுள்வேதத் தயாரிப்புகளில் இடம்பெறுகின்றன. கண்வியாதிகள் சில வற்றுக்குப் பயன்படுத்தப்பெறும் மருந்துத் தயாரிப்புக்க ளில் தான்றிக்காய் முக்கிய இடம்பெறுகின்றது. விதையில் இருந்துபெறப்படும் எண்ணெய் கூந்தலைச் செழிக்கவைக் கின்றது. மூட்டுவாதத்துக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

தொடரும்.

## பரமு புஷ்பரட்ணம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான இவர், தனது இளமாணி மற்றும் முதுமாணி பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதி பட்டத்தை தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகள் சுமார் 82 ற்கு மேற்பட்டவை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச தேசிய கருத்தரங்குகளில் பங்குப்பற்றியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்களில் மூன்று அகழ்வாய்வுகள் நூல்களாக வெளிவந்துள்ளன.


# இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக் காட்டும் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வுகள்

இந்தக் கட்டுரைத் தொடர், சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடபகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், இலங்கையில் பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்களின் நிலை, அவர்களின் கலாசார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை வெளிக் கொணர்வதாக அமைகிறது.

இலங்கை தொடர்பாக அண்மைக் காலங்களில் வெளிவந்த வரலாற்று ஆய்வுகள், அரச வரலாற்றுப்பாட நூல்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் என்பன இலங்கையின் பூர்வீகமக்கள், பண்பாடு என்பவற்றின் தொடக்க காலத்தை விஜயன் வருகைக்கு முந்திய நாகரிகத்தில் இருந்து ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளன. பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கையின் பூர்வீக வரலாறு தீபவம்சம், மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுவந்துள்ளன. அவ்விலக்கியங்கள் கி.மு.6ஆம் நூற்றாண்டளவில் வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் ஏற்பட்ட குடியேற்றத்துடனேயே இலங்கையின் மனிதவரலாறும், நாகரிக வரலாறும் தோன்றியதாகக் கூறுகின்றன. இக்குடியேற்றம் நடப்பதற்கு முன்னர் இயக்கர், நாகர் என்ற இருவினமக்கள் இங்கு வாழ்ந்ததாக இந்நூல்களில் (*Mahavamsam:vivii.*5155) குறிப்பிட்டப்பட்ட போதிலும் பிற்காலத்தில் எழுந்த பெரும்பாலான வரலாற்று ஆய்வுகளில் அம்மக்களை மனித இனமாகக் கருத்தில் கொள்ளப்படவில்லை (*Mendis* 1946:8, *Paranavithana* 1961:18182) மகாவம்சம் வடஇந்தியாவிலிருந்து குடியேறியவர்களை இந்நாட்டிற்குரிய மக்களாகவும், தமிழர்களை அக்கரையிலிருந்து (தென்னிந்தியா) வந்து சென்ற அந்நியராகவும் குறிப்பிடுகின்றது. இக்கதைகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த பிற்கால வரலாற்று நூல்கள் சிங்கள மக்களை வடஇந்தியாவிலிருந்து குடியேறிய ஆரிய இனக்குழுமத்தின் வழித்தோன்றல்களாகவும், தமிழர்களைத் தமிழ்நாட்டிலிருந்து பிற்காலத்தில் வந்து குடியேறிய அந்நியராகவும் குறிப்பிடுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக்கால வரலாற்று மொழியில் சார்ந்த ஆய்வுகள் சிங்கள மக்களை ஆரியமொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவும், தமிழர்களைத் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் அடையாளப்படுத்திக் கூறியுள்ளன. ஆயினும் 1970களிலிருந்து இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விஞ்ஞான பூர்வமான தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தோன்றிவிட்டதை உறுதி செய்கின்றன. இவை தமிழ், சிங்கள மக்களின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய பாரம்பரிய வரலாற்றுக் கதைகளை



அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆய்வுக்குழி

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது

யும், நம்பிக்கைகளையும் மீளாய்வு செய்யத் தூண்டி யுள்ளன. அவற்றை மேலும் உறுதிப்படுத்துவதில் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்ட பூர்வீக மக்கள் பற்றிய சான்றுகளுக்கு முக்கிய இடமுண்டு.

## கட்டுக்கரையின் அமைவிடம்

கட்டுக்கரைத் தொல்லியல் மையம் வடஇலங்கையில் மன்னார் மாவட்டத்திற்கு வடகிழக்கே 26கி.மீ. தொலைவில் கட்டுக்கரைப் பிரதே சத்தில் உள்ள குருவில் என்ற சிறிய கிராமத்தில் காணப்படுகின்றது. தற்காலத்தில் இக்குளத்தைச் சுற்றியமைந்துள்ள பிரதேசம் சிங்களத்தில் "யோதவேவ" எனவும், தமிழில் "கட்டுக்கரைக் குளம்" எனவும் அழைக்கப்படுகின்றது. ஆயினும் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளம் உட்பட அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்கள் "பாலப் பெருமாள் கட்டு" என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது. இக்குளத்தின் சுற்றுவட்டாரத்தில் உள்ள ஊர்களின் இடப்பெயர்களின் பின்னொட்டுச் சொற்களாகக் குளம், அடி, மோட்டை, வில், புலவு, தாழ்வு, கட்டு, காடு என முடிகின்றன. இப்பின்னொட்டுச் சொற்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த இடப்பெயர்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கு தமிழ், பாளி இலக்கியங்களும், பிராமிக்கல்வெட்டுகளிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன (Ragupathy1991, Pushparatnam). இவ்வாதாரங்கள் கட்டுக்கரைப் பிரதேசத்திலுள்ள சில ஊர்ப் பெயர்களுக்கு நீண்டகால வரலாறு இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

## தொல்லியல் மேலாய்வு

கட்டுக்கரைகுளம் வடஇலங்கையில் உள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இக்குளம் தொடர்பான வரலாற்றுக்கதைகள், இலக்கியக்குறிப்புகள், தொல்பொருட்சான்றுகள் என்பன இக்குளத்திற்கு தொன்மையான வரலாறு இருப்பதை உறுதிப்படுத்துகின்றன. இச்சுற்றாடலில் காணப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் பற்றிய தகவலை முதலில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர் டேவிட் அவர்கள் தொல்லியல் மாணவன் கிரிசாந்தனுக்கு கூறியிருந்தார். அத்தகவலின் அடிப்படையில் 20162017 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவு ஆசிரியர்களும், மாணவர்களும் இங்கு விரிவான தொல்லியல் மேலாய்வினை மேற்கொண்டிருந்தனர். அதன்போது குளநீர்ப் பெருக்கினால் சிதைவடைந்த அணைக் கட்டுக்கள், கால்வாய்கள், குளபரப்பினுள் தொல்பொருட் சின்னங்கள் காணப்பட்ட இடங்கள் என்பவற்றில் இருந்து அதிகளவான தொல்பொருட் சின்னங்களைக் கண்டு பிடிக்க முடிந்தது. குளத்திற்கு வடக்குப்பக்க அணைக் கட்டுடன்இணைந்தகாட்டுப்பிரதேசத்திலும், மேட்டுப் பிரதேசத்திலும் பிறதேவைக்காக மண் அகழப்பட்ட ஆழமான குழிகளிலிருந்து தொல்பொருட் சின்னங்களுடன், கலாசார மண்ணடுக்குகளையும் அடை யாளம் காணமுடிந்தது. இந்த மேலாய்வின் மூலம் கட்டுக்கரைப் பிரதேசத்தில் கற்காலம் தொட்டு மக்கள் வாழ்ந்து வருவதை உறுதிப்படுத்தும் கற்கருவிகள், பல்வேறு காலகட்ட மட்பாண்டங்கள், சுடுமண் உருவங்கள், கட்டிட எச்சங்கள், கூரை ஓடுகள், செங்கட்டிகள், ஆதிகால, இடைக்கால உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் என்பவற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது. மேலும் இக்குளம் வற்றிய காலங்களில் தெரியவரும் தொல்லியற் சின்னங்களும்,கட்டிட எச்சங்களும் இக்குளம் 1896 ஆம் ஆண்டு பெருப்பித்துக் கட்டப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கிருந்த சிறிய குளங்களை அண்டியதாக மக்கள் குடியிருப்புகள் இருந்ததையும் அறிந்து கொள்ளமுடிந்தது.

> **வடஇலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய புரதான குடியிருப்புமையமாகக் கட்டுக்கரைப்பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் கட்டுக்கரைக்குளத்திற்கு வடக்குப்பக்கமாக ஏறத்தாழ 3 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் இருந்துள்ளதை இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன.**

## தொல்லியல் அகழ்வாய்வு

வடஇலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய புரதான குடியிருப்புமையமாகக் கட்டுக்கரைப்

பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் கட்டுக்கரைக் குளத்திற்கு வடக்குப்பக்கமாக ஏறத்தாழ 3 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் இருந்துள்ளதை இது வரை கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன. ஆயினும் இப்பிரதேசத்தில் இருந்து பிறதேவைக்காக நீண்டகாலமாக மண் அகழப்பட்டு வருவத னால் அவ்விடங்கள் தற்போது பெரிதும், சிறிதுமான குழிகளாகக் காணப்படுகின்றன. இக்குழிகளில் இருந்து பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட மண்ணோடு தொல் பொருட் சின்னங்களும் கொண்டு செல்லப் பட்டுள்ளதை தொலைதூரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வீதிகளிலும், அணைக்கட் டுக்களிலும் அவதானிக்க முடிகின்றது. இந் நிலையில் கட்டுக்கரைப் பிரதேசத்தின் பூர் வீக மக்கள், பண்பாடு என்பவற்றைக் கண்டறியும் நோக்கில் 20162017 காலப்பகு தியில் இரு இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் முதலா வது குளத்தின் வடக்குப்பக்க அணைக்கட் டிற்கு அருகிலும், இரண்டாவது குளநீர் வெளியேறும் வாய்க்காலுக்கு அருகிலும் மேற்கொள்ளப்பட்டன.



**ஆதியிரும்புக்கால மட்பாண்ட வகைகள்**

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது

முதலாவது அகழ்வாய்வில் 6 குழிகள் 4 மீற் றர் நீள, அகலத்தில் இயற்கை மண்ணை அடையாளம் காணும் வரை அகழ்வு செய் யப்பட்டது. ஏறத்தாழ இக்குழிகளின் மேற்ப டையில் இருந்து முதல் நான்கு அடி ஆழத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கலாச்சார மண்ணடுக்குக ளைக் காணமுடியவில்லை. அவ்விடங்களின் மேற்படை யில் குளத்தின் நீர்மட்டம் உயர்வடைந்த காலத்தில் நீர லையினால் அள்ளுண்டு வந்த மண், மட்பாண்ட ஓடுகள், சங்கு, சிற்பி, கடல் உயிரினச்சுவடுகள், சுடுமண் உருவங் கள், புராதன கூரையோடுகள், செங்கற்கள் என்பனவே பரவலாகக் காணப்பட்டன. குழிகளின் நான்கடி ஆழத் திற்கு கீழே 3 வேறுபட்ட கலாசார மண்ணடுக்குகள் காணப்பட்டன.

அவற்றுள் முதலிரு மண்ணடுக்குகளில் இருந்து பலவடிங் களில் அமைந்த மட்பாண்டங்கள், மென்தன்மை குறைந்த பெருங்கற்கால கறுப்புசிவப்பு நிறமட்பாண்டங்கள், சிறிய மட்கலசங்கள், குறியீடுகள் பொறித்த மட்பாண்ட ஓடுகள், கழிவிரும்புகள் (iron slacks) கற்களில் வடிவமைக் கப்பட்ட கைவளையல்கள், பலவடிவங்களிலும், பல அளவுகளிலும் செய்யப்பட்ட அகல் விளக்குகள், சுடு மண் தெய்வச்சிலைகள், சிற்பங்கள், சமயச் சின்னங்கள், ஆண், பெண் உருவங்கள், எருது, யானை, குதிரை, பாம்பு, மயில் முதலியவற்றின் சிலைகள், சிற்பங்கள், சங்கு, சிற்பி கள், குவாட்ஸ் கல்லாயுதங்கள்,என்பன கண்டுபிடிக்கப் பட்டன. இத்தொல்பொருட் சின்னங்களைத் தொடர்ந்து நான்காவது கலாசார மண்ணடுக்கில் செங்கட்டிகளைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட அத்திவாரம் காணப்பட்டது. அதன் ஒரு பகுதி குளத்தை நோக்கிக் கட்டப்பட்ட நிலை யில் சிதைவடைந்து காணப் பட்டது.

இரண்டாவது அகழ்வாய்வில் இரண்டு குழிகள் 4மீற்றர் நீள அகலத்தில் அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணப்படும்வரை ஏறத்தாழ 7அடி ஆழத்திற்கு அகழ்வு செய்யப்பட்டது. இங்கு அகழ்வாய்வுக்குத் தெரிவு செய் யப்பட்ட இரு குழிகளின் மேற்பகுதிகள் இயந்திரங்கள் கொண்டு மண் அகழப்பட்டதனால் அகழ்வு செய்யப் பட்ட குழிகளின் மேற்பரப்பு மண்ணடுக்குகளும், அங்கு கிடைத்த தொல்பொருட் சின்னங்களும் பெருமளவுக்கு குழம்பிய நிலையில் காணப்பட்டன. இதனால் சிதைவ டைந்த மண்ணடுக்குகளில் பிற்காலத் தொல்லியற் சான் றுகளுடன் முற்காலத் தொல்லியற் சான்றாதாரங்களும் கலந்துகாணப்பட்டன. அவற்றுள் பலவகை மட்பாண் டங்கள், தாழிகளின் உடைந்த பாகங்கள், சுடுமண் உரு வங்கள், கழிவிரும்புகள் என்பன தொன்மைச் சான்றுக ளாக அடையாளம் காணமுடிந்தது.

இந்நிலையில் சிதைவடையாதிருந்த கலாசார மண்ணடுக் கில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் ஏறத்தாழ ஏழடி ஆழத்தில் பெருங்கற்கால அல்லது ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுக்குரிய இருவகை ஈமச்சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை 1980ஆம் ஆண்டு ஆனைக்கோட் டையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச் சின்



**ஆதியிரும்புக்கால மட்பாண்ட வகைகள்**

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது

னங்களின் பின்னர் வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது அதிமுக்கியத்துவம் வாய்ந்த பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் எனக் கூறலாம். அவற்றுள் முதலாவது அகழ்வாய்வுக் குழியில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமச் சின்னத்தில் இறந்த மனிதனது எலும்புகளை எருது வடிவில் மண்ணால் செய்யப்பட்டு பின்னர் சுடப்பட்ட ஈமப்பேழைக்குள் (*Sarcophagus*) வைத்து அடக்கம் செய்யப்பட்டிருந்தது. இவ்வகையான ஈமச்சின்னங்கள் தென்னிந்தியா சிறப்பாக தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பரவலாகப் பயன்படுத்தப் பட்டிருந்தபோதும் அது இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால் முதன் முறையாகக் கட்டுக்கரையில் ஈமப் பேழை யொன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பெருங்கற்காலப் பண்பாட்டில் கட்டுக்கரை முக்கிய இடத்தில் இருந்ததைக் காட்டுகின்றது. ஏறத்தாழ மூன்றடி நீளமும், இரண்டடி அகலமும் கொண்ட ஈமப் பேழைக்குள் இறந்தவரது எலும்புகள் வைக்கப்பட்டு அவை வைரமான களிமண் கொண்டு மூடப்பட்டிருந்தது. ஈமப்பேழையை மூடிய மண் மங்கலான சிவப்பு நிறத்தால் தனித்து அடையாளப்படுத்திக் காணப்பட்டது. அத்துடன் ஈமப்பேழையைச் சுற்றி பல்வேறு அளவுகளில், பல வடிவங்களில் மட்பாண்டங்கள், குவளைகள் வட்டில்கள், மண்தட்டுக்கள் என்பன வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் நரை நிற மற்றும் தனிக் கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்களுடன் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கே தனித்துவமான கறுப்பு சிவப்புநிற மட்பாண்டங்கள் அதிக அளவில் காண்டுபிடிக்கப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இம்மட்பாண்டங்கள் இறந்தவர் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய பலதரப்பட்ட பொருட்களை நிவேதனப் பொருட்களாக (படையற் பொருட்கள்) வைப்பதற்கு பயன்படுத்தப் பட்டவையாகும். அவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இம் மட்பாண்டங்களுடன் கலந்த நிலையில் கார்ணலேயன், அகேட் வகையிலான கல்மணிகள், இரும்புப் பொருட்கள், குறியீடுகள் பொறித்த மட்பாண்ட ஓடுகள், சுடுமண் உருவங்கள், சங்கு, சிற்பி, கடல் உணவின் எச்சங்கள், தானிய வகைகள், மாமிச உணவுகளின் எச்சங்கள் எனபன கிடைத்துள்ளன.

இரண்டாவது ஆய்வுக் குழியில் முதலாவது ஆய்வுக் குழியின் சம ஆழத்தில் இறந்தவரது எலும்பின் பாகங்களை தாழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்ட ஈமச் சின்னம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ் வகையான ஈமச் சின்னங்கள் பொதுவாக தாழியடக்கம் என அழைக்கப்படுகின்றது. இது போன்ற ஈமச் சின்னங்களே தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை மணிமேகலையில் வரும் “சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர் தாழ்வையின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்” என்ற பாடல்வரிகள் உறுதி செய்கின்றது (மணிமேகலை 6.111.11.6667). இலங்கையிலும் பெருங்கற்காலக் குடியிருப்புகள் காணப்பட்ட மணற்பாங்கான இடங்களில் பெரும்பாலும் தாழியடக்க முறையே இருந்துள்ளது. இதற்குப் புத்தளம் மாவட்டத்தில் பொம்பரிப்பு என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான ஈமத்தாழிகள் சிறந்த சான்றாகும். கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழி ஒரு அடி உயரமும், அதன் வாய்ப்பகுதி ஆறு அங்குல விட்டமும் கொண்டது. இத்தாழிக்குள் இறந்தவரது எலும்புகளுடன் மட்பாண்ட ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மட்பாண்டங்கள் படையற் பொருட்கள் வைக்கப்பட்ட பாத்திரங்களாக இருக்கலாம். தாழியைச் சுற்றி

**1980ஆம் ஆண்டு ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச் சின்னங்களின் பின்னர் வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது அதிமுக்கியத்துவம் வாய்ந்த பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் எனக் கூறலாம். இவ்வகையான ஈமச்சின்னங்கள் தென்னிந்தியா சிறப்பாக தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும் அது இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.**



**அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆய்வுக்குழி**

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது

பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்களுடன் பல வடிவங்கள், பல நிறங்கள் கொண்ட மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. இவை முதலாவது ஆய்வுக்குழியில் கிடைத்த பொருட்களை பெருமளவிற்கு ஒத்திருப்பதால் அதன் சமகாலத்திற்குரிய ஈமச் சின்னமாகக் கருதலாம். இருப்பினும் இவ் ஈமச் சின்னத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்கு முந்திய நுண்கற் கால மக்கள் பயன்படுத்திய சேட் கல்லாயுதங்களும் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் கட்டுக்கரையில் நுண் கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடு பரவிய போது அப் பண்பாட்டை நுண்கற் கால மக்கள் ஏற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துவதாக இருக்கலாம், அல்லது பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடக்க காலத்தில் நுண்கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளை பெருங்கற்கால மக்களும் பயன்படுத்தியிருக்கலாம். இவ்வா றான பண் பாட்டுத் தொடர்ச்சி தமிழகத்திலும், இலங்கையில் பொம்பரிப்பு, அநுராதபுரம் ஆகிய பெருங்கற்கால மையங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன. கட்டுக் கரை அகழ்வாய்வில் இரு வேறுபட்ட பண்பாட்டுகளுக்குரிய ஆதாரங்கள் ஒரே யிடத்தில் ஒன்றுடன் ஒன்று கலந்தநிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இப் பிரதேசத்தின் மனித வரலாறும், பண் பாட்டு வரலாறும் நுண்கற்கால மற்றும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றி வளர்ந்ததைக் காட்டுதாக உள்ளன.

## கட்டுக்கரையின் பூர்வீக பண்பாடு.

இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால, பெருங் கற்கால மக்கள், அவர்களின் பண்பாடு கள் என்பன தொடர்பான தொல்லியற் சான்றாதாரங் களை வட இந்தியக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இயக்கர் நாக மக்களுடன் தொடர்புபடுத்தி ஆராயும் போக்கு அண்மைக்காலத்தில் தோன்றியுள்ளது. இதனால் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாடுகளின் முக்கியத்துத்தை மேலே கூறப்பட்ட ஆய்வுகளின் பின்னணியில் நோக்கப்படுவது பொருத்தமாகும்.

இலங்கையில் விஜயன் யுகத்திற்கு முந்திய நாகரிக வரலாறு உண்டு என்பதற்கு தொல்லியற் கண்டுபிடிப்புக் களை ஆதாரங்களாகக் காட்டியிருக்கும் பேராசிரியர் சேனகபண்டாரநாயக்கா இலங்கை மக்களின் இன அடை



**கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழி**

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது



**நாக இனக்குழு பற்றிக் கூறும் பிராமிக் கல்வெட்டு**

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது

யாளங்களுக்கு உடற்கூற்றியல் வேறுபாடுகள் காரண மல்ல, பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் என்றும் அப்பண்பாட்டு வேறுபாடுகளை இலங்கையில் நாக ரிக வரலாறு தோன்றிய காலத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றார் (சேன கபண்டாரநாயக1985:123) இந்நிலையில் பேராசிரி யர் சத்தமங்கல கருணாரட்ன மகாவம்சம் கூறும் நாக ரும் இலங்கையில் வாழ்ந்த இனக் குழு என்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ள "நாககுலம்" என்ற வரலாற்றுக் குறிப்பை ஆதாரமாகக் காட்டுகின்றார் (Karunaratne 1984:56).

மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட நாக என்ற பெயர் வட இந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்பட்ட காலத்திற்குப் பின்னர் வரலாற்றுத் தொடக்ககால இலங்கையுடன் பின்னிப்பிணைந்த பெயராக இருந்த தைப் பிராமிக்கல் வெட்டுக்களும், சமகாலப் பாளி இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன. இலங்கையில் இதுவரை ஏறத்தாழ 1500 பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஏறத்தாழ 200 கல்வெட்டுக்களில் "நாக" என்ற பெயரைப் பலதரப் பட்ட மக்களும் தனிநபரின் பெயராகப் பயன்படுத்தி யதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அப்பெயருக் குரியவர்கள் இனக்குழுத் தலைவர்கள், சிற்றரசர்கள், அரச அதிகாரிகள், வணிகர்கள் என உயர் பதவிகளில் இருந்ததை அக்கல்வெட்டுக்கள் மேலும் உறுதிசெய் கின்றன. வவுனியா மாவட்டத்தில் கண்டுபிடிக்கப் பட்ட நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் அங்கிருந்த நாகச் சிற்றரசர்களின் ஆட்சி பற்றிக் கூறுகின்றன. பிரா மிக் கல்வெட்டுக்களில் வரும் நாகரைப் பற்றிய செய்தி கள் அவற்றின் சமகால வரலாறு கூறும் பாளி இலக்கி யங்களிலும் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக அநுராதபுர இராசதானியில் ஆட்சியில் இருந்த துல் லத்தநாக (கி.மு.119), கல்லத்தநாக (கி.மு.109103), சோறநாக (கி.மு.6351), மகாநாக(கி.பி.79), இளநாக (கி.பி.3343), மகல்லநாக (கி.பி.136143), குஜநாக (கி. பி.186187), குஞ்சநாக (கி.பி.187189), ஸ்ரீநாக (கி. பி.189209), அபயநாக (கி.பி. 231240), ஸ்ரீநாக (கி. பி.240242) முதலான நாக மன்னர்களின் ஆட்சி பற் றிக் கூறியுள்ளதைக் குறிப்பிடலாம். இவ்வாதாரங்கள் வரலாற்றுத் தொடக்க கால இலங்கையில் வாழ்ந்த நாகர்களுக்கும் வட இந்தியக் குடியேற்றம் நடப்ப தற்கு முன்னர் வாழ்ந்த நாகர்களுக்கும் தொடர்பிருப்ப தைக் காட்டுகின்றன.

மகாவம்சம் கூறும் இயக்கரும் நாகரைப் போல் வட இந்தியக் குடியேற்றத்திற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இன்னொரு இனக்குழுவாகப் பார்க்கப்படு கின்றது. இதற்குப் பேராசிரியர் ராஜ்சோமதேவ பிரா மிக் கல்வெட்டுக்களில் வரும் யக்ஷ என்ற பெயரை ஆதாரமாகக் காட்டுகிறார். இலங்கையில் தோன்றி வளர்ந்த யக்ஷ வழிபாடுகள் பற்றி விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சிற்றம்பலம் அவற்றின் தொடக்க காலத்தை மகாவம்சம் கூறும் இயக்கருடன் தொடர்புடையவர் கள் என்பதற்கு பிராமிக் கல்வெட்டுக்களையே ஆதா ரங்களாகக் காட்டுகின்றார். தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் இலங்கையில் வாழ்ந்த பூர்வீக மக்க ளது பண்பாட்டிலிருந்து தொடங்க வேண்டும் எனக் கூறும் கலாநிதி பொ.இரகுபதி இதற்குச் சான்றாக 2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் மத்தியில் இருந்து வந்த இயக்கவழிபாடு பற்றிக் கால அடிப்ப டையில் எடுத்துக்கூறி அவ்வழிபாடு காலப்போக்கில் வல்லிபுரநாதர் ஆலயமாக மாறியதைப் பொருத்த மான ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார் (இரகுபதி 2006:123).

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் இலங்கை மக்களின் வர லாறும், பண்பாடுகளும் இதுவரைகால வரலாற்று ஆய்வுகளில் கவனத்தில் கொள்ளப்படாத யக்ஷ, நாக மக்களிலிருந்து பார்க்கப்படவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. தொல்லியல் அறிஞர்கள் இயக் கர் நாக மக்களின் பண்பாடுகளாக நுண்கற்காலப் பண் பாட்டையும் (Mesolithic Culture), பெருங்கற்கால (Mega lithic Culture) அல்லது ஆதியிரும்புக்காலப் (Early Iron Age Culture) பண்பாட்டையும் அடையாளப் படுத்துகின்ற னர். மானிடவியல் அறிஞர்கள் உடற்கூற்றியல் அடிப்ப டையில் இம்மக்களை ஆதி ஒஸ்ரலோயிட் மற்றும் திராவிட மக்கள் எனவும், மொழியியல் அறிஞர்கள் இவர் கள் பேசிய மொழிகளை ஆதி ஒஸ்ரிக் மற்றும் திராவிட மொழிகள் எனவும் கூறுகின்றனர். கட்டுக்கரைத் தொல் லியல் ஆய்வுகளில் மேற்கூறப்பட்ட இருவகைப் பண்பாடு மக்களும் வாழ்ந்ததற்கான உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதனால் அப்பண்பாடுகளின் முக்கி யத்துவத்தை சமகால தென்னிந்திய, இலங்கைப் பண்பா டுகளின் பின்னணியில் ஒப்பிட்டுப் பார்ப்பது கட்டுக்க ரைத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களின் முக்கியத்து வத்தை மதிப்பீடு செய்வதற்குப் பெரிதும் உதவலாம்.

தொடரும்.

# இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக் காட்டும் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வுகள்

**கட்டுக்கரையும் பெருங்கற்காலப் பண்பாடும்**

கட்டுக்கரையில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகப் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றியுள்ளது. இங்கு மேற்கொள்ளப்பட்ட இரு அகழ்வாய்விலும் இப்பண்பாடு பற்றிய ஆதாரங்களே அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை வடஇலங்கை வரலாற்றுக்கு சிறப்பாக இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதுவெளிச்ச மூட்டுவதாக உள்ளன. பெருங்கற்காலப் பண்பாடு என்பது இறந்தவர்களுக்கான ஈமச் சின்னங்கள் பெரிய கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டதால் தோன்றிய பெயராகும்.





கட்டுக்கரையில் பெருங்கற்கால மக்களால் மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள்

ஆதிகால மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் தமது வாழ்விடங்களை விட இறந்தவர்களுக்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களை அமைத்ததற்கான சான்றுகள் பல நாடுகளில் காணப்படுகின்றன. ஆயினும் திராவிட மொழி பேசும் தென்னிந்திய மாநிலங்களின் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குச் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. அதிலும் தென் தமிழகப் பெருங்கற்காலப் பண்பாடும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடும் ஒரே பிராந்தியம் என மயங்கும் அளவிற்கு பல அம்சங்களில் நெருங்கிய ஒற்றுமை கொண்டு காணப்படுகின்றன. அவற்றுள் இரும்பின் உபயோகம், கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்களின் பயன்பாடு, தாழியடக்க முறை, சுடுமண் கலைவடிவங்கள் என்பன தனித்துவமான அம்சங்களாகப் பார்க்கப்படுகின்றது. இதனால் பெரிய கற்கள் கொண்டு ஈமச்சின்னங்கள் அமைக்கப்படாத இடங்களில் இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுமாயின் அப்பண்பாடும் பெருங்கற்காலப் பண்பாடு அல்லது ஆதியிரும்புக் காலப் பண்பாடு என அழைக்கப்படுகின்றது.

இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் சிறப்பாக தென் தமிழகத்திலும் பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றம் வரலாற்றின் புதிய காலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. இப்பண்பாட்டின் தோற்றத்துடன் நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் ஓர் இடத்தில் நிரந்தரமாகக் கூடி வாழ்தல், நிரந்தர பொருளாதாரம், நீர்ப்பாசன விவசாயம், குளத்தை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புக்கள், இரும்பின் அறிமுகம், மிகை உற்பத்தி, சிறு தொழில்நுட்ப வளர்ச்சி, சக்கரங்களைப் பயன்படுத்திய மட்பாண்ட உற்பத்தி, பண்டமாற்று, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோற்றம் பெற்றன. இலங்கையில் ஏறத்தாழ 60க்கு மேற்பட்ட இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களும், ஈமச் சின்ன மையங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பெரிய குடியிருப்பு மையமாக அநுராதபுரம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரண்டாவது பெரிய குடியிருப்பு மையமாக வட இலங்கையில் கந்தரோடை அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இலங்கையின் கரையோரங்களில் குடியேறிய மக்களே காலப்போக்கில் வளமான இடங்களைத் தேடிச் சென்று அவ்விடங்களில் குடியேறினர் (Seneviratne 1983 237 307) அவற்றுள் பௌதீக மற்றும் கனிமவளங்கள் என்பவற்றைக் கொண்டிருந்த அநுராதபுரம், கந்தரோடை, மகாகமை ஆகிய இடங்களில் பரந்த பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் உருவாகி அவ்விடங்களில் ஆரம்பகால நகரமயமாக்கமும், அரச உருவாக்கமும் ஏற்பட்டன. அவற்றுள் அநுராதபுரத்தில் மிகப்பெரிய குடியிருப்புகள் தோன்றியதால் அங்கு பலமான மைய அரசு தோன்றியது. 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு அகழ்வாய்வு செய்த பேராசிரியர் கனிங்காம் தலைமையிலான குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் நவீன கணிப்பில் பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றம் கி.மு.1000 (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு) எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இக் காலக் கணிப்பு வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத் தொடர்பால் இலங்கையின் நாகரிக வரலாறு தோன்றியமை உறுதிப்படுத்தப்பட்டது.



கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயை அத்திவாரம்

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது

## பெருங்கற்காலப் பண்பாட்டில் கட்டுக்கரையின் முக்கியத்தும்

வட இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாகக் கட்டுக்கரை காணப்படுகின்றது. இதை அநுராதபுரத்திற்கு அடுத்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய குடியிருப்பு பிரதேசம் எனக் கூறலாம். கட்டுக்கரைப் பெருங்கற்காலப் பண்பாடு சமகாலத் தமிழக, இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடுகளுடன் ஒற்றுமை கொண்டிருந்தாலும் சில சான்றாதாரங்கள் வட இலங்கையின் பூர்வீக வரலாற்றிற்கு அதிலும் குறிப்பாகத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைக் கூறுவதாக உள்ளன. கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்விலேயே பெருங்கற்கால மக்களின் சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் அதிகளவிலான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நாக வழிபாட்டுக்கு உரிய சான்றாதாரங்கள் மிகப்பெரிய அளவில் கிடைத்திருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது. பெருங்கற்காலப் பண்பாட்டில் குடியிருப்பு, ஈமக்காடு, குளம் என்பன ஒருங்கே அமைந்திருப்பது அப்பண்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். இந்த நான்கு அம்சங்களும் தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டில் இந்த அம்சங்கள் குறிப்பிட்ட மையப்பரப்பிற்குள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கட்டுக்கரையில் இந்த நான்கு அம்சங்களும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு பல அளவுகளில், பல வடிவங்களில் ஈமச் சின்னங்களை அமைத்துள்ளனர். அவற்றுள் எருது, யானை போன்ற மிருகங்களின் உருவங்களை மண்ணில் செய்து அவற்றுள் இறந்தவரின் உடலை அல்லது எலும்புகளை வைத்து அடக்கம் செய்யும் ஈமப்பேழை சிறப்பான அம்சமாக நோக்கப்படுகின்றது. ஆயினும் இலங்கைப் பெருங்கற்கால ஈமச் சின்னங்களுள் இவ்வகையான ஈமப்பேழை கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. கட்டுக்கரை அகழ்வாய்வில் தாழியடக்க ஈமச் சின்னத்துடன் ஈமப்பேழை ஈமச்சின்னமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவே இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பெருங்கற்கால ஈமப்பேழையாக இருக்கலாம். வரலாற்று மூலங்கள் பலவும் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகமாக வடஇலங்கையில் உள்ள மாதோட்டத்தைக் குறிப்பிடுகின்றன. அங்கு 1825இல் இருந்து 1984 வரை விரிவான தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் அங்கு கண்டுபிடிக்கப்படாத தொன்மைச் சான்றுகள் கட்டுக்கரையில் கண்டு பிடிக் கப்பட்டு வருகின்றன. இச்சான்றுகள் மாதோட்டத்தில் இருந்து துறைமுக நகரத்தை அடையாளம்காண உதவலாம்.

**ஆதிகால மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் தமது வாழ்விடங்களை விட இறந்தவர்களுக்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களை அமைத்ததற்கான சான்றுகள் பல நாடுகளில் காணப்படுகின்றன.**











கட்டுக்கரையில் ஐயனார் வழிபாட்டுச் சின்னங்கள்





கட்டுக்கரையில்
சிவ வழிபாட்டுச் சின்னங்கள்

தென்னாசியாவில் கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் பிராமி எழுத்து தோன்றுவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களிடையே குறியீடுகள் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிய இக்குறியீடுகள் மேற்கிந்தியா ஊடாக பெருங்கற்காலப் பண்பாடு வரை தொடர்ந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால மட்பாண்டங்களில் சிலவகையான குறியீடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் ஒரு குறியீடு சிந்துவெளி நாகரிக காலச் சிறப்புக் குறியீடாகக் காணப்படுகின்றது. இக்குறியீட்டை தென்னிந்தியாவின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான பேராசிரியர் இராஜன் கட்டுக்கரை பெருங்கற்காலக் குடியிருப்புகளின் தோற்றம் தமிழகத்தின் மிகப்பெரிய குடியிருப்பு மையமான கொடுமணலின் சமகாலமாக அல்லது அதற்கு முற்பட்டகாலமாக இருக்கலாம் எனக் கூறியிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. மேலும் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சமயம், சமய நம்பிக்கைகள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், நகர மயமாக்கம், சிறு கைத்தொழில் சாலைகள் என்பன தொடர்பான தொல்லியற் சான்றுகள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் கட்டுக்கரையில் வலுவான ஒரு நாகரிகம் உருவாகிவிட்டது என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளன.

## பெருங்கற்கால மக்களின் சமய நம்பிக்கைகள்.

கி.மு.3ஆம் நூற்றாண்டு பௌத்த மதம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களிடையே நிலவிய சமய நம்பிக்கைகள் இந்து மதத்துடன் தொடர்புடையவையாக இருந்துள்ளன. இதைப் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி கூறும் பாளி இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன. இம்மத நம்பிக்கைகள் பற்றிப் பல அறிஞர்களும் ஆராய்ந்துள்ளனர் (Paranavithana 1970, சிற்றம்பலம் 1996, பத்மநாதன் 2016, இரகுபதி2006) இந்த உண்மையை பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் சிற்பங்கள், சிலைகள், சமயச் சின்னங்கள், குறியீடுகள் என்பனவும் உறுதிசெய்கின்றன.

கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வின் போது பெருங்கற்காலக் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளிவந்த சமயச் சின்னங்கள் பொது மக்கள் பலரின் கவனத்தைக் கட்டுக்கரையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருந்தது. அவற்றுள் கட்டுக்கரைக் குளத்தின் வடக்குப்பக்க அணைக்கட்டுப்பகுதி அகழ்வாய்வின் மூன்றாவது கலாசார மண் அடுக்கில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சான்றுகள் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இச்சான்றுகள் செங்கட்டிகள் கொண்டு கட்டப்பட்ட அத்திவாரத்திற்கு உட்பட்ட பகுதியிருந்து கண்டுபிடிக்கப்பட்டவையாகும். இக்கட்டிட அத்திவாரம் இவ்விடத்தில் பழமையான ஆலயம் அல்லது சமயச் சடங்கு நடந்த மண்டபம் இருந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இக்கட்டிடப் பகுதியில் இருந்தே பெருமளவு சுடுமண் சிற்பங்கள், சிலைகள், மணிகள், யானை, குதிரை, நந்தி, முதலான தெய்வ வாகனங்களின் பாகங்கள், அகல் விளக்குகள், தீபங்கள், சமயச் சின்னங்கள், இலட்சனைகள், குறியீடுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கலை வடிவங்கள் களிமண் அல்லது களி மண்ணுடன் குருமணல், நெல்லுமி அல்லது வைக்கோல் என்பன கலந்து வடிவமைக்கப்பட்டு பின்னர் அவை சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவை தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்களைப் பெருமளவு ஒத்ததாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை இந்து ஆலயங்களும், அவை சார்ந்த கலைவடிங்களும் அழியக்கூடிய

மண், மரம், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்ட வையாகும். இம்மரபே சமகால இலங்கையிலும் பின் பற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வில் சிவன், முரு கன், விநாயகர், அகத்தியர், நாகம் முதலான வழிபாடுக ளுக்குரிய சின்னங்கள், சிற்பங்கள், சிலைகள் கண்டுபி டிக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளே அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றின் அடிப்ப டையில் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கட்டிட எச்சங் கள் இங்கு ஐயனாருக்குரிய ஆலயம் அல்லது ஐயனார் வழிபாட்டுச் சடங்கு நடந்த இடமாக எடுத்துக் கொள் வதே பொருத்தமாகும். தென் தமிழகத்திலும், இலங் கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய குளக் குடியிருப்பில் ஐயனாரை முக்கிய தெய்வமாக வழிபடும் மரபு இருந்துள்ளது. இது பொருளாதாரச் செழிப்பிற்காகவும், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கொடிய மிருகங்கள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கவும் மக்களால் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கு தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான ஐயனார் வழி பாட்டுக்குரிய சின்னங்கள் சிறந்த சான்றுகளாகும். வன் னியிலும் பண்டு தொட்டு ஐயனார் ஒரு முக்கிய தெய்வ மாக வழிபடப்பட்டு வருவதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வுகளில் ஐயனார் தெய்வத்தை அடையாளப்படுத்தும் நூற்றுக்கணக்கான





**கட்டுக்கரையில் பெருங்கற்கால மக்களால் கல் மணிகள் உற்பத்தி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள்**

> **கி.மு.3ஆம் நூற்றாண்டு பௌத்த மதம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களிடையே நிலவிய சமய நம்பிக்கைகள் இந்து மதத்து டன் தொடர்புடையவையாக இருந்துள்ளன.**

யானை, குதிரை என்பவற்றின் உடற் பாகங்கள், தலைப் பகுதிகள், 75 இற்கும் மேற்பட்ட யானைத் தந்தங்கள், 50 இதிற்கும் மேற்பட்ட யானை, குதிரை, நந்தி முத லான வாகனங்களின் கழுத்தில் அணியப்பட்டிருந்த மணிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டமை இங்கு சிறப் பாகக் குறிப்பிடத்தக்கது.

இவ்வாதாரங்களிடையே யானை அல்லது குதிரையின் மேலமைந்திருந்த பீடத்தில் தெய்வீக கோலத்தில் இரு கால்களையும் கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் இருக்கும் இரு பெண் தெய்வங்களின் அரிய சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனாரின் இரு தேவியர்களைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்ற னர். இவற்றைத் தவிர ஆண், பெண் தெய்வங்க ளின் தலை உருவங்கள் பலவும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இவை ஐயனார், ஐயனாரின் தேவியர்களின் சிலை களின் உடைந்த பாகங்களாக இருக்கலாம்.

இங்கு ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளு டன் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர் முத லான வழிபாட்டுக்குரிய சான்றுகளும் கிடைத் துள்ளன. இவ்வாதாரங்கள் பிற்கால ஐயனார் ஆல யங்களில் பிற தெய்வங்களையும் வைத்து வழிபடப்ப டும் மரபு பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தோன் றியதை எடுத்துக்காட்டுகின்றன. அல்லது பொருளாதா ரச் செழிப்பு, பாதுகாப்பிற்காக ஐயனாரை வழிபாடு செய்த மக்கள் தமது குலத் தெய்வங்க ளின் உருவங் களை, சின்னங்களை மண்ணிலே செய்து ஐயனாருக்கு காணிக்கையாக வழங்கியிருக்கலாம் அல்லது அவ்வி டத்தில் வைத்து வழிபாடு செய்திருக்கலாம்.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம், திரிசூலம் என்பன சிவவழிபாடு முக் கியத்துவம் பெற்றிருந்ததை உறுதி செய்கின்றன. நந்தி

**கட்டுக்கரையைப் பொறுத்தவரை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பம் வாய்ந்த மட்பாண்டங்கள், விலையுயர்ந்த கற்கள், கல்மணிகள் என்பன தமிழகத் திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் என்பதை உறுதிப்படுத்து கின்றன. இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப்பண்பாடு நிலவிய காலத்திலேயே கட்டுக்கரைக்கும் தமிழகத்திற்கும் இடையே நெருக்கமான வர்த்தக, கலாசாரத் தொடர்புகள் இருந்ததை உறுதிசெய்கின்றன.**

*ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் முதலான சுடுமண் சிற்பங்கள் கட்டுக்கரை பெருங்கற்காலப் பண்பாட்டில் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது.*

*தமிழக ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட முருக வழிபாட்டிற்குரிய வேலும், சேவல் சின்னமும் இரும்பால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் கட்டுக்கரையில் அவ் வழிபாட்டை அடையாளப் படுத்தும் மயில் சின்னங்களும், அதன் இறகுகளும், வேல் சின்னங்களும் சுடுமண் உருவங்களாகக் கிடைத்திருப்பது அவ் வழிபாட்டின் தொன்மைக்குச் சான்றாகும். இங்கு மிகச் சிறிய கலசங்கள் பெருங்கற்கால மட்பாண்டங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டன. இக்கலசங்களின் வாய்ப்பகுதிலிருந்து தெய்வ உருவத்தின் முகம் வெளிவருவது போன்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. வரலாற்றுக் கதைகளில் அகத்தியரை குடமுனி என அழைக்கும் மரபு காணப்படுகின்றது. அவ்வழிபாடு இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குப் பரவியதான மரபும் காணப்படுகின்றது. இதனால் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறிய கலசங்கள் அகத்தியர் வழிபாடு இருந்ததை நினைவுபடுத்துவதாக உள்ளன.*

### கட்டுக்கரையின் அயல்நாட்டுத் தொடர்புகளும் நகரமயமாக்கமும்

*பண்டைய காலத்தில் தரை, நீர்வழிப்பாதைகள், கடல் சார்வழித் தொடர்புகளுக்கு சாதகமான இயற்கைத் துறைமுகங்கள், வணிகமையங்கள் என்பன வர்த்தக நோக்கத்திற்காக பல நாட்டவர்களும், பல இன மக்களும் ஒன்று கூடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தன. அவ்வாறான இடங்களிலிலேயே நெருக்கமான குடியிருப்புகள் தோன்றி அவ்விடங்கள் காலப்போக்கில் புராதன நகரங்களாக எழுச்சி பெற்றன. இப்பின்னணியிலேயே இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் அநுராதபுரம், மகாகமை, மாதோட்டம், கந்தரோடை முதலான இடங்கள் முக்கிய வணிக நகரங்களாகத் தோற்றம் பெற்றன.*

*கட்டுக்கரையைப் பொறுத்தவரை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பம் வாய்ந்த மட்பாண்டங்கள், விலையுயர்ந்த கற்கள், கல்மணிகள் என்பன தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.*

*இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப்பண்பாடு நிலவிய காலத்திலேயே கட்டுக்கரைக்கும் தமிழகத்திற்கும் இடையே நெருக்கமான வர்த்தக, கலாசாரத் தொடர்புகள் இருந்ததை உறுதிசெய்கின்றன. இவ்வர்த்தகத் தொடர்பு தமிழகத்துடன் மட்டுமன்றி இந்தியாவின் பல வட்டாரங்களுடனும் இருந்துள்ளது. கி.மு.5ஆம், 4ஆம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் மகத அரசால் வெளியிடப்பட்ட அச்சுக் குத்தப்பட்ட வெள்ளி நாணயங்களே (Punchmarks coins) தென்னாசியாவில் வெளியிடப்பட்ட முதலாவது வகை நாணயமாகும். இவ்வகை நாணயம் கட்டுக்கரைக் குளப்பரப்பில் இருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களைத் தொடர்ந்து கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.13 ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்திலும், இலங்கையிலும் வெளியிடப்பட்ட சிலவகை நாணயங்களும் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்களுடன் கி.பி.4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அராபிய நாட்டு மட்பாண்டங்களும், 10ஆம், 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனநாட்டுப் பீங்கான் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.*

*இவ்வாதாரங்கள் ஆதிகால, இடைக்கால வரலாற்றில் கட்டுக்கரை பிறநாடுகளுடன் வணிக, கலாசாரத் தொடர்புகளைக் கொண்டிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாதாரங்களின் அடிப்படையில் அநுராதபுரத்திற்குச் சமாந்தரமான காலத்தில் கட்டுக்கரையிலும் நகரமயமாக்கம் ஏற்பட்டதெனக் கூறமுடியும் இங்கு நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளையும், கண்டுபிடிப்புக்களையும் நேரில் பார்வையிட்ட மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாணச் செயல்திட்ட முகாமையாளர் லட்சுமன் சந்தன மைத்திரிபாலா, யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியல் பணிப்பாளர் பாலித்த விக்கிரமசிங்கே மற்றும் தென்னிலங்கைத் தொல்லியல் அறிஞர்கள் தற்போது காடாகக் காட்சிதரும் கட்டுக்கரைப் பிரதேசம் பண்டைய காலத்தில் மாதோட்டத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடைப்பட்ட போக்குவரத்தில் ஒருநகரமாக எழுச்சிபெற்றதை இங்கு கண்டு பிடிக்கப்பட்ட சான்றுகள் உறுதிசெய்வதாகக் கூறியுள்ளனர்.*

(தொடரும்)



**சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்**

கால்நடை மருத்துவரான இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் ( BVSc, MVS). தொடர்ச்சியாக தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர் பாக எழுதி வருகிறார்.




**கோழி வளர்ப்பு**

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் கோழிப் பண்ணைத் துறையும்

கால்நடை வளர்ப்பு கிராமியப் பொருளாதாரத்தில் மிக முக்கியமான கூறாகும். இலங்கையின் கால்நடை வளர்ப்பின் மிக முக்கியமான கூறுகளான மாடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பைப் பற்றிய தொடராக இது அமையப்போகிறது. கால்நடை வளர்ப்புப் பொருளாதாரத்தின் அடிப்படைகள், சவால்கள், தீர்வுகள் ஏனைய நாடுகளின் நிலைமைகளை ஒப்பீடு செய்தல் என இது அமையப்போகிறது. மக்களின் மிக முக்கிய ஊட்டச்சத்துக்களை வழங்கும் கோழி வளர்ப்பு இன்றைய இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதையும் அதன் தாக்கம் எதிர்காலத்தில் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனையும் விளக்குவதாக முதலாவது கட்டுரைத் தொடர் அமையப்போகின்றது.

சந்தையில் கோழி முட்டை ஐம்பது ரூபா வரையிலும் கோழி இறைச்சி ஆயிரத்து ஐநூறைத் தாண்டியும் விற்பனையாகிறது. சில இடங்களில் இன்னும் அதிகமாக இருக்கலாம். இந்தக் கட்டுரை மனிதனுக்கு புரதம் முதலான ஊட்டச்சத்துக்களை வழங்கும் மிக

முக்கியமான உணவுகளான கோழியி றைச்சி மற்றும் முட்டையை தரும் இலங்கையின் கோழிப் பண்ணைத் துறை நாட்டின் பொருளாதார பின்னடைவின் காரணமாக சந்திக்கும் சவால்களை ஆராய்கிறது. நான் ஒரு கால்நடை வைத்தியர் என்ற வகையில் குறிப்பாக அரச கால்நடை வைத்திய அலுவலகம் மற்றும் அரசாங்க கோழிப் பண்ணை ஒன்றின் அத்தியட்சகராக இருப்பதால் அங்கெல்லாம் கோழிப் பண்ணையம் தொடர்பாக நான் சந்திக்கும் சவால்கள் மற்றும் அனுபவங்கள் இந்த கட்டுரைக்கு வலுச்சேர்க்கும் என நம்புகிறேன்.



கோழி வளர்ப்பு

Image source - www.poultryworld.net

**கேள்வி 1** - ஏன் இறைச்சி , முட்டை போன்ற கோழி உற்பத்திகளின் விலை கூடுகிறது?

**விடை 1** - கோழித் தீவனம், மருத்துகள் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு , போக்குவரத்து செலவு அதிகரிப்பு, மின்சார தடை காரணமாக ஏற்படும் உற்பத்தி செலவு கூடுவதால் விலை அதிகரிக்கிறது.

**கேள்வி 2** - ஏன் கோழித் தீவனம் , மருந்துகளின் விலை கூடுகிறது?

**விடை 2** - தீவன உற்பத்தி மூலப் பொருட்கள் நாட்டில் மிக மிகக் குறைவு அல்லது இல்லை. மருந்துகள் இறக்குமதியாவது குறைவு அல்லது நிறுத்தப் பட்டுள்ளது.

**கேள்வி 3** - ஏன் உற்பத்தி மூலப் பொருட்கள் இல்லை? ஏன் மருந்துகள் இறக்குமதியாவது இல்லை?

**விடை 3** - மூலப் பொருட்களை டொலரிலேயே கொள்வனவு செய்ய வேண்டும், ஆனால் நாட்டில் இறக்குமதிக்கு டொலர் கையிருப்பில் இல்லை./ குறைவு. பல மூலப் பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தியாவதில்லை.

**கேள்வி 4** - ஏன் உள்நாட்டு உற்பத்தி இல்லை/ குறைவு?

**விடை 4** - அசேதன உரத் தட்டுப்பாட்டால் போதிய உள்நாட்டு சோளம் போன்றவற்றின் உற்பத்தியும் போதியதாக இல்லை என்பதுடன் சோளத்தை பயிரிடும் விவசாயிகளும் குறைவடைந்துள்ளனர். அத்துடன் சோயா போன்றவற்றை உள்நாட்டில் விளைவிப்பதில்லை. மேலும் அரிசி போன்ற சில மாற்றுப் பொருட்களை மனித பாவனைக்கு பயன்படுத்துவதால் விலங்கு உணவாக பயன்படுத்த அரசு தடை விதித்துள்ளது. முக்கியமான கால்நடை மருந்துகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இலங்கையில் குறைவு/ இல்லை. அவற்றை கட்டாயம் இறக்குமதி செய்தே ஆகவேண்டும்.

**கேள்வி 5** - ஏன் போக்குவரத்துக்கு செலவு கூடுகிறது? மின்சார செலவு கூடுகிறது?

**விடை 5** - எரிபொருள் தட்டுப் பாடு மற்றும் விலை அதிகரிப்பு. இலங்கையில் நிகழும் மின்சார தடையால் மின் பிறப்பாக்கியை இயக்க எரிபொருள் வேண்டும்.

இந்த கேள்வி பதில்களை பார்க்கும் போது ஏன் கோழி உற்பத்திகளின் விலை அதிகரிக்கின்றன உங்களுக்கு ஓரளவுக்கு விளங்கியிருக்கும். வாருங்கள் ஒவ்வொன்றாக விரிவாக விளக்குகிறேன்.

கடந்த சில மாதங்களாக நான் கடமை புரியும் அரச கோழிப் பண்ணைக்கு தேவையான தீவனத்தை பெறுவதற்காக வவுனியாவிலிருக்கும் பல கோழித் தீவனம் விற்கும் கடைகளுக்கு சென்று கேள்விப் பத்திரங்களை பெற செல்லும் போது அவதானித்த விடயங்கள் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. கடந்த வருட இறுதிப் பகுதியில் கொஞ்சம் கொஞ்சமாக பல கோழித் தீவன நிறுவனங்கள் தமது உற்பத்திகளை குறைக்க தொடங்கியிருந்தன. இந்த வருட மார்ச் அளவில் சில நிறுவனங்கள் தமது உற்பத்திகளை நிறுத்தியிருந்தன. சில தமது நிறுவனங்கள் தமது கோழிக் குஞ்சுகளை வாங்கும் தமது வாடிக்கையாளருக்கு மாத்திரம் தீவனத்தை வழங்குவதையும் காண முடிந்தது. இன்று பெரும்பாலான நிறுவனங்கள் தமது தீவனத்தை நிறுத்தி விடும் நிலைக்கு வந்துள்ளன. இதனால் பல கோழித் தீவனக் கடைகள் உற்பத்தி நிறுவனங்களில் இருந்து தீவனம் பெறுவது குறைந்துள்ளது என்பதுடன் அதிக விலை கொடுத்தே சிறிதளவு தீவனத்தை பெற்றிருப்பதையும் காண முடிகிறது.

**கோழி வளர்ப்பை பொறுத்தவரை அவற்றின் செலவில் 60 - 70 சதவீதம் வரை தீவனத்துக்கே போகிறது. தீவன விலை மேலும் அதிகரிக்க மொத்த செலவும் கணிசமாக உயரும்.**

[ஏனைய பொருட்களை போல கோழித் தீவனத்தை பதுக்க முடியாது. ஏனெனில் சேர்க்கப்படும் சில மூலப் பொருட்கள் ஒரு மாததுக்குள் பழுதாகி விடும் என்பதால் இந்த நிலை. இல்லாது போனால் அங்கும் பதுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்]

இது இப்படியிருக்க மறுபக்கமாக பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப்பண்ணையாளர்கள் கோழி வளர்ப்பைக் கைவிட்டுள்ளதைக் காணமுடிகிறது. ஓரளவு பெரிய பண்ணைகள் மாத்திரமே கோழி வளர்ப்பை செய்கின்றன. அதுவும் எவ்வளவு காலத்துக்கோ தெரியவில்லை. நான் பணி புரியும் வவுனியாவின் அரச கோழிப் பண்ணை இனப்பெருக்க பண்ணை [breeding farm]. அதாவது கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்து வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கு கால்நடை வைத்திய அலுவலகங்களூடாக குறைந்த விலைக்கு வழங்குவோம். நாட்டின் பொருளாதார நெருக்கடி ஏற்பட ஒவ்வொன்றாக பிரச்சினைகள் தோன்றத் தொடங்கின. அதிகரித்த கோழித்தீவனம் காரணமாகவும் அதிகரித்த எரிபொருள் செலவு காரணமாகவும் உற்பத்திச் செலவு கூடியுள்ளது. மின்சாரம் தடைபடும் போது எமது குஞ்சு பொரிக்கும் இயந்திரங்களை தடையின்றி இயங்க மின் பிறப்பாக்கிக்கு எரிபொருள் தேவைப்பட அதனாலும் செலவு அதிகரித்துள்ளது. பண்ணைப் பணியாளர்கள் எரிபொருள் விலை அதிகரிக்க பண்ணைக்கு வருவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. அவர்களின் அன்றாட சம்பளத்தை விட சிலரின் பயணச் செலவு அதிகம். இப்போது எரிபொருள் இல்லாத நிலையில் இந்த விடயம் இன்னும் சிக்கலாகியுள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டால் எமது அரச வாகனங்கள் மூலம் அந்தந்த கால்நடைப் பிரிவுகளுக்கு எமது உற்பத்தியான கோழிக் குஞ்சுகளை மக்களுக்கு விநியோகிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் தீவன விலை அதிகரிப்பு மற்றும் தீவனத் தட்டுபாடு காரணமாக கோழிக் குஞ்சுகளை வாங்குவதில் மக்களின் ஆர்வமும் குறைந்துள்ளது. இப்படியான கூட்டு நெருக்கடிகள் காரணமாக கோழிக் குஞ்சு உற்பத்தி செய்வதை விட முட்டையாக விற்க வேண்டிய நிலை எமக்கு தோன்றியுள்ளது. இனப் பெருக்கத்துக்காகவே கோழிகளை உயர் தரத்தில் வளர்க்கும் எமது பண்ணையின் பெறுமதியான முட்டைகளை ஏனைய முட்டைகளை போல விற்பது தொழில்நுட்ப ரீதியாக பாதகமானது. எனினும் வேறு வழியின்றி செய்ய வேண்டி ஏற்படுகிறது. எமது விநியோக வாகனத்துக்கும் மின் பிறப்பாக்கிக்கும் தேவையான எரிபொருளைக் பெறுவது அரச பண்ணையாக இருக்கும் எமக்கே சிரமமாக காணப்படுகிறது. அதாவது பல அதிகாரிகளின் அனுமதி இருந்தும் தகுந்த அளவில் சரியான நேரத்தில் எரி பொருளை பெற முடிவதில்லை. அரச பண்ணைக்கே இந்த நிலை என்றால் தனியாரை நினைத்து பாருங்கள். அவர்களுக்கும் இதே தேவை இருக்கும். சில வேளை இதை விட அதிகமாகவும் இருக்கும். பல பண்ணைகள் பிரமாண்டமானவை. மிகப் பெருமளவில் தீவனம் தொடர்ச்சியாக தேவை. இயந்திரங்கள் மின் குமிழ்கள் இயங்க எரிபொருள் தேவை. உற்பத்திகளை விநியோகிக்க வாகன எரிபொருள் தேவை. வேலையாள் பிரச்சினை வேறு. எனவே இவை சரியாக கிடைக்காத பட்சத்தில் உற்பத்திகள் குறையும். விலை அதிகரிப்பதையும் தவிர்க்க முடியாது.

கோழி வளர்ப்பை பொறுத்தவரை அவற்றின் செலவில் 60 - 70 சதவீதம் வரை தீவனத்துக்கே போகிறது. தீவன விலை மேலும் அதிகரிக்க மொத்த செலவும் கணிசமாக உயரும். கோழித் தீவனத்தை பொறுத்தவரை அதன் உள்ளடக்கமாக கோழிகளின் வளர்ச்சிக்கும் தொழிற்பாடுகளுக்கும் தேவையான புரதம், மாப்பொருள், விட்டமின்கள் கனியுப்புகள், அமினோ அமிலங்கள் என பல முக்கிய மூலப் பொருட்கள் அடங்கியிருக்கும். புரதம் முக்கியமாக வெளி நாடுகளில் இருந்து இருந்து இறக்குமதியாகும் சோயா அவரையிலிருந்தே [soya bean] பெறப்படுகிறது. டொலர் நெருக்கடியால் அதனை இறக்குமதி செய்வதில் சிக்கல் தோன்றியுள்ளது. உக்ரைன் - ரஷ்ய மோதல், மற்றும் பிரேசில், ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளில் ஏற்படுள்ள காலநிலை மாற்றம் காரணமாக சோயா அவரை உற்பத்திக் குறைந்ததால், உலக சந்தையில் சோயா அவரைத் தட்டுபாடு தோன்றி விலையும் கூடியுள்ளது. உலகின் பிரதான உற்பத்தியாளரான ஐக்கிய அமெரிக்கா தனது சோயா அவரையை ஏற்றுமதி செய்யாமல் தமது பண்ணைகளுக்கே பாவிக்க முடிவெடுத்துள்ளது. இந்தியா போன்ற நாடுகளின் கோழிப் பண்ணைத் துறையே இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. புரத மாற்று மூலங்களான எள்ளுப் புண்ணாக்கு, சூரிய காந்திப் புண்ணாக்கு, தேங்காய் புண்ணாக்கு, மீன் உணவுகள் போன்றன கூட தற்போது கிடைப்பது அரிதாக உள்ளது. இவை கிடைத்தாலும் சோயா அவரையின் தரத்துக்கு ஈடாக மாட்டாதவை.

சக்தியை வழங்கும் முக்கியமான மூலப் பொருள் மக்காச்சோளமாகும். [Maize/ Corn] இலங்கையை பொறுத்தவரை சோளத்தை கணிசமான அளவில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்திருந்த அதேவேளை குறித்த அளவு உள்நாட்டிலும் பயிரிடப்பட்டிருந்தது. உர இறக்குமதி தடை காரணமாக உள்நாட்டு உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்ட அதேவேளை டொலர் பிரச்சினை காரணமாக இறக்குமதியும் நின்று போனது.

இடையிடையே விசேட அனுமதியின் அடிப்படையில் குறித்த அளவில் இறக்குமதி செய்யப்பட்ட போதும் அது முழுத் தேவையையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.மேலும் அரிசி, அரிசி உற்பத்திகளான தவிடு, உடைந்த அரிசிக் குறுணலை சக்தி மூலமாக சில காலம் பயன்படுத்திய போதும் அரசாங்கம் கால்நடை உணவுக்கு அரிசியை பயன்படுத்துவதை தடை செய்ததன் காரணமாக அதுவும் நின்று போயுள்ளது.பெரும்பாலான ஏனைய ஊட்டச் சத்துகள் இறக்குமதி செய்யப்படுவதால் அவை இன்றியே அல்லது குறைத்தே உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

எனது அனுபவத்தின் அடிப்படையில் தற்போது கிடைக்கும் கோழி உணவுகள் தரம் குறைந்தே வருகின்றன. சிலவற்றை வெளிப்படையாகவே உணர முடிகிறது. கோழிகள் வழமையாக உண்பதை விட குறைத்தே உண்கின்றன. அவற்றின் வளர்ச்சியில் பாதிப்பையும் ஏற்படுத்துவதாக உணர முடிகிறது. சில வேளை கோழிகள் வளர்ச்சி குறைவதையும் சில வேளை அதிக கொழுப்புடன் சமசீரற்று வளர்வதையும் முட்டை இடுவதில் குறைவையும் முட்டையிடும் வயது அதிகரிப்பதையும் காண முடிகிறது. அண்மையில் கூட சமசீரற்று அதிகரித்த முட்டைகளின் அளவு காரணமாக பண்ணைகளில் முட்டை இடச் சிரமப்பட்டு பல கோழிகள் இறந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. உடற்கூற்றியல் சோதனையில் அவற்றின் இனப்பெருக்க தொகுதி முறையாக வளராத நிலையையும் முட்டைகள் சிறிது பெரிதாக இருந்ததையும் காண முடிந்தது. கோழி உணவுகள் குறித்த தரத்தில் இருந்தால் மட்டுமே எதிர்பார்த்த விளைவுகளை பெற முடியும். எனினும் தற்போது இருக்கும் நிலையில் கோழி உணவின் தரத்தை அளவிட முடியாத நிலையில் இருக்கின்றோம். இலங்கையில் பேராதனை கால்நடை ஆராய்ச்சி மையத்தில் [VRI] மாத்திரமே இதனை ஆய்வு செய்ய முடியும். தேவையான முக்கிய மூலப் பொருட்களின் தட்டுபாடு காரணமாகவும் அவற்றின் மாற்றாக தரம் குறைந்த உள்ளூர் உணவுகளை பாவிப்பதாலும் தேவையானவற்றை சேர்க்காததாலும் நிச்சயமாக அவற்றின் தரம் குறைந்துள்ளதை உணர முடிகிறது. சில பண்ணையாளர்கள் உள்ளூரில் கிடைக்கும் தரம் குறைந்த தீவனங்களைப் கோழிகளுக்கு வழங்கி உணவு நஞ்சாகி அவை கணிசமாக இறந்ததையும் அவதானிக்க முடிந்தது.

கோழிகளின் வளர்ச்சிக்கு பயன்படும் விட்டமின் கனியுப்புகள் மற்றும் கோழி மருந்துகளின் தட்டுபாடும் நிலவுவதோடு அவற்றின் விலை கூட கணிசமாக அதிகரித்துள்ளது. இவை அதிகளவில் இறக்குமதி செய்யப்படுபவை. பல கோழிப் பண்ணையாளர்கள் தமது கோழிகளுக்கு நோய் ஏற்படும் போது முறையான சிகிச்சை அளிக்க முடியாது பாதிக்கப்படுவதை காண முடிகிறது. கோழிகளும் கணிசமாக இறக்கின்றன. கால்நடை உற்பத்தி சுகாதார சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப் படாததால் பல விடயங்களை அந்த துறையால் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. நெல் மரக்கறி விவசாயிகளுக்கு எரிபொருள் பெறுவதற்கு கொடுக்கப்படும் முன்னுரிமை உணவு உற்பத்தியின் இன்னொரு பங்காள



கோழி இறைச்சி

Image source - www.monitor.co.ug

ரான கால்நடை பண்ணையாளருக்கு வழங்கப்படாமை ஒரு முரணாகும். இன்றைய நாளில் ஏற்படுள்ள எரிபொருள் தட்டுப்பாடு பல கால்நடை வைத்தியர்கள் கூட பண்ணைகளுக்கு கள விஜயம் செய்ய முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளதுடன் நோய் உள்ள கோழிகளை பண்ணையாளர்கள் கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையும் தோன்றியுள்ளது. இன்றைய இந்த கோழிப் பண்ணை துறைக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தவல்ல பாதிப்புகளை அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம், கோழிப் பண்ணையாளர் சங்கங்கள் மற்றும் ஏனைய துறை சார் வல்லுனர்கள் தொடர்ச்சியாக எச்சரிக்கை செய்கின்ற போதும் அரசின் உயர்மட்டம் இதுவரை செவி சாய்க்க வில்லை.

இன்று பல கோழி உணவு உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இயங்கும் நிறுவனங்களின் தீவனம் கூட தரம் குறைந்துள்ளது. தமது கோழிக் குஞ்சுகளை வாங்கும் வாடிக்கையாளருக்கு மாத்திரம் கோழித் தீவனத்தை வழங்கத் தொடங்கியுள்ளன. சில நிறுவனங்கள் உள்ளூரில் விளையும் மக்காச்சோளம் போன்ற மூலப் பொருட்களை வாங்கிச் சேமிக்கின்றன. இதனால் சிறிய விலங்குணவு உற்பத்தி நிறுவனங்கள் மூலப் பொருள் இன்றி மூடப் படுகின்றன. நட்டம் மற்றும் ஒழுங்கற்ற விநியோகம் காரணமாக பல விலங்குணவு கடைகள் மூடப்படுகின்றன. இறக்குமதிக்கும் வாய்ப்பில்லை. எரிபொருள் விலையேற்றம், எரிபொருளை பெறுவதிலுள்ள சிரமம் காரணமாக கோழித் தீவனம், முட்டை இறைச்சியை நாடு முழுதும் விநியோகம் செய்வது அதிக செலவு மிக்கதாக மாறியுள்ளது. இறுதி விளைவாக பல்லாயிரக் கணக்கான கோழிப் பண்ணை சார்ந்த தொழிலாளிகள் பாதிக்கப்படுவதோடு பல மில்லியன் முதலிட்டுள்ள கோழிப் பண்ணை உரிமையாளர்கள் மீளமுடியாத பொருளாதார சுமைக்கும் ஆளாகியுள்ளனர். அத்துடன் குறைந்த விலையில் குழந்தைகள் வயோதிபர்கள் நோயாளிகள் என மனிதனின் புரதத் தேவையை பூர்த்தி செய்யும் முக்கியமான உணவு மூலங்களான கோழி இறைச்சியும் முட்டையும் கிடைக்காமல் போசணைக் குறைபாடுகள் ஏற்பட்டு இலங்கை மக்கள் மென்மேலும் துன்பத்துக்கு ஆளாகப்போகின்றனர்.

தொடரும்.




## அமரசிங்கம் கேதீஸ்வரன்

பொருளியல் துறையில் சிரேஷ்ட வளவாளராகவும், பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகின்ற கேதீஸ்வரன் அமரசிங்கம் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராவார். யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் பொருளியல் துறையில் இளமாணி மற்றும் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் 2012 ஆம் ஆண்டு மூல தத்துவங்கள் என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.


# வடக்கு – கிழக்கு மாகாணத்தினுடைய வளங்களும் உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியும்

சமகால பொருளாதார அபிவிருத்தி பற்றிய கருதுகோள்கள் இலங்கையில் முன்வைக்கப் பட்டுவரும் இந்தத் தருணத்தில், இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பைக் கொண்டுள்ள வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களை உரியவகையில் பயன் படுத்தி உள்ளூர்ப் பொருளாதாரத்தையும், தேசியப் பொருளாதாரத்தையும் மேம்படுத்து தல் தொடர்பில் ஆய்வு நோக்கில் இந்தக் கட்டுரைத் தொடர் அமையவுள்ளது.




வடக்கு - கிழக்கு மாகாணம்

Image source - www.wikimedia.org

## பிரதேச அறிமுகம்

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் ஒன்பது மாகாண பரப்புக்களில் அதிக நிலப்பரப்பைக் தன்னகத்தே கொண்டதும் சனத்தொகை செறிவின் அடிப்படையில் இலங்கையின் பிரதான இனங்களான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் ஆகிய மூவினத்தவரதும் குடியிருப்புக்களை கொண்டதோடு அதீத அளவிலான தமிழர்கள், முஸ்லீம்களின் தாயகப்பரப்பாகவும் வாழுகின்ற பிரதேசங்களாகும். பல்லின பன்மைச்சமூகங்கள் வாழும் பகுதியாகவுள்ளதனால் இப்பிரதேசத்தின் பண்பாட்டு மற்றும் சமூக நிலைமைகளும் இலங்கையின் வேறு எந்த மாகாணங்களிலும் இல்லாத விசேட நிலைமையுடன் இப்பிராந்தியம் இயங்கி வருகின்றது. இதில் வட மாகாணமானது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா என்கின்ற ஐந்து மாவட்டங்களையும் 34 பிரதேச செயலாளர் பிரிவுகளை கொண்ட 921 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய 3570 கிராமங்களைக் கொண்டது. உள்ளூராட்சி நிர்வாக அலகு வகைப்பாட்டின் கீழ் 34 உள்ளூராட்சி அலகுகளையும், ஒரு மாநகர சபையும், 05 நகர சபைகளையும், 28 பிரதேச சபைகளையும் உள்ளடக்கிய, 8890.07 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13.54 வீதத்தை வடக்கு மாகாணம் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணமானது அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய 2447 கிராமங்கள் கொண்டது. உள்ளூராட்சி நிர்வாக அலகு வலைப்பாட்டின் கீழ் 03 மாநகர சபைகள், 05 நகரசபைகள், 37 பிரதேச சபைகளை உள்ளடக்கியது. 4361 சதுர கிலோமீற்றர் பரப்பை நிலப்பரப்பாக கொண்ட கிழக்கு மாகாணமானது, இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 14.93 சத வீத பங்கைக் கொண்டிருக்கிறது. இந்த வகையில்இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 28.47 சத வீதமான நிலப்பரப்பை உள்ளடக்கிய, நாட்டின் கால்பங்குக்கும் சற்று அதிகமான நிலப்பரப்பைக் கொண்ட

பெரும்பகுதியான வடக்கு - கிழக்கு மாகாணங்களே எமது ஆய்வு நிலைப்பட்ட பிரதேசமாகக் கொள்ளப்படு கின்றன. வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண நிர்வாக முறைமையானது 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட மாகாணசபைகள் சட்டத்தின் 42 ஆம் இலக்கத்தின் கீழ் 1987 இல் பிரேரிக்கப்பட்டு 5.10.1988 இல் நடாத்தப்பட்ட தேர்தல் மூலம் மாகாண நிர்வாகம் உருவாக்கப்பட்டது. இந்த மாகாண நிர்வா கம் 1990 ஜூன் மாதம் கலைக்கப்பட்டிருந்தது. பின்னர் மாகாண ஆளுநரின் வழிகாட்டலின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணசபையின் நிர்வாகம் தொடரப்பட் டது. 20 வருடகாலத்தின் பின் உயர்நீதிமன்றத்தின் தீர்ப் புக்கமைய 16.10.2006 முதல் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என இரு மாகாணங்களாக பிரிக்கப்பட்டதுடன் 2008 மே 10 ஆம் திகதி கிழக்கு மாகாணத் துக்கான மாகாண சபைத் தேர்தல் நடாத் தப்பட்டு தனி நிர்வாகமாகவும் செயற்ப டத் தொடங்கியது. இவ்விரு மாகாணங்க ளினதும் சனத்தொகைப் பரம்பலை கவ னத்தில் கொள்ளும்போது வடக்கு மாகா ணத்தில் 125,5691 பேரும் , கிழக்கு மாகா ணத்தில் 189,8000 பேரும் வாழ்ந்து வரு கின்றனர். இந்த சனத்தொகையில் வட மாகாணத்தில் 16.52 வீதமனவர்கள் நகர்ப் புறத்திலும் 83.48 சதவீதத்தினர் கிராமியப் புறத்திலும் வாழ்ந்து வருகின்றனர். அதே போல் கிழக்கு மாகாணத்தில் நகர்ப்புறத் தில் வசிப்பவர்கள் 28 சதவீதமாகவும் கிராமப்புறத்தில் வாழ்பவர்கள் 72 சதவீதமாகவும் காணப்படுகின்றனர். இந்த வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மொத்த சனத்தொகையானது 315,3691 ஆகக் காணப்படுகின்றது.

> **வடக்கு- கிழக்கு மாகாணங்களின் நிலப்பயன்பாட்டு முறைமை பற்றி ஆராயு மிடத்து 16251.07 ஹெக்டேயர் நிலப்பரப்பை தன்ன கத்தே கொண்டுள்ளது.**

உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்தந்த பிரதேசங்களைச் சார்ந்த வளங்களை மையப்படுத்தி அவ்வளங்களின் மீது உச்சப்பயன்பாட்டை தோற்றுவிக் கும் வகையில் செய்து கொள்ளப்படும் திட்டமிடலே ஆகும். இத்திட்டமிடல் மூலமே சிறந்த வளர்ச்சிக்குரிய வாய்ப்பை, அந்தப்பிரதேச மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும். பிரதேச மட்ட வளங்களின் பயன்பாடு குறித்து உச்ச மட்ட கவனத்தில் கொள்ளாது தேசிய மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார முன்மொழிவுகளினா லேயே சமமற்ற பிராந்திய வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள் ளது என்ற நியாயத்தைப் புறந்தள்ளிவிட முடியாது. இலங்கையின் மாகாணமட்ட அபிவிருத்தியில், மேல் மாகாணம் அதீத முன்னிலை பெறுவதற்கு இதுவே கார ணமாகியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 46 சதவீதமான பங்களிப்பை தனி ஒரு மாகாணமாக இம் மாகாணம் வழங்கி வருகின்றது. வடக்கு மாகாணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 711,459 மில்லியன் ரூபாயும் கிழக்கு மாகாணம் 866,121 மில்லியன் ரூபா யும் பங்களிப்புச் செய்து வருகின்றது. இது மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 10.47 சதவீதம் மட்டுமே. இதில் வடக்கு மாகாணம் 4.7 சதவீத பங்களிப்பையும் கிழக்கு



மீன்பிடி
Image source - www.tamil.news.lk

மாகாணம் 5.77 சதவீத பங்களிப்பை மட்டுமே வழங்கி வருகின்றது. நாட் டின் மொத்த நிலப்பரப்பில் ¼ பங்கை கொண்டுள்ள இவ்விரு மாகாணங்க ளும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற் பத்தியில் 10 சதவீதத்தினை மட்டுமே வழங்கி வருகின்றமை உள்ளூர் வளங்க ளின் முறையற்ற பயன்பாட்டுத்தன்மையை வெளிக்காட்டும் அல்லது முழுமை பயன் பாட்டையும் பெறவில்லை என்பதனை வெளிக்காட்டும் ஒரு குறியீடாகவே கருத முடிகிறது.

### வடக்கு- கிழக்கு மாகாணங்களின் வளங்கள் பற்றிய அறிமுகம்

வடக்கு- கிழக்கு மாகாணங்களின் வளங்கள் பற்றிய பகுப் பாய்வும் பொருளாதார உந்தூக்கத்தை தரக்கூடிய நிலம், காடு, காலநிலை, சனத்தொகை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, பொருளாதார உட்கட்டமைப்புக் கள், சமூகஉட்கட்டமைப்புக்கள், சக்திவளம், நீரும் நீர் மூலங்களும் போன்ற முக்கியமான வளங்களின் கிடைப் பனவும் பயன்பாடும் குறித்த விடயங்களை ஆய்வுக்குரி யதாக்க வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் பிரதான பொருளாதார வளங்களை நாம் ஒவ்வொன் றாக ஆய்வு செய்து கொள்வது அவசியமாகும்.

### நிலமும் நிலப்பயன்பாடும்

வடக்கு- கிழக்கு மாகாணங்களின் நிலப்பயன்பாட்டு முறைமை பற்றி ஆராயுமிடத்து 16251.07 ஹெக்டேயர் நிலப்பரப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த மாகா ணக்களுக்குரித்தான நிலத்தில் அபிவிருத்தி செய்யப் பட்ட நிலங்கள், விவசாய நிலங்கள், விவசாய பாவ னைக்குட்படாத நிலங்கள், குடியிருப்பு காணிகள், காட்டு நிலங்கள், நீர் நிலங்கள், தரிசு நிலங்கள் என்ற பிரதான

**வடக்கு- கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை உலர் வலயக் காலநிலையைக் கொண்டதாகக் காணப்படுவதுடன், வெப்பமும் உலர்வும் கொண்ட பகுதியாகவும் காணப்படுவதனால் இயற்கை இடர் களில் வரட்சி தவிர்ந்த வேறு எந்த பாரிய இடரையும் சந்திக்க வாய்ப்பின்றி காணப்படுகின்றன.**



**வடக்கின் நீர்நிலைகளை ஆழமாக்கி நீர்வாழ் வளங்களை அதிகரித்தல்**

Image source - www.virakesari.lk

வகைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. எனினும் பயிர்ச் செய்கை தொடர்பில் நன்மண் என்று அழைக்கப்படும் இருவாட்டி நிலம் இவ்விரு மாகாணங்களிலும் மிகப் பெரியளவில் காணப்படுவதுடன், மண்ணின் பயன்பாட்டை உச்சப் பயன்பாட்டுக்கு கொண்டுவரக்கூடிய நீர் மூலத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்ட மண் அமைப்பு இந்த மாகாணங்களின் விசேட நிலன்பயன்பாட்டை ஏற்படுத்த வாய்ப்பானதாகவுள்ளது. அத்துடன் கடல் மட்டத்திலிருந்து உயர்ந்த நிலையில் கடலை நோக்கி சாய்வை கொண்ட தன்மை காணப்படுவதுடன் தரையமைப்பின் காரணமாக பாரிய வெள்ளப்பெருக்கோ நீர் தேக்க நிலைமையோ பெரிதாகக் காணப்படுவதில்லை. தேவையற்ற நீர் கடலுக்கு வழிந்தோடக்கூடிய நில அமைப்பு இந்த பிராந்தியங்களின் தரைத்தோற்ற இயல்பாக இருப்பதுடன், மண் அமைப்பின் அடிப்படையில் 6 பிரதான மண்வகைகள் இங்கு காணப்படுகின்றன.

நெல் செய்கைக்கு உகந்ததான 'ரெடிஸ் பிறவுண் ஏத்' என்ற மண்ணும் ,மஞ்சள் சிவப்பு கலந்த 'லட்ரசோல்' என்ற மண்ணும் பெரும் பங்கை வகிக்கின்றன. நிலப்பயன்பாடு என்ற வகையில் 2 சதவீதமான நிலங்கள் கட்டட அமைப்புக்களுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலங்களாகவும், 22 சதவீதமான நிலங்கள் விவசாய நிலங்களாகவும், 12 சதவீதமான நிலங்கள் வீட்டு மற்றும் வீட்டத் தோட்ட செய்கைக்கான நிலங்களாகவும் காணப்படுவதுடன், 52 சதவீதமான நிலங்கள் வனப்பகுதியாகவும் காணப்படுகின்றன. இலங்கையின் மொத்த காட்டு வளம் மற்றும் பசுமைப் போர்வை என்பன 32 சதவீதமாக இருந்தபோதும், தற்போதைய இலங்கையின் பசுமைப் போர்வையானது 27 சதவீதமாக மட்டுமே காணப்படுகின்றது. இந்த பசுமைப் போர்வையை 32 சதவீதத்துக்கு அதிகரிப்பது தொடர்பில் இலங்கையின் அதிக காட்டு வளம் கொண்ட மாகாணங்களாக இவ்விரு மாகாணங்களும் காணப்படுவதுடன் புதிய இலக்காக மேலும் 4 சதவீதத்தினை உத்தரவாதப்படுத்துவதிலும் இவ்விரு மாகாணங்களின் காடுகளே அதிக பங்களிப்பை வழங்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்காக புதிய நிலங்களை மக்களுக்கு வழங்குவது தொடர்பிலும் இவ்விரு மாகாணங்களிலும் ,வனவளத்திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கும் இடையில் பாரிய தர்க்கங்கள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு- கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை உலர் வலயக் காலநிலையைக் கொண்டதாகக் காணப்படுவதுடன், வெப்பமும் உலர்வும் கொண்ட பகுதியாகவும் காணப்படுவதனால் இயற்கை இடர்களில் வரட்சி தவிர்ந்த வேறு எந்த பாரிய இடரையும் சந்திக்க வாய்ப்பின்றி காணப்படுகின்றன. வடகீழ் பருவ பெயர்ச்சிக் காற்றினால் அதிகம் மழை பெறும் பகுதிகளான இப்பிராந்தியங்கள், ஒக்ரோபர் முதல் ஜனவரி வரையான காலப் பகுதியில் அதீத மழையை பெற்றுக் கொள்ளும் ஈரலிப்பு கால நிலையும் பெப்ரவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் அதிக வரட்சியுடைய காலநிலையும் பெற்றிருக்கின்றன. வெப்பநிலையின் அளவானது 25'o'c யிலிருந்து 32'o'c வரை காணப்படுகின்றது. வருடாந்த மழை கிடைப்பனவு 103.6mm ஆக காணப்படுவதுடன் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலப்பகுதியிலும் தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காலப்பகுதியிலுமாக இரு வேறு காலப்பகுதிகளில் மழையை பெற்றுக் கொள்கின்றது.

தொடரும்.





**விவசாய நடவடிக்கைகள்**

Image source - www.newsfirst.lk



## சி. அ. யோதிலிங்கம்

இவர் யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணி பட்டத்தினையும், இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டதரணி பட்டத்தினையும் பெற்றவராவார்.

இவர் இலங்கையின் அரசியல் யாப்புகள், இலங்கையின் இனகுழும அரசியல், இலங்கையின் அரசியல் தீர்வு யோசனைகளும், சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள், இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு யோசனைகளும், இலங்கையின் இனப்பிரச்சினையின் வரலாறு, அரசறிவியல் ஓர் அறிமுகம், ஒப்பியல் அரசாங்கம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். தொடர்ந்து இவர் பல ஆய்வுக்கட்டுரைகளை பத்திரிகையிலும் எழுதிவருகின்றார்.


# தமிழ் மக்களின் அரசியல் இலக்கும் வழிவரைபடமும்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடலும் மேலெழுந்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு தேவை என்ற கருத்தை தனது முதலாவது கொள்கை விளக்க உரையில் கூறியிருக்கின்றார். தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமென்றால் அரசியல் ஸ்திரநிலையைக் கொண்டுவரவேண்டும். இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் அரசியல் ஸ்திர நிலையையும் உருவாக்க முடியாது.

பிராந்திய வல்லரசான இந்தியா 13 ஆவது திருத்தத்தையே அரசியல் தீர்வாக முன்வைக்க முனைகின்றது. சிங்கள தேசத்திலுள்ள பெரும்தேசியவாதத்தின் லிபரல் பிரிவும் இதனையே ஆதரிக்க முற்படுகின்றது. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் இது விடயத்தில் இந்தியாவிற்கு பின்னாலேயே நிற்கமுனைகின்றது.

13 ஆவது திருத்தம் ஒற்றையாட்சிக்குட்பட்ட, சுயாதீனமில்லாத மாகாணசபை முறையை சிபார்சுசெய்வதால் அது அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்கப்போவதில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் இலக்கும் வழிவரைபடமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற உரையாடல் இன்றைய சூழலில் அவசியமாகின்றது. இக் கட்டுரையாளர் இது பற்றி தன்னுடைய கருத்துக்களை முன்வைக்கின்றார். இக் கருத்துக்கள் முடிந்த முடிவுகளல்ல. இவை அனைத்தும் பரிசோதனைகளுக்கும் கலந்துரையாடல்களுக்கும் உரியவை.

முதலில் தமிழ் மக்களுக்கான அரசியல் இலக்கு எதுவாக இருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம். இதற்கு இனப்பிரச்சினை என்றால் என்ன? என்பது பற்றி போதிய தெளிவு அவசியமானதாகும். இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக அல்லது தேசிய இனமாக இருப்பது அழிக்கப்படுவதே! அதாவது தேசம் அல்லது தேசிய இனத்தின் தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம், மக்கள் கூட்டம் என்பன அழிக்கப்படுவதே! இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது என்ற சிங்கள மக்களின் ஏகோபித்த கருத்து நிலையை நடைமுறைப்படுத்துவதற்காகவே அவை அழிக்கப்படுகின்றன. ஒற்றையாட்சிக் கட்டமைப்பும் அதனூடாக சிங்கள மக்களிடம் மட்டும் உள்ள அரசியல் அதிகாரமும் இவ்வழிப்புக்கு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது இவ்வழிப்பிலிருந்து பாதுகாப்பதாக இருக்க வேண்டும். அதற்கு கோட்பாட்டு ரீதியாக தமிழ் மக்களை ஒரு தேசமாக அல்லது தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்களின் இறைமையும் அதன் அடிப்படையிலான சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இச்சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பதற்கான

அரசஅதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். இக்கட்டமைப்பு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஸ்டிக்கட்டமைப்பாக இருத்தல் வேண்டும்.

அரசியல் தீர்விற்கு அரசியல் யாப்புச்சட்டவடிவம் கொடுக்கின்ற போது அதில் முதலாவதாக தமிழ் மக்களின் கூட்டிருப்பையும், கூட்டுரிமையையும், கூட்டடையாளத்தையும் பேணக்கூடிய வகையில் வடக்கு - கிழக்கு இணைந்த அதிகார அலகு உருவாக்கப்படல் வேண்டும். இதில் எந்த விட்டுக் கொடுப்பையும் மேற்கொள்ள முடியாது. இதில் முஸ்லீம் மக்களின் நிலை என்ன என்பது தொடர்பாக அவர்களுடன் பேசித் தீர்க்கலாம். அவர்களது தனி அதிகார அலகுக்கோரிக்கையையும் சாதகமாகப் பரிசீலிக்கலாம். முஸ்லீம்கள் சம்மதிக்கவில்லையாயின் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்ப்பிரதேசங்களை நிலத் தொடர்ச்சியற்ற வகையிலாவது இணைத்து இவ்வதிகார அலகினை உருவாக்குதல் வேண்டும். முஸ்லீம்கள் இணங்கவில்லை என்பதற்காக இணைப்பைக் கைவிடுவதற்கு அரசியல் தலைமைகளுக்கு எந்த உரிமையும் கிடையாது. துரதிர்ஷ்டவசமாக இந்த மாற்று யோசனை பற்றிய உரையாடலுக்குக் கூட சம்பந்தன் தலைமை இன்னமும் தயாராகவில்லை. அவர்கள் எப்படியாவது வடக்கு, கிழக்கு பிரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கே முயற்சிக்கின்றனர்.

இது விடயத்தில் “தமிழ் பேசும் மக்கள்” என்ற செல்லரித்துப் போன கருத்து நிலை துளி கூட உதவப் போவதில்லை. இக்கருத்து நிலை முஸ்லீம் அரசியலைக் கொச்சைப்படுத்துகின்றது. முஸ்லீம்கள் இக்கருத்து நிலைக்குள் வருவதற்கு தயாராக இல்லை என்பதை வரலாற்று ரீதியாகவே வெளிப்படுத்தியுள்ளனர். மாறாக மதத்தை அடிப்படையாகக் கொண்ட தனியான இனமாகவே தங்களை வெளிப்படுத்த முனைகின்றனர். மறுபக்கத்தில் இக்கருத்து நிலை தமிழ் அரசியலுக்கு கைவிலங்காகி குறிப்பாக கிழக்கு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களைக் கட்டிப்போடுகின்றது. தமிழ் மக்களுக்குப் பொறுப்பையும் முஸ்லீம் மக்களுக்கு பொறுப்பின்மையையும் விதிக்கின்றது.

இரண்டாவது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக் கூடிய அதிகாரங்கள் அரசியல் யாப்புச் சட்டவரைபில் தெளிவாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் இதற்கு பிறப்பாலேயே உரித்துடையவர்கள் என்பதற்கப்பால் 100 வருடங்களுக்கு மேற்பட்ட இன அழிப்பினால் தமிழ் மக்கள் ஐம்பது வருடங்கள் பின்தங்கி நிற்கின்றனர். இந்த இடைவெளியை நிரப்புவதற்கும் இவ்வதிகாரங்கள் தேவையானதாகும்.

மூன்றாவது மத்திய அரசில் ஒரு தேசிய இனமாக பங்கு கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். மத்திய அரசின் அதிகாரக்கட்டமைப்பு பன்மைத் தன்மை வாய்ந்ததாக இருக்கும் போதே இது சாத்தியமாக இருக்கும்.

**இரண்டாவது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக் கூடிய அதிகாரங்கள் அரசியல் யாப்புச் சட்டவரைபில் தெளிவாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் இதற்கு பிறப்பாலேயே உரித்துடையவர்கள் என்பதற்கப்பால் 100 வருடங்களுக்கு மேற்பட்ட இன அழிப்பினால் தமிழ் மக்கள் ஐம்பது வருடங்கள் பின்தங்கி நிற்கின்றனர். இந்த இடைவெளியை நிரப்புவதற்கும் இவ்வதிகாரங்கள் தேவையானதாகும்.**

மத்திய அரசினை சிங்கள பௌத்த அரசாக வைத்துக் கொண்டு எந்த அதிகாரப்பகிர்வை வழங்கினாலும் அவை ஒருபோதும் நடைமுறைக்கு வரப்போவதில்லை.

நான்காவது அதிகாரங்களுக்கான பாதுகாப்பு. தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் தமிழ் மக்களின் அனுமதியில்லாமல் சட்ட நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க முடியாத பொறிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தடுப்பதற்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குத் தேவையான விடயங்களைக் கொண்டுவருவதற்கும் பொறிமுறைகள் இருத்தல் வேண்டும். தமிழ் மாநில அரசின் சம்மதம், இரட்டை வாக்கெடுப்பு முறை போன்ற பொறிமுறைகளை இதற்குப் பயன்படுத்தலாம்.

இனி இந்த இலக்கினை அடைவதற்கான வழிவரைபடத்தைப் பார்ப்போம். இந்த வழிவரைபடத்தில் அடங்க வேண்டிய முதலாவது விடயம் தமிழ் மக்களினது அரசியல் இலக்கிற்கான நியாயப்பாடுகளை புலமை ரீதியிலும், தர்க்க ரீதியாகவும் தொகுத்து தாயக மட்டத்திலும்சர்வதேசமட்டத்திலும்பேசுபொருளாக்குவதாகும். துரதிர்ஷ்டவசமாக தமிழ் அரசியல், ஆயுதப் போராட்ட ரீதியாக வளர்ந்த அளவிற்கு அரசியல் புலமை ரீதியாக வளரவில்லை அதாவது தமிழ் அரசியல் நியாயப்பாடுகளுக்கு போதியளவு புலமைப்பின்பலம் கொடுக்கப்படவில்லை. இதனால் தான் தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் , தமிழ் ஊடகவியலாளர்கள் பலரும் தமிழ் மக்களை “சிறுபான்மை இனம்” என விளிக்கின்றனர். தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனம் என்றால் அவர்களுக்கு சோல்பரி யாப்பின் 29 ஆவது பிரிவு போதுமே! எதற்கு சமஸ்டியும் தனிநாடும். தவிர இனப்பிரச்சினை என்றால் என்ன? என்ற தெளிவு தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கூட போதியளவு இல்லை. மக்களுக்கு அறவே

இல்லை எனக் கூறலாம்.

இந்தத் தொகுப்பில் இன அழிப்பின் வரலாறு, தமிழ் மக்களின் போராட்ட வரலாறு, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் உள்ளடக்கம், அதற்கான நியாயப்பாடுகள், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான சர்வதேச அனுபங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

இரண்டாவது தமிழ் மக்களினது அனைத்து விவகாரங்களையும் உலகம் தழுவிய வகையில் கையாளக்கூடிய தேசிய அரசியல் இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்புதலாகும். தமிழ் மக்களுக்கு இன்று தேவையானது தேர்தல்களில் கூத்தடிக்கும் அரசியல் கட்சிகளல்ல. மாறாக மேற்கூறிய தேசிய அரசியல் இயக்கமே! இந்த அரசியல் இயக்கம் மக்கள் அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் கொண்டதாக இருக்கலாம், ஆனால் மக்கள் அமைப்புக்களே மேலாதிக்கம் செலுத்துவதாக இருத்தல் வேண்டும். இந்தத் தேசிய அரசியல் இயக்கம் அதில் இணைந்து கொண்ட மக்கள் அமைப்புக்கள் ஐக்கிய முன்னணிக்குள் வருகின்ற போதும் , அரசியல் கட்சிகள் ஐக்கிய முன்னணிக்குள் வருகின்ற போதும் தான் பலமாக இருக்கும்.

தமிழ் மக்கள் பேரவை இந்த அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக அங்கு பொது அமைப்புகளின் ஐக்கிய முன்னணி உருவாக்கப்படவில்லை. சில தனி நபர்களே கட்சி சாராதவர்களாக அங்கம் வகித்தனர். இவர்களுக்கு அப்பால் அரசியல் கட்சிகளே ஐக்கிய முன்னணியாக இயங்கின. உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் வந்ததும் அரசியல் கட்சிகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. தமிழ் மக்கள் பேரவை சிதைவடைந்தது. இதைச்சிதைத்ததில் விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார், சுரேஸ்பிரேமச்சந்திரன், சித்தார்த்தன் ஆகிய நால்வருக்கும் பங்குண்டு. சிதைப்பின் அளவில் மட்டும் பங்குகள் வேறுபடலாம்.

தேசிய அரசியல் இயக்கத்திற்கு அரசியல் கட்சிகள் தலைமை தாங்கக் கூடாது. கட்சி அரசியலினாலும் தேர்தல் அரசியலினாலும் ஏற்படும் முரண்பாடுகள் அந்த இயக்கத்தை பலவீனப்படுத்தும். மேற்கூறியதுபோல தமிழ் மக்கள் பேரவைக்கு அதுவே நடந்தது.

இந்தத் தேசிய அரசியல் இயக்கம் தெளிவான அரசியல் இலக்கு, வலுவான அடிப்படைக் கொள்கைகள், நீண்டகால குறுகியகால வேலைத்திட்டங்கள், வலுவான அமைப்புப் பொறிமுறை , வினைத்திறன் மிக்க வலுவான செயற்பாட்டாளர்கள், அர்ப்பணமும் தியாகமும் மிக்க தலைமை என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மூன்றாவது தமிழ் மக்கள் ஒரு சிறிய தேசிய இனம். அது தனது அக ஆற்றலை மட்டும் வைத்துக்கொண்டு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாது. புற ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அடிப்படை சக்திகளாக இருப்பவர்கள் தாயக மக்களும் அதன் நீட்சியாகவுள்ள புலம்பெயர் மக்களுமாவர், சேமிப்புச் சக்திகளாக இருப்பவர்கள் மலையகத் தமிழ் மக்கள், தமிழக தமிழ் மக்கள் உட்பட உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்களாவர். நட்புச் சக்திகளாக இருப்பவர்கள் தமிழக முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகளாவர்.

இந்த அடிப்படைச் சக்திகளையும், சேமிப்புச் சக்திகளையும் , நட்புச் சக்திகளையும் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் கீழ் அணிதிரட்ட வேண்டும். இதற்கு நிலம் புலம் தமிழகம் இடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் அவசியமாகும். உலகத் தமிழர்களை இணைப்பதற்கு உலகத்தமிழ்த் தேசியவாதம் ஒன்றைக் கட்டியெழுப்பலாமா? என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். இதன்மூலம் ஈழத் தமிழர்களின் விவகாரத்தை உலகத் தமிழர்களின் பொது விவகாரமாக மாற்ற வேண்டும்.

உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவு. தமிழ் மக்களுக்கு சார்பாக சர்வதேச அரசியலைத் திருப்புவதற்கு மிகவும் அவசியமாகும். இதற்கு தமிழ் அரசியல் ஜனநாயக விழுமியங்களை அதிகளவில் உள்வாங்க வேண்டும். சர்வதேச அபிப்பிராயம் ஜனநாயக நீதிக் கோட்பாட்டின் கீழ்தான் கட்டியெழுப்பப்படுகின்றது.

நான்காவது இலங்கைத் தீவை மையமாக வைத்து நிகழும் புவிசார் அரசியலில் தமிழ் மக்களும் கௌரவமான பங்காளிகளாக மாறுவதாகும். இலங்கைத் தீவில் தமிழர் தாயகம் கேந்திர இடத்தில் இருக்கின்றது. இது மட்டுமல்ல தமிழகமும் கேந்திர இடத்தில் தான் இருக்கின்றது. இந்த இரண்டு கேந்திரப் பலமும் இணையும் போது தமிழ் மக்களின் கேந்திரப்பலம் உச்சமாகும்.

ஆயுதப் போராட்ட காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் தமிழ்த்தரப்பிற்கு பேரம்பேசும் பலத்தைக் கொடுத்தது. அதன்வழி புவிசார் அரசியலிலும் கௌரவமான பங்கைக் கொடுத்தது. வல்லரசுகள் தமிழ் மக்களின் விவகாரத்தைக் கைவிட்டுவிட்டு இலங்கை விவகாரத்தை அணுகமுடியாத நிலை இருந்தது. தற்போது சீனாவின் அதிகரித்த பிரசன்னம் தமிழ் மக்களுக்கு பேரம் பேசும் பலத்தைக் கொடுத்துள்ளது. இன்று அமெரிக்க - இந்திய மேற்குலக அணி தமிழ் மக்கள் என்ற கருவியைப் பயன்படுத்தாமல் இலங்கை அரசின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. தமிழ் மக்களுக்கு இந்த வல்லரசுகள் தேவை என்ற நிலை மாறி வல்லரசுகளுக்கு தமிழ் மக்கள் தேவையாக உள்ளார்கள்.

ஐந்தாவது தமிழ்த்தேசிய அரசியலுக்குள் சமூகமாற்ற அரசியலையும் உள்ளடக்குவதாகும். சமூகமாற்ற அரசியலை உள்ளடக்காத தமிழ்த் தேசியம் ஒரு முற்போக்கான தமிழ்த்தேசியம் அல்ல. சமூக மாற்ற அரசியலை முன்னெடுக்காததால் நான்கு நெருக்கடிகள் உருவாகின்றன

1. இது ஒரு மனித உரிமை மீறல் விவகாரம். ஒரு மக்கள் பிரிவை அந்த மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஒடுக்குவது மனித உரிமை மீறலே. தமிழர்களே தங்களுக்குள் ஒடுக்கு முறைகளை மேற்கொண்டிருக்கும் போது பேரினவாதம் ஒடுக்குகின்றது எனக் கூற முடியாது. இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடிய டாக்டர் அம்பேத்கார் காந்தியிடம் "இந்தியர்களினாலேயே நாம் ஒடுக்கப்படும் போது ஆங்கிலேயர்களினால் ஒடுக்கப்படுகின்றோம் என்ற உணர்வு வரவில்லை" எனக் கூறியிருந்தார்.

2. தேசம் என்பது மக்கள் திரளாகும். தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞையாகும். எனவே மக்கள் ஒன்றாகத் திரள்வதற்கு தடையாக இருப்பவையெல்லாம் தேசியத்திற்கு எதிரானவையாகும். அக முரண்பாடுகள் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதற்கு தடையாக உள்ளன. இவற்றை அகற்றாமல் தேசமாகத் திரள்வது சாத்தியமல்ல .

3. அக முரண்பாடுகள் தமிழ் மக்கள். மத்தியில் இடைவெளிகளை உருவாக்கும். அந்த இடைவெளிகளை எதிரிகள் பயன்படுத்த முனைவர். இன்று சாதி முரண்பாடும், பிரதேச முரண்பாடும் ,மத முரண்பாடும், பால் முரண்பாடும் தமிழ்த் தேசியத்தின் எதிரிகள் நுழைவதற்கான பல களங்களைத் திறந்து விட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் மட்டக்களப்பிலும் அதனைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

4. அக முரண்பாடுகள் சர்வதேச அபிப்பிராயங்களை எமக்கு சார்பானதக உருவாக்குவதில் பல தடைகளை ஏற்படுத்தும். சர்வதேச அபிப்பிராயங்கள் புரட்சிகர நீதிக் கோட்பாட்டினால் வழிநடத்தப்படுவதில்லை. மாறாக ஜனநாயக நீதிக் கோட்பாட்டினாலேயே வழிநடத்தப்படுகின்றது. இந்த ஜனநாயக விழுமியங்களை அரசைவிட அதிகளவில் நாம் பின்பற்றுவதாகக் காட்ட வேண்டும். எமக்குள்ளே ஒரு பிரிவினரை ஒடுக்கிக்கொண்டு சர்வதேச அபிப்பிராயத்தை நாம் பெற முடியாது.

சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அரசுகள் மட்டும் பங்குபெறுவதில்லை. சர்வதேச சிவில் சமூகமும் பங்கு பெறுகின்றது. அரசுகள் தங்களுடைய நலன்களிலிருந்து செயற்பட்டாலும் சர்வதேச சிவில் சமூகம் சர்வதேச ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையிலேயே செயற்படும். அவை அரசுகளுக்கும் அழுத்தம் கொடுக்கக் கூடிய வல்லமையைக் கொண்டது. இன்று சர்வதேச சிவில் சமூகத்தின் அபிப்பிராயம் தமிழ் மக்களுக்கு சார்பாக உள்ளது. பெரும் தேசியவாத ஒடுக்கு முறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அக முரண்பாடுகள் பெரிதாக வளரின் தமிழ் மக்களுக்கு சார்பான சர்வதேச அபிப்பிராயங்களுக்கு சர்வதேச சிவில் சமூகம் ஒத்துழைக்காது. சர்வதேச சிவில் சமூகத்தில் ஜனநாயக முற் போக்கு சக்திகள், மனித உரிமைவாதிகள், ஊடகத்துறையினர் ஆன்மீகத்துறையினர் என்போர் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழ்த்தேசியம் ஒரு வாழ்வு முறையாக மாறும்போதே அக முரண்பாடுகளை எம்மால் கடக்கமுடியும். முன்னர் கூறியது போல அக முரண்பாடுகளில் சாதி முரண்பாட்டையும் பிரதேச முரண்பாட்டையும் இல்லாமல் செய்யவேண்டும். மத முரண்பாட்டிலும் பால் முரண்பாட்டிலும் சமத்துவத்தைப் பேணுதல் வேண்டும். எமது நிலம், எமது மொழி, எமது கலாசாரம், எமது பொருளாதாரம், எமது மக்கள் என்ற நிலை மேல்நிலைக்கு வரும் போது தமிழ்த்தேசியம் ஒரு வாழ்வு முறையாக பரிணமிக்கத்தொடங்கும். சீனத்தேசியம், யூதத் தேசியம், முஸ்லீம் தேசியம் என்பன ஒரு வாழ்வு முறையாக பரிணமிக்கும் போது தமிழ்த் தேசியம் மட்டும் ஏன் அவ்வாறு பரிணமிக்க முடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அக முரண்பாடுகளைக் களையும் ஆற்றல் தமிழ்த்தேசியத்திற்கு மட்டுமே உண்டு. மக்களைத் திரளாக்கல் என்ற பெருந்தேவை அதற்குள்ளது.

ஆறாவது சர்வசே அரசியலை எமக்கு சார்பாக திருப்புவதாகும். தமிழ் மக்களின் அரசியல் வெற்றியை சர்வதேச அரசியலே தீர்மானிப்பதாக இருப்பதால் இது மிக மிக அவசியமாகும். பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "தேசிய போராட்டத்தினால் தான் தேசிய அரசியல் உருவாகும். தேசிய போராட்டத்தினால் தான் அது வளர்ச்சியடையும். ஆனால் தேசிய போராட்டத்தின் வெற்றியை சர்வதேச அரசியலே தீர்மானிக்கும்" எனக் கூறியமை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இன்று சர்வதேச சிவில் சமூகத்தின் அபிப்பிராயம் தமிழ் மக்களுக்கு சார்பாக உள்ளது. பெரும் தேசியவாத ஒடுக்கு முறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. சர்வதேச சிவில் சமூகத்தில் ஜனநாயக முற்போக்கு சக்திகள், மனித உரிமைவாதிகள், ஊடகத்துறையினர் ஆன்மீகத்துறையினர் என்போர் அங்கம் வகிக்கின்றனர்.

ஏழாவது மக்கள் பங்கேற்பு அரசியலை தொடக்கி வைப்பதாகும். துரதிர்ஷ்டவசமாக தமிழ் அரசியல் வரலாற்றில் மக்கள் பங்கேற்பு அரசியல் தோல்வி அடைந்துள்ளது. அரசியலில் மக்கள் பங்கேற்பதோ அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படுவதோ இடம்பெறவில்லை. மாறாக தொண்டர்களும் வீரர்களுமே பங்கேற்றனர். தமிழரசுக்கட்சிக்காலத்தில் தொண்டர்கள் பங்கேற்றனர். மக்கள் வாக்களிப்பதுடனும் அவ்வப்போது போராட்டங்களில் பங்குபற்றுவதுடனும் தமது

கடமைகளை நிறுத்திக் கொண்டனர். ஆயுதப் போராட்ட காலத்தில் போராளிகள் பங்கேற்றனர். மக்கள் பணமும், நகையும் கொடுப்பதுடனும் அவ்வப்போது போராட்டங்களில் பங்குபற்றுவதனுடனும் தமது கடமைகளை நிறுத்திக் கொண்டனர். ஜனநாயக அரசியல் தளத்தினூடாக எமது இலக்கினை அடைவதற்கு இம் மக்கள் பங்கேற்பு அரசியல் மிகமிக அவசியமானதாகும். அரசியல் தலைமைகளின் குத்துக்கரணங்களை தடுத்து நிறுத்துவதற்கும் மக்கள் பங்கேற்பு மிகமிக அவசியமானதாகும். இங்கு மக்கள் பங்கேற்பு என்பது மக்களை அரசியல் மயப்படுத்தி அமைப்பாக்குவதாகும்.




வடக்கு - கிழக்கு மாகாணம்

Image source - www.wikimedia.org

எட்டாவது சிறீலங்கா அரசின் பச்சை ஆக்கிரமிப்புத் தொடர்பாக சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குவதாகும். ஆயுதப் போராட்டம் இந்த ஆக்கிரமிப்புக்களைக் குறிப்பிட்டளவு தடுத்து வைத்திருந்தது. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து பச்சை ஆக்கிரமிப்புத் தொடர்கின்றது. மன்னராட்சிக் காலத்தில் போரில் வெற்றிபெற்ற அரசுகள், தோல்வியடைந்த அரசுகளின் பிரதேசங்களை பச்சையாகச் சூறையாடும். அதுபோன்ற சூறையாடல்களே இப்போதும் இடம்பெறுகின்றன. இச் சூறையாடல்களினால் தமிழ்த் தேசத்தைத் தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என நான்கும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைப்பதே இந்த ஆக்கிரமிப்பின் நோக்கமாகும். இத்தகைய ஆக்கிரமிப்புக்களுக்கு மகாவலி அதிகார சபை, வன பரிபாலனத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் தொல்லியல் திணைக்களம், புத்தசாசன அமைச்சு என்பன கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்த வேண்டும். உள்நாட்டு முயற்சிகள் இது விடயத்தில் பெரிய பயன்களைத் தராது. சர்வதேசப் பாதுகாப்புப் பொறிமுறையே அவசியமாகும்.

ஒன்பதாவது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு உத்தியோக பூர்வமற்ற அதிகாரக்கட்டமைப்பை உருவாக்குவதாகும். தமிழ் மக்களை அரசியல் விழிப்புணர்வோடு வைத்திருப்பதற்கும், போரினால் பாதிக்கப்பட்ட பொது மக்கள், போராளிகளின் நலன்களைப் பேணுவதற்கும், தமிழ் மக்களின் அடிப்படைப் பொருளாதாரத்தை தக்க வைப்பதற்கும், நிலம், மொழி, கலாசாரம் என்பவற்றை பாதுகாப்பதற்கும் எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்த் தேசியத்தை ஒரு வாழ்வு முறையாக மாற்றுவதற்கும் இவ்வதிகாரக்கட்டமைப்பு அவசியமானதாகும்.

பத்தாவது கிழக்கைப் பாதுகாப்பதற்கு தனியான மூலோபாயத் திட்டங்களும் தந்திரோபாயத்திட்டங்களும் வகுக்கப்படல் வேண்டும். கிழக்கைப் பாதுகாப்பதில் தமிழ் அரசியல் வரலாற்று ரீதியாகவே தோல்வியடைந்திருக்கின்றது. அதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று, கிழக்கில் தமிழ் - முஸ்லீம் முரண்பாடு இருக்கின்றது என்பதைக் கவனத்தில் எடுக்காமையாகும். இது விடயத்தில் "தமிழ் பேசும் மக்கள்" என்ற தமிழரசுக் கட்சிக்கால கொள்கை படுதோல்வியடைந்திருக்கன்றது. முஸ்லீம்கள் இந்தப் பொது அடையாளத்திற்குள் வருவதற்குத் தயாராக இல்லை. மறுபக்கத்தில் கிழக்குத் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான கருவியாக பெருந்தேசியவாதம் முஸ்லீம்மக்களையும் பயன்படுத்துகின்றது. இந்நிலையில் இவ்விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும் வகுக்கப்படல் வேண்டும். இவ்விவகாரத்தை நிலவிரிப்புக்குள் தள்ளி ஒழித்துவிட முடியாது.

இரண்டாவது, வடக்கின் அதிகாரத்தை கிழக்கில் திணிக்க முற்படுவதாகும். இதன் விளைவு பிரதேசவாதம் தலைதூக்கியதோடு கிழக்கில் சுயாதீனமான உள்ளூர்த் தலைமை வளரமுடியாத நிலைமை ஏற்பட்டமையாகும். இது விடயத்தில் கிழக்கு விவகாரங்களை கிழக்குத் தலைமை கையாளக்கூடியதாகவும், வடக்கு விவகாரத்தை வடக்கு தலைமை கையாளக் கூடியதாகவும் மொத்தத் தேசியவிவகாரத்தை வடக்கும் கிழக்கும் கூட்டாகக் கையாளக்கூடியதுமான பொறிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். கிழக்கை உலகிற்குக் கொண்டுபோவதும் உலகத்தை கிழக்கிற்கு கொண்டுவருவதும் இன்று மிகமிக அவசியமானதாகும்.

இவ்வழி வரைபடத்திலுள்ள பத்து அம்சங்களும் போதுமானவை எனக்கூற முடியாது. மேலும் மேலும் தேவையானவற்றை கண்டு பிடிக்க வேண்டும். தமிழ் அரசியல் நடைமுறையில் செயற்படுகின்ற போது தேவையான மேலதிக விடயங்கள் கண்ணுக்கு தெரியத் தொடங்கும்.




**முத்துவடிவு சின்னத்தம்பி**

இவர் 1965ஆம் ஆண்டு பொருளாதாரதுறையில் சிறப்புபட்டத்தை பெற்று அதே பீடத்தில் உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். 1993 ஆம் ஆண்டு பேராசிரியராக பதவி உயர்வு பெற்று 2006 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் மலையகத்தை சார்ந்த முதலாவது பேராசிரியர் பதவியை அலங்கரித்த பெருமை இவருக்குண்டு.


# பெருந்தோட்டத் தமிழ்மக்களின் சமூக அபிவிருத்திக்கு உந்துதல் அளிக்கக்கூடிய ஒரு சூழலை உருவாக்குதல்

### ஒரு 'சமூகம்' என்பது எதனைக் குறிக்கும்?

ஒரு சமூகம் என்பது அதன் அங்கத்தவர்களை அடையாளங்காட்டுவதும், அவர்களுக்கிடையிலான ஒற்றுமையை நிர்ணயிப்பதுமான பொதுவான நோக்கம், நம்பிக்கைகள், விருப்பங்கள், தேவைகள், அத்தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு அச்சமூகத்திற்குக் கிடைக்கப்பெறும் சாதனங்கள் என்பவற்றைக் கொண்டதாக இருக்கும். துரதிஷ்டவசமாக பெருந்தோட்ட மக்களிடையே மேற்படி அம்சங்கள் இன்றுவரையும் போதுமான அளவு வளர்ச்சியடையாத நிலையிலேயே காணப்படுகின்றன. கடந்த சுமார் நான்கு தசாப்த காலப்பகுதியில் இச்சமூகத்தில் பல மாற்றங்களும் அபிவிருத்திகளும் ஏற்பட்டு வந்துள்ளபோதும், அதன் அடிப்படையான பண்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதாவது, அது இன்னும் ஒரு முழுமையான சமூகமாக வளர்ச்சியடையாத நிலையில் உள்ளதாகவே தோன்றுகின்றது. இந்நிலையில், எந்த ஒரு அபிவிருத்தி முன்னெடுப்பும் அவர்களுக்கு நன்மை பயக்கவேண்டுமாயின் முதலில் அவர்கள் தம்மை ஒரு சமூகமாக வளர்த்துக்கொள்வதோடு, அதில் முதிர்ச்சியும் அடையவேண்டியது இன்றியமையாததாகும்.



மலையக மக்களின் லயன் குடியிருப்புகள்


Image source - www.nimirvu.org

## ‘சமூக அபிவிருத்தி’ என்பது யாது?

ஒரு சமூகத்தின் வேறுபட்ட வாழ்வியல் அம்சங்களில் ஏற்படும் முன்னேற்றகரமானதும் நேர்மறையானதுமான மாற்றங்களே, பரந்த ஒரு கருத்தில், ‘சமூகஅபிவிருத்தி’ எனப்படும். அது சமூகநடத்தைகள், சமூகஉறவுகள், சமூகத்தாபனங்கள் என்பவற்றோடு தொடர்புபட்ட ஒன்றாகும். அவற்றிலேற்படும் முன்னேற்றகரமான மாற்றங்களே, அதாவது, அச்சமூகத்தில் ஏற்படும் சமூக - பொருளாதார பரிணாம வளர்ச்சி, சமூக முன்னேற்றம் என்பனவே ‘சமூக அபிவிருத்தியாகும். ஒரு சமூகத்தில் இவ்வித மாற்றங்கள் ஏற்படவேண்டுமாயின், அச்சமூகத்தில் இருக்கும் வறியமக்கள் தம்முள் பொதிந்துகிடக்கும் ஆக்கத்திறன்களை வெளிக்கொணர வேண்டும். நடைமுறையிலுள்ள சமூக-பொருளாதார யதார்த்தத்தை தமக்குச்சாதகமாக மாற்றி அமைத்துக்கொள்வதன் மூலமே அவர்கள் இதனை அடைந்து கொள்ளமுடியும். சமூகநடவடிக்கைகளில் ஒரு சமூகத்தின் அங்கத்தவர்களது நேரடியான பங்கெடுப்பு இன்றி இது சாத்தியப்படமாட்டாது. அதேவேளையில், அச்சமூகம் தன்னைத்தானே வலுப்படுத்திக்கொள்வதும் அவசியமாகும். இது ‘சுயவலுப்படுத்தல்’ (selfempowerment) எனப்படும். சமூக அணிதிரட்டல் (Social Mobilization) நடவடிக்கைகளின் மூலமே ஒரு சமூகம் தன்னை வலுப்படுத்திக்கொள்ள முடியும்.

**இலங்கையின் பெருந்தோட்டச் சமூகமானது நிறைவேற்றப்படாத பல மனிதத்தேவைகளையும், தரங்குன்றிய ஒரு வாழ்க்கைமுறையையும் கொண்டதாக சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்துள்ளது.**

வறியமக்கள் தம்மை குழுக்களாக இணைத்துக்கொண்டு கூட்டுநடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தமக்கிடையே ஏற்படுத்திக்கொள்வதே இச்சுயவலுப்படுத்தலாகும். எனவே, கூட்டுநடவடிக்கைகள் சமூகவலுப்படுத்தலுக்கான ஒரு முக்கிய அடிப்படை எனலாம். கூட்டுநடவடிக்கைகளின் மூலம் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஒரு சமூகம் பெற்றுக்கொள்ளும் ஆற்றலை அது குறிக்கும். ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது ஓரங்கட்டப்பட்ட வறிய மக்கள்குழுக்கள் அதினின்றும் விடுபடுவதற்கு தம்மை சுயவலுப்படுத்திக்கொள்வதே சிறந்த வழியாகும் என்பதையும், அவ்வாறு தம்மை வலுப்படுத்திக்கொள்வற்கு தாமே பொறுப்பு என்பதையும், குறிப்பிட்ட சமூகத்திற்கு வெளியே உள்ளவர்களால் இவ்வித சுயவலுப்படுத்தலை ஏற்படுத்த முடியாது என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். எனினும் புதிய சிந்தனைகள், செயல்முறைகள் என்பவற்றை அம்மக்களிடையே பரப்புவதன் மூலம் சமூக வலுப்படுத்தலுக்கான அம்மக்கள் குழுக்களது விழிப்புணர்வு மட்டத்தை உயர்த்துவதில் வெளியார் முக்கிய பங்கு ஆற்றலாம். அதாவது, தாம் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை அவர்கள் இனங்கண்டு கொள்வதற்கும்,



The Nanu Oya Resettlement scheme

Image source - www.sundayobserver.lk

அவற்றை எதிர்கொள்வதற்கு தம்மை வலுப்படுத்திக்கொள்வதற்கும் தாமே பொறுப்பு என்பதை அச்சமூகத்தின் தலைவர்களும் ஏனைய அங்கத்தவர்களும் விளங்கிக்கொள்வதற்கும் வெளியார் உதவலாம். ஒரு சமூகத்தைச்சேர்ந்த வீட்டுத்துறையினரும் தனிநபர்களும் சமூகரீதியானதும் அரசியல்ரீதியானதுமான பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலமே தம்மை வலுப்படுத்திக்கொள்ளலாம்.

தமது பிரச்சினைகளுக்குப் பொறுப்பானவர்கள் எனத்தாம் கருதும் சக்திகளை நேரடியாக எதிர்கொள்வதற்கான ஆற்றலை சமூகவலுப்படுத்தலின் மூலமே அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஒரு சமூகத்தின் அங்கத்தவர்கள் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தமக்கிடையே கூட்டங்களை ஏற்பாடு செய்வதும், உள்ளூர் அதிகாரக்கட்டமைப்புக்கள், சமூகப்பிரச்சினைகள், மனிதத்தேவைகள் என்பன தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அவற்றை இனங்காணுவதும் அபிவிருத்திக்குத் தேவையானவையாகும். தனிமனிதரும் சமூகக்குழுக்களும் தமது சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான வினைத்திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இது உதவும். அதேபோன்று,பொதுவானதொருநிகழ்ச்சிநிரலைக்கொண்ட சமூகக்குழுக்களை உருவாக்குவதன் மூலம் தமது அரசியல் சக்தியைக் கட்டிஎழுப்பிக் கொள்வதற்கும் இவ்வினைத்திறன்கள் அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

ஒரு மக்கள் குழுவினரது சமூக அபிவிருத்தியானது அம்மக்கள் வாழுகின்ற பொதுவான சூழலினாலேயே நிர்ணயிக்கப்படும். ‘பொதுவான சூழல்’ என்பது இங்கு அச்சமூகம் வாழுகின்ற சமூக - கலாச்சார - பொருளாதார சூழலைக்குறிக்கும். அப்படியாயின், இம்மக்களிடையே

சமூகஅபிவிருத்தி ஏற்படுவதற்கு உந்துதல் அளிக்கக்கூடிய ஒரு சமூக - கலாச்சார - பொருளாதார சூழல் அங்கு உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். சமூக உறுதிப்பாடு, தேவைக்கேற்ப சூழலை மாற்றிக் கொள்ளக்கூடிய தன்மை என்பவற்றோடு, உறுதியான சமூக-பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளும் காணப்படுதல் ஒரு சிறந்த சூழலின் பண்புகளாகும். சமூக அபிவிருத்திக்குத் தடையாக உள்ள காரணிகள், சமூகச்சூழலில் காணப்படும் பின்னடைவுகள் என்பவற்றை இனங்கண்டு அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அங்கு காணப்படும் சமூக மட்டத்தாபனங்களை (CommunityBased Organizations-CBOs) வலுப்படுத்துதல், அவை இல்லாத இடங்களில் புதியவற்றை உருவாக்குதல் என்பவற்றினூடாக மக்கள் தம்மை சுயவலுப்படுத்திக் கொள்வதற்கு சாதகமான ஒரு சூழலை உருவாக்குவதை அது குறிக்கும். சமூக அபிவிருத்திக்கு மக்களிடையே காணப்படும் தேவை, சமூகஅபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு ஒரு சமூகத்திற்கு காணப்படுகின்ற வரையறைகள், இடர்ப்பாடுகள் என்பவற்றோடு சமூகஅபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அங்கு காணப்படும் வாய்ப்புக்களும் இனங்காணப்படவேண்டும்.

## இலங்கையின் பெருந்தோட்டச் சமூகம்

இலங்கையின் பெருந்தோட்டச் சமூகமானது நிறைவேற்றப்படாத பல மனிதத்தேவைகளையும், தரங்குன்றிய ஒரு வாழ்க்கைமுறையையும் கொண்டதாக சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்துள்ளது. நாட்டின் ஏனைய சமூகங்களிலிருந்து இச்சமூகத்தை தனிமைப்படுத்திவைத்த பல்வேறு வரலாற்று ரீதியான காரணங்களினாலேயே அது இந்த நிலைக்கு தள்ளப்பட்டது. பல பெருந்தோட்டங்கள் நாட்டின் பிரதான தெருவமைப்புகளிலிருந்து தொலை தூரங்களில் மலைப்பாங்கான பிரதேசங்களில் அமைந்துள்ளதால் அங்கு வாழ்ந்துவரும் மக்கள் புவியியல் ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டனர். வணிக அமைப்புக்க ளாக இருக்கும் இத்தோட்டங்களில் பெருமளவு தொழிலாளரும் அவர்களது குடும்பத்தாரும் வாழ்ந்து வரும் நிலையில் தோட்டங்களுக்குத்தேவையான தொழிலாளரின் கிரமமான வேலைவருகையை உறுதி செய்துகொள்வதற்காக தோட்டமுகாமைகள் தோட்டஎல்லைகளுக்குள்ளேயே அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின. எனவே, ஒவ்வொரு தோட்டமுகாமையும் தத்தமது தொழிலாளர்களுக்கு லயன்அறை வடிவிலான இருப்பிடவசதிகளையும், வாழ்க்கைக்குத் தேவையான வேறுபல அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தன. ஆயினும் இந்த வசதிகள் பெரிதும் தரங்குன்றியனவாக இருந்தன. மேற்படி வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் தோட்டமுகாமையாளர் இம்மக்களது வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைத் தமது நேரடிக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடியதாக இருந்தது. பல தசாப்தங்களாக நீடித்துவந்த இவ்வித வாழ்க்கை முறையின் காரணமாக தமது வாழ்க்கைத்தேவைகள் பலவற்றிற்கு இம்மக்கள் தோட்டமுகாமையிலேயே தங்கியிருக்கும் ஒரு மனப்பாங்கை வளர்த்துக்கொண்டனர். இது ஏனைய சமூகங்களிலிருந்து அவர்களது தனிமைப்படுத்தலை மேலும் உறுதிப்படுத்துவதாக இருந்தது. அத்துடன், இவ்வித தனிமைப்படுத்தலும் தோட்டமுகாமையில் தங்கியிருக்கும் மனப்பாங்கும் இம்மக்கள் தம்மை முழுமையான ஒரு சமூகமாக வளர்த்துக்கொள்வதற்கு பெரும் தடையாக இருந்தன. அவர்களிடையே மிகமோசமான சமூக-கலாசார நிலையொன்று உருவாகுவதற்கும் அதுவே காரணமாயிற்று.

மேலும், அவர்களது அரசியல்பொருளாதார வறுமைநிலை காரணமாக நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் நாட்டில் ஏற்பட்டு வந்த சமூகபொருளாதார அபிவிருத்தியின் ஒரு சில நன்மைகளை மட்டுமே அவர்கள் அனுபவிக்கக் கூடியதாக இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்ட சமூகத்தின் வரலாற்றுரீதியான தனிமைப்படுத்தலானது 1949 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்திய வம்சாவழி மக்களது குடியுரிமைச்சட்டத்தின் மூலம் அவர்களது குடியுரிமை பறிக்கப்பட்டபோது



தோட்டத் தொழிற்சாலை

Image source - www.sundayobserver.lk

முழுமையடைந்தது. குடியுரிமை பறிக்கப்பட்டதால் அடுத்து வந்த நான்கு தசாப்தங்களுக்கு அவர்கள் தமது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் அரசியல் அதிகாரத்தைப்பகிர்ந்து கொள்ளும் உரிமையையும் இழந்தனர். இதனால் தமது சொந்த விவகாரங்களிற் கூட தீர்மானங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் போயிற்று. எண்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அவர்களுக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்படும் வரை இந்தநிலை நீடித்துவந்தது.

## பெருந்தோட்டமக்களிடையே சமூக அணிதிரட்டலின் இன்றைய நிலை

பெருந்தோட்டமக்களிடையே சமூக அபிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் இப்பொழுது பல்வேறு பிரிவினர் ஈடுபாடு காட்டிவருகின்றனர். அரசாங்கநிறுவனங்கள், பெருந்தோட்ட மனிதஅபிவிருத்தி நிதியம் (Plantation Human Development Trust - PHDT), உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் (NonGovernmental Organizations-NGOs), தொழிற்சங்கங்கள், சமூகமட்டநிறுவனங்கள் (CBOs) என்பவற்றை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம்.

அரசநிறுவனங்களும் முகவர்தாபனங்களும்
தேசியமட்டத்தில் சில அமைச்சுக்களும் அரசநிறுவனங்கள் சிலவும் பெருந்தோட்டச் சமூகத்தின் சமூக அபிவிருத்திக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அண்மைக்காலம்வரை, பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்தவர்களை அமைச்சர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வீடமைப்பு - தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு (1997), சமூகஅபிவிருத்தி அமைச்சு (2001) என்பன அம்மக்களது சமூகநலனையும் சமூகஅபிவிருத்தியையும் மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வந்தன. தோட்டப்புறங்களில் போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாதிருப்பதும், இருக்கும் ஒரு சில வசதிகளும் பல குறைபாடுகளைக் கொண்டனவாக இருப்பதும் சமூக அபிவிருத்தியில் தோட்டமக்கள் பின்தங்கி இருப்பதற்கான முக்கிய காரணங்கள் என்பது உணரப்பட்ட போதே தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது. தோட்டப்பகுதிகளில் அரசாங்கம் மேற்கொள்ளும் சமூகநலன்சேவை முயற்சிகளைப் பலப்படுத்துவது அதன் நோக்கமாகவிருந்தது.

இதனைத்தொடர்ந்து, சமூக அபிவிருத்திக்கான புதிய அமைச்சொன்று 'சமூக அபிவிருத்திக்கும் சமூக சமத்துவமின்மை ஒழிப்பிற்குமான அமைச்சு' என்ற பெயரில் தாபிக்கப்பட்டது. இந்த அமைச்சு நாட்டிலுள்ள வசதிகுறைந்த சமூகங்கள் அதிலுங்குறிப்பாக, பெருந்தோட்டச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருந்தது. கல்வி, மற்றும் சமூக வசதிகளை மேம்படுத்துவதற்கான பொறுப்பு இந்த அமைச்சிடம் கையளிக்கப்பட்டதோடு, இந்த அமைச்சுக்கு அமைச்சரவை அந்தஸ்தும் அளிக்கப்பட்டது. எனினும், 2010 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசு மேற்படி இரு அமைச்சுக்களையும் கலைத்துவிட்டு முக்கிய பெருந்தோட்டத்தலைவரை அமைச்சராகக் கொண்ட இளைஞர் வலுவூட்டல், சமூக - பொருளாதார அபிவிருத்தி என்பவற்றிற்கான ஒரு புதிய அமைச்சைத்தாபித்தது. சமூக அபிவிருத்தி அமைச்சு போன்றே இளைஞர் வலுவூட்டல் அமைச்சும் பெருந்தோட்டத்துறைக்கென விசேட அதிகாரங்களைக் கொண்டிராதபோதும், அதன் செயற்றிட்டங்கள் பெருந்தோட்டத்துறையை மையமாகக்கொண்டனவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்குப் புறம்பாக, பெருந்தோட்ட அமைச்சும் கல்வி, சுகாதாரம் என்பன சார்ந்த துறைகளில் சில சேவைகளை ஆற்றிவருகின்றது. மேலே குறிப்பிட்டவாறு விசேட அமைச்சுக்களினூடாக தோட்டமக்களின் சமூகநலன், சமூக அபிவிருத்தி என்பவற்றிற்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டபோதும், தோட்டமக்களது சமூகநலனை மேம்படுத்துவதிலும், சமூகஅபிவிருத்தியை ஏற்படுத்துவதிலும் மேற்படி அமைச்சுக்கள் எந்தளவு பங்காற்றின, எந்தளவு பங்காற்றுகின்றன என்பது ஆய்விற்குரிய ஒரு விடயமாகும். மாகாணமட்டத்தில் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் விசேட மாகாணமட்ட அமைச்சுக்கள் செயற்பட்டுவந்தன. ஆனால், மாகாணசபை வரவுசெலவுத்திட்டங்களில் தோட்டச்சமூகத்திற்கென விசேட நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதில்லை. அதேபோன்று, பிரதேசசபைத் தேர்தல்களில் தோட்டமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை இருப்பதோடு, அச்சமூகத்தைச் சேர்ந்த சிலர் பிரதேசசபைப் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டபோதும், பிரதேசசபைகள் தோட்டச் சமூகத்தின் அபிவிருத்திக்கென எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கு பிரதேசசபைச்சட்டம் தடையாக உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் பிரதேசசபைகளிடம் இருந்து தமக்குக் கிடைக்கும் சிறியஅளவு நிதியை மட்டுமே இப்பிரதேசசபைப் பிரதிநிதிகள் தோட்டப்பகுதிகளுக்கு செலவிடக்கூடியதாக உள்ளது. அண்மையில் இச்சட்டவிதிகளில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம்

தனியார்மயமாக்கலுக்கு முன்னர் காணப்பட்ட பெருந்தோட்டமுகாமையின் இறுக்கமான படிமுறைஅமைப்பின் கீழ் இருப்பிடவசதி, பல்வேறு அடிப்படை வசதிகள், வேறு சமூகநலன்சேவைகள், வாழ்வாதாரம் என்பவற்றிற்கு பெருந்தோட்டச்சமூகம் முற்றுமுழுதாக தோட்டமுகாமையிலேயே தங்கி இருந்தது. ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக நடைமுறையில் இருந்து வந்த இந்த முகாமைமுறையின் கீழ், தோட்டமக்கள் ஒரே இடத்தில் ஒன்றாக வாழ்ந்து வந்தபோதிலும் அவர்களால் தம்மை ஒரு சமூகமாக வளர்த்துக்கொள்ள முடியவில்லை. சுயஉதவி (Self-help) அணுகுமுறைகளை ஊக்குவிப்பதற்கு இந்த முகாமைமுறையானது சாதகமாக இல்லாதிருந்தமையே இதற்கான முக்கிய காரணமாகும். எனினும், பெருந்தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்ட பின்னர் பெருந்தோட்டமக்களுக்கு சமூகநலன் சேவைகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட பெருந்தோட்ட மனிதஅபிவிருத்தி நிதியம் சமூகநலன் சேவை

களை வழங்குவதில் அதன் மூலம் நன்மையடைவோர் "சுய - உதவி" செயற்பாட்டின் மூலம் அதில் பங்குபற்று வதை ஊக்குவிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. உதார ணமாக, வீட்டுக்கழிவறைகளை நிர்மாணிப்பதில் தனிப் பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பங்குபற்றுவதை அது ஊக்குவிக்கின்றது. பங்குபற்றல் வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் மக்களது இயலளவைக்கட்டி எழுப்புவதற்கு இந்த நிதியம் முயலுகின்றது. உற்பத்தித் திறன் வாய்ந்ததும், சுயமாகத் தங்கியிருப்பதுமான ஒரு பெருந்தோட்டச் சமூகத்தை உருவாக்குவது நிதியத்தின் நோக்கமாகும். எனவே, சமூகநலன்சேவைகளை வழங் குவதில் அதன் மூலம் நன்மையடைவோர், அவற்றின் பயனை அனுபவிப்போராக மட்டும் இராது சமூகநலன் சேவைகளினது வழங்களில் பங்குபற்றுவோராகவும், அதற்குப் பங்களிப்போராகவும் இருப்பதை ஊக்குவிக்க அது முயலுகின்றது. இந்த நோக்கத்திற்காகவே அது 1993 இல் தோட்டத்தொழிலாளர் வீடமைப்பு கூட்டுற வுச் சங்கங்களைத் தாபித்தது. இப்போது சுமார் 432 சங் கங்கள் செயற்படுவதாகவும், இவற்றில் 419,907 குடும் பங்களைச்சேர்ந்த 817,330 பேர் அங்கம் வகிப்பதாகவும் நிதியத்தின் அறிக்கைகள் காட்டுகின்றன.

### அரசசார்பற்ற நிறுவனங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்கள்

தோட்டமக்களின் சமூகஅபிவிருத்திக்கும் சமூகஅணிதி ரட்டலுக்கும் பங்களிக்கும் இன்னொரு முக்கிய குழுவி னர் உள்நாட்டு - வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங் களாகும். உள்நாட்டு நிறுவனங்களுக்குப் புறம்பாக Care International, World Vision, World University Services of Canada-(WUSC), Oxfam (UK and Australia) போன்ற வெளி நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும் இதில் பங்கு பற் றுகின்றன. பெருந்தோட்ட மக்களின் சமூக அபிவி ருத்திக்கும் சமூக அணிதிரட்டலுக்குமென மேற்படி நிறுவ னங்கள் பல்வேறு செயற்றிட்டங்களை அமுலாக்கி வரு கின்றன. மனிதவள அபிவிருத்தி, வருமான ஆக்கம், தொழிற்பயிற்சி வழங்கல், சிறுவர்பாதுகாப்பு, முன்பள்ளிக் கல்வி, சமூகமட்டத் தாபனங்களை உருவாக்குதல் என்ப வற்றோடு, வாழ்வாதார நடவடிக்கைகள், சுகாதாரம் போன்ற துறைகளில் பல செயற்றிட்டங்களையும் அவை அமுலாக்கியுள்ளன. சில நிறுவனங்கள் பெருந் தோட்டமக்களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்ப டுத்துவதில் விசேட கவனம் செலுத்தி வருகின்றன. பல் வேறு காரணிகளால் தோட்டமக்களின் சமூகஅபிவி ருத்தி பின்தங்கியே காணப்படுகின்றது. அச்சமூகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படுகின்ற பலதரப் பட்ட வரையறைகள் அல்லது தடைகள் இதற்குக் கார ணமாக இருக்கலாம். எனவே, பெருந்தோட்டச் சமூகத் தினது சமூக அபிவிருத்தி பற்றி ஆராயும்பொழுது அதற்கு அச்சமூகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எவ் வித வரையறைகள் அல்லது இடர்ப்பாடுகள் காணப்ப டுகின்றன என்பது பற்றியும் நன்கு அறிந்திருத்தல் முக்கி யமானதாகும்.

### பெருந்தோட்ட மக்களின் சமூக அபிவிருத்திக்கு காணப்படும் வரையறைகள் அல்லது இடர்ப்பாடுகள்

ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கு பல்வேறுபட்ட தடை களும் வரையறைகளும் இடர்பாடுகளும் காணப்படு வது இயல்பாகும். சமூகத்திற்கு சமூகம் இவை அளவிலும்





Image source -www.srilankabusiness.com

தன்மையிலும் வேறுபட்டனவாக இருக்கும். இவ்வரையறைகள் அல்லது தடைகள் அச்சமூகம் சார்ந்த சமூக - அரசியல் - பொருளாதார விடயங்களுடன் தொடர்புபட்டனவாக இருக்கலாம்.

சமூக அணிதிரட்டலுக்கு ஒரு சமூகத்தில் உள்வாரியானதும் வெளிவாரியானதுமான இருவிதமான காரணிகள் பிரச்சினைகளை உருவாக்கலாம். உதாரணமாக, ஒரு சமூகத்திற்குள்ளேயே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் இவ்வித நடவடிக்கைகளுக்கு வரையறைகளாக இருக்கக்கூடும். இவ்வித உள்வாரியான அல்லது குறிப்பிட்ட சமூகத்திற்குள்ளேயே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் சமூகத்திற்கு உள்ளேயே செயற்படும் அமைப்புசார்ந்த காரணிகளின் விளைவாக இருக்கலாம். அதேபோன்று, வெளிவாரி அல்லது வெளிக்காரணிகளும் இவ்விதப்பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். பெருந்தோட்டச் சமூகத்தைப் பொறுத்தவரை, இந்த இரண்டு விதமான வரையறைகளும் காணப்படுவதோடு சமூகஅபிவிருத்திக்கு அவை இடையூறுகளையும் விளைவிக்கின்றன.

## உள்வாரி இடர்பாடுகள்

தோட்டங்களிலே காணப்படும் இறுக்கமானதும், படிமுறையானதுமான முகாமை அமைப்பு ஆரம்பகாலந்தொட்டே தோட்டமக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்துள்ளது. பெருந்தோட்டங்களின் ஆரம்பகாலங்களில் பெருந்தோட்டவேலைகளையும், வேலைசெய்யும் இடங்களையும் ஒதுக்கீடு செய்வதில் கையாளப்பட்டமுறைகள் அச்சமூகத்தில் ஏற்படுத்திய ஏற்றத்தாழ்வுகளை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். வேலைசெய்வதற்கு வசதியான இடங்களும், இலகுவான வேலைகளும், மேற்பார்வையாளர் பதவிகளும் உயர்சாதியினருக்கே ஒதுக்கப்பட்டன. இது சமூகரீதியான அமைப்புசார் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்திற்று. மேலேகுறிப்பிட்ட நடைமுறைகள் இன்று அருகிவிட்டபோதிலும், ஆரம்பகாலப்பகுதியில் அவற்றால் உருவாக்கப்பட்ட சமூகஇடைவெளிகள் இன்றும் நிலைத்திருப்பதோடு, சமூகத்தில் அவை ஓரளவிற்காவது பலருக்குப்பாதகமாகவும் இருந்து வருகின்றன. தோட்டமக்களது புவியியல்ரீதியான தனிமைப்ப டுத்தலும், சமூக - கலாசாரரீதியாக அவர்கள் ஓரங்கட்டப்பட்டதும் அவர்களது புவியியல்ரீதியான அசைவையும் வெளியுலகத் தொடர்புகளையும் வரையறுக்கின்றன. இந்த நிலை மாறுவதற்கு பெருந்தோட்டக்குடியிருப்புக்கள் எல்லா வித அடிப்படைவசதிகளையும் கொண்ட கிராமக்குடியிருப்புக்களாக மாற்றப்படவேண்டியது அவசியமாகும்.

பெருந்தோட்டங்களின் ஆரம்பகாலங்களில் காலனித்துவ ஆட்சியும், அதனைத் தொடர்ந்து ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக உற்பத்தியை மையமாகக்கொண்ட ஒரு அமைப்பில் தனித்துவமான ஒரு கலாசாரத்தைக் கொண்டதும், மூடியதுமான அவர்களது வாழ்க்கைமுறையும் அவர்களது மனப்பாங்குகளில் பெரும் செல்வாக்கு செலுத்தின. இம்மக்களிடையே அர்த்தமுள்ள சமூக அபிவிருத்தி ஏற்படவேண்டுமாயின் இந்த மனப்பாங்குகளில் மாற்றங்கள் ஏற்படுவது இன்றியமையாததாகும்.

## வெளிவாரி இடர்பாடுகள்

*i)* பெருந்தோட்டங்களின் நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு - பெருந்தோட்டங்களின் படிமுறையிலான முகாமை அமைப்பு அங்கு அர்த்தமுள்ள சமூக அணிதிரட்டலுக்கும் சமூகவலுப்படுத்தல் செயற்பாடுகளுக்கும் சாதகமானதாக இல்லை.

*ii)* நாட்டின் பிரதான அபிவிருத்தி நீரோட்டத்தில் பெருந்தோட்டச் சமூகம் இணைந்துகொள்ள முடியாமை - பெருந்தோட்டத்துறையில் காணப்படும் பொதுவான சூழலானது நாட்டின் தேசிய நீரோட்டம், சமூக - பொருளாதாரவாழ்வு என்பவற்றிலிருந்து தோட்டமக்களை தனிமைப்படுத்துவதாக உள்ளது. அங்கு நடைமுறையில் இருக்கும் தாபனஅமைப்புக்கள் பெருமளவிற்கு மரபுசார்ந்தனவாகவும், ஊழியத்தைச் சுரண்டும் தன்மையைக் கொண்டனவாகவும் உள்ளன. மேலும், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பொதுநிர்வாக வலைப்பின்னல் என்பவற்றின் பிரசன்னமும் பெருந்தோட்டப்பகுதிகளில் குறைவாகவே உள்ளது. பொதுநிறுவனங்கள் பெருந்தோட்ட மக்களுடன் வரையறுக்கப்பட்ட அளவே தொடர்பு கொண்டுள்ளன. அச்சமூகத்திற்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் மிகமிகக் குறைவான நேரடித் தொடர்புகளே காணப்படுகின்றன.

*iii)* பெருந்தோட்ட மக்களது தனிமனித - சமூகத்தேவைகள் பாரிய அளவினதாக இருத்தல் - பெருந்தோட்டத்து

றையில் உள்ள குடும்பங்களில் பெரும்பாலானவை வறிய குடும்பங்களாகும். அத்துடன் தோட்டவேலையிலிருந்து உழைக்கும் நாளாந்த வேதனங்களிலேயே அவை பெரிதும் தங்கியுள்ளன. இச்சமூகத்திற்கு இருக்கும் வரையறுக்கப்பட்ட சாதனங்களைக்கொண்டு சமூக அங்கத்தவர்களது தேவைகளை நிறைவேற்றுவது ஒரு இயலாத காரியமாக உள்ளது.

**தோட்டங்களிலே காணப்படும் இறுக்கமானதும், படிமுறையானதுமான முகாமை அமைப்பு ஆரம்பகாலந்தொட்டே தோட்ட மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்துள்ளது.**

*iv)* சமூகத்தைப் பற்றிய போதுமான தகவல்கள் கிடைக்காமை - அண்மைக்காலங்களில் பெருந்தோட்டங்கள் தொடர்பான பெருமளவு தரவுகளும் தகவல்களும் வெளிவந்த வண்ணம் உள்ளபோதும், அச்சமூகத்தைப் பற்றி தெரியாத பல விடயங்கள் இன்னும் இருக்கவே செய்கின்றன. அச்சமூகத்தின் அபிவிருத்திக்கான கொள்கைகள், உபாயங்கள் போன்றவற்றை உருவாக்குவதற்கும், சமூகப்பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்குப் பொருத்தமான பொறிமுறைகளை கட்டிஎழுப்புவதற்கும் இவை பெரும் தடையாக உள்ளன. நம்பகத்தன்மை வாய்ந்;த தகவல்கள் போதியளவு இல்லாதநிலையில் இச்சமூகத்தின் அபிவிருத்தித்தேவைகளை கருத்துநிலைப்படுத்துவதும், பொதுமைப்படுத்துவதும் சிரமமாக உள்ளது.

*v)* பெருந்தோட்டச்சமூகம் பற்றிய அரசாங்கக் கொள்கைகளில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை - அரசாங்கத்தின் மத்தியமட்டத்திலும் பிராந்தியமட்டங்களிலும் பெருந்தோட்டத்துறை பற்றிய கொள்கைகளில் ஒருவித நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது. அரசாங்கங்கள் மாறும்பொழுது பெருந்தோட்டத்துறை பற்றிய அபிவிருத்திக்கொள்கை, உபாயங்கள் என்பவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பெருந்தோட்டத்துறையைப் பொறுத்தவரை, உறுதியானதொரு அரசாங்கக்கொள்கை நிலைப்பாடு இல்லை என்றே கூறலாம்.

*vi)* அபிவிருத்திக்குத் தேவையான சாதனங்களின் பற்றாக்குறை - பெருந்தோட்டத்துறையின் சமூகஅபிவிருத்திக்கு கிடைக்கப்பெறும் சாதனங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. மேலும், இந்த வரையறுக்கப்பட்ட அளவிலான சாதனங்களைக்கூட முறையாக பயன்படுத்திக் கொள்வதற்கு அங்கு காணப்படும் சமூக-பொருளாதார - இனரீதியான வரையறைகள் அச்சமூகத்தின் ஆற்றலைக் குறைக்கின்றன. மக்களின் சமூகமூலதனத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்க முதலீடுகள் போதாமல் இருப்பதோடு, தனது சமூக-பௌதீக மூலதனத்தின் மீது முதலீடு செய்வதற்குத் தேவையான சாதனங்களை வேறுமூலங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான அச்சமூகத்தின் ஆற்றலும் குறைவாகவே உள்ளது.

*vii)* தமிழ்மொழி தெரியாத அரசஅலுவலர்கள் சேவையாற்றுதல் - அரசாங்க வைத்தியசாலைகளிலும் பல்வேறு அரசாங்க அலுவலகங்களிலும் தமிழ்மொழி தெரியாத அலுவலர்கள் கடமையில் இருப்பதால் அரசாங்கத்தினது சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் தோட்டமக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். தோட்டமக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் உள்ள அரசாங்க அலுவலகங்களிலாவது போதுமான தமிழ் பேசும் அலுவலர்களை நியமிப்பதன் மூலம் இப்பிரச்சினைக்குத்தீர்வு காணலாம். பெருந்தோட்ட மக்களின் சமூக அபிவி ருத்திக்கு வரையறைகளை அல்லது தடைகளை ஏற்படுத்தும் பல்வேறு காரணிகள் மேலே இனங்காணப்பட்டுள்ளன. இவற்றை அகற்றி அல்லது வலுவிழக்கச்செய்து அம்மக்களின் சமூக அபிவிருத்திக்கு உந்துதல் அளிக்கக் கூடிய ஒரு சமூக - கலாசார - பொருளாதார சூழலை உருவாக்குவதே அம்மக்களிடையே சமூக அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான சிறந்த வழியாகும். பெருந்தோட்ட மக்களின் சமூக அபிவிருத்திக்குத் தடையாக இருக்கும் மேற்படி காரணிகளை அகற்றி சமூக அபிவிருத்திக்கு சார்பானதும், அதற்கு உந்துதல் அளிப்பதுமான ஒரு சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**சமூக அபிவிருத்திக்கு சார்பானதும், அதற்கு உந்துதல் அளிப்பதுமான ஒரு சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள்**

பெருந்தோட்டச் சமூகத்தின் சமூக-பௌதீக உட்கட்டமைப்புக்களை துரிதமாக அபிவிருத்தி செய்தல்
நாட்டினது பிரதான வாழ்க்கை நீரோட்டத்தில் பெருந்தோட்டச் சமூகத்தை உள்வாங்கும் வகையில் பொதுநிர்வாக வலையமைப்பை விரிவாக்குதல்
தோட்டச்சமூகத்தின் அபிவிருத்தியில் அரசதுறை பங்கெடுப்பதற்குத் தேவையான ஒரு தாபனக்கட்டமைப்பை அல்லது வலையமைப்பைத் தாபித்தல்
பெருந்தோட்டச்சமூகத்தில் சமூகமூலதன ஆக்கத்தையும், மனிதசாதன அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு உதவுதல்
பெருந்தோட்டச்சமூகத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கமுகவர் தாபனங்களுக்கும் பெருந்தோட்டத்துறைக்குமிடையிலான தொடர்புகளை அதிகரித்தல்
பெருந்தோட்டச்சமூகத்தின் அபிவிருத்தியில் பங்குபெறும் வகையில் அமைச்சுக்களின் ஆற்றலை அதிகரித்தல்
பொதுத்துறைக்கும் பெருந்தோட்டத்துறைக்கும் இடையிலான தொடர்பாடலையும் கூட்டுச் செயற்பாட்டு மட்டத்தையும் உயர்த்துதல்.
சமூகமட்ட நிறுவனங்கள், அபிவிருத்தி முகவர் நிறுவனங்கள், குடிசார் சமூகம் என்பவற்றின் இயலளவை அதிகரித்தல்.
பெருந்தோட்டச்சமூகம் சுயதங்கியிருத்தல், சுயஉதவி என்பவற்றை நோக்கி முன்னேறுவதற்கு ஏற்ற விதத்தில் அது தனது மனப்பாங்குகளை மாற்றிக்கொள்வதற்கு உதவுதல்
இச்சமூகத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.




## பாக்கியநாதன் அகிலன்

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் (கலை வரலாறு), பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் (கலை விமர்சனம்) பட்டத்தினையும் பெற்றுள்ளார். தற்போது தனது கலாநிதிப்பட்ட ஆய்வை புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மேற் கொண்டிருக்கும் இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதுநிலை விரிவுரையாளரும் ஆவார்.

பதுங்குகுழி நாட்கள், சரமகவிகள், அம்மை என்பன இவரது கவிதை தொகுப்புகளாகும். சில மொழிபெயர்ப்பு கவிதைகளையும் வெளியிட்டுள்ளார்.

இவரின் மரபுரிமை சாரி நூல்களாக எங்கள் மண்ணும் இந்த நாட்களும், காலத்தின் விளிம்பு, குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்கள் ஐந்து, வெங்கட்சாமிநாதன் வாதங்களும், விவாதங்களும் போன்றனவும் அமைகின்றன.


இக்கட்டுரைத் தொடர் வரலாற்றுத் தடயமாகவும், இனத்துவ அடையாளமாகவும் இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களிடையே – குறிப்பாக தமிழ் மக்களிடையே – மரபுரிமைகளைப் பாதுகாத்தலின் பல பரிமாணங்களை எடுத்துரைத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழரின் மரபுரிமை அம்சங்களை வெளிக்கொணர்வதாகவும், அதே நேரத்தில் அழிந்து கொண்டிருக்கும் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளையும் அதன் சமகால தேவைகளை எடுத்துரைப்பதாகவும் அமைகின்றது.




பச்சைப்பரப்பு யாழ்ப்பாணநகரம் 2002

Image source - google earth map

# யாழ்ப்பாண நகரத்தின் அடையாளங்களை அழித்தல்

### யாழ்ப்பாண நகரபிதாவுக்கு ஒரு குடியானவனின் மடல்

*ஒகஸ்ட் 2021 இல் எழுதப்பட்ட இக்கட்டுரை அக்காலப் பகுதியில் வெளியான மாநகர முதல்வரின் நாவலர் மண்டபம், ஆஸ்பத்திரி வீதி தொடர்பான கருத்துக்கள் மீதான உரையாடல் ஆகும்*

*அன்புடையீர்.*

*தங்களுடைய அண்மைய பத்திரிகையாளர் சந்திப்பொன்றின் காட்சித் துண்டொன்றை டான் தொலைக்காட்சியில் பார்க்கக் கிடைத்தது. அது ஒருங்கே மகிழ்ச்சியையும், கவலையையும் தந்தது. மகிழ்ச்சியானது, 'நாவ*

லர் கலாசார மண்டபத்தை மத்திய அரசிடம் கையளிப்பது இல்லை' என்ற தங்கள் நிலைப்பாடு சம்மந் தப்பட்டு உருவானது. மறுபுறம் எமக்கு வருத்தத்தை ஏற்படுத்திய விடயமானது, ஆஸ்பத்திரி வீதியின் பௌதிகத் தோற்றத்தை மாற்றி அமைப்பது தொடர்பான 'அபிவிருத்தி நடவடிக்கை' சம்பந்தப்பட்டு உருவானதாகும். இதன் மூலம், இலங்கையின் வேறெந்த பெருநகரங்களிலும் இல்லாததும், குறிப்பாக யாழ்ப்பாண நகரத்திற்கேயான சிறப்பம்சங்களில் ஒன்றாகக் காணப்படுவதுமான தெருமத்தி வாகனத் தரிப்பிடத்தை நாம் அழிக்க இருக்கின்றோம்.




**பச்சைப்பரப்பு யாழ்ப்பாணநகரம் 2018**

Image source - google earth map

அந்த தெருமத்தி வாகனத்தரிப்பிடம், வெறும் வாகனத்தரிப்பிடம் மாத்திரமல்ல ; பதிலாக அது பெருவிருட்ச நிரைகளையுடைய தெருநடு பச்சைக் கோட்டுருவுமாகும் (green line). கூகுள் தரைப்படப் பயனியூடாக யாழ்ப்பாண நகரத் தரையை வெவ்வேறு காலப்பகுதி சார்ந்து உற்று நோக்கும் போது, அது எவ்வளவு தூரத்திற்கு தனது நகர உடலின் பச்சைப்பரப்பினை இழந்துள்ளது என்பதை அவதானிக்கலாம். அந்த இழப்பு நகரத்தின் சூழலமைப்பை (eco system) பாதித்து இருப்பது மட்டுமல்லாமல், அதனை எவ்வித ஒத்திசைவு மற்ற கட்டடங்களின் காடாக்கி விட்டிருக்கின்ற தென்பதையும் அவதானிக்கலாம்.

> **யாழ்ப்பாண மறுமலர்ச்சியின் ஒரு வரலாற்றுத் தெரு எந்தவிதமான குற்ற உணர்வும் இல்லாமற் பிடுங்கப்பட்டது போன்ற ஒரு நிலவரமே இப்போது ஆஸ்பத்திரி வீதிக்கும் நடைபெற இருக்கிறது.**

அடிப்படையில் நகரம் என்பது ஒரு இடம் (Place). கட்டடக்கலைப் பரப்பிலும், நகர அபிவிருத்தி வடிவமைப்பிலும் இடம் என்பதும் - இட உருவாக்கம் (Place making) என்பதும் முக்கியான ஒன்றாக இன்று வாதிடப்படுகிறது. குறிப்பாக பேரிழப்புக்களையும் - பண்பாட்டு அடையாள அழிவு, அழிப்பு என்பனவற்றையும் சந்தித்த சமூகங்களில் அதன் மீந்திருக்கும் அழிவுக்கு முற்பட்ட கால அடையாளங்களைக் காப்பாற்றுதல் மூலமாக அதன் சமூக - பண்பாட்டு, வரலாற்று அடையாளத்தைத் தக்கவைக்கவேண்டும் என்ற வாதம் மரபுரிமைவாதிகள், கட்டடக்கலைக் கோட்பாட்டாளர்கள், நகரவடிவமைப்பாளர்கள் மற்றும் பண்பாட்டுப் புவியிலாளர்கள் முதலியோர்களால் அதிகம் முன் வைக்கப்பட்டுவருகிறது. அவ்வகையில் ஒரு இடமானது, எதிர்பாராத இயற்கை அனர்த்தம் காரணமாகவோ அல்லது யுத்தம் முதலான நில வரங்களின் கீழாகவோ அழிந்தால் அதனை மீளவும் அதன் பண்டைய நினைவுகள் - செயற்பாடுகளின் தொடர்ச்சியை பேணும் வண்ணம் மீள உருவாக்கப்பட வேண்டும் என இட உருவாக்கக் கோட்பாடு வலியுறுத்துகிறது. என் ஞாபகத்தின்படி 2002 இல் என்று நினைக்கிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'யாழ்ப்பாணக் கட்டடக்கலை' பற்றிய கருத்தரங்கில் கட்ட டக்கலைஞர் ஷயன் குமாரதாஸ் மேற்படி இடவுருவாக்கக் கோட்பாடு தமிழ் சமூகத்தின் மீள் கட்டுமானத்தில் ஏன் முக்கியமானது என்பது பற்றி உரையாற்றியமை நினைவில் இருக்கிறது. ஆனாலும் இத்தனை ஆண்டுகளுக்கு பின்பும், அது பற்றியோ அல்லது எதனைப் பற்றியோ எந்தவிதமான விவாதங்களோ - பிரதிவாதங்களோ இன்றியே தமிழ் சமூகம் காணப்படுகிறது. இந்த நிலவரங்கள் ஈழத்தமிழ் சமூகம் ஒரு தோற்றுப் போய்விட்ட சமூகம் தானா? என்ற கேள்வியை எழுப்புவதைத் என்னால் தவிர்க்க முடியவில்லை.

இந்தப் பின்னணியில் ஆஸ்பத்திரி வீதியானது அதன் பல தசாப்தகால தொடர்ச்சி காரணமாக, யாழ்ப்பாண நகரம் என்ற நகர மரபுரிமையின் எஞ்சியிருக்கும் கூறுகளில் (பல சிதைவுகள் நடந்றேி இருப்பினும்) ஒன்றாகக் காணப்படுகிறது. இருந்தபோதிலும் ஆகக் குறைந்தபட்சம் ஆஸ்பத்திரி வீதியின் எஞ்சிய குறைந்தபட்சப் பண்புகளையாவது காக்க வேண்டும். ஏற்கனவே காங்கேசன்துறை வீதி என்ற காலனியக் கலப்பொட்டுடன் (hybrid) கூடிய தமிழ் நகரங்களின் பொதுப்பண்புடைய தெரு சிதைக்கப்பட்டு விட்டது. இப்போது அது அகன்ற ஒரு வெற்றுத்தெரு மட்டுமே. அதன் கட்டட உடல்களும், தெருவின் அளவும் -

இயல்புகளும் பொதிந்து வைத்திருந்த வரலாற்று ஞாபகங்களும் தடையங்களும் குலைத்தெறியப்பட்டு விட்டன. யாழ்ப்பாண மறுமலர்ச்சியின் ஒரு வரலாற்றுத் தெரு எந்தவிதமான குற்ற உணர்வும் இல்லாமற் பிடுங்கப்பட்டது போன்ற ஒரு நிலவரமே இப்போது ஆஸ்பத்திரி வீதிக்கும் நடைபெற இருக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வீதி இன்னும் பொத்தி வைத்திருக்கும் சில கூறுகளே, பழைய ஆஸ்பத்திரி வீதியை எம்முள் இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றது. அப்படியான ஒரு நகர மரபுரிமையின் மிகச் சிறிய - ஏறத்தாழ அதன் கடைசிக் கூறுகளைத்தான் இப்போது நாம் பலி எடுக்கத் தலைப்பட்டுள்ளோம்.




**1970களில் ஆஸ்பத்திரி வீதி**

Image source - www.facebook.com/AncientCeylon

நன்றி சிறிசோம விக்கிரமநாயக்க

இதில் ஆச்சரியமானது என்னவெனில், நகர பிதா அவர்களிடம் இன்று ஒரு மரபுரிமைக் காப்புப்படையணி ஒன்றுள்ளது. அதனைச் சார்ந்த வளவாளர்கள் ஏன் இந்தத் தெருவின் வரலாற்றுப் பண்பாட்டு முக்கியத்துவத்தை நகரபிதாவின் கனத்திற்கு கொண்டு செல்லவில்லை என்பது எனக்குப் புரியவேயில்லை.

அதேவேளை, 1980களின் நடுப்பகுதி மற்றும் 1990களது முற்பகுதியில் கோட்டையில் இருந்து ஏவப்படும் எறிகணையின் பிரதான எல்லையாகவும் ஆஸ்பத்திரி வீதியே பிரதானதாக அமைந்திருந்தது. அதனைத் தாண்டி ஆஸ்பத்திரிக்குள் வந்து எறிகணைகள் வீழ்ந்தநாட்களும் உண்டு. என்னைப் போன்றவர்களின் நினைவுகளுக்குள் புதிதாக எழுந்து நிற்கின்ற கார்கில்ஸ், ஜெற்விங் ஹொட்டேல் முதலிய கட்டுமானங்களைத் தாண்டி யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுற வுச்சங்கக் கட்டடம், வீழ்ந்து வெடித்த எறிகணையில் சிதறிப்போன சனங்களது நினைவுகள் எல்லாம் ஒட்டியுள்ளன. அந்த நினைவுகள் ஆஸ்பத்திரி வீதியுள் மறைந்துகிடக்கும் பழைய இன்னும் தப்பியொட்டிக் கிடக்கும் சிலபல பௌதீக அம்சங்களால்தான் விளைகின்றன. அப்படிப் பார்க்கும்போது அது ஒரு யுத்த கால நினைவு புதைந்து கிடக்கும் தெருவுங் கூட. ஆங்கிலக் கவர்னரான டைக், யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை நிறுவியதோடு வளரத்தொடங்கிய இத்தெரு 1950களின் பின்னரே இப்போதுள்ள கடைகளின் முன்னோடிக்கடைகள் பெருமளவுக்குத் தோன்றி உருவாகி விரிந்திருந்தாலுங் கூட, மேலே சுட்டிக்காட்டப்பட்ட வரலாற்று விடயங்களாலும் அதற்கான தடயங்களாலும் உருவாகி ஒரு மௌனமான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தெருவாகியும் இருக்கிறது. இன்று ஒசுசல இருக்கும் மின்சாரசபையின் பழைய கட்டடங்கள் உள்ளிட்ட சில கட்டடங்களை விடுத்துப் பார்த்தால் ஆஸ்பத்திரி வீதியிற் காணப்பட்ட காலனிய கட்டட மரபுரிமைகளை நாம் எல்லோரும் கூட்டிணைந்து விழுங்கி ஏப்பமும் விட்டு அமர்ந்தாகிவிட்டது.

சரி, இவை எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். இப்போது இந்த வீதியை அகலிக்க வேண்டிய காரணம் யாது? அப்படி என்ன தலைபோகின்ற பிரச்சினையை இந்த வீதி நகரத்திற்குக் கொடுக்கிறது? ஏற்கனவே பாதசாரிகளுக்கான நடைபாதை இரண்டு புறமும் உள்ளது. வீதியின் இரு புறமும் ஏறத்தாழ இரண்டிரண்டு வாகனங்களுக்கான பாதைகள் உள்ளன. அது சற்று நெருக்கமாக இருப்பது பிரச்சனையா? அல்லது 'பெரியகடைக்கு' கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றி வரும் லொறிகள் உள்ளிட்ட பார ஊர்திகள் நடமாடச் சிரமமாய் உள்ளதா? எதற்காக இந்த நடவடிக்கையில் முனைப்பாய் உள்ளோம்?

இவைதான் பிரச்சினை என்றால், இவற்றைக் கையாள வேறெந்த மாற்று வழியும் இல்லையா? அல்லது ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களைக் காத்து அதன் சமூக வரலாற்றுத் தனித்துவங்களை காப்பதற்கான ஒரு பொறிமுறையானது வாகனங்களுக்கு போய்வர இடங் காணமுடியாதுள்ளது என்பதைவிடவும் முதன்மையானதா?.

மத்திய வாகனத்தரிப்பிடம் காரணமாக பிரச்சினைகள் வருகின்றது எனின் அதனை ஒழுங்குபடுத்தும் மாற்றுச் சிந்தனைகள் எவையும் எம்மிடம் இல்லையா? எந்தெந்த வாகனங்கள் எங்கு நிறுத்தப்பட வேண்டும், எப்படி அவை தரிக்கவேண்டும் என்ற குறைந்த பட்ச வழிகாட்டல்கள் ஏதும் அவ்வீதிக்கு உண்டா? அல்லது இப்போதுள்ள வாகனத்தரிப்பிடச் சிக்கல்களை தீர்க்க நகர அபிவிருத்தித் திட்டமிடலாளர்களது மூல வரைபடங்களில் அதற்கான திட்டங்கள் ஏதும் இல்லையா? கண்டிப்பாக இருக்கும் என்றே நம்புகிறேன். ஒரு குட்டிப்பட்டினத்தைச் சுற்றி வர எவ்வளவு நிமிடங்கள் எடுக்கும்? பாதிவாகனங்களை நகரத்தின் விளிம்பு களில் அமைக்கப்படும் தரைமைய இல்லது தரைக்கீழ் (underground) தரிப்பிடங்களில் விட்டு வைத்துவிட்டு நடந்து தமது செயற்பாடுகளை மேற்கொள்ள மக்களை ஊக்கு

**"**

**பண்பாட்டு அடையாள மற்ற அபிவிருத்திகள் அபிவிருத்திகளே யல்ல' என்றுதானே இன்றைய அபிவிருத்திப் பொருளியலாளர்கள் கூறுகிறார்கள். அந்தக் கூற்று முட்டாள்தன மானது என்று எங்கள் யாழ்ப்பாணத்து அறிஞர் பெருமக்கள் நினைக்கிறார்கள் போலும்?**

விக்க வேண்டாமா? (அது, சலரோகம், இதய நோயுள்ள வர்கள் இந்தச்சாட்டிலாவது நடந்து அவர்கள் உடலிற் தேங்கிக்கிடக்கும் கலோரிகளில் எரிக்க உதவுமே?

கொவிட் 19 க்கு பிற்பட்ட பிரான்ஸ் முதலான நாடுகள் , அதனை முகாந்திரமாக வைத்து நகரத்துள் வரும் வாகனங்களை ஒழுங்குபடுத்தும், கட்டுப்படுத்தும் நிரந் தர செயற்பாடுகளை நோக்கிச் செல்ல, நாமோ தெருக் களை அகலித்தலே வாழ்வின் இலக்காகக் கொண்டு 'உங்கள் படுக்கை அறை வாசல் மட்டும் உங்கள் வாக னத்திலேயே செல்ல வைக்கிறோம்' என்கின்ற மாதிரித் தொழிற்படுகின்றோம். அவ்வகையில் பண்பாட்டு அடையாளம், வரலாற்றுத் தடயத்தை காப்பாற்றுதல், நகரத்தின் தனிச்சிறப்படையாளத்தை தக்கவைத்தல் என் பதைவிட இடித்தழித்து பெரிப்பித்தலே ஞானம் என்ற வாறு தொழிற்படுவது ஏன்? இவையெல்லாம் இல்லாது சிறுபான்மைச் சமூகங்கள் போகவேண்டும் என்று விரும் பும் பண்பாட்டுப் படுகொலைச் செயல்களுக்கு இதன் மூலமாக தெரிந்தும் தெரியாமலும் நாங்களும் முகவர் கள் ஆகுகின்றோமா?

'பண்பாட்டு அடையாளமற்ற அபிவிருத்திகள் அபிவி ருத்திகளேயல்ல' என்றுதானே இன்றைய அபிவிருத்திப் பொருளியலாளர்கள் கூறுகிறார்கள். அந்தக் கூற்று முட் டாள்தனமானது என்று எங்கள் யாழ்ப்பாணத்து அறிஞர் பெருமக்கள் நினைக்கிறார்கள் போலும்?

உண்மையில் நகர வீதிகளின் மிகமுக்கியான பிரச்சினை கள் நகரக்கட்டடங்களுக்கான விதிமுறைகள் ஒழுங்கா கப் பின்பற்றப்படாமையால் உருவானவையாக இருப்ப தைக் காணலாம். அதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் இருக்கலாம். ஆனால், அதனை எல்லாம் ஒழுங்குபடுத் திக் கையாளுவதன் மூலந்தான் இதனைச் செய்ய முடி யும். குறிப்பாக ஆஸ்பத்திரி வீதியில் - குறிப்பாக ஆஸ் பத்திரிக்கு முன்பாக உள்ள தெருத் துண்டை உதார ணத்துக்கு எடுத்துக் கொண்டால், அந்தப் பக்கத்தின் பாதசாரிகளுக்கான நடைபாதைக்கான இடம், அந்தப் பக்க கடைகளால் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிக மாகவோ பல இடங்களில் குழப்பப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் அந்த மாதிரியான விடயங்களில் பல்வேறு காரணங்களுக்காக நாம் வாளாதிருக்கிறோம் என்பதை மறுக்க முடியுமா?. அவற்றிற் தலையிட எங்க ளிடம் சட்டங்கள் இல்லையா அல்லது அவற்றை நடை முறைக்குக் கொண்டுவர எங்களிடம் தற்துணிவு இல் லையா? நாங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு முதுநகரத்தின் அடையாளங்களை அழிப்பதன் மூலம் எமது வரலாற்று தடயங்களை, பண்பாட்டுக் கூறுகளை அழிப்பதிற் பங்கு கொண்டு வரலாற்றுக் கையறுநிலையை விரைந்து உரு வாக்க உள்ளோம் என்பதை ஏன் உணர மறுக்கிறோம்.

அண்மையில் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் கட் டடக்கலை மாநாட்டுக்காக சமாப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுதியைப் (2019) பார்க்க நேர்ந்தது. அதில் ஒரு கட்டுரை எவ்வாறு மாநகர சபை முதலிய வற் றின் பாராமுகமான செயற்பாடுகளுக்கு நடுவே ஆஸ்பத் திரி வீதியின் கட்டட முகப்புக்கள் முதலானவை யாழ்ப் பாண நகரத்தின் முகத்தைச் சீரழிக்கின்ற முறை பற்றி யும், அது எவ்வாறு அதன் நகரவாக்கத்தை மிகக் குழப்ப மான திசையில் எடுத்துச் செல்கி றது என்பது பற்றியும் பேசி இருந் தது. ஆனால் இவ்வகைப்பட்ட ஆய்வுகள் மற்றும் ஆய்வாளர்களது கருத்துக்களை - ஆற்றல்களை நாம் பயன்படுத்த விரும்புவது இல்லை? - அவை தொடர்பில் நமக்கு மாற் றுக் கருத்துக்கள் இருக்கலாம் அல் லது ஏற்புடைமை இல்லாது கூட இருக்கலாம். ஆனால் 'யாரையும் - எக்கருத்தையும் எக்காரணங்கொண் டும் செவிமடுக்க மாட்டோம்' என்ற எமது சுய முனைப்பின் அடிப் படை யாது? என்பது எனக்கு எப் போதும் புரிவதே இல்லை.



**இன்றைய ஆஸ்பத்திரி வீதி : மத்திய தரிப்பிடமும் கடைத்தொகுதிகளும் அதன் வர்ணக் குழப்பங்களும்**

Image source - www.pinterest.co.uk/William Dalrymple

உதாரணமாக, வேம்படிச்சந்தியிலி ருந்து - சத்திரத்துச்சந்திவரை ஆஸ் பத்திரி வீதியைப் பிரதானமாக எடுத் துக் கொண்டால், அதுவொரு குறுந்தூரம். அந்தக்குறுந்தூரத்திற்கு சமாந்தரமாக பல வீதிகள் அல்லது கிட்டிய இடைவெளியில் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி இதன் நெருக்கடியைக் கையாள எங்களி



**ஆஸ்பத்திரி வீதி மத்திய தரிப்பிடம்**

Image source - www.ft.lk

டம் நகரத் திட்டமிடலாளர்கள் இல்லையா? அல்லது பார ஊர்திகள் பொருட்களை எடுத்துவருதற்கான நேரக் கட்டுப்பாட்டை கொண்டுவரமுடியாதா? அவை பின்னிரவில்தான் குறித்த வீதியைப் பயன்படுத்தலாம் என்ற விதிமுறைகள் உலகத்தில் எல்லா இடங்களிலும் தானே உள்ளன?

உலகத்தில் பல நகரங்களில் வாகனங்களைக் கொண்டு செல்லவே அனுமதிக்கப்படாத அல்லது நடந்து செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட வீதிகள் உள்ளன. இவ் வீதிகளை அவர்கள் அதன் பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம் கருதி அல்லது அதனைத் தமது மரபுரிமைத் தெருவாக நிலைநிறுத்தி பாதுகாப்பதற்காக இத்தகைய செயற்பாடுகளை மேற்கோண்டுள்ளார்கள்.

இதற்கப்பாலும் யாழ்ப்பாணத்திற்கான பெரிய ஆஸ்பத்திரிக்கு முன்பாகத்தான் இதனைச்செய்ய முற்படுகிறோம். தெருக்களை மேலும் பெருப்பித்து ஆஸ்பத்திரிக்குக் கிடைக்க வேண்டிய அமைதியை குழப்புகின்றோம். அது மட்டுமில்லாமல் ஆஸ்பத்திரியும் இவ்விடத்திலேயே வீங்கிச் செல்கிறது. இவற்றையெல்லாம் கவனத்திலெடுத்த தொகுப்பட்ட ஒரு பார்வைக் கூடான வலிமை மிக்க திட்டமிடலை ஏன் செய்கிறோமில்லை? இது கடைசியாக பசுக்கன்றின் தலையில் மாட்டிய பானையை எடுத்த 'கன்றுமில்லை, பானையுமில்லை' என்ற கதையாகத்தான் முடியப்போகிறதா?

நகர பிதா அவர்களே, இந்தக் கடிதம் தங்களைக் குற்றஞ்சாட்டவோ அல்லது உங்கள் தன்முனைப்பைத் தூண்டி சினங்கொள்ள வைக்கவோ அல்ல. ஒரு நகரபிதாவோடு உரையாட அந்தநகரத்தின் ஒரு குடிமகனுக்குள்ள உரிமை சார்ந்தது மட்டுமே. ஆனால், என் வயது அனுபவத்தில் இக்கடிதம் பெரும்பாலும் கிணற்றிற் போடும் ஒரு கல்தான் என என் மனஞ் சொல்கிறது. ஆனாலும் துறைசார் சிந்தகனைகள், கூட்டு உழைப்புக்கள் - உரையாடல்கள் மூலமாக ஆரோக்கியமான நிலைவரங்களை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையோடும், ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுப் படுகொலைகளுக்கு உட்பட்ட சமூகத்தில் நாமும் நம்மை அறியாமலே அதில் பங்குபற்றி விட்டோம் என்ற காலஞ் சென்று வரும் ஞானத்தால் (சுடலை ஞானம்?) நாளை நாம் எல்லாம் அவதிப்படாமல் இருக்கவேண்டியும் இதனை எழுதுகிறேன்.

வணக்கம்

தொடரும்.

> **உலகத்தில் பல நகரங்களில் வாகனங்களைக் கொண்டு செல்லவே அனுமதிக்கப்படாத அல்லது நடந்து செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட வீதிகள் உள்ளன. இவ் வீதிகளை அவர்கள் அதன் பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம் கருதி அல்லது அதனைத் தமது மரபுரிமைத் தெருவாக நிலைநிறுத்தி பாதுகாப்பதற்காக இத்தகைய செயற்பாடுகளை மேற்கோண்டுள்ளார்கள்.**




### சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம்

கலாநிதி சு.சிவரெத்தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலையில் இளமாணிப் பட்டத்தையும் முது தத்தவ மாணிப்பட்டத்தையும் பெற்றவர். மதுரை காமராஜர் பல்கலைக் கழத்தில் கலைவரலாற்றில் கலாநிதிப் பட்டம் பெற்று, தற்போது சுவாமி விபுலாநந்தா அழகி யற் கற்கைகள் நிறுவகத்தில் கட்புல தொழில்நுட்பக் கலைகள் துறையின் தலைவராகப் பணி புரிகின்றார். கலைவரலாற்றில் மட்டுமன்றி நாடகம், இலக்கியம், அரசியல், சமூகவியல் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.


# தமிழ் அடையாளத்தினூடாக யாழ். உயர்வர்க்க நலன் பேணல்

**அடையாள அரசியல் என்றால் என்ன என்ற கோட்பாட்டுப் புரிதலை உண்டாக்கி, இலங்கையினுடைய அடையாள அரசியலின் வரலாற்றுப் போக்கினையும், தமிழ் தலைவர்களின் அணுகுமுறைகளையும் விமர்சன நிலையில் நோக்குவதற்கு இந்தத்தொடர் முனைகிறது.**

யாழ். உயர்வர்க்கம் தமது நலன்களுக்காக தமிழ்த் தேசிய உணர்வினையும் அவ்வடையாளத்தி னையும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந் துள்ளதை இலங்கை அரசியல் வரலாறு எடுத்துக் காட்டு கின்றது. டொனமூர் அரசியல் திட்டம் அறி முகப்படுத் தப்பட்ட போதும் தமது நலனை முன்னி றுத்தியே செயற்பட்டனர். டொனமூர் அரசியல் திட்டம் தமிழ் மக்களுக்கு போதுமானதாக இல்லை என எதிர்த்தவர்க ளில் ஜீ.ஜீ.பொன்னம்பலம், சேர்.பொன்.இராமநாதன், அ.மகாதேவா போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

இதில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ்ப் பாண இளைஞர் காங்கிரசின் தேர்தல் பகிஸ்கரிப்பை ஏற்றுக்கொண்டபோ தும் எஸ்.என்.ஆனந்தன் என்பவர் தேர் தலில் போட்டியிடுவதால் அவரை எதிர்த்து போட்டியிடுவதாகவும் தான் தெரிவு செய்யப்பட்டால் வாக்களர்க ளினதும் இளைஞர் காங்கிரசினதும் ஆலோசனையைப் பெற்று செயற்ப டப்போவதாகவும் கூறியிருந்தார். இத னால் அவரை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் முல்லைத்தீவு - மன்னார் தொகுதியில் ஆதரித்தது. (இது யாழ்ப் பாண இளைஞர் காங்கிரசின் கொள்கைத் தெளிவின்மை என்பது வேறு விடயம்)



அருணாசலம் மகாதேவா

Image source - www.hyperleap.com

இதில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தோல்வியடைந்ததும் பகிஸ் கரிப்பு தவறு என்றும் இந்தப் பகிஷ்கரிப்பினால் தேர்ந் தெடுக்கப்படாது விடப்பட்ட யாழ்ப்பாணத்தொகுதி பிரதிநிதிகளை தேர்வு செய்வதற்காக மீண்டும் தேர்தலை நடாத்த வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து மகஜர் அனுப்பியவர்களில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் முக்கி யமானவராக இருந்தார்.

1934 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடைத்தேர்தலில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் பருத்தித்துறை தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். சட்டசபைக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட பின்னர் அவர் சட் டசபையில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் தேர்தல் பகிஷ்கரிப்பை இருட்டிப்புச் செய்து உரையாற்றிய மையையும் தேசாதிபதிக்கு விசுவாச மாக செயற்பட்டமை பற்றியும் சென்ற பகுதியில் சுட்டிக்காட்டப்பட் டது. இது போன்று தேசாதிபதி மனிங்கினால் வழங்கப்பட்ட மேல் மாகாணத்துக்கான தமிழ் உறுப்பு ரிமை டொனமூரினால் கொண்டுவ ரப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்து வத்தினால் இல்லாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலையில் அங்கு உறுப்பினராக இருந்த அ.மகாதேவா 1934ம் ஆண்

**சிங்களத் தேசிய வாதம் தமிழர்க ளையும் காலனித்துவ ஆட்சியாளர்க ளையும் மிகவும் தந்திரோபாய ரீதியில் கையாண்டு தமிழ் தேசிய வாதத் தினை முறியடிப்பதிலும் தமது தேசிய வாதத்தினை வளர்த்தெடுப்ப திலும் புத்திசாலித்த னமாகச் செயற் பட்டு வந்திருப்பதை வரலாறு முழுக்க அவதானிக்க முடிகின்றது.**



சேர்.பொன்.இராமநாதன்

Image source - www.wikipedia.org



ஏ.ஈ குணசிங்க

Image source - www.dinamina.lk



சோல்பரி பிரபு

Image source - www.wikipedia.org

டுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதி யில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். 1936ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்பட்ட 50 பிரதிநிதிகளுள் 38 சிங்களவர்களும் 07 இலங்கைத் தமிழ ரும் 02 இந்தியத் தமிழரும் 02 ஐரோப்பி யரும் ஒரு முஸ்லீமும் இடம்பெற்றிருந் தனர். சிங்களப் பிரதிநிதிகளுக்கிருந்த பெரும்பான்மையினைப் பயன்படுத்தி 10 பேர் கொண்ட அமைச்சரவையை அமைத்தார்கள். இந்த அமைச்சரவையில் எந்தவொரு தமிழ் பிரதிநிதியும் இடம் பெறவில்லை. இதுவே பின்னர் 'முழுச் சிங்கள அமைச்சரவை' என அழைக்கப் பட்டது.

சிங்களத் தேசிய வாதம் தமிழர்களை யும் காலனித்துவ ஆட்சியாளர்களையும் மிகவும் தந்திரோபாய ரீதியில் கையாண்டு தமிழ் தேசிய வாதத்தினை முறியடிப்ப திலும் தமது தேசிய வாதத்தினை வளர்த் தெடுப்பதிலும் புத்திசாலித்த னமாகச் செயற்பட்டு வந்திருப்பதை வரலாறு முழுக்க அவதானிக்க முடிகின்றது. அந் தவகையில் டொனமூர் அரசியல் திட் டம் சிங்களத் தேசிய வாதத்துக்கு கிடைத்த பெரும் கொடை எனலாம்.

"சிங்களப் பிரதிநிதிகள் தமக்குச் சாதக மாக அமைந்த அரசியற்திட்டத்தை ஆதரிப்பதற்காகவும், பிரித்தானிய அர சைத் திருப்திப்படுத்துவதற்காகவும் தமி ழராகிய டபிள்யூ. துரைசாமி என்பவரை அரசாங்க சபையின் சபாநாயகராக நிய மித்தனர். அத்தோடு ஜீ.ஜீ.பொன்னம்பலம், ஆர்.சிறி.பத்மநாதன், ஏ.மகாதேவா அகிய தமிழரை அமைச்சரவையின் நிறைவேற்றுக் குழுவுக்குத் துணை அமைச்சர்களாகத் தெரிவு செய்தனர். உண்மையில் மேற்கு றிப்பிட்ட தமிழர் அப் பதவிகளுக்கு ஆசைப்படாமல், அமைச்சரவையில் தமிழ் பிரதிநிதிகளுக்கு இடம் தரப்ப டவில்லை என்பதையிட்டு பிரித்தானிய அரசுடன் வாதாடியிருக்க வேண்டும். தமிழ்த் தலைவர்கள் தமிழரின் எதிர்காலம் குறித் துத் தூரநோக்குடன் செயற்படாது, தமது சொந்த அபிலாசைகளிலும் பதவி களிலுமே கண்ணாக இருந்துள்ளனர் என்பதனை 18.04.37 ஈழகேசரியில் வெளிவந்த கட்டுரை துல்லியமாகக் காட்டுகிறது". (முருகர் குணசிங்கம், இலங்கையில் தமிழர் - ஒரு முழுமை யான வரலாறு - கி.மு.300 கி.பி 2000)

1942ல் டி.பி.ஜயதிலக்காவின் இடத்துக் குப் பதிலாக அருணாசலம் மகாதேவா உள்நாட்டு அமைச்சராக பதவியேற் றார். இவர் இந்தப் பதவியினைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சிங்களப் பிர திநிதிகளுடன் ஒத்துப்போகின்ற நடவ டிக்கைகளை மேற்கொண்டார்.

இனவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கேட்டு ஒற்றைக்காலில் நின்று குரலெழுப்பிய தமிழ்த் தேசியவாதிகள் இவ்வாறு பதவி களுக்குள் கட்டுப்பட்டு அமைச்சரவைக் கும் டொனமூர் அரசியலமைப்புக்கும் தேசாதிபதிக்கும் விசுவாசமான வர்க ளாக விளங்கினார்கள். தமக்குக் கிடைத்த பதவிகள் மூலம் தேசாதிபதியின் நம்பிக் கையினைப் பெற்று வடகிழக்குத் தமி ழர்களுக்கான ஆட்சியுரிமையினை பெற்றுக்கொடுப்பதற்கான எந்த வொரு செயலையும் இவர்கள் முன்னெடுக்க வில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும். இதனை சந்தர்ப்பவாத தமிழ்த் தேசியத்தின் வெளிப்பாடாகக் கொள்ளமுடியும்.

தமிழ்த் தேசியவாதிகளின் நிலை இது வென்றால் இலங்கைத் தேசியவாதம் பேசி, தொழிற்பட்ட யாழ்ப்பாண இளை ஞர் காங்கிரசின் செயற்பாடுகளும் சிங் கள மக்களாலும் காலனித்துவ ஆட்சி யாளர்களாலும் தமிழ் இனவாதமாகவே புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், டொனமூர் அரசியல் திட்டம் இலங் கைக்கு பூரண சுயாட்சியை வழங்க வில்லை என்று அதனை எதிர்த்து தேர்த லையும் பகிஷ்கரித்த போது அவர்களுக்கு ஆதரவாக தென்னிலங்கையில் எந்த ஒரு பகிஷ்கரிப்பு நடவடிக்கையும் இடம்பெறவில்லை. இலங்கையின் இடதுசாரித் தலைவர்கள் கூட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசுக்கு ஒத்த நடவடிக்கை எதனையுமே மேற் கொள்ளவில்லை. அல்லது அவ்விடதுசாரித் தலைவர் களை தமது நடவடிக்கைக்கு ஒத்த செயற்பாடுகளை

முன்னெடுப்பதற்கான எந்த வேலைத் திட்டமுமின்றி குடாநாட்டுக்குள் மட்டும் நின்று தேசியம் பேசியவர்களாகத்தான் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் 1935 ஆம் ஆண்டில் உருவான லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த இடதுசாரித் தலைவர்களான என்.எம்.பெரேரா, பிலிப்குணவர்த்தன, கொல்வின்.ஆர்.டி. சில்லா, லெஸ்லி குணவர்த்தன, எஸ்.ஏ.விக்கிரமசிங்க, டபிள்யூ.தகநாயக்க போன்ற தலைவர்கள் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் கூட்டங்களில் பேசுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை விட ஜே.ஆர்.ஜெயவர்த்தன, டி.எஸ்.சேனநாயக்க போன்றவர்களும் உரையாற்றியுள்ளார்கள். இவர்கள் எவருமே யாழ்ப்பாண காங்கிரஸ் போன்று தென்னிலங்கையில் டொனமூர் திட்டத்தை எதிர்க்கவில்லை என்பதோடு தென்னிலங்கைக்கு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் கொள்கையினை எடுத்துச் செல்லவும் இல்லை. இதனால் சிங்கள மக்களிடம் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் ஒரு இனவாத அமைப்பாகவே கருதப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் ஏற்கனவே தமிழர் மகா சபை, மற்றும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்களின் செயற்பாடுகள் காரணமாக காங்கிரசிற்கு இனவாதச் சாயம் பூசப்பட்டிருக்கிறது. இது பற்றி யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் ஸ்தாபகரான ஹன்டி பேரின்பநாயகம் குறிப்பிடுகையில் “பல பொறுப்புவாய்ந்த சிங்களத் தலைவர்கள் பகிஷ்கரிப்பு மற்றும் அதன் பொருட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு விடாப்பிடியாக இனவாத அர்த்தம் கற்பித்து வந்துள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மாநாட்டில் காலம் சென்ற டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் நானும் சந்தித்த சந்தர்ப்பத்தில், பகிஷ்கரிப்பு நடவடிக்கை இனவாத நோக்கங்களினால் உந்தப்பட்டது என அவர் கூறியபோது, அது அப்படியல்ல என நான் மறுதலித்தது ஞாபகமாக இருக்கிறது. அண்மையில் திரு.எச்.ஏ.ஜே.ஹலுகல்ல எழுதிய டி.ஆர்.விஜயவர்த்தன சரிதையில் அதே பழியை சுமத்தியுள்ளார். எமது வாழ்க்கை வரலாற்றையும் ஒரு ஐக்கியப்பட்ட சுதந்திரமான இலங்கை என்ற இலட்சியத்திற்கு நாங்கள் இடையறாது அர்ப்பணித்து நின்றதற்காக கொடுத்த விலையையும் கணக்கில் எடுத்தால் எவருமே அவ்வாறான கருத்தை ஏற்றுக்கொள்ள



**சேர் ஒலிவர் குணதிலக்கவுடன் ஜெனிங்க்ஸ்**

Image source - www.namathumalayagam.com

முடியாது. டொனமூர் சீர்திருத்தங்கள் முழுமையான சுதந்திரத்துக்கு மிகவும் குறைவாக இருந்ததன் காரணமாகவே பகிஷ்கரிப்பு இயக்கம் முடுக்கிவிடப்பட்டது.” (மேற்கோள். சாந்தசீலர் கதிர்காமர், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்)

இதுபோன்றே காங்கிரசின் தேர்தல் பகிஷ்கரிப்பினை காலனித்துவ ஆட்சியாளர்களும் இனவாதத் தன்மை கொண்ட ஒன்றாகவே பார்த்தனர். “1931 மே 6 ஆம் திகதி ஆளுநர் உத்தியோக பூர்வமாக அனுப்பி வைத்த தந்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் “ பகிஷ்கரிப்பிற்கான வெளிப்படைக் காரணம் புதிய அரசியலமைப்பானது சுதந்திரத்தை எட்டுவதற்கு முன்னேற்றம் போதுமானது அல்ல என்பதாகும். ஆனால் தமிழர் தமக்குக் கிடைத்த பிரதிநிதித்துவம் போதுமானது அல்ல என்ற அதிருப்தியே உண்மையான காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.” ( சாந்தசீலர் கதிர்காமர், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்) இது போன்றே 1931இல் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் திரு.ஓர்ம்ஸ்பி குடியேற்ற நாட்டுக்கான பிரதிச் செயலாளரிடம் “இலங்கையில் வடபகுதித் தமிழர்கள் தமக்கு இனரீதியான பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டு ஏனைய இனங்களோடு பொது இடாப்பில் அல்லது பதிவில் சேர்க்கப்பட்

**1942ல் டி.பி.ஜயதிலக்காவின் இடத்துக்குப் பதிலாக அருணாசலம் மகாதேவா உள்நாட்டு அமைச்சராக பதவியேற்றார். இவர் இந்தப் பதவியினைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சிங்களப் பிரதிநிதிகளுடன் ஒத்துப்போகின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார்.**

டதே தேர்தல் பகிஷ்கரிப்பிற்கான பிரதான காரணம் அல்லவா?” (மேற்படி நூல்) என கேள்வியெழுப்பியிருந் தார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயம் இனவாதம் பேசிய தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தேசியவாதிகளு டன் ஒட்டி உறவாடிக்கொண்டதும், இலங்கைத் தேசி யம் பேசிய தமிழ்த் தலைவர்கள் இனவாதிகளாகப் புரிந் துகொள்ளப்பட்டமையுமாகும். இந்த நிலைக்கு சிங்கள மக்களோ அல்லது சிங்களத் தலைவர்களோ அல்லது காலனித்துவ ஆட்சியாளர்களோ பொறுப்பல்ல. ஒரு போராட்டத்தை முன்னெடுத்த எமது தலைவர்கள் அப் போராட்டத்தின் நியாயத்தன்மையினை எந்தளவுக்கு இலங்கைமயப்படுத்தினார்கள், பிரித்தானியாவுக்கு எவ் வாறு புரியவைத்தார்கள் என்பதிலே தங்கியுள்ளது. இதற் குக் காரணம் அந்தப் போராட்டத் தலைமைத்துவத்தின் வர்க்க குணாம்சம் எனலாம். தமிழ்த் தேசியப் போராட் டத்தின் இன்றைய நிலைக்கும் இந்த தலைமைத்துவங்க ளின் இந்த வர்க்ககுணாம்சம்தான் காரணம் என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.



**1931 இல் டொனமூர் சீர்த்திருத்தத்தின் மூலம் இலங்கையின் சர்வஜன வாக்குரிமை அளிக்கப்பட்டபோது பெண்களும் ஆண்களுக்கு நிகராக வாக்குரிமை பெற்றவெற்றி**

Image source - www.namathumalayagam.com

**டொனமூர் அரசியல் திட்டமும் சர்வசன வாக்குரிமையும்**

டொனமூர் அரசியல் திட்டத்தினால் அறிமுகப்படுத்தப் பட்ட சர்வசன வாக்குரிமையினை யாழ்ப்பாண இளை ஞர் காங்கிரஸ் வரவேற்ற போதிலும் அது எதிர்காலத்தில் ஏற்படுத்தவிருக்கும் தேர்தல் மைய அரசியல் தொடர் பாக விளக்கம் பெற்றவர்களாகவோ அல்லது சர்வசன வாக்குரிமையினை மக்கள்நல அரசியலுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பாக சிந்தித்த வர்களா கவோ இவர்கள் எவரும் இருக்கவில்லை;.

சர்வசனவாக்குரிமை தொடர்பாக பின்வரும் இருவித நிலைப்பாடுகள் காணப்பட்டன.

1. சர்வசன வாக்குரிமையின் ஊடாக மக்கள் நல அரசி யலை முன்னெடுக்க முடியும் என்று செயற்பட்டவர்கள்

இந்த விடயம் தொடர்பாக கரிசனை எடுத்துக் கொண்ட வர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி.ஈ.ஆர்.தம்பி முத்து அவர்களும் திருமதி சி.இ.த.சில்வா அவர்களும் ஆவர். படித்த சொத்துள்ள உயர்வர்க்க ஆண்கள் அரசிய லில் பங்கு பற்றி எல்லாருடைய நலன்களையும் தீர்மா னிக்கின்றவர்களாக இருந்த சூழலில், பெண் கள் அரசியலில் பங்குபற்றுவதற்கு வேண்டிய அடிப்படை உரிமையாகிய வாக்குரிமைக் காக, பல்வேறுபட்ட ஆண்மையவாத அரசி யல் அமைப்புக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் ‘பெண்கள் வாக்குரிமைச் சபை’ என ஒன்றை அமைத்து பெண்களின் வாக்குரிமைக்காக குரல்கொடுத்து, டொனமூர் ஆணைக்குழுவி னரை 1928 ஜனவரி 14 இல் சந்தித்து இலங் கையில் ஆண்களுக்குச் சமனாக பெண்களும் வாக்குரிமையினை பயன்படுத்த வேண்டும் என்பதற்கும் அப்பால் ஏன் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என் பதை பின்வரும் காரணங்களை முன்வைத்து எடுத்துக்காட்டியிருந்தனர்.

- இலங்கையில் குழந்தை இறப்பு உயிர் விகிதம்
- வீடமைப்பில் சீர்திருத்தத் தேவை
- குழந்தை நலம்
- மருத்துவம்
- கர்ப்பிணிகளுக்கான உதவி


மேலுள்ள ஐந்து காரணங்களும் பொதுவான மனிதகுல விருத்தியின் அடிப்படைத் தேவை களாக இருக்கின்றன. பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்பு, பூரண சுயாட்சி போன்றவை பற்றி ஆண்கள் ஈடுபாடுகாட்ட, பெண்களோ கிடைத்தி ருக் கின்ற வாய்ப்பை பொதுவான மனிதகுல அடிப்படைத் தேவைகள் தொடர்பாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்று சிந்தித்து செயற்பட்டிருக்கிறார்கள். அத்துடன் இவ் ஐந்து கோரிக்கைகளையும் ஒரு அரசியல் தேவைப் பாடாக எடுத்துக்காட்டியுள்ளதில் இருந்து இப் பெண் கள் அரசியலையும் சமூகவிருத்தியையும் எவ்வாறு ஒன் றோடொன்று இணைந்ததாக நோக்கியுள்ளார்கள் எனும் அவர்களின் தூர நோக்கான அரசியல் பார்வையையும் இது தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறு யதார்த்தத்தை புரிந்து அதற்கேற்றாற்போல் அரசியல் நகர்வுகளை எடுக்க தமிழ்த்

தலைவர்கள் தவறியிருக்கின்றனர்.
டொனமூர் ஆணைக்குழுவினர் இப் பெண்களின் கோரிக் கையினை சாதகமாக அணுகினர் என்பதை அவர்களு டைய அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் இது பற்றி பின்வருமாறு அறிக்கை செய்துள்ளனர். " பெண்கள் வாக்குரிமை பற்றிய கேள்வியை நாம் கருத்துடன் ஆராய்ந் துள்ளோம். அவர்கள் சார்பில் எடுத்துக் கூறப்படும் வழக் கமான வாதங்கள், ஆண் பெண் சமத்துவம் ஆகியவற் றைத் தவிர, இலங்கையில் குழந்தை இறப்பு உயிர் விகிதம், வீடமைப்பில் சீர்திருத்தத் தேவை, குழந்தை நலம், மருத் துவம், கர்ப்பிணிகளுக்கான உதவி ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்கப்பட வேண்டிய தேவை ஆகியன எம்மைக் கவர்ந் தன. இச் சிக்கல்கள் யாவற்றையும் தீர்ப்பதில் பெண்க ளின் ஆர்வமும் உதவியும் மிகுந்த பயனளிக்கும்" என அவர்கள் இப் பெண்களுடைய கருத்தினைச் சார்ந்து சிந் தித்துள்ளார்கள்.

ஆயினும் அப்போதைய ஆண்மையவாத அதிகாரத்துவ அரசியல் தலைவர்கள் இந்த மக்கள்நல அரசியலை அல் லது இவர்களுடைய கோரிக்கையின் நியாயப்பாட்டினை கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

சேர்.பொன்.இராமநாதன் போன்ற தலைவர்கள் வெள் ளாளரல்லாத சாதியினருக்கும் பெண்களுக்கும் வாக்கு ரிமை அளிப்பது கும்பலாட்சிக்கு வழிவகுக்கும் ஒரு பாரிய பிழையென்றும் அவ்வாறு வாக்குரிமை வழங்கு வது இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்றும் நம்பினர், வாதிட்டனர். ஏ.ஈ.குணசிங்காவினைத் தவிர வேறெந்தத் தலைவர்களும் சர்வசன வாக்குரிமை வேண்டுமென்று வாதிடவில்லை. இது போல மிக முக்கி யமான அரசியல் செயற்பாட்டில் இருந்த இலங்கை தேசிய காங்கிரஸ், தமிழர் மகாஜன சபை, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், மற்றும் இடது சாரிச் சிந்தனை யா ளர்கள் என எவருமே சர்வசன வாக்குரிமைக்கு அல்லது பெண்கள் வாக்குரிமைக்கு சார்பாக குரல்கொடுத்ததாக பதிவுகள் எதுவும் இல்லை. இவ்வாறு இவர்கள் மௌன மாக இருந்தது அல்லது சர்வசன வாக்குரிமை வேண்டாம் என எதிர்த்தற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக பெண்க ளுக்கு வாக்குரிமை வழங்குவது இருந்திருக்கலாம். தமது இன சகோதரிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வாக்குரிமையினை வழங்க கூடாது என்று சிந்தித்து செயற்பட்ட எமது தலைவர்கள் ஆங்கிலேயர் தங்களுக்கு சுயாட்சியினை வழங்க வேண்டும் என எதிர்பார்ப்பது எவ்வாறு தார்மீகத்தனமுடையதாக இருக்க முடியும்?

சர்வசன வாக்குரிமையுடன் கூடிய வேறுபல திருத்தங்க ளுடன் இவ்வரசியல் திட்டம் சட்டநிருபணசபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஒரு வாக்கினால் இவ்வரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்த ஒரு வாக்கினை செலுத்தி, திருமதி.தம்பிமுத்துவின் கணவர் இ.ஆர்.தம்பிமுத்து அவர்களே அதற்கு ஆதரவாக வாக்க ளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் ஆதரவாக வாக்களித்ததில் திருமதி தம்பிமுத்துவின் செல் வாக்கு இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் டொனமூர் அரசியல் திட்டத்தினை யாழ்ப்பாண இளை



**ஏ.ஈ குணசிங்கவும் டி.எஸ் சேனநாயக்கவும்**
Image source - www.dailymirror.lk

ஞர் காங்கிரஸ் நிராகரித்தும் சேர்.பொன்.இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற தமிழ் தலைவர்கள் அனை வரும் அதற்கு எதிராக வாக்களித்த சூழலில் திரு.இ.ஆர். தம்பிமுத்து மாத்திரம் அதற்கு ஆதரவாக வாக்களித்ததி லிருந்து இதனை விளங்கிக்கொள்ளமுடியும்.

எனவே திருமதி. தம்பிமுத்து அவர்கள் பெண்களுக்கான வாக்குரிமை விடயத்தில் இனம், மதம், சாதி, பிரதேசம், என்பவற்றுக்கப்பால் சிந்தித்து மனிதகுல விருத்திக்கு பெண்களின் அரசியல் பங்கு பற்றல் அவசியம் என்ற ஒரு திடமான கொள்கையுடன் இருந்திருக்கிறார். வாக்குரி மையினை மக்களின் நலனுக்கு பாவிக்க வேண்டும் என் பதே இவர்களுடைய பிரதான நோக்கமாக இருந்திருக்கி றது. தம்மையும் தமது அதிகாரத்தினையும் மட்டும் வைத்து அரசியல் கோரிக்கைகளை முன்வைக்காமல் பொது வான மனிதகுலவிருத்தி தொடர்பாக சிந்தித்தமையினாலேயே பெண்களுக்கான வாக்குரிமைக் கோரிக்கை வெற்றிய டைந்தது எனலாம்.

**2.** தோட்டத்தொழிலாளர்கள் தொடர்பான அச்ச உணர்வு கொண்டு செயற்பட்டவர்கள்

**நாம் இங்கு இங்கு கவனிக்க வேண்டியது எமது தமிழ் தலைவர்கள் பிரதிநிதித்துவ அதிகரிப்புப் பற்றியும் பூரண சுயாட்சி பற்றியும் கேட்டபோது, தங்களுடைய உரையாடல் வட்டத்துக்கு அப்பால் இலங்கையிலுள்ள மற்றவர்கள் தமது இனத்துக்கான பொறிமுறைபற்றிச் சிந்தித்து செயற்பட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள்.**

சர்வசன வாக்குரிமை என்ற பேச்சு எழும்வரைக்கும் தோட்டத்தொழிலாளர்கள் தொடர்பாக எவரும் குறிப்பிட்டு எதுவும் கூறியதில்லை. கொழும்புவாழ் மலையாள, பாகிஸ்தானிய தொழிலாளிகளைப் போல், இவர்கள் தங்களுடைய வேலைகளைப் பறித்துக் கொள்கிறார்கள் அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என எவருமே கோரிக்கை விடுக்கவும் இல்லை. ஆனால் வாக்குரிமை பெற்று அரசியல் முடிவுகளை தீர்மானிப்பவர்களாக இவர்கள் வருவதை எவருமே விரும்பவில்லை. 1928 ஆம் ஆண்டு சட்ட நிர்வாக சபையில் தோட்டத் தொழிலாளர்களுடைய வாக்குரிமையால் சிங்களவர் சிறுபான்மையாகி விடுவர் என்ற அச்சத்தை வெளிப்படையாக முன்வைத்துள்ளனர்.

“பிரான்சிஸ் மொலாமூர் ‘இந்திய அச்சுறுத்தல்’ பற்றி உரிய நேரத்தில் எச்சரிக்கிறேன் என்று கூறினார். பொதுசன வாக்குரிமை அடிப்படையிலான தேர்தலில் எதிர்காலத்தில் இனவாதத்தை ஒரு சுலோகமாக்குவதில் உள்ள அரசியலை அவர் தெளிவாகக் காட்டினார். அவரை விமர்சித்தவர்களுக்குப் பதிலளிக்கும் போது இன வேறுபாடுகாட்டாத கொள்கைகளை ஆதரிக்கும் வேட்பாளர்களுக்கு தேர்தலில் தோல்வி ஏற்படும் என்று கூறினார். “நான் இந்தச் சவாலை விடுக்கிறேன். அவர்கள் கிராமங்களுக்குப் போய் தமது மேடைப் பிரசாரத்தில் “என்னை சட்டசபைக்கு அனுப்புங்கள். நான் இலங்கையர்களுக்கும் இலங்கையர்கள் அல்லாதவர்களுக்கும் இடையே எந்த வேறுபாடும் காட்டமாட்டேன்.” என்று கூறட்டும் அவருடைய எதிர் வேட்பாளரோ இலங்கையருக்காக இலங்கையைக் காப்பதே என் நோக்கம்” என்று சொல்லட்டும்” இவ்விவாதத்தில் சி.டபிள்யூ.கன்னங்கராவும் ‘இலங்கையின் நிலையான மக்களை’ செயலறச் செய்யக் கூடிய இந்திய அச்சுறுத்தல் பற்றிக் கூறி இந்தியரின் வாக்குரிமையை எதிர்த்தார் துரோகிகள் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார். ( மேற்கோள் - குமாரி ஜயவர்த்தன)

ஏ.ஈ.குணசிங்க தொழிற்சங்கத் தலைவராக இருந்த போது தோட்டத் தொழிலாளர்களுக்கான வாக்குரிமையினை ஆதரித்துப் பேசியிருந்தார். “இந்தியர்கள் சிங்களத் தொழிலாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் எனச் சில செல்வந்தர் பேசுகின்றனர். தமது தொழிலாளர் துன்பமும் தொல்லையும் உற்றபோதும் மனச்சாட்சியும் நாட்டுப்பற்றும் உடைய இந்தச் செல்வந்தர் என்ன செய்தனர். நமது நாட்டு ஏழைகளுக்கு உதவுவதற்குப் பதில், ஏழை கிராமத்தவனை அவனது சிறுதுண்டு நிலத்திலிருந்து விரட்டி அடிப்பதில் தமது சக்தியை செலவழித்தனர். இப்போது இவர்களுக்கு நாட்டுப்பற்று வளர்ந்துள்ளது. இந்த அக்கறைக்கு காரணம் என்ன? ஏழைகளுக்கு கொடுக்கப்பட்ட வாக்குரிமையே காரணம். இதே செல்வந்தர்கள்தான் விசேட ஆணைக்குழுவுக்கு சர்வசனவாக்குரிமை வழங்குவதை எதிர்த்துக் கூறியவர்கள். தமது திட்டத்தில் தோல்வியுற்ற இவர்கள் இப்போது இந்தியர்களுக்கு வாக்குரிமைமறுப்பது பற்றிப் பேசுகின்றனர்.”(மேற்கோள்குமாரி ஜயவர்த்தன)

நாம் இங்கு இங்கு கவனிக்க வேண்டியது எமது தமிழ் தலைவர்கள் பிரதிநிதித்துவ அதிகரிப்புப் பற்றியும் பூரண சுயாட்சி பற்றியும் கேட்டபோது, தங்களுடைய உரையாடல் வட்டத்துக்கு அப்பால் இலங்கையிலுள்ள மற்றவர்கள் தமது இனத்துக்கான பொறிமுறைபற்றிச் சிந்தித்து செயற்பட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள். தமிழர் நலன் தொடர்பாகப் பேசியவர்களுக்கு ஏ.ஈ. குணசிங்க அவர்களுடைய உரையாவது ஒரு இன உணர்வை வழங்காத அளவுக்கு மேலாதிக்க உணர்வுகளால் கட்டுண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

## சோல்பரி அரசியல் திட்டம்

டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறையிலிருந்தாலும் அவ்வரசியல் திட்டத்தின் போதாமைகள் குறித்தும் அது திருத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இலங்கை அரசியல் தலைவர்களினால் தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. இக் கோரிக்கைகளினைத் தொடர்ந்து பிரித்தானிய அரசு ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. “அப்பிரகடனம் போரை அடுத்து நடத்தப்படும் அரசியல் திட்டச் சீர்திருத்தப் பரிசீலனை அதிகாரத்தை இலங்கைக்கு முடியின் அரசாணையின் கீழ், முழுமையான பொறுப்பாட்சி அதிகாரத்தை வழங்கும் என்றும், அப்பொறுப்பாட்சியானது உள்ளூர் சிவில் நிர்வாக அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்றும் குறிப்பிட்டது. இலங்கையின் பாதுகாப்பும் வெளிநாட்டு விவகாரங்களும் பிரித்தானிய அரசின் அதிகாரத்தின் கீழ், அதன் ஆலோசனைப்படி நடத்த ஒழுங்குகள் செய்யப்படும். இடைக்காலத்தில் மந்திரிமார் முழுமையான ஒரு அரசியல் திட்டத்துக்கான பிரேரணைகளை முன்வைக்கலாம். ஆனால் அத்தகைய அரசியல் திட்ட வரைவு மேற்சொன்ன பிரகடனத்தோடு ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். மேலும் அரசாங்க சபை அங்கத்தவர்களின் ¾ பங்கினரின் சம்மதத்தை அது பெற்றதாகவும் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டது.” ( அம்பலவாணர் சிவராஜா)

இதற்கிணங்க மந்திரிமார் அரசியல் திட்ட நகல் ஒன்றை தயார் செய்து 1944 ஆம் ஆண்டு பெப்ரவரியில் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பிவைத்தனர். பிரித்தானிய அரசு அதே ஆண்டு டிசம்பரில் சோல்பரி பிரபுவைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை இலங்கையின் யாப்புத் சீர்திருத்தத்துக்காக அனுப்பிவைத்தது. இக்குழுவினர் 1945 ஆம் ஆண்டு வரை இலங்கையில் தங்கியிருந்து பல் வேறுபட்ட குழுக்களையும் பிரதிநிதி களையும் சந்தித்து கலந்துரையாடி இலங்கைக்குப் பொருத்தமானதொரு யாப்பினை தயாரிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே டொனமூர் அரசியல் திட்டத்தில் இனவாரிப் பிரதிநிதித்துவம் கோரி தோல்வியடைந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் இம்முறை அந்தக் கோரிக்கையின் தோல்வியினைப் படிப்பினையாகக் கொண்டு தமிழர்களுக்குரிய அரசியல் உரிமையினைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை வகுத்திருக்க வேண்டும். ஆகக் குறைந்தது டொனமூர் அரசியல் திட்டத்தின் மூலம் சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகளை பெரும்பான்மையினர் எவ்வாறு உதாசீனப்படுத்தி செயற்பட்டார்கள் என்பதைப் பட்டியலிட்டு சிறுபான்மையினருக்கு பொருத்தமான ,எல்லோராலும் எற்றுக்கொள்ளக்கூடிய ,யதார்த்தபூர்வமான ஒரு அரசியல் திட்டத்தை முன்வைத்திருக்க வேண்டும்.

இதனை அவர்கள் மேற்கொள்ளாதமைக்குக் காரணம் சிங்களத் தலைவர்களால் சமயோசிதமாக வழங்கப்பட்ட சலுகைகளைப் பெற்று சுகபோகங்களை அனுபவித்துவித்தமையினால் குறைகளை எடுத்துக்காட்டுவதற்குரிய தார்மீகத்தினை இழந்திருந்தமையினாலாகும். இருந்த போதிலும் திரு.சின்னத்துரை அவர்களும் எம். கணபதிப்பிள்ளை (All Ceylon Aboriginal Inhabitants Association, Jaffna) அவர்களும் தமிழ் பிரதேசத்துக்கு சமஷ்டி அரசியல் அமைப்புமுறை வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்திருந்தனர். இவர்களுடைய இந்த தூர நோக்கிலான கோரிக்கையினை தமிழர்களிடத்தில் கதாநாயகத் தன்மைபெற்றிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் பொருட்படுத்தாமல் அதிக பிரதிநிதித்துவத்தினைப் பெறுவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் பொருளாதார முன்னேற்றத்தினையும் அடையலாம் என தமிழ் மக்களை நம்பவைத்து 50:50 எனும் கோரிக்கையினை நடைமுறைச்சாத்தியமான கோரிக்கையாக பிரித்தானிய அரசிடம் முன்வைத்தனர்.

இக்கோரிக்கைக்கு மகாதேவா, செல்வநாயகம், நாகநாதன், போன்றவர்கள் பக்கபலமாக இருந்தனர். அத்துடன் மலேய முஸ்லீம் பிரதிநிதியான டி.பி.ஜாயா, இந்திய தமிழ்ப் பிரதிநிதியான கே.நடேச ஐயர், இவர்களை விட பறங்கிய, ஐரோப்பியப் பிரதிநிதிகளும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களுடைய கோரிக்கைக்கு ஆதரவினை வழங்கினர். ஆயினும் சிறுபான்மையினருக்கான 50 வீத பிரதிநிதித்துவத்தை விகிதாசார அடிப்படையில் முஸ்லீம்களுக்கு வழங்க மறுத்தமையினால் முஸ்லீம் லீக் தனது ஆதரவினை வழங்கவில்லை. மொத்த சனத் தொகையில் 75 வீதமாக இருக்கும் சிங்கள மக்களுக்கு 50 வீதமான பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் சிறுபான்மையினருக்கான 50 வீதத்தில் மற்ற சிறுபான்மையினருக்கு விகிதாசார அடிப்படையில் வழங்க மறுத்திருப்பது அவருடைய அரசியல் நேர்மையீனத்தக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இருந்த போதும் அன்றைய முக்கிய சிங்களத் தலைவராயிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் 50:50 கோரிக்கைக்குப் பதிலாக 60:40 என்ற பிரதிநிதித்துவம் தொடர்பாக பேசுவதற்கு முன்வந்த போதும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அப்போது தேசாதிபதியாக இருந்த சேர்.அன்றூ கல்டிகொட் 50:50 கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளாதவராகவே இருந்தார்.

அ.மகாதேவா 50:50 கோரிக்கையினை ஆரம்பத்தில் ஆதரித்திருந்தபோதிலும் அக்கோரிக்கையின் நியாயப் பாடின்மையைப் புரிந்து கொண்டு 60:40 எனும் கொள்கையினை முன்னிறுத்திச் செயற்பட்டார்.

அப்போது சிங்கள மக்களின் முக்கிய தலைவராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் சேர்.ஐவர் ஜெனிங்ஸ் அவர்களுடைய உதவியினைப் பெற்று மிகவும் புத்திசாலித்தனமாக செயற்பட்டார். சேர்.ஐவர் ஜெனிங்ஸ் பிரித்தானிய அரசியல் யாப்பில் ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்றிருந்ததோடு பிரித்தானிய ஆட்சியாளர்களின் நம்பிக்கைக்குரியவருமாக இருந்தார். இவர் யுனிவசிற்றி கொலிஜ் அதிபராகவும் அதன் பின் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரிடமே டி.எஸ்.சேனநாயக்கா சிறுபான்மையினரின் உரிமைகளை உள்ளடக்கக்கூடிய வெஸ்ற்மினிஸ்ரர் பாராளுமன்ற முன்னுதாரணத்தினைப் பின்பற்றி அரசியல் யாப்பினை வரையும் பொறுப்பினை ஒப்படைத்திருந்தார். இவரால் வரையப்பட்ட திட்டம் ‘மந்திரிகள் நகல் திட்டம்’ என அழைக்கப்பட்டது.
இந்தச் சூழ்நிலையில் சோல்பரி ஆணைக்குழுவினரிடம் மூன்றுவிதமான அரசியல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

1. டி.எஸ். சேனநாயக்காவினுடைய முயற்சியினால் சேர்.ஐவர் ஜெனிங்ஸ் அவர்களினால் தயாரிக்கப்பட்ட ‘மந்திரிகள் நகல் திட்டம்’

2. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட அவரால் அகில இலங்கை தமிழ் காங்கிரசினால் தயாரிக்கப்பட்ட 50:50 எனும் பிரதிநிதித்து வத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டம்.

3. மகாதேவா குழுவினரால் தயாரிக்கப்பட்ட 60:40 எனும் பிரதிநிதித்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டம்.

சோல்பரி ஆணைக்குழுவினர் அகில இலங்கை தமிழ் காங்கிர சினால் தயாரிக்கப்பட்ட அர சியல் திட்டம் 12 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்ததால் அதனை நிராகரித்தனர். இது போன்றே மகாதேவா அவர்க ளினால் தயாரிக்கப்பட்ட திட் டத்தினையும் நிராகரித்தனர். சட்டசபையில் 2/3 பெரும் பான்மையினைப் பெற்றிருந்த மந்திரிகள் நகல் திட்டத்தினை ஏற்று அதனை சீர்திருத்தி சமர்ப் பித்தனர். இதில் கவனிக்கத்தக்க விடயம் சிங்கள மகாசபையை ஆரம்பித்த எஸ்.டபிள்யு.ஆர். டி.பண்டாரநாயக்காவோ அல் லது தொழிற்சங்கவாதியாக இருந்து சிங்கள இனவாதம் பேசிய ஏ.ஈ.குணசிங்காவோ எந்தவிதமான அரசியல் திட் டங்களையும் தயாரிக்கவும் இல்லை. சோல்பரிக்குழுவி னரை சந்திக்கவும் இல்லை. இது டி.எஸ்.சேனநாயக்கவுக்கு தகுந்த புறச்சூழ்நிலையினை வழங்கியிருந்தது என்ப தேயா கும்.



**தந்தை செல்வா**
Image source - www.dailymirror.lk

ஆனால் தமிழர்கள் அகவயரீதியாகவும் புறவயரீதியாகவும் முரண்பட்ட சூழ்நிலைகளுடனேயே சோல்பரிக்குழுவி னரை எதிர்கொண்டிருக்கின்றார்கள். இந்த முரண்பாடு களுடன்தான் ஏற்றுக்கொள்ளமுடியாத 50:50 எனும் கோரிக்கைக்கு ஆதரவு தேடி ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர் கள் பிரித்தானியா சென்றிருந்தார். அப்போது சோல்பரி அரசியல் திட்டம் அரசாங்க சபையில் சமர்ப்பிக்கப்பட் டது. அதனை ஆதரித்து டி.எஸ்.சேனநாயக்கா பின்வரு மாறு உரையாற்றினார்.

"எமது நோக்கங்களின் நேர்மையை எந்த நியாயமான மனி தனும் சந்தேகிக்க மாட்டான். சிறுபான்மையினருக்கு அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதிலும் பார்க்க அதிக பங்கு கிடைக்கக்கூடிய திட்டம் ஒன்றைத் தயாரித்தோம். அவர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் சட்டங்கள் இயற்ற முடியாத ஒழுங்குகளைச் செய்துள்ளோம். கவர்னர் ஜென ரல் பக்கச் சார்பற்ற வகையில் நடப்பார் என்று சிறு பான் மையினர் கருதுவதால், அவரிடம் முக்கிய அதிகாரங்க ளைக் கொடுத்தோம். தமக்குப் பாதுகாப்பளிப்பதற்குத் தேவை எனச் சிறுபான்மையினர் கோரிய சுதந்திரமான அரசாங்க சேவைக் கமிஷனையும் கொடுக்க முடிவுசெய் துள்ளோம்." (மேற்கோள்.த.சபாரெத்தினம்) என மிக நம்ப கமான உரையொன்றினை ஆற்றியிருந்தார்.

இத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது 51 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 3பேர் எதிராகவும் வாக்க ளித்தனர். ஆதரித்து வாக்களித்தவர்களில் 5 பேர் தமிழர், 3 பேர் முஸ்லீம்கள், 4 பேர் ஐரோப்பியர்கள், ஒருவர் பறங்கி யர். எதிர்த்து வாக்களித்தவர்களில் ஒருவர் சிங்களவர், இரண்டு பேர் இந்தியத் தமிழர். ஆதரித்து வாக்களித்தவர் களில் முக்கியமானவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் கோரிக் கைக்கு பக்கபலமாக இருந்த திரு.அ. மகா தேவா ஆவார். அரசாங்க சபையில் இருந்த தமிழ்ப்பிரதி நிதிகளே 50:50 கோரிக்கையினை ஏற்காதநிலையில் பிரித்தானிய அரசும் ஜீ.ஜீ.யின் கோரிக் கையினை மிக இலகுவாக புறந்தள்ளி விட்டது. 50:50 நிராகரிக்கப்பட்டால் மாற்றுவழியாக எதை முன்வைப்பது என்பது தொடர்பாகவும் தமிழர்கள் தலைசிறந்த அறிவாளிகள் எனக் கரு திய இந்த அறிவாளிகளிடம் திட்ட மேதும் இருக்க வில்லை.

தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்து தமி ழரசுக் கட்சியை ஆரம்பித்ததன் பின் நடந்த முதலாவது பொதுக்கூட்டத்தில் தந்தை செல்வநாயகம் 50:50 கோரிக்கை தொடர்பாக பின்வருமாறு உரையாற்றினார். "தமிழ்த் தலைவர்கள் இதுகால வரை ஸ்திரமற்ற எதிர்மறைக்கொள் கையையே பின்பற்றி வந்தனர். குறைந்த விகிதாசா ரத்தை யுடைய சிறுபான்மை மக்களுக்கு கூடிய விகிதாசாரப் பிர திநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று கோரினர். நாங்கள் சிங்களவராகப் பிறந்திருந்தால் அக்கோரிக்கைக்கு இணங்கியிருப்போமா? நான் நிச்சயமாக இணங்கியிருக்க மாட்டேன். தமிழர்கள் இந்த நாட்டில் பெரும்பான்மையி னராக இருந்து சிங்களவர் சிறுபான்மையினராக இருந்து சிங்களவர்கள் எமது தலைவர்கள் கோரிய ஐம்பதுக்கைம் பதைக் கோரியிருந்தால் நாங்கள் அதற்கு இணங்கியிருப் போமா? நிச்சயமாக இணங்கியிருக்கமாட்டோம். ஐம்பதுக் கைம்பது நியாயமான கோரிக்கையுமல்ல. நடை முறைப்ப டுத்தத்தக்க கோரிக்கையுமல்ல. அப்போதைய தமிழ்த் தலை வர்கள் நடைமுறைக்கொத்த மாற்றுத் திட்டத்தை முன்வைத்தி ருந்தார்களானால் பிரிட்டிஷ் அரசு அதை ஆதரவுடன் பரி சீலித்திருக்கும்" (மேற்கோள். த.சபாரெத்தினம்)
இவ்வாறு யதார்த்தபூர்வமாக உரையாற்றிய எஸ்.ஜே.வி. செல்வநாயம் அவர்கள்தான், ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர் களது 50:50 கோரிக்கைக்கு பக்கபலமாக இருந்ததோடு திரு.பொன்னம்பலத்துடன் இணைந்து சோல்பரி ஆணைக் குழுவினரிடம் அக் கோரிக்கையினை முன்வைத்து சாடட் சியமளித்தும் இருந்தார்கள். அந்தக் கோரிக்கை நிரா கரிக் கப்பட்டதும் அது அது நடைமுறைக்கு உதவாத ஒரு திட்டம் என செல்வநாயகம் அவர்கள் கூறுவது அவரு டைய அரசியல் நேர்மையீனத்தை அல்லது தமது தவறை சுயவிமர்சனம் செய்யாத நிலையினைக் காட்டுகின்றது.

தமிழ் உயர் வர்க்கத்தினர் எப்போதும் மற்றவர்களை விட தாம்தான் அறிவாளிகள் திறன்மிகுந்தவர்கள் என்ற கற் பனை மிகுதியில் வாழ்ந்துகொண்டு தமது ஆதிக்க மனோ பாவத்தை நிலைநாட்டுவதில் அக்கறையாக இருக்கிறார் களே தவிர சந்தர்ப்பத்துக்கு ஏற்ப அகப் புறச் சூழ்நிலைகளை கையாண்டு தமிழர்களுக்கு கிடைக்கவேண்டிய அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் எப்போதும் தவறி ழைத்தே வந்திருக்கிறார்கள் என்பதற்கு சோல்பரிக் குழுவி னர் விடயத்தில் அவர்கள் நடந்து கொண்டமையும் ஓர் உதாரணமாகும்.

தொடரும்.



**தியாகராஜா சுதர்மன்**

இவர் யாழ் பல்கலைகழகத்தின் சித்தமருத்துவ பட்டதாரியும், பேராதனை பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா பட்டதாரியும், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை டிப்ளோமா பட்டதாரியும் ஆவார்.

அரச சித்த மருத்துவ உத்தியோகத்தராக பணிபுரியும் இவர் ஒரு சிறுகதை எழுத்தாளருமா வார். இவர் ஆகாரமே ஆதாரம் எனும் நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.


# பசியும், பிணியும் போக்கும் அரிசி

மனிதனின் ஆரோக்கிய வாழ்வுக்கான அடிப்படையே உணவுப்பழக்கவழக்கம் தான். நோய்கள் மலிந்துவிட்ட இந்தக்காலத்தில், ஈழத்தமிழர்களின் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலவிய பாரம்பரிய உணவுப்பழக்க வழக்கங்களை மீட்டெடுப்பதன் மூலம், மீண்டும் ஆரோக்கியமான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை சித்தமருத்துவக் கண்ணோட்டத்தில் இந்தக்கட்டுரைத்தொடர் முன்வைக்கின்றது.

## தானியங்கள்

தாவரப்பொருட்களும் அவற்றை உண்டு வாழும் விலங்குகளுமே மனிதனுக்கு உணவாகின்றன. பொதுவாக விலங்குப் பொருட்களைவிட தாவரப்பொருட்களே அதிகம் உணவாகின்றன.

தாவரப் பொருட்களில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் பிரதான உணவாக நெல், குரக்கன், தினை, வரகு, சாமை போன்ற தானியங்களே அமைந்துள்ளன. இவற்றிலும் நெல்லில் இருந்து பெறப்படும் அரிசி, அரிசி மா என்பன பிரதான உணவு வகைகளில் முதன்மையாக இருக்கின்றன. இதிலும் பாரம்பரிய சிவப்பரிசி வகைகளும், மொட்டைக்கறுப்பன் வகை அரிசிகள், சம்பா வகை அரிசிகள் போன்றன முக்கிய மானவை. இவை அவிக்காத பச்சை அரிசியாகவும் (Non Parboiled rice), நெல்லை அவித்து அதிலிருந்து பெற்ற புழுங்கல் அரிசியாகவும் (Parboiled rice) பயன்படுத்தப்படுகின்றன.

### புழுங்கலரிசி

புழுங்கலரிசியை தமிழர்களாகிய தென்குமரிகண்டத்தினர் பிரதான உணவாக தினமும் பாவித்திருப்பதை கீழ்வரும் சித்தர் பாடல் கூறுகின்றது.

**"புழுங்கலி னரிசிச் சோறு புசிக்கநன் றுரோகம் வாரா**
**வழங்குதென் பூமி யோர்கள் வண்மையாய் நானு முண்பர்**
**அழுங்கல்செய் வடிகஞ் சிக்கே யடைந்திடுங் கரப்பன் சீதம்**
**கொழுங்குடி கஞ்சி யுண்ணக் குறையுநோய் சுகமுடற்கே"**

**– பக்.62, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி**

நெல்லினை சுத்தப்படுத்தி நீரினில் குறைந்தது 12 மணி நேரம் ஊறவைத்து 10 15 நிமிடங்கள் ஆவிவரும்படி வேகவைத்து எடுத்து காயவிட்டு பின்னர் உரலில் குற்றியோ அல்லது மில்லில் குற்றியோ புழுங்கல் அரிசியாக பயன்படுத்தப்படுகின்றது.

நெல்லினை அவிக்கும்போது, அதன் உமிக்கும் அரிசிக்கும் இடைப்பட்ட பகுதியான உட்கோதில் (தவிடு) காணப்படும் உயிர்ச்சத்துக்கள், குறிப்பாக B வகை உயிர்ச்சத்துக்கள், நார்ச்சத்து என்பன நீரில் கரைந்து அரிசியின் உட்பகுதிக்கு செல்வதாலும், அவிக்கப்பட்ட அரிசியை முழுமையாக தீட்டாது பயன்படுத்துவதாலும் மேற்கூறிய ஊட்டச்சத்துக்கள் முற்றாக இழக்கப்படுவதில்லை. இதனால் ஊட்டசச்சத்துக்கள் கிடைப்பதுடன் மாப்பொருளானது தனி மாப்பொருளாக அல்

லாது சேர்க்கைகளாக (Complex Carbohy drate) இருப்பதினால் சலரோகம் போன்ற நோய்நிலையில் நிர்ணயிக்கப்பட்ட அள வில் உண்ணக்கூடியதாக உள்ளது.

புழுங்கலரிசியானது குழந்தைகள், வாத ரோகிகள், பத்தியமுள்ளவர்களுக்கு சிறந் தது எனவும் ஆனால் உடலுக்குப்பலத்தைக் கொடுக்காது என கீழ்வரும் பாடல் மூலம் சித்தமருத்துவம் கூறுகின்றது.

**"புழுங்கல் அரிசியிது புத்திரர்க்கும் ஆகும்**
**அழுங்குகின்ற வாயுவிற்கும் ஆகும் – ஒழுங்காய்**
**நிலைத்தபத்தி யத்திற்கும் நீட்டலாம் மெய்க்குப்**
**பலத்தைக் கொடுக்காது பார்"**

– பக். 249250, பதார்த்தகுண சிந்தாமணி

**"தென்புவியி னாளுஞ்செ ழித்துவள ரு ஞ்சாலி**
**வன்பு ழுங்கல் வடிசாத – முன்புணவே**
**வாயுவிலையத்தால் வலியும் வன்னோயுமிலை**
**நோயுடையார்க் காகு நுவல்"**

– பக்.385, பதார்த்தகுண சிந்தாமணி

## சம்பா அரிசி வகைகளின் வகைகளின் குணங்கள்

**"ஈர்க்குச்சம் பாவின் சாத மினிமை மெவர்க்கு மாகும்**
**ஆர்க்குநற் புழுகு சம்பா வதிகமாம் பெலனுண் டாக்கும்**
**பார்த்திடு முடற்கு நன்றாம் பகர்ந்தகை வரைச்சம் பாவும்**
**ஆக்கமுஞ் சுகமு நல்கு மாமென வுரைத்திட் டாரே"**

– பக். 61, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

சம்பா அரிசிவகைகளில் பலவகை இருந்தாலும் நாம் பயன்படுத்தும் ஏனைய அரிசி வகைகளை விட சம்பா வகையானது இலகுவாக சமிபாடு அடையக்கூடியது. அத்துடன் சிறிது இனிப்புச்சுவையும் ஏனையவற்றுடன் ஒப்பிடும்போதும் அதிகமாகக் கொண்டது.

## பச்சை அரிசி (சிவப்புப் பச்சை அரிசி)

பச்சை அரிசி கூட நன்றாகத் தீட்டப்படுவதில்லை. அத்து டன் உமி அகற்றிய தவிட்டுடன் கூடிய உடையல் அரி சியாகவும் பாவிக்கப்படுகின்றது.

சைவ உணவுப் பழக்கமுள்ளோர், அந்தணர்கள், வன்னி யில் பல பகுதிகளில் பச்சை அரிசியே சோற்றுக்கு பயன் படுத்துகின்றனர்.

குறிப்பாக வடகுமரி கண்டத்தைச் சேர்ந்தவர்கள் பச்ச ரிசிச் சோற்றினை உண்டு வந்துள்ளார்கள் என்றும் சல ரோகம், பித்தரோகங்களை குறைக்கச் செய்யும் என் றும் சோர்வுடன் உடற்பலமும் உண்டாகும் என்றும் கீழ்வரும் சித்தமருத்துவப் பாடல் இவ்வாறு கூறுகின்றது.

**சைவ உணவுப் பழக்கமுள்ளோர், அந்தணர்கள், வன்னியில் பல பகுதிகளில் பச்சை அரிசியே சோற் றுக்கு பயன்படுத் துகின்றனர்.**



**"இடியவல் மந்தஞ் சேர்க்கு மினியபச் சரிசிச் சோறு**
**படுசல ரோகம் பித்தம் பாறச்செய் திடுமாம் மந்த**
**முடன்பெல முண்டா மீதை யுத்தர பூமி யோர்கள்**
**அடைவுடன் விரும்பி யுண்பா ராமென வறையு நூலே"**

– பக்.61, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

இங்கு சலரோகத்தை குறைக்கும் என்பதற்கான ஆய்வு முடிவுகள் இல்லை என்பதும் தற்கால உணவுவிஞ்ஞா னத்தில் இது தொடர்பில் நிலவும் கருத்துக்களை கீழே காணலாம்.

சலரோகத்துக்கு அரிசிச்சோறு உகந்தது. எனினும், யாழ்ப்பாண அரிசிச் சோறுவகைகளின் Glycemic Index ஆனது நடுத்தரமாக உள்ளதால் (GI 5570) நாம் உண் ணும் அளவு முக்கியமானதாக கருத்திற் கொள்ள வேண்டியிருப்பது கட்டாயமாகும். பொதுவாக ஒரே இன அரிசியில் புழுங்கலரிசியானது பச்சை அரிசியை விட சிறந்தது.

அதாவது சலரோகத்துக்கு புழுங்கல் அரிசியா ,பச்சை அரிசியா நல்லது எனப் பார்க்கும்போது அவை அரிசி வகைகளின் இனம், அளவு (Size), நிறத்திலும், அவை கொண்டுள்ள மாப்பொருள் வகைகளிலுமே (Amylose / Amylopectin) தங்கியுள்ளன. அத்துடன் அரிசிவகைக ளில் தவிடு நீக்கும் அளவிலும் தங்கியுள்ளது. நன்றாக தீட்டப்பட்ட அரிசியிலும் பார்க்க தீட்டப்படாத அரிசியே சிறந்தது.

ஒப்பீட்டளவில் எமது பாரம்பரிய அரிசி வகையான மொட்டைக்கறுப்பன் அரிசி வகை சிறந்தது.
மேற்குறிப்பிட்ட பாடலில் பச்சையரிசி எனக்குறிப்பி டப்பட்ட அரிசியானது அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த அரிசி இனமாகவும், உரலில் இடித்தெடுக்கப் பட்ட உடையல் அரிசியாகவோ அல்லது நன்றாக தீட் டப்படாத அரிசியாகவோ இருந்திருக்கும். பாரம்ப ரிய இனங்கள் அருகி தேர்ந்தெடுக்கப்பட்ட இனங்கள், மரபணுமாற்ற இனங்கள் என வகைகள் மாறியுள்ள தால் மருத்துவரது ஆலோசனையுடன் உண்ணும் அள வினை கருத்தில் கொள்ள வேண்டும்.

பச்சை அரிசி நோய்களின்போது பத்தியமாக பயன்படுத்தமுடியாது என்றும், வாதத்தை ஏற்படுத்தும், சோம்பலை ஏற்படுத்தும், பித்த எரிச்சலைப் போக்கும் (Neuritis), ஆனால் தேகத்துக்கு வலிமையைக் கொடுக்கும் என்கின்றன சித்தமருத்துவ பாடல்கள்.

**"சுத்த வனிலமந்தந் தோன்றுமெரி பித்தம்போம்**
**பத்தியத்தி லெண்ணார்கள் பண்டிதர்கள் – மெத்தவுமே**
**வைச்ச சுமைதாங்க வலியுண்டாந் தேகத்திற்**
**பச்சரிசி யைப்புசித்துப் பார்"**

***– பக். 249, பதார்த்தகுண சிந்தாமணி.***

**"பச்சரிசிச் சோறு பலங்கொடுக்கும் வாயுவென்பார்**
**நிச்சயமாய் பித்தத்தை நீக்குங்காண் – அச்சமற**
**மூத்திரக்கி ரிச்சரத்தை முன்பொழிக்குஞ் சேய்க்குமந்த**
**மாத்திரமுண் டாக்கும் வழுத்து"**

***– பக்.386,பதார்த்தகுண சிந்தாமணி.***



பச்சை அரிசி (சிவப்புப் பச்சை அரிசி)
Image source - www.italiadelight.it

ஆனால் இன்று நன்கு தீட்டப்பட்ட (Polished Rice) அரிசியே விரும்பப்படுகின்றது. இது ஒப்பீட்டளவில் பாரம்பரிய அரிசிப்பாவனைகளுடன் ஒப்பிடுகையில் ஆரோக்கியம் குறைந்ததாகவே காணப்படுகின்றது.

மேற்படி நெல்வகைகள், அரிசிவகைகள், அரிசிமாவைக் கொண்டு பொங்கல், பிட்டு, இடியப்பம், பலகாரங்கள் மற்றும் அவல், நெற்பொரி போன்ற நெற்தானியத்தை அடிப்படையாகக் கொண்டு உணவு வகைகளாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

## அரிசி சார்ந்த யாழ்ப்பாண பாரம்பரிய உணவுகள்

### நெற்பொரி

**"பெருநெல்லுக் கரப்ப னோடு பேர்க்குங் கிரந்தி சேர்க்கும்**
**பரம்பிவற் றின்பொ ரிக்குப் பகர்சுரந் தாகம் வாந்தி**
**வெருவிடு மரிசி தன்னின் மேவிய தவிடு வாயு**
**உரம்மந்தஞ் சேர்க்கு மொவ்வா திரப்பவர் தமக்கு மோதில்"**

***– பக். 61, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.***

பொதுவாக நெற்பொரியானது உணவாகப் பயன்படுத்தப்படாவிடினும் நோய்நிலைகளில் முக்கியமாக குழந்தைகள், சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்றது. காய்ச்சல், வாந்தி, கழிச்சல் போன்ற நிலைகளில் உடலில் ஏற்படும் நீரிழப்பைத் தடுக்கவும், காய்ச்சலினைக் குறைக்கவும் வீடுகளிலேயே நெற்பொரியினை அவித்து, அதன்மூலம் வரும் நெற்பொரித் தண்ணீரைக் கொடுப்பது நமது பாரம்பரிய பழக்கங்களில் ஒன்றாகும். இதனை நெற்பொரிக் கஞ்சி என்பர். இதன் மூலம் தீரும் நோய்நிலைகளையே மேற்கூறிய சித்தர்பாடல் கூறுகின்றது.

இங்கு அரிசியின் மேல் கவசமாகக் காணப்படும் தவிடானது வாயுவைக் கூட்டும். இதனால் உடலில் பலவீனத்தால் ஏற்படும் உடல் வலிகள் தீரும். உடலுக்கு உரத்தைத் தரும். அதேவேளை சோம்பல் குணத்தையும் தரும். 28 கிராம் அரிசித் தவிட்டில் குறிப்பாக B வகை விற்றமின்கள் அதிகம் காணப்படுகின்றன.

அமெரிக்காவின் விவசாய திணைக்களத்தின் நாளாந்த தேவையான உணவுக்கூறுகளின் அளவுகளின் படி, 28 கிராம் தவிட்டில் ஒருவருக்கு நாளாந்தம் தேவையான B வகை விற்றமின்களான தயமின் (B1 - Thiamine), நியாசின் (B3 - Niacin), பைரிடொக்சினன் (B6 - Pyridoxine) என்பனவற்றின் நாளாந்த தேவையின் அரைப்பங்கு கிடைப்பதாக பேராசிரியர் Elizabeth Ryan கூறுகின்றார். அரிசித்தவிட்டில் புரதம் 1215% காணப்படுகின்றது. அத்துடன் தேவையான அளவு நார்ச்சத்தும் காணப்படுகின்றது.

இதனாலேயே தவிடு நீக்காத அரிசி நமது பாரம்பரியத்தில் உள்ளது. உடையல் எனப்படும் தவிடு நீக்காத அரிசியில் அரிசிமா தயாரிப்பது சிறந்தது.

### அவல்

இரண்டு பங்கு நீர்விட்டு கொதிக்க வைத்து, அதில் சுத்தமான நெல்லைக்கொட்டி ஒரு முறை கொதித்தவுடன் சிறிது நீர்விட்டு இறக்கி ஓர் இரவு அப்படியே வைக்கப்படும். மறுநாள் நீரை வடித்து கொஞ்சம் கொஞ்சமாக வறுத்து, சூட்டுடன் உரலில் இட்டு நன்றாக இடிக்க உமி நீங்கி அரிசி தட்டையாகும். இதுவே அவல் ஆகும்.

பெரும்பாலும் கோயில் விழாக்களில் அவல் பிரதானமான பிரசாதமாகும். இலகுவாக உணவு தயாரிக்கக்கூடியதொன்றாகும். காலை உணவாக உட்கொள்ளப்படுகின்றது.

அவலுடன் பாலும் நெய்யும் சேர்த்துண்டால் உடலுக்குப் பலமும், தயிர் கலந்து உண்டால் சோர்வும் ஏற்படும். நீரில் ஊறவைத்து உண்டால் உடலில் வாயுவும் ஏற்படும், இதனால் உடல் உழைப்புள்ளவர்களுக்கு சிறந்தது. வயதானவர்களுக்கு வாதரோகிகளுக்கு நன்றன்று. மோரில் கலந்து உண்டால் தாகம், உடல் எரிவு



நெற்பொரி

Image source - www.pinterest.com/pin

இல்லாதுபோகும். புளிப்புப் பண்டங்களில் கலந்து உண்டால் பித்தரோகங்கள் இல்லாது போகும் என கீழ்வரும் சித்த மருத்துவப் பாடல் கூறுகின்றது.

**“பானெய்சேர்த் துண்ணிற் பலமாம் ததிகண்மந்தந்**
**தானெய்து மோரயர்வு தாகமெரி – தேனிருக்கு**
**மம்புளியு மஞ்சுங்காலாகுமிரை யொழிவு**
**மெம்புளியும் பித்திலவலில்”**

***– பக். 405, பதார்த்த குணசிந்தாமணி***

**புழுங்கலரிசிச்சோறு, வடிகஞ்சி, குடிகஞ்சி**
**“புழுங்கலி னரிசிச் சோறு புசிக்கநன் றுரோகம் வாரா**
**வழங்குதென் பூமி யோர்கள் வண்மையாய் நானு முண்பர்**
**அழுங்கல்செய் வடிகஞ் சிக்கே யடைந்திடுங் கரப்பன் சீதம்**
**கொழுங்குடி கஞ்சி யுண்ணக் குறையுநோய் சுகமுடற்கே”**

***– பக்.62, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.***

## புழுங்கலரிசிச் சோறு

உணவு ஒழுங்குவிதிகளுக்கு அமைய புழுங்கலரிசி சோறு உண்பவர்களுக்கு நோய்கள் வராது எனினும் இது ஏனைய காரணிகளிலும் தங்கியுள்ளது.

## வடிகஞ்சி

வடிகஞ்சி என்பது சோறு சமைக்கும்போது சோறு அவிந்தபின் வடித்து எடுக்கும் நீர். இக்கஞ்சியைக் குடிப்போருக்கு தோல் நோய்களும், உடலில் குளிர்ச்சியும் ஏற்படும். எனவே தோல் நோய் உள்ளவர்கள், குளிர் ஒத்துக்கொள்ளாதவர்கள் தனியே வடிகஞ்சியை குடிப்பது தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

## குடிகஞ்சி

குடிகஞ்சி என்பது சிறிதளவு அரிசியினை நீரிலிட்டு நன்றாக அவித்து நீராகாரமாக குடிப்பது ஆகும். இதற்கு தேங்காய்ப்பால், உப்பு என்பனவற்றை தேவையான அளவு சேர்க்கலாம். இது உப்புக்கஞ்சி என்றும் சொல்லப்படும். இவ்வாறான கஞ்சியினைக் குடிக்கும்போது நோய்கள் குறைந்து சுகமுண்டாகும்.



புளிக்கஞ்சி

Image source - www.facebook.com/vani.sivanesan

## கஞ்சி அன்னத்தின் குணம்

வடித்தகஞ்சியும் கஞ்சியின் அன்னமும் கீழ்வரும் பாடல் மூலம் குறிப்பிடப்படுகின்றது.

**“கஞ்சியன்னத்திற் காயம்பருத்திடு**
**மஞ்சிவெப்பமகலுஞ் சிலேத்துமமோ**
**டுஞ்சிற்றிடு மேனிமினுத்திடும்**
**பஞ்சிபோலப் பறந்திடும்பித்தமே”**

***– பக்.395, பதார்த்தகுண சிந்தாமணி.***

## அரிசிக்கஞ்சி வகைகள்

### 01. புளிக்கஞ்சி

யாழ்ப்பாணத்தில் புளிக்கஞ்சியானது காய்ச்சல் உள்ள போது, நோய்கள் வந்து மாறியபின், உடல் அசதி ஏற்படும் போது கொடுக்கப்படுகின்றது. இது உடலில் பசியைத் தூண்டுவதுடன், வியர்வையையும் உண்டு பண்ணுகின்றது. நோய்நிலைகளில் வாயில் உணவு உட்கொள்ளமுடியாத நிலைகளில் புளிக்கஞ்சி வாய்க் கைச்சலை இல்லாது செய்கின்றது.

## புளிக்கஞ்சி செய்முறை

**தேவையான பொருட்கள்**

1. புழுங்கல் அரிசி - 200 கிராம்
2. புளி 50 கிராம்
3. முருங்கை இலை - தேவையான அளவு
4. மிளகு 10 கிராம்
5. சீரகம் - 10 கிராம்
6. செத்தல் மிளகாய் - 3 - 5 (தேவையான அளவு)
7. உள்ளி - 01 கப்
8. சின்ன வெங்காயம் - ½ கப்
9. நீர் - 750 மி.லீ
10. உப்பு - தேவையான அளவு

நீரினை நன்றாகக் கொதிக்கவைத்து நன்கு கொதித்தபின் அரிசியினை அதனுள்போட்டு அரிசியை நன்கு அவிய விடவேண்டும்.
அரிசி நன்கு அவிந்தபின் கரைத்து வைத்துள்ள புளியினை அதனுடன் சேர்த்து கொதிக்கவைத்து, நறுக்கி வைத்துள்ள வெங்காயம், உள்ளி என்பவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கஞ்சி கொதித்து வர தூளாக்கிய மிளகு, சீரகம், மல்லி என்பவற்றை இட்டு கொதிக்க விட்டு இறக்கியபின் தேவையான அளவு உப்பினைச் சேர்த்தல் வேண்டும்.
அடுப்பில் இருந்து இறக்கியபின் உப்பினைச் சேர்த்தல் என்பது பாரம்பரிய முறைகளில் இல்லை என்றாலும் இன்றைய காலத்தில் அயோடின் கலந்த உப்பினை பாவிக்கும் பொது அடுப்பில் இருந்து இறக்கியபின்னர் உப்பினைச் சேர்த்துக் கொள்வது அயோடின் இழப்பினை தவிர்க்கக்கூடியதாக இருக்கும்.
புளிக்கஞ்சிக்கு கூனிஇறால், இறால், நெய்த்தலி கருவாடு சேர்த்தும் செய்யப்படும்.

## 02. பாற்கஞ்சி

பச்சரிசிக்கு பால் சேர்த்துக் காய்ச்சி தேவையான அளவு சீனி சேர்த்து குடிக்கலாம். இங்கு பால் எனப்படும்போது பசுப்பாலே நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் பசுப்பாலுக்கு பதிலாக தேங்காய்ப்பாலே பெரும்பாலான இடங்களில் பயன்படுத்தப்படுகின்றது.
சித்திரை மாதத்தில் சித்திரைப் பௌர்ணமியில் கோயில்களில் காய்ச்சப்படும் கஞ்சியான சித்திரைக் கஞ்சியும் பாற்கஞ்சி வகை ஆகும்.
பாற்கஞ்சியானது பித்த எரிவை நீக்கி, புத்தியையும், விந்துவையும் விருத்தியாக்கும் என கீழ்வரும் சித்தமருத்துவப் பாடல் கூறுகின்றது.

**"சுரை தருபாலில் வெந்த சோறுகஞ்சிகொள்ளி
லெரிதரு பித்தந்தாழு மெழுமதிவிந்துவுந்தான்
பொரிதருகஞ்சி பித்தம் போக்கிடும்சுடுகஞ்சிக்குத்
தரிதருமலமும்வாய்வுந் தாகமும்போகுங்காணே"**

**– பக்.394, பதார்த்தகுண சிந்தாமணி.**

பொதுவாக பாற்கஞ்சிக்கு சிறுபயறு, உழுந்து போன்றன சேர்க்கப்படும். பயறு கட்டாயம் சேர்க்கப்படுகின்றது. சிறுபயறு, உழுந்து, பச்சரிசி சேர்க்கும்போது சித்த மருத்துவ ரீதியாக பித்தரோகங்கள், வாதத்துடன் கூடிய கப ரோகங்களை குணப்படுத்துவதுடன் உடலுக்கு பலத்தையும் கொடுக்கின்றது என கீழ்வரும் பாடல் விளக்குகின்றது.

**"சிறுபருப்புக் கஞ்சி பித்தந் தீர்க்கு முழுந்தி
னுருபருப்புக் கஞ்சி வளிக் கூக்க – முறியகபம்
பச்சரிசிக் கஞ்சி பவனகபத்தைப் போக்குங்
கைச்சிறுக்குங் கொங்கைமின்னே காண்"**

**– பக்.395, பதார்த்தகுண சிந்தாமணி.**

## 03. புனற்பாக கஞ்சி

தீவிர நோய்நிலைகளில் நோய்க்குப் பத்தியமாகக் கொடுக்கக்கூடியது. கஞ்சியை மீள மீள வடித்து நீரினை வெளியகற்றி, சோறு நன்றாகக் கரைந்து நீராக வரும்வரை மீள மீள புதிதாக நீர்விட்டு காய்ச்சி எடுத்து நீராகாரமாக வழங்கப்படும் கஞ்சி ஆகும். இதனை சித்தமருத்துவம் "தாரக பத்தியம்" என்கிறது.

இதன்மூலம் மனித உடலில் இயக்கத்துக்கு பொறுப்பான முத்தாதுக்களான வாதம், பித்தம், கபம் என்பன சமநிலைப்பட்டு ஆரோக்கியம் மேலோங்கும், சுரவெப்பம் அகலும், நோயாளிக்கு இலகுவாக சமிபாடு அடைந்து உடலுக்குத் தேவையான சக்தி உடனே கிடைக்கின்றது என கீழ்வரும் பாடல் கூறுகின்றது.

**"புனற்பாக முத்தோடம் போக்கு மருந்தி
னனற்பாகந் தன்னை யடக்குங் – தனிக்குணங்க
ளும்மட்டோ வாய்க்கிதமா மாரோக்கியங் கொடுக்குங்
கம்மிட்ட பூவனமே காண்"**

**– பக். 395, பதார்த்தகுண சிந்தாமணி.**

மேற்கூறிய விடயங்களையே யாழ்ப்பாண சித்தமருத்துவ நூலான அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி நூலில் உள்ள பாடலும் உணர்த்துகின்றது.

**"புனற்பாகக் கஞ்சி யோடு புகலுமச் சோறு தன்னை
இனையுநோ யுற்ற பேர்கட் கீயநன் றீவ தற்கு
நனிபழ வரிசிச் சோறு நாடநாடாது நோயைத்
தினப்புது வரிசிச் சோறு சேர்க்குநோய் செரித்திடாதே"**

**– பக்.65, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.**

## 04. இலைக்கஞ்சி

சாதாரணமாக செய்யப்படும் கஞ்சிக்கு மருத்துவ குணமுள்ள, ஊட்டச்சத்துள்ள இலைவகைகள், தானியங்கள்

சேர்த்து இலைக்கஞ்சியாக தேவைக்கேற்றவாறு செய்தல் ஆகும். இங்கு மூலிகைகள் சாறாக சேர்த்துக் கொள்ளப்படுவதே பயன்மிக்கதாகும்.

தானியங்களில் பயறு, உழுந்து பொதுவாக சேர்க்கப்படுகின்றன. இவை முளைக்கவிடப்பட்டு முளைவிட்ட தானியங்களாக சேர்க்கும்போது கூடுதலான, பலவகைப்பட்ட ஊட்டச்சத்துகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**தேவையான பொருட்கள்**

**01. பச்சையரிசி – 200 கிராம்**
**02. தேங்காய்ப் பால் – 250 மி.லீ**
**03. முளைவிட்ட பயறு / முளைவிட்ட உழுந்து – 50 கிராம்**
**04. இலைவகைச் சாறு – 250 மி.லீ**
**05. நீர் – 500 மி.லீ**
**06. உப்பு – தேவையான அளவு**
**07. இஞ்சி, உள்ளி, மிளகு, நற்சீரகம் – தேவையான அளவு**

*அரிசி முக்கால் பதம் அவிந்து வரும்போது முளைவிட்ட பயறினையும் சேர்த்து நன்கு அவியவிடவேண்டும். நன்கு அவிந்தபின்னர் தேங்காய்ப்பால், இலைச்சாறு என்பவற்றையும் சேர்த்து நன்கு கொதிக்கவைத்து இறக்கி தேவையான அளவு உப்பு சேர்த்தல் வேண்டும்.*

**சேர்க்கக்கூடிய இலைவகைகள் அல்லது மூலிகைகள்**

*பொதுவாக ஊட்டச்சத்துக்கள் நிறைந்த வல்லாரை, பொன்னாங்காணி, சாத்தாவாரி, முருங்கை இலை, கீரை வகைகள் போன்றன சேர்க்கப்படும். இவற்றைவிட நோய்களுக்கு பலவீனங்களுக்கு தகுந்தமாதிரி மூலிகைச்சாறுகள் சேர்க்கப்படும்.*

*01. வாத ரோகங்கள் சந்தானவிருத்திக்கு - முடக்கறுத்தான். (புதிதாக திருமணமான தம்பதிகளுக்கு இக்கஞ்சி உகந்தது.)*

*02. சுவாசத்தொகுதி தொடர்பான நோய்களின்போது மொசுமொசுக்கை, தூதுவளை போன்றன.*

*03. சிறுநீரகக்கல் போன்ற நோய்நிலைகளில் சதைகரைச்சான், முள்ளங்கி, போஞ்சி போன்றன.*

*04. நீரிழிவு நோயுள்ளவர்கள் குறிஞ்சா, சிறுகுறிஞ்சா, ஆவரசு இலை, பிஞ்சு போன்றன*

*05. பழஞ்சோற்றுக்கஞ்சி*

**“பழஞ்சோற்றை யந்தப் பழைய நீராகரக்**

**கொழுஞ்சேர்க்கை யோடுதயங் கொள்ளி – லெழுந்தாது**

**பித்தவாதம்போ பெரும்பசியா மெய்யெங்கு**

**மெத்தவொளி வுண்டாம் விரி”**

***– பக்.397, பதார்த்தகுண சிந்தாமணி.***




**பழஞ்சோற்றுக்கஞ்சி**

**Image source - www.freepressjournal.in**

*இரவில் நீர்விட்டு வைத்த அன்னத்தை காலையில் அருந்தினால், விந்துவிருத்தியும், உடல் ஒளிபெற்று அழகும் பெறும். நன்கு பசி ஏற்படும். உளரோகங்கள் குறையும் என பழஞ்சோற்றுக் கஞ்சியின் குணங்களை மேற்கூறிய பாடல் கூறுகின்றது.*

*பழஞ்சோற்றுக் கஞ்சியின் குணங்களை யாழ்ப்பாண சித்தமருத்துவ நூலான அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பழஞ்சோற்றுக் கஞ்சியானது பித்த உடலமைப்பு கொண்டோருக்கு சிறப்பானது என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் பழஞ்சோற்றுக்கு தண்ணீர்விட்டு 24 நிமிடங்களுக்குள் பருகிட வேண்டும் என நேர வரையறையும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**“நிகழ்த்திய சோறு தன்னி னீர்விட்டே யோர்நா ழிக்குள்**

**புகழ்ச்சியாய்ப் பித்த தேகி புசித்திட வினிமை யாகும்**

**மகிழ்ச்சிசேர் பழைய கஞ்சி மருவுமித் தன்மைத் தேயாம்**

**இகழ்ச்சியில் லாமற் கால தேயத்தா லிவற்றை யோரே”**

**– பக்.62, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.**

*மேற்கூறியவாறு தமிழ்மருத்துவ வழிகாட்டலுக்கு அமைவாக நமது பாரம்பரிய உணவுப்பழக்கங்களுக்குள் இருந்து ஆரோக்கியத்தை கொடுத்த பழஞ்சோற்றுக் கஞ்சியானது இன்று உலக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.*

## American nutrition association கூறும் பழஞ்சோற்று கஞ்சியின் பயன்கள்

*01. சாதாரண சோற்றினை விட அதிகளவான ஊட்டச்சத்துக்களைக் கொண்டது.*

சோற்றினை நீர்விட்டு புளிக்கவைக்கும்போது சாதாரண சோற்றில் உள்ள இரும்புச்சத்தைவிட 21 மடங்கு அதிகரித்த இரும்புச்சத்து காணப்படு கின்றது. உதாரணமாக 100 கிராம் சோற்றில் 3.4 மில்லிகிராம் இரும்புச்சத்தின் அளவானது 73.91 மில்லிகிராம் ஆக மாறுகின்றது.

02. பல்வேறுவிதமான உடல்நலக்குறைபாடு களுக்கு மருந்தா கின்றது.

பழஞ்சோற்றுக் கஞ்சியில் உருவாகும் உயிர்ச் சத்து B12 ஆனது சோர்வு, களைப்பு போன்ற உடற்பலவீனங்களைக் குறைக்கும்.

பழஞ்சோற்றுநீர் நோய்களில் இருந்து விரை வில் குணமடையக்கூடியவாறு உடலுக்கு ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றது. இதில் உருவாகும் B வகை உயிர்ச்சத்துக்கள் குடற் புண்களை ஆற்றுகின்றன. பொற்றாசியம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றது. மக்னீசி யமும் செலனியமும் என்புகளை வன்மையாக் குகின்றன.

நொதித்தலின்போது உருவாகும் பற்றீரியாக் கள் இரைப்பையின் அமிலகார சமநிலையைப் பேணுகின்றன. இதன்மூலம் உடலுக்கு நன்மைதரும் பற் றீரியாக்கள் (Probiotics) வளர்ச்சிக்கு உதவுகின்றன.

இந்நன்மை தரும் பற்றீரியாக்களின் (Probiotics) பயன்கள்.

· சீரான குடல் அசைவுகளுக்கு உதவுகின்றன.

· மிதமான மலமிளக்கியாக செயற்படுவதன் மூலம் மலக்கட்டு ஏற்படுவதில் இருந்து பாதுகாக்கின்றன.

03. பழங்சோற்றுக் கஞ்சியில் காணப்படும் உயிர்ச்சத்து E, Ferulicid என்பன தோற்சுருக்கத்தை குறைப்பதாகவும், தலைமயிர் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் சில ஆய்வுகள் கூறுகின்றன. இதில் இவை Antioxidant ஆக செயற்படுவ தன் மூலம் நரைதிரை மூப்பின்றி வாழ உதவுகின்றன.

04. தலைமுழுகும்போது Shampoo பயன்படுத்திய பின்னர் கஞ்சியை பயன்படுத்தினால் முழுகும்போது தலைமயிர் ஆரோக்கியமானதாகவும் உறுதியானதாகவும் மாறுகின் றது.

05. பழஞ்சோற்றில் lactic acid அதிகமாகக் காணப்படுகின் றது. இது தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்க உதவுகின்றது.

## 06. சரக்குக் கஞ்சி

சரக்குக் கஞ்சி என்பன கூடுதலாக மல்லி, நற்சீரகம் சோந் ததாக இருக்கும். சாதாரணமாகவும், எல்லாவிதமான நோய்நிலைகளிலும் வழங்கப்படலாம். இக்கஞ்சியில் மிளகாய்சார்ந்த பொருட்கள் சேர்க்கப்படமாட்டாது.



**சரக்குக் கஞ்சி என்பன கூடுதலாக மல்லி, நற்சீரகம் சோந்ததாக இருக்கும். சாதாரணமாகவும், எல்லாவிதமான நோய்நிலைகளிலும் வழங்கப்படலாம். இக்கஞ்சியில் மிளகாய் சார்ந்த பொருட்கள் சேர்க்கப்படமாட்டாது.**

## செய்முறை

அரிசி நன்கு அவிந்தபின்னர் அரைத்து வைத்திருக்கும் ஏனைய பொருட்களை சேர்த்து நன்கு அவிய கொதிக்க வைத்து இறக்கி தேவையான அளவு உப்பு சேர்க்க வேண் டும். விரும்பியவர்கள் நெய்த்தலி கருவாடும் சேர்க்க லாம்.

### சேரும் பொருட்கள்

1. புழுங்கல் அரிசி - 200 கிராம்
2. கொத்தமல்லி - 25 கிராம்
3. நற்சீரகம் - 15கிராம்
4. மிளகு 10 கிராம்
5. மஞ்சள் - 10 கிராம்
6. அரைத்த தேங்காய்ச்சொட்டு - சிறிதளவு
7. இஞ்சி - சிறுதுண்டு
8. உள்ளி - தேவையான அளவு
9. சின்ன வெங்காயம் - தேவையான அளவு
10. நீர் - 750 மி.லீ
11. உப்பு - தேவையான அளவு

(கஞ்சிவகைகளின் தயாரிப்புமுறைகள், சேரும் பொருட் கள் யாழ்ப்பாணத்தின் உள்ளேயே இடத்துக்கு இடம் சிறு மாற்றங்களைக் கொண்டிருக்கும்.)

தொடரும்.




## இரா. சடகோபன்

இரா . சடகோபன் என்று எழுத்து உலகில் அறியப்பட்ட ராமையா சடகோபன் கொழும்பு பல் கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு பட்டதாரி ஆவார். அதன்பின் ஒரு சட்டத்தரணியாக தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் மூன்றுக்கு தேசிய சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் சிறந்த ஊடக வியலாளருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்.

விஜய் சிறுவர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான இவர், சுகர் வாழ்வு சஞ்சிகையின் பிர தம ஆசிரியரும் ஆவார். இதனைத் தவிர மலையக மக்கள் மேம்பாடு தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதி உள்ளார்.



இக்கட்டுரைத்தொடர் இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களைகளையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.


# சிங்கோனா:
## திடீர் எழுகையும் வீழ்கையும்




சிங்கோனா

Image source - www.britannica.com

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தம் வரை இலங்கையின் பொருளாதாரத்தில் சக்கர வர்த்தி என கோலோச்சிய கோப்பி பல தனவந் தர்களையும் வங்கிகளையும் கூட வங்குரோத்து ஆக்கி விட்டு அகாலத்தில் மாண்டு போனது. அதன் புதைகுழியிலிருந்து பீனிக்ஸ் பறவை என தேயிலை என்ற கரும்பச்சை நிறச்செடி புறப்பட்டு வந்தது என வரலாற் றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனினும் 1860 களிலேயே கோப்பிப் பயிர்ச்செய்கையை ஹெமீலியா வெஸ்டாரிக்ஸ் (Hemilia Vestaricx) என்ற நோய் தொற்றிக் கொண்டபோது இந்நோய் எதிர்காலத் தில் கோப்பியை முற்றாக காவு கொண்டு விடும் என்று அப்போது பேராதனை தாவரவியல் பூங்காவில் பணிப் பாளராக இருந்த கலாநிதி ஜி எச் துவாய்ட்ஸ் எதிர்வு கூறியிருந்தார்.




Father of the Ceylon Tea Industry
James Taylor

Image source - www.namathumalayagam.com

கோப்பியைத் தொடர்ந்து சிங்கோனாவே அதிகம் லாபம் தரும் பயிர்ச் செய்கையாக இருந்தது என பலரும் கருதினர். தேயிலைக் கைத்தொழிலின் தந்தை என்று வர்ணிக்கப்படும் ஜேம்ஸ் டெய்லர் கூட லூல் கந்துரா என்ற தனது முதல் தேயிலைத் தோட்டத்தில் சிங்கோனாவையே பயிரிட்டு அறுவடை செய்தார்.

கோப்பிச் செய்கையின் அழிவால் பாதிக்கப்பட்ட பல பெருந்தோட்ட சொந்தக்காரர்களும் சிங்கோனா, கரும் புத் தோட்டம், றப்பர், கொக்கோ போன்ற வேறு பயிர் களை நாடிச் சென்றனர். இதே காலப்பகுதிகளில் கோப் பியின் இடத்துக்கு தேயிலையை பிரதியீடாக கொண்டு வந்து விட வேண்டும் என்று பலரும் பல பரீட்சார்த்த முயற்சிகளைச் செய்த போதும் அவை அநேகமாக தோல் வியிலேயே சென்று முடிவடைந்தன. கோப்பியைத் தொடர்ந்து சிங்கோனாவே அதிகம் லாபம் தரும் பயிர்ச் செய்கையாக இருந்தது என பலரும் கருதினர். தேயி லைக் கைத்தொழிலின் தந்தை என்று வர்ணிக்கப்படும் ஜேம்ஸ் டெய்லர் கூட லூல் கந்துரா என்ற தனது முதல் தேயிலைத் தோட்டத்தில் சிங்கோனாவையே பயிரிட்டு அறுவடை செய்தார்.

இக்காலப்பகுதியில் உலகெங்கும் நுளம்பு வாயிலாகப் பல்கிப்பெருகிய மலேரியாவின் தீவிரத்தன்மை காரணத் தால் பல நாடுகள் பாதிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பிரித்தானிய - வெள்ளைக்கார - குடியேற்றக்காரர்கள் உயிரிழந்தனர். எனவே இந்த நோயில் இருந்து மக்க ளைக் காக்க வேண்டிய பொறுப்பு பிரித்தானியாவுக்கு ஏற்பட்டது. இந்தக் காலத்தில் தென்னமெரிக்காவின் அமேசன் காடுகளில் இருந்து பெறப்பட்ட சிங்கோனா என்ற தாவரத்தின் பட்டைகளில் இருந்து பெறப்பட்ட குயினைன் (Quinine) என்ற திரவ மருந்து மலேரியா நோய்க்கு வெற்றிகரமான தடுப்பு ஊசி மருந்தாகப் பயன்பட்டது. அமெரிக்காவிலிருந்து இதனை பெறுவது அதிக செலவு மிக்கதாக இருந்ததால் கீழைத்தேய நாடுகளில் இதனை உற்பத்தி செய்ய பிரித்தானியர்கள் தீர்மானித்தனர்.



Hemileia vastatrix coffee leaf rust

Image source - www.researchgate.net

இதன் ஒரு விளைவாக 1860 ஆம் ஆண்டளவில் ஒரு தொகை சிங்கோனா விதைகள் இந்தியாவுக்கும் இலங் கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இலங்கையின் பேராத னைத் தாவரவியல் பூங்காவின் பணிப்பாளராக அப் போது செயற்பட்டு வந்த கலாநிதி ஜி. எச். துவாய்ட்சுக்கு அனுப்பப்பட்ட இந்த விதைகளை, அவர் பரீட்சித்துப் பார்ப்பதற்காக நுவரெலியா, ஹக்கல பூங்காவின் பொறுப்பாளர் மெக்னிகோல் (maknicall) என்பவருக்கு அனுப்பி வைத்தார். இவற்றிலிருந்து ஆரம்பத்தில் 800 கன்றுகள் பெறப்பட்டன. 1864 ஆம் ஆண்டளவில் முப் பத்து ஒன்பது பேர்ச்சஸ் காணியில் 1 லட்சத்து 30 ஆயி ரம் கன்றுகள் உண்டாக்கப்பட்டிருந்தன. இக் காலத்தில் கலாநிதி துவாய்ட்சுடன் சேர்ந்து ஜேம்ஸ் டெய்லரும் இந்த ஆய்வில் பங்கு கொண்டு இருந்ததால் அவரின் அனுபவத்தைக் கருத்திற் கொண்டு லூல்கொந்தரா தோட் டத்தில் பயிரிட வென ஒரு தொகை சிவப்பு பட்டை

வகையிலான சிங்கோனா (*Succirubra Red Bark*) வகை மரக்கன்றுகளை லூல்கொந்தரா தோட்டத்தில் பயிரிட வென அப்போதைய உரிமையாளர்களான மார்ட்டின் லீக் மற்றும் ஜி. டி. பி. ஹரிசன் (*Martin Leak and G.D.B.Harrison*) ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

ஜேம்ஸ் டெய்லரின் மேற்பார்வையில் மேற்படி மரக் கன்றுகள் பயிரிடப்பட்டு அதன் முதல் அறுவடை 1867 ஆம் ஆண்டு பெறப்பட்டது. 1870 அளவில் அது லூல் கந்துரா தோட்டத்தில் நன்கு வளர்ச்சி அடைந்து மூன்று லட்சம் மரங்கள் என அதிகரித்தன. அதன் உயரம் கருதி ஏனைய நாடுகளின் உற்பத்திகளை விட அதிகமான விலையை லூல்கந்துராவில் சின்கோனா பெற்றது. இதன் பின்னர் 1885ஆம் ஆண்டு வரை சராசரியாக ஒரு அவுன்ஸ¬க்கு 12 சில்லிங்குகளை விலையாகப் பெற்றுக்கொண்டு பெருத்த லாபம் தேடித் தந்தது. இதன் உற்பத்திக்கான செலவை விட ஆறு மடங்கு அதிகமான வருமானத்தை அது பெற்றுத் தந்ததால் ஜேம்ஸ் டெய்லர் பேரும் புகழும் பெற்றார். பத்திரிகைகள் அவரை புகழ்ந்து எழுதின.




லூல்கந்துர தோட்டத்தில் உள்ள ஜேம்ஸ் டெய்லரின் சிலை

Image source - www.virakesari.lk

இந்த தருணத்தில் மகிழ்ச்சி அடைந்த ஜேம்ஸ் டெய்லர் தன் வீட்டுக்கு முன் நின்று கொண்டு தோட்டத்தையும் சேர்த்து புகைப்படம் எடுத்து இங்கிலாந்திலிருந்த தன் தந்தைக்கு அனுப்பினார். பின்னர் விரைவிலேயே சிங்கோனாவின் ரகசியத்தை புரிந்து கொண்ட பல தோட்டச் சொந்தக்காரர்களும் சிங்கோனாவைப் பயிரிடத் தொடங்கினர். அதன் விளைவாக உற்பத்தியும், விநியோகமும் அதிகரிக்க அதன்விலை வீழ்ச்சி அடையத் தொடங்கியது. 1873 இல் இருந்து 1876 வரையில் 3.6 மில்லியன் சிங்கோனாக் கன்றுகள் பல தோட்டங்களிலும் நடப்பட்டிருந்ததுடன் ஏற்றுமதி 1886ஆம் ஆண்டு 303 மில்லியன் தொன்களாக அதிகரித்தது. இத்தகைய கண்மூடித்தனமான மிகை உற்பத்தியும் வியாபாரப் போட்டியும் விரைவிலேயே சந்தையில் மிகை வழங்கலை ஏற்படுத்தியதால் அதன் விலை படிப்படியாக சரிவடைந்தது. சந்தையில் அதன் உற்பத்தி செலவைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டபோது சிங்கோனா பயிர்ச்செய்கை இலங்கையில் வீழ்ச்சி அடையத் தொடங்கியது. பலரும் இப்பயிர்ச் செய்கையை கைவிட்டனர்.

**ஆரம்பத்தில் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ‘டீ’ அருந்துவது பிரபுக்கள் மத்தியில் ஒரு ஆடம்பர நடவடிக்கையாகவே இருந்தது. காரணம் இது விலை கூடிய ஒரு ஆடம்பரப் பொருளாக இருந்தமை தான்.**

இவ்வாறு ஒரு குறுகிய காலத்துக்கு சிங்கோனா பயிற்செய்கையானது இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய செல்வாக்கு செலுத்தி வரலாற்றில் தன் பெயரை பதித்துக் கொண்டது. கோப்பிப் பயிர்ச்செய்கையினைத் தொடர்ந்து சிங்கோனா பயிற்செய்கையும் தோல்வி அடைந்ததால் தோட்டச்சொந்தக்காரர்கள் அடுத்து தமது எதிர்காலம் தொடர்பில் கவலை கொண்டி ருந்தனர்.

அக்காலப்பகுதியில் இலங்கையில் தேயிலை பயிர்ச்செய்கை ஒரு பரீட்சார்த்த முயற்சியாக மட்டுமே இருந்த போதும் உலகத்துக்கும் பிரித்தானியா வுக்கும் அதன் காலனித்துவ நாடுகளுக்கும் புதிய உற்பத்திப் பொருளாகவோ நுகர் பொருளாகவோ இருக்கவில்லை. ஏற்கனவே அது பிரித்தானியா வுக்கும் ஏனைய பல காலனித்துவ நாடுகளுக்கும் மத்திய சீனாவில் இருந்தும் கிழக்கு ஆபிரிக்காவில் இருந்தும் அறிமுகமாகி இருந்தது.

பிரித்தானியக் காலனித்துவப் பேரரசின் எழுச்சி யின் மற்றும் ஒரு விளைவாக உலக ஏற்றுமதி வர்த்தகத்தின் பெருக்கத்தை குறிப்பிடலாம். ஒரு புறத்தில் கோப்பி, தேயிலை, கரும்பு, பருத்தி , றப்பர், புகையிலை முதலான பாரிய பெருந்தோட்ட பயிர்ச்செய்கைகளின் உற்பத்தியும் வர்த்தகமும் அதிகரித்ததுடன் இவற்றை முடிவுப் பொருட்களாக மாற்றி நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்காக பாரிய தொழிற்சாலைகளும் காலனித்துவ நாடுகளில் உருவாகின. பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்கென லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தேவைப்பட்டதைப்போல் தொழிற்சாலைகளில் பணிபுரியவென பெருமளவில் தொழிலாளர்கள் படையணி உருவானது. உலகில் முதல் தடவையாகலட்சக்கணக்கான மக்களை காலையில் எழுந்ததும் கோப்பி குடிப்பவர்களாகவும், தேநீரை அருந்துபவர்க

ளாகவும், புகைப்பிடிப்ப வர்களாகவும், சீனி நுகரும் பழக்கத்துக்கு அடிமையானவர்களா கவும் மாற்றும் கைங்கரியம் மேற்கொள்ளப் பட்டது.

ஆரம்பத்தில் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் 'டீ' அருந்துவது பிரபுக்கள் மத்தியில் ஒரு ஆடம்பர நடவடிக்கையாகவே இருந்தது. காரணம் இது விலை கூடிய ஒரு ஆடம்பரப் பொருளாக இருந்தமை தான். ஆனால் பதி னெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் கோப்பியும் "டீ" யும் சகலரும் அருந்தும் பிரி யமான பானமாகிவிட்டது. கோப்பியுட னும் டீ யுடனும் சேர்த்து பால், சீனி கலந்து பருக ஆரம்பித்ததுடன் அவற்றின் தேவை யும் வர்த்தகமும் உற்பத்திகளும் அதே அள வுக்கு அதிகரித்தன.



Preparation to export Ceylon Tea in 1800s

Image source - www.a2zsrilanka.com

பியரும், மதுவும் குடித்து புகைப்பிடிப்பதிலும் பார்க்க தேநீர் குடிப்பதால் உடலுக்கும் மன துக்கும் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் கிடைக்கும் என மக்கள் மத்தியில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன . கோப்பி காரம் கூடியது என்றும் அதிகம் "கெபேன்" (Cafain) காணப்படு கின்றது என்றும், தேநீரில் அது குறைவாக உள்ளதால் தினம் மூன்று முறை அருந்தலாம் என்றும் உரத்துக் கூறப் பட்டது. இதனால் 'விக்டோரியன் பிரித்தானிய ஆங்கி லேய சமூகம்' (Proud Victorian English Society) மற்றும் மேற்கு ஐரோப்பாவின் மகா பெருமைக்குரிய ஆங்கிலோ சாக் சன் இனமும் (The great Anglo - Saxon Race) 'தேநீர் அருந் தும் பெருமைக்குரியவர்கள்' என்று பீற்றிக்கொள்ளும் ஒரு சமூகமாக உருவானது. இவர்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளை தேநீர் அருந்தி 'தேநீரின் அடிமைகள்' என்ற பெயரை பெற்றுக் கொண்டனர்.

உலகின் தேயிலை உற்பத்தித் தரத்திற்கு நிகராக இலங்கை யின் தேயிலை உற்பத்தியை கொண்டுவருவது அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை. இலங்கையின் தேயிலை உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு முன் ஏனைய நாடுகள், நீண்ட உற்பத்தி அனுபவத்தை பெற்று இருந்ததுடன் இக் காலத்தில் இலங்கையின் கோப்பி உற்பத்திக்கு நல்ல விலையும் சந்தையும் இருந்ததால் பலரும் தேயிலைச் செய்கையில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் விவசாய ஆராய்ச்சியாளரான கலாநிதி துவாய்ட்ஸ் கோப்பிப் பயிர் செய்கைக்கு நீண்ட எதிர்காலம் இல்லை என்பதனை நன்கு அறிந்து வைத்திருந்தார். எனவே அவர் கோப்பியு டன் சேர்த்து சிங்கோனா, கொக்கோ போன்ற பல பயிர் கள் திட்டத்தை ஊக்குவித்தார். ஜேம்ஸ் டெய்லரின் லூல் கந்துரா தோட்டத்தில் பயிரிட வென முதலில் தனது "கன்னொருவ" பேராதனை தாவரவியல் பூங்காவில் வைக் கப்பட்டிருந்த 150 தேயிலை கன்றுகளை டெய்லரிடம் வழங்கினார். அவரது அந்த பரீட்சார்த்த முயற்சி அபார வெற்றி பெற்றது . அவரது தேநீர் ஏனையவர்களின் உற்பத் திகளை விட மிகுந்த சுவை, மணம், குணம் உடையதாக இருந்தது.



Ceylon Tea

Image source - www.dailynews.lk

டெய்லரின் முயற்சி பற்றி கேள்விப்பட்ட அன்றைய ஆளு நரான வில்லியம் ஹென்றி கிரகரி (William Hendry Gregory) டெய்லரின் லூல்கந்துரா தோட்டத்துக்கு விஜயம் செய் தார். டெய்லரின் முயற்சிகள் பிறரின் மனதைக் கவர்வ தாக இருந்தன. அவர் தன்னாலான சகல உதவிகளையும் செய்வதாக உறுதியளித்தார். இதனால் லூல்கந்துரா தோட்டத்தின் சொந்தக்காரர்கள் டெய்லரின் முயற்சிக்கு நிதி வழங்க முன்வந்தார்கள். தேயிலை யுகத்தின் பொற்கா லம் ஆரம்பமானது. ஆனால் தேயிலையின் சொந்தக்காரார் களுக்குத் தான் அது பொற்காலமாக அமைந்ததே அன்றி தொழிலாளிக்கு இதன் பலன் துளியாவது போய் சேர்ந் ததா என்று பார்த்தால், அது நடக்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

தொடரும்.

**கமலநாதன் பத்திநாதன்**



கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நடன நாடகத் துறையில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறியில் இளமாணி சிறப்புப்பட்டம் பெற்றவர். அத்துடன் இவர் கிழக்கிலங்கையின் பூர்வ குடிகளான வேடர் சமூகத்தைச் சேர்ந்தவரும், இலங்கையில் தமிழ் பேசும் வேட்டுவ மக்கள் சார்ந்து பல் ஆய்வு நடவடிக்கைகளை செய்து வருபவரும் ஆவார். அவ்வகையில் வேடர் மானிடவியல் எனும் விடயத்தின் கீழ் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றார்.

தற்பொழுது இவர் இலங்கை நூலக நிறுவனத்தில் கள ஆய்வாளராகக் கடமையாற்றுகிறார். அத்துடன் பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு நாளிதழ்கள், சஞ்சிகைகளில் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். அவை வேடர் சமூகத்தின் சமயம், வரலாறு, தமிழ் இலக்கியம், பண்பாட்டு ஆய்வு சார்ந்தவை ஆகும்.


இலங்கைத்தீவின் மத்திய பகுதியைத் தவிர, கிழக்கு பகுதியில் தமிழ் பேசும் வேடுவ இன மக்களின் பூர்வீகத் தன்மை, சடங்கு முறைகள், மருத்துவ நடவடிக்கைகள், குணமாக்கல் மற்றும் நோய் நீக்கல் செயற்பாடுகள், இயற்கையோடிணைந்த வாழ்வியல் அசைவுகள் முதலானவற்றுடன் காலனிய எண்ண மேலாதிக்கத்துள் சிக்குண்டு அழிந்துக்கொண்டிருக்கும் அவர் தம் மானுட நகர்வுகள் முதலான பல விடயங்கள் இத்தொடரில் ஆழமாக வெளிகொணரப்படவுள்ளன.

# கடலோர வேட்டுவ சமூகங்களுள் காணப்படும் குடிவழமைகள்

ஒவ்வொரு சமூகக்குழுக்களும் தமக்கு வாலாயமான பண்பாட்டு நகர்வுகளுள் பல முன்னெடுப்புக்களை, கால வர்த்தமானங்களுக்கு அமைவாகஈடேற்றிக் கொண்டுள்ளமையே வரலாறாகின்றது. அவ்வாறான நிலைப்பாடானது இயல்பான முறையிலும், வலிந்து புகுத்தப்பட்ட வடிவிலும் குறித்தவொரு சமூகத்தில் தாக்கம் செலுத்தியே வந்துள்ளது. இதற்கு தீவின் ஆதிப்பிரஜைகளான வேடரும் விதிவிலக்கல்லர்.

இலங்கை வரலாறானது காலத்துக்குக் காலம் இடம்பெற்ற , வரத்து இனங்களின் குடியேற்றத்துடனேயே பார்க்கப்படுகின்றமையை நாம் கேள்விக்குள்ளாக்க வேண்டிய பாரிய தேவையுண்டு. உதாரணமாக இலங்கையின் முதல் மன்னனாக மகாவம்சம் கூறும் விஜயன் இலங்கை வந்தடைந்த போது அவனை வரவேற்று, பின்னர் விஜயனுடன் இணைந்து வாழ்ந்த குவேனி எனும் பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தது பற்றியும், விஜயன் அரசமைத்து தனது பட்டத்து இளவரசியாக தென்னிந்தியாவில் பாண்டிய குலத்து பெண்ணை மணந்தான் என்றும், அதன் பின்னர் குவேனி இயக்கர் இனத்தவர்களாலேயே கொல்லப்பட்டாள் என்றும், விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்த ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் தப்பியோடி காடுகளில் வாழத்தலைப்பட்டனர் என்றும், அவர்களின் வாரிசுகளே இன்றைய இலங்கைக் காடுகளில் வசிக்கும் வேடர்கள் என்றும் கூறப்படுகின்றது. இதுவே இற்றை வரைக்குமான பூர்வ குடிகளுக்கான வரலாறாகப் பார்க்கப்பட்டு வந்துள்ளமையினை பலரும் அறிவர்.

ஆனால் இவ்வாறு புனைந்தவர்களும், புனைவை ஏற்றோரும் சில விடயங்களை உணர்ந்து கொள்ள வேண்டும். விஜயன் இலங்கைக்கு வரும் போது குவேனி



**விஜயனின் வருகையின் போது குவேனி நூல்நூற்கும் நிகழ்வை விபரிக்கும் படம்**

Image source - roar.media

**விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்த ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் தப்பியோடி காடுகளில் வாழத்தலைப்பட்டனர் என்றும், அவர்களின் வாரிசுகளே இன்றைய இலங்கைக் காடுகளில் வசிக்கும் வேடர்கள் என்றும் கூறப்படுகின்றது.**

நூல் நூற்றுக்கொண்டிருந்தாள் எனில், மனிதக் கூட்டமானது மரவுரியில் இருந்து கைத்தறிக்கு வருவதற்கு எத்துனை காலம் எடுத்திருக்கும்?, குவேனியின் வாரிசுகள் வேடர்களாயின் குவேனியின் சமூகத்தினர் யார்? இன்று இராவணனைப்பற்றி பலரும் கதைத்துக் கொண்டிருக்கின்ற வேளையில் இராவணன் தொடக்கம் விஜயன் வரைக்குமான பல்லாயிரம் வருடங்களுக்கு மேலான இலங்கை வரலாறு எங்கே? என்பதான கேள்விகளுக்கான விடைகளை மானிடவியல் நகர்வுகளை நன்குணர்ந்த புத்திஜீவிகள் தொடக்கம் சாதாரண பிரசை வரை கேள்வி கேட்க வேண்டிய தேவையும் அதனை எமது முதுசங்களூடாக மீட்டெடுக்க வேண்டிய கடப்பாடும் உண்டு.

இது இவ்வாறு இருக்கையிலும் தான் வேடர்கள் என்போர் இன்று நாம் காணுகின்ற ஈழத்து சமூகங்களில் ஆதிப்பிரசைகள் எனக் கொள்ளப் போதிய சான்றுகள் உள்ளன. ஆரியக் குடியேற்றங்களிலும் சரி, பௌத்த மதப் பரம்பலிலும் சரி அவற்றின் திடீர்ப் புனைவு நிலைக்குள் உள்வாங்கப்படாமல், சவால் விட்ட பெருமளவு இயக்கரும் நாகரும் வேடர் என்ற சமூக அமைப்பினுள் இருந்தே வந்தவர்கள் என்பதே நிதர்சனத் தெளிவு. பண்டைய மட்டக்களப்பின் விந்தனை, வேகம் (நாடு காடு) கோறளை (வாகரைப் பகுதி) போன்ற நிலப் பரப்புள் தொடர்ந்தாற்போல் இச்சமூகத்தினர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வாழ்ந்து வருகின்றனர். மட்டக்களப்பு பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேடரின் வாழ்விடங்கள் பற்றிய தகவல்களும் தடயங்களும் ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுகின்றன. இப்பிரதேச ஆலய நடைமுறைகளிலும் வழிபாட்டுத் தன்மையிலும் கூட வேடர்களின் வழக்காறுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேற்கண்டவாறான தனித்துவப் பாரம்பரியங்களுடன் இன்றும் தீவின் கிழக்குக்கரைப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற வேடர் சமூகத்தினுள் இடப்பரம்பலின் அடிப்படையிலும், வந்தேறு குடிகளின் குடியேற்றப் பரம்பலின் அடிப்படையிலும் இற்றைவரைக்குமாக காணப்படுகின்ற சமூகக்குடி வழமைகள் பற்றி விவரிப்பதாகவே இக்கட்டுரை விரிகின்றது.

## குடிவழமைகள்

தீவின் கிழக்குக் கரையோரத்தினை அண்டியே பெரும்பாலான கடலோர வேட்டுவக் குடிகள் இன்றும் காணப்படுகின்றனர். ஆரம்ப கால கடலோர வேட்டுவக்குடிகளின் ஆதிக் கிராமமாக இன்று மட்டக்களப்புத் தமிழகத்தின் செங்கலடிப் பிரதேச பிரிவுக்குள் காணப்படுகின்ற "களுவன்கேணி" எனும் மீன்பிடிக்கிராமமானது திகழ்கின்றது. இக்கிராமமானது பழங்காலத்தில் கரையோரமாக மட்டக்களப்பு திராய்மடு தொடக்கம் வாகரை வரையும், தெற்கே சித்தாண்டியை அண்மித்துள்ளதும் வேடுவர்களால் செல்லாபத்து என அழைக்கப்பட்ட மோட்டுக்காட்டுப்பிரதேசம் அடங்கலாக பரந்த ஒரு நிலப்பரப்பை கொண்டமைந்துள்ளது.

இதற்கு வேடுவர்களால் அழைக்கப்படும் இடப்பெயர்கள் சான்றாக உள்ளன. உதாரணமாக மட்டக்களப்பு கருவப்பங்கேணி தொடக்கம் பாலையடித்தோணா வரை பனுவளக்குடி எனவும், மட்டக்களப்பு சித்தாண்டி தொடக்கம் பேரிலாவளியை அண்டிய பிரதேசம் "செல்லாப்பத்து" எனவும், மட்டக்களப்பு கல்குடா மற்றும் கல்மடு வரையான பகுதி "கல்கோடா " எனவும், மட்



கடல் வேடுவர்

100 வருடங்களுக்கு முன்னர் செலிக்மன் வாகரையில் எடுத்த புகைப்படம்

Image source - www.namathumalayagam.com



இலங்கை வேடுவர்கள்

Image source - www.thinakaran.lk



மட்டக்களப்பு பூர்விக குடி சடங்குகள்

Image source - www.maddunews.com

> **குவேனியின் வாரிசுகள் வேடர்க ளாயின் குவேனி யின் சமூகத்தினர் யார்? இன்று இராவணனைப் பற்றி பலரும் கதைத்துக் கொண் டிருக்கின்ற வேளை யில் இராவணன் தொடக்கம் விஜ யன் வரைக்குமான பல்லாயிரம் வருடங்களுக்கு மேலான இலங்கை வரலாறு எங்கே? என்பதான கேள்வி களுக்கான விடை களை மானிட வியல் நகர்வுகளை நன்குணர்ந்த புத்திஜீவிகள் தொடக்கம் சாதா ரண பிரசை வரை கேள்வி கேட்க வேண்டிய தேவை யும் அதனை எமது முதுசங்களுடாக மீட்டெடுக்க வேண் டிய கடப்பாடும் உண்டு.**

டக்களப்பு தளவாய், சவுக்கடி வரையிலான பகுதி "கிரிமட்டி" எனவும், மட்டடக்களப்பு திராய்மடு தொடக்கம் கருவப்பங்கேணி வரைக்குமான பகுதி "திருக்காக்கேணி" என வும், மட்டடக்களப்பு வாகரை மற்றும் மாங் கேணி வரையிலான பகுதி "ஆக்கமது" என வும் அழைக்கப்படுகின்றன. அவ்வாறே இப்பிரதேசத்தில் இருந்த வேடுவக்குடித் தலைமைகளுக்கெல்லாம் பிரதான தலைவ ராக களுவன் எனப்படுபவரே மதிக்கப்பட் டார். இவரின் பெயராலும் மேற்குறிப் பிட்ட பிரதேசங்களில் காணப்பட்ட பல இயற்கையான கேணிகளையும் கொண்ட கார ணப்பெயராகவே "களுவன்கேணி" எனும் ஊர்ப்பெயர் வரலாயிற்று என்பது வேட முதுசங்களின் வாய் மொழிக்கருத்துக்களா கும்.

மேற்கண்டவாறான இயல்புகளுடன் காணப் பட்ட களுவன்கேணி கிராமத்திலே வணக்க முறை, வணங்கும் உத்தியாக்கள் (மூதாதை யர்கள்) மற்றும் வாழும் இடத்தின் இயல்பு களின் அடிப்படையில் பல குடிப்பிரிப்பு க்கள் காணப்படுகின்றன. அவை இன்றும் பல சாதக,பாதக விளைவுகளைக் கொண்டதாக வேடுவர்களிடையே காணப்படுகின்றன. ஒவ்வொரு வேடுவக் குடிக்குமென வேடுவத் தலைமையினால் குறிப்பிட்ட தெய்வம் தான் உரித்துடையது என ஆரம்ப காலத்தில் நிர்ணயிக்கப்பட்டதே இன்றும் பின்பற்றப் படுகின்றது. அவை பின்வருமாறு;

| | | |
|---|---|---|
| பனுவளக்குடி | – | மாறாய்த் தெய்வம் |
| செல்லாப்பத்துக் குடி | – | குடா நீலி |
| திருக்காக்கேணிக் குடி | – | மாநீலி |
| வெல்லாயன் குடி | – | தெய்யநாச்சி |
| ஆக்கமதும குடி | – | கன்னிமார் (பட்டு) |
| வெல்லம்பாலைக் குடி | – | பூச்சாண்டி |
| வெரிகடிகத்தோக் குடி | – | கிரியம்மா |

## பனுவளக்குடி

இந்தக் குடியைச் சேர்ந்த வேடுவர்கள் மட் டக்களப்பு கருவப்பங்கேணி தொடக்கம் பாலையடித்தோணா வரையான பெரிய தொரு காட்டுப்பிரதேசத்தில் பெரும்பான் மையாக வாழ்ந்தனர். ஏனைய குடிகளுக் கெல்லாம் உயர்ந்த மதிப்புள்ள குடியாக இந் தக்குடி திகழ்ந்தது. இவர்களின் தலைமைத் தெய்வம் அல்லது உரித்துடைய தெய்வமாக மாறாத்தெய்வம் (தேன் மரத்தில் ஏறி தேன் பூச்சி கொட்டி தெய்வமாடும் தெய்வம்) இருந்தது. அத்துடன் மாநெடுத்தன் பத்தினி தெய்யா முதலான தெய்வங்களும் இவர்க ளுக்கான தெய்வமாக இருந்துள்ளன. இந்தக் குடியினர் தான் வருடத்தில் முதலாவது சடங் கினை பிரமாண்டமாக நடத்துவர். இந்தச் சடங்கில் ஏனைய குடியினருக்கும் பொறுப் புக்களும் கடமைகளும் நிர்ணயிக்கப்பட்டி ருந்தன. மாறாத் தெய்வத்திற்கு ஆடுபவர் பனுவளக் குடியைச் சேர்ந்தவராக இருப் பார். தேன் மரத்தில் ஏறி தேன் பூச்சி கொட்டி, தெய்வமாடும் தெய்வங்கள் இந்தக் குடியின ராகவே இருப்பர். வேறு குடியினர் தோரண மரம் ஏறக்கூடாது என்ற நியதியினை பின் னைய காலத்தில் ஏற்படுத்தி யுள்ளனர்.

பனுவளக் குடியினரின் சடங்கு, எல்லாக் குடியினரும் ஒன்று கூடி பணிவிடை செய் யும் ஒரு பொது நிகழ்வாக இருந்து வந்தது. ஆயினும் இவர்களுக்குரிய கடமைகள் வரை யறுக்கப்பட்டிருந்தன. இது கூட வேடுவத் தலைமையினால் தான் நிர்ண யிக்கப் பட்டி ருந்தது. ஆக்க முதுகியா குடியினருக்கு பரி வாரத் தெய்வங்களான கன்னிமார், தெழுத்தன் கலை, கடல்பகுதிதெய்வம், காட்டுத்தெய்வம் முதலான தெய்வங்களுக்கு பந்தல் அமைக் கும் பணி இவர்களுக்குரியது. செல்லாப்பத்து குடியினருக்கு பூக்கொண்டு வருதல், அலங்க

ரித்தல் ஆகிய பணிகளும், திருக்காக்கேணி குடியினருக்கு பந்தல் அமைப்பதற்கு தடி, கொடி, குழை சேகரிக்கும் பணியும், வெல்லாயன் குடியினருக்கு துப்பரவு செய் தல், கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய பணிக ளும், வெல்லம் பாணன் குடியினருக்கு சடங்கிற்கு வாத் தியங்களை சேகரித்தல் மற்றும் தயாரித்தல் முதலான பணிகளும், கடிகத்தோ குடியினக்கு வாத்தியம் இசைத் தல் ஆகிய பணிகளும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான தன்மைகளுடன் காணப்பட்ட களுவன் கேணி வேட்டுவக்கிராமத்திலே கால அசைவுகளுக்கு அமைவாக ஏற்பட்ட குடிப்பரம்பலின் அடிப்படையி லும் குடி வேறுபாடுகள் உதயமாகியுள்ளன. கடந்த இரண்டாயிரத்து இரண்டாம் (2002) ஆண்டு பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் களுவன்கேணி வேடுவர் பற்றி எழுதிய கட்டுரை பற்றியும் கவனம் செலுத்துவது பொருத்தமானதாக இருக்கும். இவர் தனது கட்டுரையில் பின்வரும் வகையான வேடுவ சமூ கங்கள் களுவன்கேணியில் இருந்ததாக அடையாளப்ப டுத்துகின்றார்.

**முட்டுக்காட்டு வேடர்**
**குரங்கு திண்ணி வேடர்**
**வேட வெள்ளாளர்**

அத்துடன் இவர்களுடைய வேடுவத் தெய்வங்களாக செண்பகராச்சி செண் பக வன்னியன் ஆகிய தெய்வங்க ளைக் குறிப்பிடுகின்றார். இவர் குறிப் பிடும் முட்டுக்காட்டு வேடர் என்பது மோட்டுக்காட்டு வேடர் என்பதன் திரிபாகும். மோட்டுக்காடு என்பது களுவன்கேணிக்கு மேற்கே உள்ள இலாவாணை பேரிலாவெளி ஆகிய காட்டுபிரதேசங்களைக் குறிக்கும். இந்தப் பிரதேசத்தில் இருந்து களு வன்கேணிக்கு வந்து குடியேறிய வேடு வர்களே இவர்கள் இவர்களுடைய வழிபாட்டில் மோட்டுக்காட்டுத் தெய்வம் என்றொரு தெய்வம் இருக் கின்றது. இந்த மோட்டுக்காட்டு தெய் வம் என்பது பிற்காலத்தில் மொக்காட் டுத் தெய்வம் அல்லது மொக்காட் டுப்பேய் என அழைக்கப்படுகின்றது.

இவரது கட்டுரையில் குறிப்பிடப்படும் செண்பகராச்சி செண்பக வன்னியன் என்ற தெய்வங்கள், ஆட்சி மற்றும் தொடர்புகளினால் களுவன்கேணி வேடுவக் குடிகளுக்குள் வந்து சேர்ந்து கொண்ட தெய்வங்களாகும். குரங்கு திண்ணி வேடர் என்போர் களுவன் கேணி குரங்குமூலை என்ற பகுதியில் வாழ்ந்த ஏனைய வேடுவக் குடிகளால் ஒதுக்கப்பட்ட ஒரு குடியினராவார். ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் தென்னிந்திய மதக்கலப்பின் பின்னர் வேடுவர்கள் இடையே குரங்கை தெய்வமாகக் போற்று கின்ற மரபு புகுந்துள்ளது. குரங்கைக் கொன்று இறைச் சியை புசிப்பதை இவர்கள் எதிர்த்தனர். அவ்வாறு குரங்கு தின்கின்ற வேடரை ஒதுக்கி வைத்தனர்.

வேட வெள்ளாளர் என்பது விவசாயத் தொழிலை மேற் கொண்ட வேடர் பரம்பரை என்ற கருத்து நிலவுகின்றது. வெள்ளாளர் என்பது குடியேறிய தமிழர்கள் என ஈழத் துப்பூராடனர் என்ற புனை பெயர் கொண்ட செல்வ ராசா கோபால் தனது மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்டைய வரலாற்றுச் அடிச்சுவடுகள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இதே நூலில் முதன்மைப் படைப்பா சிரியர் உரை என்ற தலைப்பின் கீழ் இவ்வாறு குறிப்பிடு கின்றார். 'வேடக் குடியிருப்புக்கள் மகியங்கனை(வத் தளை), தம்பானை, களுவன்கேணி எனும் இடங்களில் மட்டும் இருந்தன. நாளடைவில் களுவன்கேணி வேடர் களும் தமிழர் என்ற தேசிய அடையாளத்தைப் பெற்றுக் கொண்டனர்.'

ஆகவே குடியேறிய வெள்ளாளரும் வேடுவரும் இரண் டறக்கலந்ததன் விளைவே இந்த வேட வெள்ளாளர்கள் ஆக இருக்கலாம். இதை உறுதிப்படுத்துவதாக இவர்க ளின் வழிபாட்டுச் சடங்கில் வேடுவத் தெய்வம் தமிழர்



**இலங்கையின் ஆதிக்குடிகள்**

Image source - www.thinakaran.lk

**வேட வெள்ளாளர் என்பது விவசாயத் தொழிலை மேற் கொண்ட வேடர் பரம்பரை என்ற கருத்து நிலவுகின்றது. வெள்ளாளர் என்பது குடியேறிய தமிழர்கள் என ஈழத்துப்பூராடனர் என்ற புனை பெயர் கொண்ட செல்வராசா கோபால் தனது மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்டைய வரலாற்றுச் அடிச்சுவடுகள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இதே நூலில் முதன்மைப் படைப்பாசிரியர் உரை என்ற தலைப்பின் கீழ் இவ்வாறு குறிப்பிடு கின்றார். வேடக் குடியிருப்புக்கள் மகியங்கனை(வத்தளை), தம்பானை, களுவன்கேணி எனும் இடங்களில் மட்டும் இருந்தன.**

**மட்டக்களப்பு பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேடரின் வாழ்விடங்கள் பற்றிய தகவல்களும் தடயங்களும் ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுகின்றன. இப் பிரதேச ஆலய நடைமுறைகளிலும் வழிபாட்டுத் தன்மையிலும் கூட வேடர்களின் வழக்காறுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.**



**மட்டக்களப்பு வேடுவர்**

**Image source - www.newsfirst.lk**

*தெய்வங்களான மாரி, காளி, வயிரவர் முதலான தெய்வங்களும் வழிபடப்படுகின்றன. வேட வெள்ளாளர் என்ற ஒரு வகுப்பினரும் களுவன் கேணியில் வசிக்கின்றனர். இன்றைய வாகரைப் பிரதேசங்களில் இந்த வேட வெள்ளாளரை வெள்வேடர் என்று அழைக்கின்றனர். இதனைப் போலவே மட்டக்களப்பில் செல்வாக்குப் பெற்று விளங்கும் முக்குகர் எனப்படும் சமூகத்தவர்களும் தொழில் நிமித்தம் களுவன்கேணி கிராமத்தில் புகுந்து திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதன் வாயிலாக முக்குக வேடர் எனும் குடிப்பிரிப்பும் தோன்றலாகியது அவ்வாறே ஏனைய சமூகங்களும் வேடர்களுடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொண்டதன் பின்னர் தம்மை வேடர் எனும் அடைமொழியுடன் மாத்திரம் அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பாது தமது சமூக அடையாளத்தினை திணித்தவொரு புதிய சமூகப்பெயரை உருவாக்கிக்கொள்கின்றனர். இவ்வாறே தான் கிறிஸ்தவ வேடர் என்ற பிரிப்பும் இன்று உண்டு. அவர்கள் கிறிஸ்தவ மதத்தினை பின்பற்றுகின்ற வேடர்களாக தம்மை அடையாளப்படுத்துகின்றனர்.*

*இவ்வாறு வாழ்ந்த வேடுவக்குடிக்குள்ளே பல உப குடிகளும் காணப்படுகின்றன. உயர் குலமாகக் கருதப்படும் வேடுவக் குடியான பனுவனக் குடிக்குள், நாகசீயா, தேவசீயா, கிரிமட்டி சியா, கல்கோடா சியா, வீரசியா ஆகிய உப குடிகள் காணப்படுகின்றன.*

*இதே போல் ஆக்கமுத்து கியா குடிக்குள், ஆண்டி கியா, உக்குளு கியா ஆகிய குடிகளும், திருக்காணி குடிக்குள் வில்லா கியா, வண்டு கியா ஆகிய குடிகளும், செல்லா பத்து குடிக்குள் களுசியா, நாக்கியா குடியும், வெல்லாயன் குடிக்குள் களுநாக்கி குடியும், செல்லம்பாணன் குடிக்குள் தளுகியா, வனி மீயு குடியும், வெரிகடிகத் தோடு குடிக்குள் - வட்டுமுனா கியா, கற்சி குடியும் என பலவகையான உபகுடி வழமைகள் காணப்படுகின்றன. இவற்றை ஆழ்ந்து அறிந்தால் சில விடயங்களை உணர்ந்து கொள்ள முடியும். இதில் கூறப்பட்ட உபகுடிகள் அனைத்தும் ஒவ்வொரு குடியையும் வழிநடத்திய நடத்துகின்ற உத்தியாக்களான (முன்னோர்கள்) முதுசங்களின் பெயர்களினாலேயே அமைந்துள்ளன.*

*இவ்வாறான போக்கானது கிழக்குக்கரையோர வேடர்களிடையே மிக இயல்பாகக் காணப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இருந்தும் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வாக்கில் கலிங்க மாகோனால் மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆட்சி முறையை இலகுவாக நிர்வகிக்கவென மக்கள் கூட்டத்தினரை அவர்தம் தொழில் முறைகள் மற்றும் வாழ்வியலின் அடிப்படையில் சுமார் 25 சாதிய அமைப்புக்கொண்டதாக குடிமுறைகள் வகுக்கப்படுகின்றன. அதில் வேடர்களுக்கும் ஒரு இடம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறான வேளையில் தான் தொழில் மற்றும் திருமணம் என்பவற்றின் அடியாக வேடர்களுடன் கலப்புற்ற சமூகத்தினர் தமது குடிப்பெயரின் அடியாக வேடரை அணுக நினைத்ததும் அல்லது வேடர் என்ற அடையாளத்தினையே மறுத்ததுமான செயற்பாடுகளினால் தான் இன்றைய கால வேடர் சமூகத்துள்ளும் குடியமைப்பிலான மனித நடத்தை வேற்றுமைகள் உட்புகுந்துள்ளன. அதன் எதிர்த்தாக்கமானது வழிபாட்டு மரபுகள், நாளாந்த வாழ்வியல் முறைகள் என்பவற்றுள் பல மனித ஏற்றத்தாழ்வுகளை இற்றைவரைக்கும் மிக இறுக்கமாகப் பேணி வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளினால் கடலோர வேடர் சமூகமானது ஆதிக்க வலைக்குள் சிக்குண்டு மீளாது கரைகின்ற அவலப்பிடிக்குள்ளும் சிக்கியுள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.*

தொடரும்.

எழுநா

# புத்தக மன்றம்

எழுநா புத்தக மன்றம் வருடாந்த சந்தாவை அடிப்படையாகக் கொண்டது. எழுநா புத்தக மன்றத்தில் இணைவதன் மூலம் எழுநாவின் முயற்சிக்கு ஆதரவளிக்க முடியும். அதேநேரம், இச்சந்தா மூலம் எழுநா புத்தக மன்றத்தின் இணைபவர்களுக்கு எழுநாவின் சகல வெளியீடுகளும் கிடைக்கப்பெறும்.

| | |
|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 GBP |
| ஐக்கிய அமெரிக்கா | 125 USD |
| கனடா | 150 CAD |
| அவுஸ்திரேலியா | 175 AUD |
| ஐரோப்பா | 125 EURO |
| நோர்வே | 1200 NOK |
| இலங்கை | 25,000 LKR |

## எழுநா விளம்பர ஆதரவு

சமூக நிறுவனங்களோ அல்லது வியாபார நிறுவனங்களோ தம்முடைய சேவையை எழுநாவின் காணொலிகள் ஊடாக விளம்பரம் செய்யலாம். எழுநாவின் சகல காணொலிகளிலும் குறிப்பிட்ட மாத காலப்பகுதிக்கு நிறுவன இலச்சினை காட்சிப்படுத்தப்படும். இப்போது எம்மிடம் 15,000 பேரை சென்றடைவதற்கான வலையமைப்பு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 GBP \| 50 GBP |
| ஐக்கிய அமேரிக்கா | 125 USD / 60 USD |
| கனடா | 150 CAD / 75 CAD |
| அவுஸ்திரேலியா | 175 AUD / 100 AUD |
| ஐரோப்பா | 125 EURO / 60 EURO |

S ENTREPRENEURS

DELIVERY WITHOUT EXCUSE

CALL CENTER SOLUTION

SOCIAL MEDIA MARKETING

PROPERTY MANAGEMENT

www.s-entrepreneurs.com

No,11, Kachcheri Lane,Jaffna,Sri Lanka

Info@s-entrepreneurs.com

Contact us :

+94 21 222 59 50

ஆதிரை

வெளியீடு

தமிழிலும் சிங்களத்திலும்

நாவல்கள் • சிறுகதைகள் • கவிதைகள்

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE** *

Immediate Payment to Any Account

*Partnership with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE




# RE/MAX COMMUNITY THE MOST TRUSTED REAL ESTATE AGENTS IN CANADA

- We are building a family of elite agent, become a part of the family
- We are voted as most trusted realtor by consumers
- Our Services

Real Estate Networking


Real Estate Investment

Real Estate Buying and Selling

remaxcommunity.ca  /remaxcommunityinc  /remax_community

/remaxcommunity  /UCD-3WoKApsSL2P4SqInHVIA

வணக்கம் London
www.vanakkamlondon.com




**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**தமிழால் இணையும்**
**தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்**

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon
/Vanakkam_London /TheVanakkamLondon

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**